

# பாரதி

# +1

# தமிழ்

## வினா விடை

(தமிழ்நாடு அரசின் புதிய பாடத்திட்டத்தின் கீழ்
எழுதப்பட்ட உரைநூல்)



*All rights reserved. This book, or parts thereof, may not be reproduced in any form without permission of this publisher*

**Rs. 200/-**

அச்சிட்டோர் : கார்த்திகா கலர் கிராப்ட்ஸ், சிவகாசி.



www.tnpscjob.com

# பொருளடக்கம்


| இயல் | பாடத் தலைப்புகள் | | ப. எண் |
|---|---|---|---|
| | மனப்பாடப்பகுதி | | 4 |
| 1. | செய்யுள் | : யுகத்தின் பாடல் | 11 |
| | உரைநடை | : பேச்சு மொழியும் கவிதை மொழியும் | |
| | செய்யுள் | : நன்னூல் பாயிரம் | |
| | துணைப்பாடம் | : ஆறாம் திணை | |
| | இலக்கணம் | : மொழி முதல், இறுதி எழுத்துகள் | |
| 2. | உரைநடை | : இயற்கை வேளாண்மை | 35 |
| | செய்யுள் | : ஏதிலிக்குருவிகள் | |
| | | காவியம் | |
| | | திருமலை முருகன் பள்ளு | |
| | | ஐங்குறுநூறு | |
| | துணைப்பாடம் | : யானை டாக்டர் | |
| | இலக்கணம் | : புணர்ச்சி விதிகள் | |
| 3. | உரைநடை | : மலை இடப்பெயர்கள் : ஓர் ஆய்வு | 65 |
| | செய்யுள் | : காவடிச் சிந்து | |
| | | குறுந்தொகை | |
| | | புறநானூறு | |
| | துணைப்பாடம் | : வாடிவாசல் | |
| | இலக்கணம் | : பகுபத உறுப்புகள் | |
| | வாழ்வியல் | : திருக்குறள் | |
| 4. | உரைநடை | : தமிழகக் கல்வி வரலாறு | 112 |
| | செய்யுள் | : பிள்ளைக்கூடம் | |
| | | நற்றிணை | |
| | | தொல்காப்பியம் – சிறப்புப் பாயிர உரைவிளக்கப் பாடல் | |
| | துணைப்பாடம் | : இதழாளர் பாரதி | |
| | இலக்கணம் | : படைப்பாக்க உத்திகள் | |
| 5. | உரைநடை | : ஆனந்தரங்கர் நாட்குறிப்பு | 140 |
| | செய்யுள் | : சீறாப்புராணம் | |
| | | அகநானூறு | |
| | துணைப்பாடம் | : பிம்பம் | |
| | இலக்கணம் | : பா இயற்றப் பழகலாம் | |
| | வாழ்வியல் | : திருக்குறள் | |




www.tnpscjob.com

## பொருளடக்கம்



| இயல் | பாடத் தலைப்புகள் | | ப. எண் |
|---|---|---|---|
| 6. | உரைநடை | : காலத்தை வென்ற கலை | 179 |
| | செய்யுள் | : ஆத்மாநாம் கவிதைகள் | |
| | | குற்றாலக் குறவஞ்சி | |
| | | திருச்சாழல் | |
| | துணைப்பாடம் | : இசைத்தமிழர் இருவர் | |
| | இலக்கணம் | : கலைச்சொல்லாக்கம் | |
| 7. | உரைநடை | : காற்றில் கலந்த பேரோசை | 204 |
| | செய்யுள் | : புரட்சிக் கவி | |
| | | பதிற்றுப்பத்து | |
| | துணைப்பாடம் | : சிந்தனைப் பட்டிமன்றம் | |
| | இலக்கணம் | : ஆக்கப்பெயர்கள் | |
| 8. | உரைநடை | : தாகூரின் கடிதங்கள் | 228 |
| | செய்யுள் | : ஒவ்வொரு புல்லையும் | |
| | | தொலைந்து போனவர்கள் | |
| | | மனோன்மணீயம் | |
| | துணைப்பாடம் | : செவ்வி | |
| | இலக்கணம் | : மெய்ப்புத் திருத்தக் குறியீடுகள் | |
| | கவிதை எழுதல் | | 255 |
| | பழமொழிகளைத் தமிழாக்கம் செய்க | | 261 |
| | வாக்கியங்களைத் தமிழாக்கம் செய்க | | 270 |
| | வாழ்க்கை நிகழ்வில் விளக்கி எழுதுக | | 274 |
| | இலக்கிய நயம் பாராட்டல் | | 285 |
| | ஆங்கிலச் சொற்களுக்கு நிகரான தமிழ் கலைச்சொற்கள் | | 345 |
| | அரசு வினாத்தாள் – மார்ச் 2019 | | 347 |





www.tnpscjob.com

# மனப்பாடப் பகுதி



www.tnpscjob.com



### யுகத்தின் பாடல்

ஏடு தொடக்கி வைத்து என்னம்மை
மண்ணிலே தீட்டித்தீட்டி எழுதுவித்த
விரல்முனையைத் தீயிலே தோய்த்து
திசைகளின் சுவரெலாம்
எழுதத்தான் வேண்டும்
எழுகின்ற யுகத்தினோர் பாடலை.

சு. வில்வரத்தினம்



www.tnpscjob.com

## நன்னூல் – பாயிரம்

ஆக்கியோன் பெயரே வழியே எல்லை
நூற்பெயர் யாப்பே நுதலிய பொருளே
கேட்போர் பயனோடு ஆய்எண் பொருளும்
வாய்ப்பக் காட்டல் பாயிரத்து இயல்பே.

காலம் களனே காரணம் என்றுஇம்
மூவகை ஏற்றி மொழிநரும் உளரே.

– பவணந்தி முனிவர்

## காவியம்

சிறகிலிருந்து பிரிந்த
இறகு ஒன்று
காற்றின் தீராத பக்கங்களில்
ஒரு பறவையின் வாழ்வை
எழுதிச் செல்கிறது.

– பிரமிள்

## குறுந்தொகை

அம்ம வாழி தோழி நம்மூர்ப்
பிரிந்தோர்ப் புணர்ப்போர் இருந்தனர் கொல்லோ
தண்டுடைக் கையர் வெண்டலைச் சிதவலர்
நன்றுநன் றென்னும் மாக்களோடு
இன்றுபெரிது என்னும் ஆங்கண தவையே.

– வெள்ளி வீதியார்

பாவகை : நேரிசை ஆசிரியப்பா



www.tnpscjob.com

## புறநானூறு

உண்டால் அம்ம இவ்வுலகம் இந்திரர்
அமிழ்தம் இயைவது ஆயினும், இனிதுஎனத்
தமியர் உண்டலும் இலரே ; முனிவிலர்!
துஞ்சலும் இலர் பிறர் அஞ்சுவது அஞ்சிப்
புகழ் எனின் உயிருங் கொடுக்குவர் ; பழியெனின்
உலகுடன் பெறினும் கொள்ளலர் ; அயர்விலர் ;
அன்ன மாட்சி அனையர் ஆகித்
தமக்கென முயலா நோன்தாள்
பிறர்க்கென முயலுநர் உண்மை யானே.

– கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி

**பாவகை : நேரிசை ஆசிரியப்பா**

## திருக்குறள்

### அடக்கமுடைமை

1. நிலையின் திரியாது அடங்கியான் தோற்றம்
மலையினும் மாணப் பெரிது.

2. யாகாவார் ஆயினும் நாகாக்க காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு.

3. தீயினால் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே
நாவினால் சுட்ட வடு.

### ஒப்புரவறிதல்

4. தாளூற்றித் தந்த பொருளெல்லாம் தக்கார்க்கு
வேளாண்மை செய்தல் பொருட்டு.

6. மருந்தாகித் தப்பா மரத்தற்றால் செல்வம்
பெருந்தகை யான்கண் படின்.

### புகழ்

8. தோன்றின் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று.



www.tnpscjob.com

9. வசையொழிய வாழ்வாரே வாழ்வார் இசையொழிய
வாழ்வாரே வாழா தவர்.

## நிலையாமை

13. நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்துஇவ் வுலகு.

## துறவு

15. யாதனின் யாதனின் நீங்கியான் நோதல்
அதனின் அதனின் இலன்.

16. பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு.

## வலியறிதல்

19. வினைவலியும் தன்வலியும் மாற்றான் வலியும்
துணைவலியும் தூக்கிச் செயல்.

20. அமைந்தாங் கொழுகான் அளவறியான் தன்னை
வியந்தான் விரைந்து கெடும்.

22. அளவறிந்து வாழாதான் வாழ்க்கை உளபோல
இல்லாகித் தோன்றாக் கெடும்.

## காலமறிதல்

24. ஞாலம் கருதினும் கைகூடும் காலம்
கருதி இடத்தால் செயின்.

## குறிப்பறிதல்

3. குறிப்பில் குறிப்புணர் வாரை உறுப்பினுள்
யாது கொடுத்தும் கொளல்.



www.tnpscjob.com

### பகைத்திறம் தெளிதல்

7. வில்லேர் உழவர் பகைகொளினும் கொள்ளற்க
சொல்லேர் உழவர் பகை.

8. இளைதாக முள்மரம் கொல்க களையுநர்
கைகொல்லும் காழ்த்த இடத்து.

### மருந்து

9. மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது
அற்றது போற்றி உணின்.

10. நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்.

### இரவச்சம்

13. இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து
கெடுக உலகியற்றி யான்.

### புரட்சிக்கவி

சிற்றூரும் வரப்பெடுத்த வயலும் ஆறு
தேக்கியநல் வாய்க்காலும் வகைப் படுத்தி
நெற்சேர உழுதுழுது பயன்வி ளைக்கும்
நிறைஉழைப்புத் தோள்களெலாம் எவரின்தோள்கள்?
கற்பிளந்து மலைபிளந்து கனிகள் வெட்டிக்
கருவியெலாம் செய்துதந்த கைதான் யார்கை?
பொற்றுகளைக் கடல்முத்தை மணிக்கு லத்தைப்
போய்எடுக்க அடக்கியமூச் செவரின் மூச்சு?

– பாரதிதாசன்

**பாவகை : எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்.**



www.tnpscjob.com

## தொலைந்து போனவர்கள்

உடைஅணிந்தேன் எனச் சொல்லுகிறாய் – வெறும்
உடலுக் கணிவது உடையல்ல
விடையைக் கண்டேன் என்றுரைத்தாய் – ஒரு
வினாவாய் நீயே நிற்கின்றாய்.

தின்றேன் என்பாய் அணுஅணுவாய் – உனைத்
தின்னும் பசிகளுக் கிரையாவாய்
வென்றேன் என்பர் மனிதரெல்லாம் – பெறும்
வெற்றியிலே தான் தோற்கின்றார்.

'நான்' என்பாய் அது நீயில்லை – வெறும்
நாடக வசனம் பேசுகிறாய்
ஏன்? என்பாய் இது கேள்வியில்லை – அந்த
ஏன் என்னும் ஒளியில் உனைத் தேடு.

– அப்துல் ரகுமான்

பாவகை : சிந்து



www.tnpscjob.com

# இயல் - 1

| | | |
|---|---|---|
| செய்யுள் | : | யுகத்தின் பாடல் |
| உரைநடை | : | பேச்சு மொழியும் கவிதை மொழியும் |
| செய்யுள் | : | நன்னூல் பாயிரம் |
| துணைப்பாடம் | : | ஆறாம் திணை |
| இலக்கணம் | : | மொழி முதல், இறுதி எழுத்துகள் |



www.tnpscjob.com

## இலக்கணத் தேர்ச்சி கொள்

1. தவறான இணையைத் தேர்வு செய்க.

அ) மொழி+ஆளுமை-உயிர்+உயிர்  இ) கடல்+அலை-உயிர்+மெய்

ஆ) தமிழ்+உணர்வு- மெய்+உயிர்  ஈ) மண்+வளம்-மெய்+மெய்

**விடை :** இ) கடல்+அலை-உயிர்+மெய்

2. கீழ்க்காணும் குறிப்புகளில் பொதிந்துள்ள மேடைப்பேச்சில் சிறந்து விளங்கிய தமிழறிஞர்களின் பெயர்களைக் கண்டறிக.

அ) சென்னை மாகாணத்துக்குத் தமிழ்நாடு என்று பெயர் மாற்றம் செய்த முதல்வர் (3)
அண்ணா

ஆ) தொழிலாளர்களின் தந்தை என்று அழைக்கப்படுபவர்(10)
கலியாணசுந்தரனார்

இ) உயிரை உணர்வை வளர்ப்பது தமிழே என்று பாடியவர் (6)
பாரதிதாசன்

ஈ) பொதுவுடைமைக் கொள்கையின் முன்னோடிகளுள் ஒருவர்(2)
ஜீவா



3. பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக.

அ) காலங்காத்தால எந்திரிச்சிப் படிச்சா ஒரு தெளிவு கெடைக்கும்.
அதிகாலை நேரத்தில் எழுந்து படித்தால், ஒரு தெளிவு கிடைக்கும்.

ஆ) முயற்சி செஞ்சா அதுக்கேத்த் பலன் வராமப் போவாது.
முயற்சி செய்தால் அதற்கேற்ற பலன் வராமல் போகாது.

இ) காலத்துக்கேத்த மாரிப் புதுசு புதுசா மொழி வடிவத்த மாத்தனும்.
காலத்துக்கேற்றபடி புதிது புதிதாக மொழி வடிவத்தை மாற்ற வேண்டும்.

ஈ) ஒவ்வொருத்தரும் பேசிக்கிட்டிருக்கும்போது எல்லாத்தையும் கவனமாப் பதிய வைக்கனும்.

ஒவ்வொருவரும் பேசிக்கொண்டிருக்கும்போது எல்லாவற்றையும் கவனமாகப் பதிய வைக்க வேண்டும்.

உ) தேர்வெழுத வேகமாப் போங்க, நேரங்கழிச்சி போனாப் பதட்டமாயிரும்.
தேர்வெழுத வேகமாகச் செல்லுங்கள். நேரம் கழித்துப் போனால் பதற்றமாகி விடும்.



www.tnpscjob.com

4. வினாக்கள் :

**அ) மொழிக்கு முதலில் வரும் எழுத்துகள் எத்தனை? அவை யாவை?**

- மொழிக்கு முதலில் வரும் எழுத்துகள் –22

அவை :

- உயிர் எழுத்துகள் – 12 (அ முதல் ஔ வரை)
- மெய்யெழுத்துகள் –10 (க,ங,ச,ஞ,த,ந,ப,ம,ய,வ)

**ஆ) மொழிக்கு இறுதியில் வரும் எழுத்துகள் எத்தனை? எடுத்துக்காட்டுத் தருக.**

- மொழிக்கு இறுதியில் வரும் எழுத்துகள் – 24
- உயிரெழுத்துகள் –12 (அ முதல் ஔ வரை)
- மெய்யெழுத்துகள் – 11(ஞ்,ண்,ந்,ம்,ன்,ய்,ர், ல்,வ்,ழ்,ள்)
- குற்றியலுகரம் – 1

எ.கா :

தமிழ் + அரசி – தமிழரசி, நாடு + பண் – நாட்டுப்பண்

**இ) உயிரீறு, மெய்யீறு – விளக்குக.**

**உயிரீறு :**

நிலைமொழியின் இறுதி எழுத்து உயிர்மெய்யாக இருந்தாலும் அதன் இறுதியில் நிற்கும் வடிவம் உயிர் என்பதால் அது 'உயிரீறு' எனப்படும்.

சான்று : மணி + மாலை – மணிமாலை

(ண்+இ)

**மெய்யீறு :**

நிலைமொழியின் இறுதி எழுத்து மெய்யாக இருந்தால் அது 'மெய்யீறு' எனப்படும்.

சான்று : பொன் + வண்டு – பொன்வண்டு

**ஈ) உயிர்முதல், மெய்முதல் – எடுத்துக்காட்டுடன் விவரிக்க.**

**உயிர்முதல் :**

வருமொழியின் முதல் எழுத்து உயிரெழுத்தாக இருந்தால் அது 'உயிர்முதல்' எனப்படும்.

சான்று : வாழை + இலை = வாழையிலை

**மெய்ம்முதல் :**

வருமொழியின் முதல் எழுத்து உயிர்மெய்யாக இருந்தாலும் அதன் முதலில் நிற்கும் வடிவம் மெய் என்பதால் அது மெய்ம்முதல் எனப்படும்.

சான்று: தமிழ் + நிலம் = தமிழ்நிலம்

(ந் + இ)



www.tnpscjob.com

உ) குரங்குக்குட்டி – புணர்ச்சியை விளக்குக.

குரங்கு + குட்டி – குரங்குக்குட்டி

இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் க,ச,த,ப மிகும் என்னும் விதிப்படி புணர்ந்தது.

**விளக்கம் :**

நிலைமொழி ஈற்றில் உள்ள உயிரெழுத்து (கு – க்+உ) முன் வருமொழி முதலில் வல்லினம் (க்) வந்துள்ளதால், அது மிகுந்து (குரங்கு + க் + குட்டி) – குரங்குக்குட்டி என்றாது.

## நம்மை அளப்போம்

**பலவுள் தெரிக.**

1. பொருத்தமானவற்றைத் தேர்ந்தெடுக்க.

அ) அ. முத்துலிங்கம் – யுகத்தின் பாடல்

ஆ) பவணந்தி முனிவர் – நன்னூல்

இ) சு. வில்வரத்தினம் – ஆறாம் திணை

ஈ) இந்திரன் – பேச்சு மொழியும் கவிதை மொழியும்

i). அ, ஆ ii).அ,ஈ iii) ஆ, ஈ iv) அ,இ

**விடை :** iii) ஆ,ஈ

2. "கபாடபுரங்களைக் காவுகொண்ட பின்னும் காலத்தால் சாகாத தொல் கனிமங்கள்" – அடி மோனையைத் தெரிவு செய்க.

அ) கபாடபுரங்களை – காவு கொண்ட ஆ) காலத்தால் – கனிமங்கள்

இ) கபாடபுரங்களை – காலத்தால் ஈ) காலத்தால் – சாகாத

**விடை :** இ) கபாடபுரங்களை – காலத்தால்

3. பாயிரம் இல்லது ............... அன்றே.

அ) காவியம் ஆ) பனுவல் இ) பாடல் ஈ) கவிதை

**விடை :** ஆ) பனுவல்

4. ஒரு திரவ நிலையில், நான் விரும்பும் வகையில் என்னிடம் கீழ்ப்படிந்து நடந்து கொள்ளும் எனது மொழி, எழுத்துமொழியாகப் பதிவு செய்யப்படுகிறபோது உறைந்துபோன பனிக்கட்டியைப் போன்ற திட நிலையை அடைகிறது. இவ்வரிகள் உணர்த்தும் கருத்து.

அ) மொழி என்பது திட, திரவ நிலையில் இருக்கும்.

ஆ) பேச்சுமொழி, எழுத்துமொழியை திட, திரவப் பொருளாக உருவகப்படுத்தவில்லை.



www.tnpscjob.com

இ) எழுத்துமொழியைவிட பேச்சு மொழி எளிமையானது.

ஈ) பேச்சு மொழியைக் காட்டிலும் எழுத்துமொழி எளிமையானது.

**விடை :** இ) எழுத்துமொழியை விட பேச்சு மொழி எளிமையானது.

5. மொழி முதல் எழுத்துகளின் அடிப்படையில் முறையானதைக் கண்டுபிடிக்க.

அ) அன்னம், கிண்ணம் ஆ) டமாரம், இங்ஙனம்

இ) ரூபாய், லட்சாதிபதி ஈ) றெக்கை, அங்ஙனம்

**விடை :** அ) அன்னம், கிண்ணம்

**குறுவினா**

**1. பேச்சுமொழி, எழுத்து மொழியைக் காட்டிலும் உணர்ச்சி வெளிப்பாட்டுச் சக்தி மிக்கது ஏன்?**

- எழுத்துமொழியைக் காட்டிலும் பேச்சுமொழி உணர்ச்சிக்கு மிக அருகில் இருக்கிறது. எழுதுவதை மட்டும்தான் மனிதனின் கை செய்கிறது.
- முகத்திலிருக்கும் வாய், உடம்பிலிருக்கும் கையைக் காட்டிலும் உணர்ச்சி வெளிப்பாட்டைத் தெரிவிப்பதாக அமைந்துள்ளது.
- அதனால்தான் பேச்சுமொழி எழுத்துமொழியைக் காட்டிலும் அதிக உணர்ச்சி வெளிப்பாட்டுச் சக்தி மிக்கதாக உள்ளது.

2. என் அம்மை, ஒற்றியெடுத்த
நெற்றிமண் அழகே!
வழிவழி நினதடி தொழுதவர்,
உழுதவர், விதைத்தவர்,
வியர்த்தவர்க்கெல்லாம்
நிறைமணி தந்தவளே!

**–இக்கவிதை அடிகளில் உள்ள வினையாலணையும் பெயர்களை எழுதுக.**

தொழுதவர், உழுதவர், விதைத்தவர், வியர்த்தவர்.

**3. 'பாயிரம்' பற்றி நீங்கள் அறியும் கருத்து யாது?**

- நூலை உருவாக்கும் ஆசிரியரின் சிறப்பையும், அந்நூல் வழங்கும் கருத்து வளத்தையும் தொகுத்து நூல் முகப்பில் வைக்கும் முறை பற்றிப் பேசுவது பாயிரமாகும்.
- பாயிரம் இல்லையேல் அது சிறந்த நூலாக மதிக்கப்படாது.
- முகவுரை, பதிகம், அணிந்துரை, நூன்முகம், புறவுரை, தந்துரை ஆகியன பாயிரத்தின் வேறு பெயர்களாகும்.
- பாயிரம் பொதுப்பாயிரம், சிறப்புப் பாயிரம் என இருவகைப்படும்.



www.tnpscjob.com

4. **உயிரெழுத்து, பன்னிரண்டு, திருக்குறள், நாலடியார் – இச்சொற்களில் எவ்வகை ஈற்றெழுத்துகள் அமைந்துள்ளன?**

உயிரெழுத்து – குற்றியலுகர ஈறு (து – த் + உ)

பன்னிரண்டு – குற்றியலுகர ஈறு (டு – ட் + உ)

திருக்குறள் – மெய்யெழுத்து ஈறு (ள்)

நாலடியார் – மெய்யெழுத்து ஈறு (ர்)

5. **இனம், மொழி குறித்த இரசூல் கம்சதோவ் பார்வையைக் குறிப்பிடுக.**

- தன் இனத்தையும் மொழியையும் பாடாத கவிதை, வேரில்லாத மரம்; கூடில்லாத பறவை எனக் குறிப்பிடுகிறார்.

**சிறுவினா**

**1. சு. வில்வரத்தினம் பாடத்தான் வேண்டும் என எவற்றைக் குறிப்பிடுகிறார் ?**

- என் அன்னை ஒற்றியெடுத்த நெற்றிமண் அழகே!
- வழிவழியான நினது அடிகளை வணங்கியவர், உழுதவர், விதைத்தவர், வியர்வை சிந்தியவர்க்கெல்லாம் நிறைவான செல்வம் தந்தவளே!
- உன்னை வாழ்த்தி பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு பாடத்தான் வேண்டும்
- காற்றிலே ஏறி, நிறைகடலை, நெருப்பாற்றினை, மலை உச்சிகளைக் கடந்து செல் எனக் கூறியவுடன் செல்லுகின்ற ஓர் பாடலை கபாடபுரங்களை பலி கொண்ட பின்னரும்,
- காலத்தால் அழியாத தொன்மையான கனிமங்களின் வலிமையெல்லாம் சேரப்பாடத்தான் வேண்டும்.
- என்னை எழுத ஏடு தொடக்கி வைத்து என் அன்னை மண்ணிலே தீட்டித்தீட்டி எழுதச் செய்த விரல் முனையைத் தீயிலே தடவி திசைகளின் சுவரெல்லாம் எழுதத்தான் வேண்டும் எழுகின்ற புதிய யுகத்திற்கானப் பாடலை என சு. வில்வரத்தினம் பல்லாண்டு பாடுவது தமிழ்த்தாய்க்குப் பொருந்துகிறது.

**2. நூல் ஒன்றின் முகவுரையில் இடம்பெற வேண்டுவனவாக நன்னூல் எவற்றைக் குறிப்பிடுகிறது?**

- நூலின் இயல்பு, ஆசிரியர் இயல்பு, கற்பிக்கும் முறை, மாணவர் இயல்பு, கற்கும் முறை, நூலாசிரியர் பெயர், நூல் பின்பற்றிய வழி, நூல் வழங்கப்படுகின்ற நிலப்பரப்பு, நூலின் பெயர்,
- தொகை, வகை, விரி என்பனவற்றுள் இன்னதில் இயற்றப்பட்டது என்னும் யாப்பு, நூலில் குறிப்பிடப்படும் கருத்து, நூலைக் கேட்போர் (மாணவர்) நூலைக் கற்பதனால் பெறுகின்ற பயன் – ஆகியன முகவுரையில் இடம்பெற வேண்டுவனவாக நன்னூல் குறிப்பிடுகிறது.



www.tnpscjob.com

**3. 'என்னுயிர் தமிழ்மொழி என்பேன்' என்னும் தலைப்பில் நீவிர் கொண்டுள்ள மொழிப் பற்றினை எழுதுக.**

- என்னுயிர் தமிழ்மொழி என்பேன்.
- நண்ணுமிளமைப் பருவத்திலே நாவை அசைத்த மொழி.
- அறிவுக்கண்ணைத் திறந்து வைத்து இவ்வுலகை அறியக் காரணமான மொழி.
- சங்கம் வைத்து வளர்த்த மொழி.
- சங்க இலக்கிய இலக்கண நூல்களைத் தந்து கல்வியறிவை ஊட்டிய மொழி.
- இறைக்கோட்பாட்டை இனிய பாடல்களில் பாடவைத்த மொழி.
- எம்மொழிக்கும் இல்லாத தனிச்சிறப்புகளைக் கொண்ட மொழி.
- காதலும் வீரமும் கலந்த மொழி.
- கம்பன், இளங்கோவடிகள் போற்றிய மொழி.
- ஒப்பற்ற திருக்குறளை உலகிற்குத் தந்தமொழி.
- என் உயிரில் கலந்த செம்மொழியாம் தமிழ் மொழியைப் பிழையின்றிப் பேசவும், கற்கவும் என் மனம் நாடுகிறது.

4.

| | |
|---|---|
| **கூற்று** – குறியீட்டுக் கவிதை என்பது பொருளைப் பதிவு செய்வதன்று; நினைவுகூரத்தக்க தருணங்களைப் பதிவு செய்வதாகும். | **கவிதை** – கூண்டு திறந்தது<br>சிறகடிக்கவா?<br>இல்லை ! சீட்டெடுக்க. |

**கூற்றில் குறியீடு எனக் குறிப்பிடப்படுவது கவிதையில் எப்பொருளாக வந்துள்ளது?**

- ஒன்றை மற்றொன்றால் உணர்த்துவதே குறியீடு.
- கிளி இருப்பது கூண்டில்; அது திறந்தாலும் பறப்பதற்கல்ல; சீட்டெடுப்பதற்கு என அடிமைகளின் வாழ்வியல் முறை கூற்றில் குறியீடாக அமைந்துள்ளது.

**5. மொழி முதல், இறுதி எழுத்துகள் யாவை? ஒவ்வொன்றிற்கும் எடுத்துக்காட்டுத் தருக.**

**மொழி முதல் எழுத்துக்கள் – 22**

- உயிரெழுத்து பன்னிரண்டும் சொல்லின் முதலில் வரும்.
- மெய்யெழுத்துகள் மெய் வடிவில் சொல்லுக்கு முதலில் வருவதில்லை. அவை உயிரெழுத்துகளோடு சேர்ந்து உயிர்மெய் வடிவிலேயே மொழிக்கு முதலில் வருகின்றன.
- மெய்களில் க,ங,ச,ஞ,த,ந,ப,ம,ய,வ என்னும் பத்து வரிசைகள் சொல்லின் முதலில் வரும். (ஙனம் என்னும் சொல்லில் மட்டுமே ங வரும்)



www.tnpscjob.com

- ட,ண,ர,ல,ழ,ள,ற,ன என்னும் எட்டு வரிசைகள் சொல்லின் முதலில் வருவதில்லை.
- ஆய்த எழுத்து சொல்லின் முதலில் வராது.

**மொழி இறுதி எழுத்துகள் – 24**

- உயிரெழுத்துகள் பன்னிரண்டும் சொல்லின் இறுதியில் வரும்.
- மெய்களில் ஞ்,ண்,ந்,ம்,ன்,ய்,ர்,ல்,வ், ழ், ள் என்னும் பதினோரெழுத்தும் சொல்லின் இறுதியில் வரும்.
- க் ச் ட த் ப் ற் என்ற வல்லின மெய் ஆறும், ங் எனும் மெல்லின மெய் ஒன்றும் சொல்லின் இறுதியில் வருவதில்லை.
- பழைய இலக்கண நூலார் மொழி இறுதிக் குற்றியலுகர எழுத்தையும் சேர்த்துக் கொள்வர்.
- ஞ், ந், வ் மூன்றும் பழைய இலக்கிய வழக்கில் சொல்லின் இறுதி எழுத்தாக வந்துள்ளன. ஆயினும் இன்றைய வழக்கில் இவை சொல்லுக்கு இறுதி எழுத்தாக வருவதில்லை.

| மொழி முதல் எழுத்துகள் (எ.கா) | | மொழி இறுதி எழுத்துகள் ( எ.கா) | |
|---|---|---|---|
| அ – அம்மா | க – கடல் | சில – அ | நாண் – ண் |
| ஆ – ஆடு | ங – ஙனம் | அப்பா – ஆ | மரம் – ம் |
| இ – இலை | ச – சங்கு | இஞ்சி – இ | மான் – ன் |
| ஈ – ஈட்டி | ஞ – ஞாலம் | தீ – ஈ | பாய் – ய் |
| உ – உரல் | த – தந்தம் | சங்கு – உ | பார் – ர் |
| ஊ – ஊஞ்சல் | ந – நண்டு | பூ – ஊ | பால் – ல் |
| எ – எலி | ப – படகு | மலரே – ஏ | யாழ் – ழ் |
| ஏ – ஏணி | ம – மரம் | அலை – ஐ | வாள் – ள் |
| ஐ – ஐப்பசி | ய – யாழ் | நொ – ஒ | |
| ஒ – ஒன்று | வ – வாள் | போ – ஓ | |
| ஓ – ஓலை | | கௌ – ஔ | |
| ஔ – ஔவை | | | |



www.tnpscjob.com

நெடுவினா :

**1. நீங்கள் மொழியை வெளிப்படுத்தும் நிலையில் பேச்சுமொழியையும் எழுத்து மொழியையும் எவ்வாறு உணர்கிறீர்கள் என்பதை விவரிக்க.**

**பேச்சு மொழி**

- உடம்பின் ஒரு பகுதியாக இருக்கின்ற தொண்டையிலிருந்து சொற்கள் எழுகின்றன.
- நான் அதற்கு ஏற்றம், இறக்கம், உச்சரிப்பு, வேகம், நிதானம், திருப்பித் திருப்பிச் சொல்லுதல், மௌனம் போன்றவற்றால் பொருள் வேறுபாடுகளை ஏற்படுத்த முடியும் என்று உணர்கிறேன்.
- எழுத்துமொழியைக் காட்டிலும் பேச்சுமொழி அதிக உணர்ச்சி வெளிப்பாட்டுச் சக்தி மிக்கதாக உள்ளதை நான் உணர்கிறேன்.
- பேச்சுமொழியின்போது நமது உடம்பின் வெளிப்பாடுகள் மொழியென்னும் நீரில் முன்னோக்கி நகர்வதை உணர்கிறேன்.
- பேச்சுமொழிக்கு ஒரு போதும் பழமை தட்டுவதில்லை.
- பேச்சுமொழியில் ஒரு கவிதை இயற்றப்படுகிறபோது அஃது உடம்பின் மேல்தோல் போல் இயங்குகிறது.

**எழுத்துமொழி**

- எழுத்துமொழியில் பேச்சைக் கேட்க எதிராளி கிடையாது.
- எழுத்துமொழியில் எழுதுவதை மட்டும்தான் மனிதனின் கை செய்கிறது.
- எழுத்துமொழி என்பது தனக்குத்தானே பேசிக்கொள்ளும் பேச்சு.
- எழுத்துமொழியில் சொற்கள் கவிதையின் உணர்வை, உணர்ச்சியற்ற ஆடைபோல் போர்த்தி மூடிவிடுகின்றன.
- மொழியானது நீண்ட காலம் பழக்கத்தில் இருப்பதற்கு அதன் எழுத்து வடிவம் இருக்கவேண்டியது அவசியமாகிறது.

**2. நன்னூல் பொதுப்பாயிரம், சிறப்புப்பாயிரம் வாயிலாக அறியலாகும் செய்திகளைத் தொகுத்துரைக்க.**

**பொதுப்பாயிரம்:**

- நூலின் இயல்பு
- ஆசிரியர் இயல்பு
- கற்பிக்கும் முறை
- மாணவர் இயல்பு
- கற்கும் முறை

– என்னும் ஐந்தையும் கூறுவது பொதுப்பாயிரம்.



www.tnpscjob.com

சிறப்புப்பாயிரம்

- நூலாசிரியர் பெயர்
- நூல் பின்பற்றிய வழி
- நூல் வழங்கப்படுகின்ற நிலப்பரப்பு
- நூலின் பெயர்
- தொகை, வகை, விரி என்பவற்றுள் இன்னதில் இயற்றப்பட்டது என்னும் யாப்பு.
- நூலில் குறிப்பிடப்படும் கருத்து.
- நூலைக் கேட்போர் (மாணவர்)
- நூலைக் கற்பதனால் பெறுகின்ற பயன்

– ஆகிய எட்டுச் செய்திகளையும் செம்மையாகத் தெரிவிப்பது சிறப்புப்பாயிரம் ஆகும்.

**சேர்த்துக் கூறுவோர் கருத்து :**

- நூல் இயற்றப்பட்ட காலம்.
- அது அரங்கேற்றப்பட்ட அவைக்களம்.
- அது இயற்றப்பட்டதற்கான காரணம்.

– இம்மூன்றையும் மேலே கூறப்பட்டுள்ள எட்டுச் செய்திகளுடன் சேர்த்துக் கூறுவோர் உள்ளனர்.

**3. தமிழர் வாழ்வோடும் புலம்பெயர் நிகழ்வுகளோடும் அ.முத்துலிங்கத்தின் திணைப்பாகுபாடு எவ்வாறு இணைக்கப்படுகிறது?**

அ. முத்துலிங்கம் அவர்கள் இலங்கையில் உள்ள கொக்குவில் என்னும் கிராமத்தைச் சேர்ந்தவர். இவர் மவுண்லவினியா என்னும் இடத்தில் வாடகை வீட்டில் தங்கியிருந்தார். 1958ஆம் ஆண்டு நிகழ்ந்த கலவரம் அவரது வாழ்க்கையையே திசைமாற்றிவிட்டது. அவரைப் போலீஸ் வாகனத்தில் ஏற்றி அகதிகள் முகாமில் தங்கவைக்கப்பட்டார். அவருடன் சில தமிழ்க்குடும்பங்களும் அம்முகாமில் தங்கியிருந்தன.

முகாமில் அடுத்தவேளை உணவு எப்போது, எங்கேயிருந்து வரும் என்பதே தெரியாது. முகாமில் ஒரு தொண்டு நிறுவனம் அகதிகளுக்கு இலவசமாக உடைகள் வழங்கியது. இவருக்கு மேல்சட்டை மட்டுமே கிடைத்தது. மகிழ்ச்சியுடன் அதை அணிந்து கொண்டார். அகதி முகாமில் அவருடன் 2000 பேர் இருந்தனர். அவர் தங்கியிருந்த முகாம் போலவே பல முகாம்கள் இருந்தன.



www.tnpscjob.com

(மதிய உணவு வேளையில் முகாமில் இருப்பவர்கள் கைதிகளைப் போலத் தட்டை ஏந்திக்கொண்டு வரிசையில் நிற்கவேண்டும். மஞ்சள் நிறத்தில் ஆளுக்கு இரண்டு கரண்டி சாதம் வழங்கப்பட்டது. அகதியாய் நாடுவிட்டு நாடு புலம்பெயர்ந்த போது அணிந்திருந்த சட்டையும் காணாமல் போயிற்று.)

முத்துலிங்கம் அவர்கள் இளைஞன் ஒருவனைச் சந்திக்க வாய்ப்புக் கிடைத்தது. அவனுக்கு 30 வயது இருக்கும். அவன் தன் கதையைச் சொன்னான். அவன் இலங்கையிலும் பாங்காக்கிலும் சிறையில் இருந்திருக்கிறான். ரஷ்யாவில் பனிப்புதையில் சிக்கி உயிர் தப்பியிருக்கிறான். 9 நாள் விசாக் கெடுவை மீறித் த்ங்கியதற்காக, சிங்கப்பூரில் பிரம்படிபட்டிருக்கிறான்.

கள்ள பாஸ்போர்ட்டில் அவன் அமெரிக்கா சென்றிருக்கிறான். அமெரிக்க போலீசாரிடம் சிக்கினான். சிறையில் 3 வருடம் இருந்தான். பின்னர் விடுதலையாகி கனடாவிற்குச் சென்றான். அங்கு கனரக வாகனம் ஓட்டி பிழைப்பு நடத்துவதாக முத்துலிங்கத்திடம் கூறினான்.

புலம்பெயர்வது ஒன்றும் புதிதல்ல. ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக மனிதன் புலம்பெயர்ந்தபடியே இருக்கிறான். சங்க இலக்கியங்களில் தலைவன் பொருளீட்டவும், கல்வி கற்கவும், தூது செல்லவும் தலைவியைப் பிரிந்து செல்வான் எனக் கூறும். அவன் புலம்பெயர்ந்து வேற்று நாட்டுக்குச் சென்றாலும் மீண்டும் தான் இருந்த நாட்டிற்கே வந்து சேர்வான். ஆனால், சொந்த நாட்டிலேயே அகதிகளாய் வாழ்ந்தார்கள்.

அவர்கள் புலம்பெயர்ந்து சென்று வாழ்வது பனிப்பிரதேசங்களில்தான். அதனால்தான் முத்துலிங்கம், சங்ககால மக்கள் வாழ்ந்தது குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்னும் ஐந்து நிலங்களில்தாம் என்கிறார். ஆனால் இலங்கைத் தமிழ்மக்களோ பனியும், பனிசார்ந்த நிலமாய் இருக்கும் பனிப்பிரதேச நாடுகளான ஆறாம் திணை நாடுகள்தாம். தங்களுடைய தாய்நாட்டிலிருந்து வெளியேறிவர்களும் வெளியேற்றப்பட்டவர்களும் எதிர்கொள்ளும் அவலங்களை ஆறாம் திணை ஆறாத வடுவாகப் பதிவு செய்கிறது.

**இலக்கணக் குறிப்பு :**

| | | |
|---|---|---|
| மாநகர் | – | உரிச்சொற்றொடர் |
| காட்டல், கோடல் | – | தொழிற்பெயர் |
| கேட்போர் | – | வினையாலணையும் பெயர் |
| ஐந்தும் | – | முற்றும்மை |



www.tnpscjob.com

**பகுபத உறுப்பிலக்கணம் :**

வைத்தார் – வை + த் + த் + ஆர்

வை – பகுதி; த் – சந்தி; த் - இறந்தகால இடைநிலை;

ஆர் – பலர்பால் வினைமுற்று விகுதி

**புணர்ச்சி விதி :**

1. அணிந்துரை – அணிந்து + உரை
   உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும் – அணிந்த் + உரை
   உடல்மேல் உயிர் வந்தொன்றுவது இயல்பே – அணிந்துரை

2. பொதுச்சிறப்பு – பொது + சிறப்பு
   இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் கசதப மிகும்.
   பொது + ச் + சிறப்பு
   பொதுச்சிறப்பு



www.tnpscjob.com

## மொழியை ஆள்வோம்

### சான்றோர் சித்திரம்



தமிழிலக்கிய வரலாற்றில், "புலமைக் கதிரவன்" எனத் தமிழறிஞர்கள் போற்றிய தமிழ்மொழிப் பெரும்புலவர் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரனார் ஆவார். திருச்சிராப்பள்ளி அருகில் உள்ள அதவத்தூர் என்னும் ஊரில் பிறந்த இவர், திருவாவடுதுறை மடத்தின் தலைமைப் புலவராக விளங்கினார்.

மீனாட்சி சுந்தரனார், தமிழறிஞர்களைத் தேடிக் கண்டு, வழிபட்டு செவிதிறந்து கற்றார். திருவாவடுதுறை மடத்தின் தலைவர் சுப்பிரமணிய தேசிகர், சென்னைத் தாண்டவராயர், திருத்தணிகை விசாகப் பெருமாள் ஆகியோரிடம் பூக்கள்தோறும் சென்று தேனுண்ணும் வண்டுபோல் பாடம் கற்றார். அவர் இயற்றிய சேக்கிழார் பிள்ளைத்தமிழ் என்ற நூல் அவருடைய பெருமையை என்றும் உணர்த்தும். தல புராணங்கள் பாடுவதில் சிறந்தவர். யமக அந்தாதி, திரிபந்தாதி, வெண்பா அந்தாதிகள் ஆகியவற்றை உருவாக்கிப் புகழ் பெற்றார். மாலை, கோவை, கலம்பகம், பிள்ளைத்தமிழ் ஆகியவற்றைப் பாடிப் பெருமை அடைந்தார். உ.வே. சாமிநாதர், தியாகராசர், குலாம்காதிறு நாவலர் போன்றோர் இவரின் மாணவர்கள். மகாவித்துவான் திரிசிரபுரம் மீனாட்சி சுந்தரனார் அவர்களின் புகழ் தமிழ் உள்ளவரையிலும் வாழும்.

1. தமிழிலக்கிய வரலாற்றில் புலமைக் கதிரவன் – இத்தொடரில் புலமைக் கதிரவன் என்பதற்கு இலக்கணக்குறிப்புத் தருக.

   புலமைக் கதிரவன் – உருவகம்

2. மேற்கண்ட பத்தியில் இடம்பெற்றுள்ள உவமை, உருவகத் தொடர்களைக் கண்டறிக.

   வண்டுபோல் – உவமைத் தொடர்.

   புலமைக் கதிரவன் – உருவகத் தொடர்.

3. மீனாட்சி சுந்தரனார் தலபுராணங்கள் பாடுவதில் சிறந்தவர் – விடைக்கேற்ற வினாவை அமைக்க.

   தலபுராணங்கள் பாடுவதில் சிறந்தவர் யார்?

4. பத்தியில் மொழிமுதல் எழுத்துகளைக் கொண்டு அமைந்த சொற்களுள் எவையெவை வடமொழிச் சொற்கள் எனச் சுட்டுக.

   மகா வித்துவான், தலபுராணங்கள், யமக அந்தாதி, திரிபந்தாதி, கலம்பகம்.

5. விளங்கினார் – பகுபத உறுப்பிலக்கணம் எழுதுக.

   விளங்கு + இன் + ஆர்

   விளங்கு – பகுதி; இன் – இறந்தகால இடைநிலை ;

   ஆர் – பலர்பால் வினைமுற்று விகுதி.



www.tnpscjob.com

## தமிழாக்கம் தருக.

1. The Pen is mightier than the Sword.
   கத்தி முனையைவிட பேனா முனை கூர்மையானது.
2. Winners don't do different things, they do things differently.
   வெற்றியாளர்கள் மாறுபட்ட செயலைச் செய்வதில்லை. செய்வதையே வித்தியாசமாகச் செய்கிறார்கள்.
3. A picture is worth a thousand words.
   ஒரு படம் ஆயிரம் வார்த்தைகளுக்குச் சமம்.
4. Work while you work and play while you play.
   வேலை செய்யும்போது வேலையில் கவனம் வை !
   விளையாடும்போது விளையாட்டில் கவனம் வை !
5. Knowledge rules the World.
   அறிவே உலகை ஆள்கிறது.

## பிறமொழிச் சொற்களைத் தமிழாக்கம் செய்க.

| பிறமொழிச் சொல் | – | தமிழ்ச்சொல் | பிறமொழிச் சொல் | – | தமிழ்ச்சொல் |
|---|---|---|---|---|---|
| வாடகை | – | குடிக்கூலி | மாதம் | – | திங்கள் |
| போலீஸ் | – | காவல் | நிச்சயம் | – | உறுதி |
| உத்திரவாதம் | – | உறுதிமொழி | சந்தோஷம் | – | மகிழ்ச்சி |
| சம்பளம் | – | ஊதியம் | ஞாபகம் | – | நினைவு |
| வருடம் | – | ஆண்டு | தேசம் | – | உலகம் |
| வித்தியாசம் | – | வேறுபாடு | உற்சாகம் | – | ஆனந்தம் |
| விசா | – | நுழைவுஇசைவு | பாஸ்போர்ட் | – | கடவுச்சீட்டு |
| கம்பெனி | – | தொழிலகம் | பத்திரிகை | – | நாளிதழ் |
| கோரிக்கை | – | வேண்டுகோள் | யுகம் | – | ஊழிக்காலம் |
| இராச்சியம் | – | நாடு | சரித்திரம் | – | வரலாறு |
| முக்கியத்துவம் | – | முன்னுரிமை | சொந்தம் | – | உறவு |
| சமீபம் | – | அருகில் | தருணம் | – | வேளை |


www.tnpscjob.com

கீழ்க்காணும் நிகழ்ச்சி நிரலினைப் படித்துச் செய்திக் கட்டுரையாக மாற்றுக. அச்செய்தியை நாளிதழில் வெளியிட வேண்டி முதன்மை ஆசிரியருக்குக் கடிதம் எழுதுக.

**நிகழ்ச்சி நிரல்**

**"அரியன கேள் புதியன செய்" (திங்கள் கூடுகை)**

நேரம் 2.30 பிற்பகல் இடம் : அ.மே.நி. பள்ளி

| | |
|---|---|
| 2.30 | தமிழ்த்தாய் வாழ்த்து |
| 2.35 | வரவேற்புரை – மாணவர் இலக்கியச்செல்வன் |
| 2.40 | தலைமையுரை – திரு. எழிலன், தலைமை ஆசிரியர் |
| 2.50 | சிறப்புரை – கவிஞர் வாணி |
| | "புலம்பெயர் தமிழரின் வாழ்க்கை" |
| 3.45 | நன்றியுரை – மாணவர் ஏஞ்சலின் |
| 4.00 | நாட்டுப்பண் |

அனுப்புநர் :

தலைமை ஆசிரியர்,
அரசு மேல்நிலைப் பள்ளி,
பொள்ளாச்சி, கோவை மாவட்டம்.

பெறுநர் :

முதன்மை ஆசிரியர்,
தினத்தந்தி நாளிதழ், கோவை.

மதிப்பிற்குரிய ஐயா,

பொருள் : எங்கள் பள்ளியில் நடந்த திங்கள் கூடுகை நிகழ்ச்சியை நாளிதழில் வெளியிட வேண்டுதல் தொடர்பாக.

வணக்கம்.

எங்கள் பள்ளியில் திங்கள் கூடுகை நிகழ்ச்சி சென்ற மாதம் 11.6.2019-ம் நாள் திங்கள்கிழமை அன்று நடைபெற்றது. அந்த நிகழ்ச்சி நிரலை இத்துடன் இணைத்து அனுப்பியுள்ளேன். தங்கள் நாளிதழில் அதனை வெளியிடுமாறு வேண்டுகிறேன்.

நன்றி

இப்படிக்கு
தலைமையாசிரியர்
அரசு மேல்நிலைப் பள்ளி,
பொள்ளாச்சி.

இடம் : பொள்ளாச்சி
நாள் : 15.6.2019



www.tnpscjob.com

நிகழ்ச்சி

அரசு மேல்நிலைப் பள்ளி, பொள்ளாச்சியில் "அரியன கேள் புதியன செய்" என்ற தலைப்பில் திங்கள் கூடுகை நிகழ்ச்சி 11.6.2019 திங்கள் கிழமையன்று பிற்பகல் 2.30 மணிக்கு துவங்கியது. மாணவ – மாணவியர் தமிழ்த்தாய் வாழ்த்து இசைத்தனர். பள்ளியில் மாணவர் இலக்கியச் செல்வன் வரவேற்புரை நிகழ்த்தி அனைவரையும் வரவேற்றார். பள்ளியின் தலைமை ஆசிரியர் திரு. எழிலன் தலைமையுரை நிகழ்த்தினார். "புலம்பெயர் தமிழரின் வாழ்க்கை" என்ற தலைப்பில் கவிஞர் வாணி சிறப்புரையாற்றினார். விழாவைச் சிறப்பித்தவர்க்கு நன்றியுரையை மாணவர் ஏஞ்சலின் கூறினார்.

அனைவரும் நாட்டுப்பண்ணைச் சேர்ந்துபாட கூட்டம் நிறைவுபெற்றது.

**பத்தியினைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க.**

'தமிழ்' என்ற சொல் தமிழர்க்கு இனிமையானது. 'இனிமையும் நீர்மையும் தமிழெனல்' ஆகும் என்று பிங்கல நிகண்டு குறிப்பிடுகிறது. 'தமிழ்' என்ற சொல்லை இனிமை, பண்பாடு, அகப்பொருள் என்னும் பொருள்களிலும் வழங்கியுள்ளனர்.

"அதூஉம் சாலும் நற்றமிழ் முழுதறிதல்" என்ற புறநானூற்றுப் பாடலடியில் 'தமிழ்' எனும் சொல் மொழி, கவிதை என்பவற்றைத் தாண்டிப் "பல்கலைப் புலமை" என்ற பொருளில் ஆளப்பட்டுள்ளது. "தமிழ்கெழு கூடல்" என்றவிடத்திலும் "கலைப்புலமை" என்ற பொருளிலே ஆளப்பட்டுள்ளது. கம்பன் "தமிழ் தழீஇய சாயலவர்" என்னும் இடத்து 'தமிழ்' என்பதற்கு அழகும் மென்மையும் பொருளாகின்றன.

தேவாரம் போன்ற பக்தி இலக்கியங்களில் 'தமிழ்' பாட்டு என்னும் பொருளில் ஆளப்படுகிறது. ஞானசம்பந்தன் சொன்ன "தமிழ் இவை பத்துமே," மூலன் உரை செய்த மூவாயிரம் தமிழ் என்பன எடுத்துக்காட்டுகளாகும். முப்பது பாட்டுக்களாலான திருப்பாவையை ஆண்டாள் "தமிழ்மாலை" என்றே குறிப்பது இங்கு எண்ணத்தகும். ('பண்பாட்டு அசைவுகள்' – தொ. பரமசிவன்)

**வினாக்கள் :**

1. தமிழ் என்னும் சொல்லுக்குரிய பல்வேறு பொருள்கள் யாவை?
   இனிமை, பண்பாடு, அகப்பொருள், அழகு, மென்மை, பாட்டு
2. பத்தியில் உள்ள அளபெடைகளைக் கண்டறிக.
   அதூஉம் – செய்யுளிசை அளபெடை / இசைநிறை அளபெடை
   தழீஇய – சொல்லிசை அளபெடை
3. தமிழ் என்றவுடன் உங்கள் மனத்தில் தோன்றுவதை ஒரு வரியில் குறிப்பிடுக.
   தமிழ் என்றவுடன் இனிமை என்ற இன்பம் உண்டாகின்றது.



www.tnpscjob.com

4. திருப்பாவைக்கு ஆண்டாள் குறிப்பிடும் பெயர் யாது?
தமிழ்மாலை

5. பத்தியின் மையக்கருத்திற்கேற்ப ஒரு தலைப்பிடுக.
தமிழ் தமிழர்க்கு உயிர்

## மொழியோடு விளையாடு

**1. எண்ணங்களை எழுத்தாக்குக.**



துளி நீரும் எங்களுக்கு உயிர் நீர் ;
பழமுண்டு விதை போட்டு
விருட்சமாக்குவோம் !
கவலையோடு எமைப்பார்க்கும்
மனிதர்களின் கவலை போக்குவோம் !

சிறு பறவை என்றாலும்
பெரு முயற்சி கொள்வோம்!
இயற்கை போற்றி, இயற்கை போற்றி
உலக வாழ்வை வெல்வோம் !

பிடிமானம் இல்லாமல்
வானம் நிற்பது
கிளைகளால் அல்ல
சிறகுகளால் !

2. தொடரில் உள்ள சொற்களை ஒழுங்குபடுத்தி இரண்டு சொற்றொடர்களாக்குக.
(எ.கா) ஓர் பயிர் பறவை வளர வேண்டும் அழகான தண்ணீர் மயில்
அ) மயில் ஓர் அழகான பறவை.
ஆ) பயிர் வளரத் தண்ணீர் வேண்டும்.

i) பள்ளிக்கூடம் எல்லாம் தருபவை ஒவ்வொரு கலைகள் குழந்தையும் போக வேண்டும் மகிழ்ச்சி.
அ) ஒவ்வொரு குழந்தையும் பள்ளிக்கூடம் போக வேண்டும்.
ஆ) கலைகள் எல்லாம் மகிழ்ச்சி தருபவை.

ii) நிலவு வீசுவதால் தெற்கிலிருந்து மாலை தென்றல் மகிழ்விக்கும் எனப்படுகிறது மனதை
அ) தெற்கிலிருந்து வீசுவதால் தென்றல் எனப்படுகிறது.
ஆ) மாலை நிலவு மனதை மகிழ்விக்கும்.

iii) பிறர் செய்யாவிட்டாலும் செய்த தீமை மறக்கக்கூடாது நன்மை செய்யக்கூடாது உதவியை.
அ) பிறர் செய்த உதவியை மறக்கக் கூடாது.
ஆ) நன்மை செய்யாவிட்டாலும் தீமை செய்யக் கூடாது.



www.tnpscjob.com

iv) நேற்று என் வந்த பையன் பக்கத்தில் யார் இருக்கவில்லை தெரியுமா?

அ) நேற்று வந்த பையன் யார்?

ஆ) பக்கத்தில் ஏன் இருக்கவில்லை தெரியுமா?

v) கோசல மக்கள் நாடு ஒரு மகிழ்ச்சியாக சிறந்த வாழ்ந்து நாடு வந்தனர்.

அ) கோசல நாடு ஒரு சிறந்த நாடு.

ஆ) மக்கள் மகிழ்ச்சியாக வாழ்ந்து வந்தனர்.

3. **வேர்ச்சொற்களை எடுத்துக்காட்டில் உள்ளவாறு தொடர்களாக மாற்றுக.**

அ) வா ஆ) பேசு இ) தா ஈ) ஓடு உ) பாடு

(எ.கா) **வா**– வேர்ச்சொல்

அருணா வீட்டுக்கு வந்தாள் (வினைமுற்று)

அங்கு வந்த பேருந்தில் அனைவரும் ஏறினர். (பெயரெச்சம்)

கருணாகரன் மேடையில் வந்து நின்றார் (வினையெச்சம்)

என்னைப் பார்க்க வந்தவர் என் தந்தையின் நண்பர். (வினையாலணையும் பெயர்)

ஆ) **பேசு** – வேர்ச்சொல்

கண்ணன் என்னிடம் பேசினான். (வினைமுற்று)

அவன் பேசிய செய்தி சுவையானது. (பெயரெச்சம்)

இராதை பேசி முடிப்பதற்குள் கூட்டம் கலைந்தது. (வினையெச்சம்)

என்னுடன் பேசியவர் என் தம்பியின் நண்பர். (வினையாலணையும் பெயர்)

இ) **தா** – வேர்ச்சொல்

மலர்விழி பூங்கொத்தைத் தந்தாள். (வினைமுற்று)

அவள் தந்த மலர் மணமுடையது. (பெயரெச்சம்)

முருகன் புத்தகத்தை என்னிடம் தந்து சென்றான். (வினையெச்சம்)

எனக்குப் பரிசு தந்தவர் தலைமை ஆசிரியர். (வினையாலணையும் பெயர்)

ஈ) **ஓடு** – வேர்ச்சொல்

அவன் வேகமாக ஓடினான். (வினைமுற்று)

அவன் ஓடிய வேகம் அதிகமாக இருந்தது. (பெயரெச்சம்)

அவன் ஓடி முடிப்பதற்குள் போட்டியே முடிந்தது. (வினையெச்சம்)

அவனுடன் ஓடியவன் யார் தெரியுமா? (வினையாலணையும் பெயர்)

உ) **பாடு** – வேர்ச்சொல்

முரளி இனிமையாகப் பாடினான். (வினைமுற்று)

நாங்கள் பாடிய பாடல் இனிமையாக இருந்தது. (பெயரெச்சம்)

ராதை பாடி முடிப்பதற்குள் இரவு வந்துவிட்டது. (வினையெச்சம்)

ராமாயணம் பாடியவர் கம்பரன்றோ? (வினையாலணையும் பெயர்)



www.tnpscjob.com

## கூடுதல் வினாக்கள்

**ஒரு மதிப்பெண் வினாக்கள் :**

1. 'பேச்சுமொழியும் கவிதை மொழியும்' – நூலின் ஆசிரியர் யார்?
   இந்திரன்
2. "மொழியில் மூழ்கியபடிதான் எனது விழிகள் இந்த உலகைக் காணத் திறந்தன" என்று கூறியவர் யார்?
   இந்திரன்
3. உணர்ச்சிக்கு மிக அருகில் இருக்கும் மொழி எது?
   பேச்சு மொழி
4. அதிக உணர்ச்சி வெளிப்பாட்டுச் சக்தி கொண்டது எது?
   பேச்சு மொழி
5. வால்ட் விட்மன் எந்நாட்டைச் சேர்ந்தவர்?
   அமெரிக்கா
6. புதுக்கவிதை இயக்கத்தைத் தோற்றுவித்தவர் யார்?
   வால்ட்விட்மன்
7. வால்ட் விட்மனின் உலகப் புகழ் பெற்ற நூல் எது?
   புல்லின் இதழ்கள்
8. இந்திரனின் இயற்பெயர் என்ன?
   இராசேந்திரன்
9. 'தமிழின் கவிதையியல்' – நூலாசிரியர் யார்?
   கா.சிவத்தம்பி
10. 2011 ஆம் ஆண்டுக்கான சாகித்திய அகாதெமி விருது பெற்ற இந்திரனின் மொழிபெயர்ப்பு நூல் எது?
    பறவைகள் ஒருவேளை தூங்கப் போயிருக்கலாம்.
11. கவிதைகள் இயற்றுவதுடன் சிறப்பாகப் பாடும் திறன் கொண்ட கவிஞர் யார்?
    கவிஞர் சு, வில்வரத்தினம்
12. கவிஞர் சு. வில்வரத்தினத்தின் கவிதைத் தொகுப்பு எது?
    உயிர்த்தெழும் காலத்துக்காக (2001)
13. "தன் இனத்தையும் மொழியையும் பாடாத கவிதை வேரில்லாத மரம்; கூடில்லாத பறவை" என்று கூறியவர் யார்?
    இரசூல் கம்சதேவ்.
14. தமிழின் முதல் இலக்கண நூல் எது?
    தொல்காப்பியம்



www.tnpscjob.com

15. தொல்காப்பியத்தை முதல் நூலாகக் கொண்ட வழிநூல் எது?
நன்னூல்
16. நன்னூலின் ஆசிரியர் யார்?
பவணந்தி முனிவர்
17. பவணந்திமுனிவர் நன்னூலை யார் வேண்டுகோளுக்கு இணங்க இயற்றினார்?
சீயகங்கன் என்ற சிற்றரசர்
18. பவணந்தியாரின் உருவச் சிற்பம் உள்ள கோவில் எது?
எட்டாம் தீர்த்தங்கரரான சந்திரபிரபா கோவில்.
19. சந்திரபிரபாவின் கோவில் எங்குள்ளது?
ஈரோடு மாவட்டம், மேட்டுப் புதூர்.
20. நன்னூல் எழுத்ததிகாரம் எத்தனை பகுதிகளை உடையது?
5 (ஐந்து)
21. நன்னூல் பொருளதிகாரம் எத்தனை பகுதிகளுடையது?
5 (ஐந்து)
22. பாயிரத்திற்கு உரிய வேறு பெயர்கள் எத்தனை?
ஏழு
23. நூலுக்கு முன் சொல்லப்படுவது ..............
முகவுரை
24. நூலுக்கு முகம்போல முற்பட்டிருப்பது
நூன்முகம்
25. நூலில் சொல்லிய பொருள் அல்லாதவற்றை நூலின் புறத்திலே சொல்வது
புறவுரை
26. நூலில் சொல்லிய பொருள் அல்லாதவற்றைத் தந்து சொல்வது
தந்துரை
27. பாயிரம் எத்தனை வகைப்படும் ?
இரண்டு
28. இரண்டு வகையான பாயிரங்களைக் கூறு.
பொதுப்பாயிரம், சிறப்புப் பாயிரம்
29. பாயிரம் இல்லையேல் ............அன்று.
பனுவல் (நூல்)
30. எல்லாவகை நூல்களுக்கும் அழகு தருவது எது?
அணிந்துரை



www.tnpscjob.com

31. திருக்குறளையும் திருவாசகத்தையும் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர் யார்?
ஜி.யு.போப்

32. 'கடல்புறா' என்னும் நூலின் ஆசிரியர் யார்?
சாண்டில்யன்.

33. "சூரியன் மறையாத ராச்சியம்" – என்றழைக்கப்பட்ட நாடு எது?
பிரிட்டிஷ்

34. "தமிழர் பாரம்பரிய நாள்" எது?
ஜனவரி 14

35. உலகின் இரண்டாவது பெரிய தேசம் எது?
கனடா

36. 'வன்னி வீதி' என்று பெயர் சூட்டப்பட்ட சாலை எங்குள்ளது?
கனடா

37. கனடாவில் ஈழத்தமிழரின் புலம்பெயர் வரலாற்றை நினைவுபடுத்தும் வீதி எது?
வன்னி வீதி.

38. காகத்துக்குப் பறக்கும் எல்லை எத்தனை மைல் தூரம்?
இரண்டு மைல்

39. பறப்பதற்கு எல்லையே இல்லாத பறவை எது?
ஆறுமணிக்குருவி

40. இமயமலைக்குப் பறந்துபோய் மீண்டும் திரும்பும் பறவை எது?
ஆறுமணிக்குருவி

41. ஈழத்திலிருந்து புலம்பெயர்ந்தவர்களை முத்துலிங்கம் எப்பறவையுடன் ஒப்பிடுகிறார்?
ஆறுமணிக்குருவி

42. புலம்பெயர்ந்தவர்களின் ஆறாம் திணை எது?
பனியும் பனிசார்ந்த நிலமும்.

43. முத்துலிங்கம் பிறந்த ஊர் எது?
யாழ்பாணத்துக்கு அருகிலுள்ள கொக்குவில்

44. முத்துலிங்கம் தற்போது எங்கு வசிக்கிறார்?
கனடா

45. ஆறாம் திணை – ஆசிரியர் யார்?
அ. முத்துலிங்கம்

46. மொழி முதல் எழுத்துகள் எத்தனை?
22



www.tnpscjob.com

47. மொழி இறுதி எழுத்துகள் எத்தனை?
24

48. 'ஙனம்' என்பதன் பொருள் யாது?
விதம்

49. பழைய இலக்கிய வழக்கில் சொல்லின் இறுதியில் வந்து இன்றைய வழக்கில் இறுதியில் வராத எழுத்துகள் எவை?
ஞ்,ந்,வ்

50. நிலைமொழியும் வருமொழியும் இணைவதற்குப் பெயர் என்ன?
புணர்ச்சி

51. இலக்கண வகையில் சொற்கள் எத்தனை வகைப்படும்?
நான்கு

52. பெயரையும் வினையையும் சார்ந்து வரும் சொற்கள் எவை?
இடைச்சொல், உரிச்சொல்

53. குற்றியலுகரம் எத்தனை வகைப்படும்?
ஆறு

**II. குறுவினா – கூடுதல் வினாக்கள்**

**1. இந்திரன் நடத்திய இதழ்கள் எவை?**

- வெளிச்சம்
- நுண்கலை

**2. பேச்சு மொழியைக் கவிதையில் பயன்படுத்திய மூன்று வகைக் கவிஞர்கள் யாவர்?**

- வால்ட் விட்மன்
- மல்லார்மே
- பாப்லோ நெருடா

**3. பேச்சுமொழியில் அமைந்த கவிதைக்கும், எழுத்துமொழியில் அமைந்த கவிதைக்கும் உள்ள வேறுபாடு யாது.**

- பேச்சுமொழியில் அமைந்த கவிதை உடம்பின் மேல்தோல் போல் இயங்குகிறது.
- எழுத்துமொழியில் அதே சொற்கள் கவிதையின் உணர்வை உணர்ச்சியற்ற ஆடைபோல் போர்த்தி மூடிவிடுகின்றன.



www.tnpscjob.com

**சிறுவினா – கூடுதல் வினா**

**1. பாயிரத்திற்கு உரிய ஏழு பெயர்கள் யாவை?**

அ) முகவுரை:

நூலுக்குமுன் சொல்லப்படுவது.

ஆ) பதிகம்

ஐந்து பொதுவும் பதினொரு சிறப்புமாகிய பலவகைப் பொருள்களையும் தொகுத்துச் சொல்வது.

இ) அணிந்துரை

நூலுக்கு அணியாக அமைவது.

ஈ) புனைந்துரை

நூலின் பெருமை முதலியவை விளங்க அலங்கரித்துச் சொல்வது.

உ) நூன்முகம்

நூலுக்கு முகம்போல முற்பட்டிருப்பது.

ஊ) புறவுரை

நூலில் சொல்லிய பொருள் அல்லாதவற்றை நூலின் புறத்திலே சொல்வது.

எ) தந்துரை

நூலில் சொல்லிய பொருள் அல்லாதவற்றைத் தந்து சொல்வது.

**2. நன்னூல் – நூற்குறிப்பு வரைக.**

- நன்னூல், தொல்காப்பியத்தை முதல் நூலாகக் கொண்ட வழிநூலாகும்.
- கி.பி. 13 ஆம் நூற்றாண்டில் பவணந்தி முனிவரால் எழுதப்பட்ட இலக்கண நூல்.
- எழுத்ததிகாரம்,சொல்லதிகாரம் என இரண்டு அதிகாரங்களுடையது.
- எழுத்ததிகாரம், எழுத்தியல், பதவியல், உயிரீற்றுப் புணரியல், மெய்யீற்றுப் புணரியல், உருபுப் புணரியல் என 5 பகுதிகளையுடையது.
- சொல்லதிகாரம், பெயரியல், வினையியல், பொதுவியல், இடையியல், உரியியல் என 5 பகுதிகளையுடையது.
- சீயகங்கன் என்ற சிற்றரசர் கேட்டுக் கொண்டதால் பவணந்தி முனிவர் நன்னூலை இயற்றினார் என்று பாயிரம் குறிப்பிடும்.
- ஈரோடு மாவட்டம் மேட்டுப்புதூரில் எட்டாம் தீர்த்தங்கரரான சந்திரபிரபாவின் கோவிலில் பவணந்தியாரின் உருவச் சிற்பம் உள்ளது.



www.tnpscjob.com

3. குற்றியலுகரத்தின் ஆறுவகைகளையும் சான்றுடன் விளக்குக.

| | |
|---|---|
| நெடில்தொடர்க் குற்றியலுகரம் | வீடு + இல்லை = வீடில்லை |
| உயிர்த்தொடர்க் குற்றியலுகரம் | முரடு + காளை = முரட்டுக்காளை |
| வன்தொடர்க் குற்றியலுகரம் | அச்சு + பலகை = அச்சுப்பலகை |
| மென்தொடர்க் குற்றியலுகரம் | பஞ்சு + பொதி = பஞ்சுப்பொதி |
| இடைத்தொடர்க் குற்றியலுகரம் | மார்பு + கூடு = மார்புக்கூடு |
| ஆய்தத்தொடர் குற்றியலுகரம் | எஃகு + கம்பி = எஃகுக்கம்பி |

4. எழுத்துகளின் அடிப்படையில் ஏற்படும் புணர்ச்சியைக் கூறுக.

சொற்புணர்ச்சியில் நிலைமொழி இறுதி எழுத்தாகவும் வருமொழி முதலெழுத்தாகவும் எழுத்துகள் சந்திக்கும் முறையை நான்காகப் பிரிக்கலாம்.

| வ.எண் | ஈற்றெழுத்து முதலெழுத்து | எ.கா | சந்திப்பு |
|---|---|---|---|
| 1. | உயிர்+உயிர் | மலை+அருவி | ஐ+அ |
| 2. | மெய்+உயிர் | தமிழ்+அன்னை | ழ்+அ |
| 3. | உயிர்+மெய் | தென்னை+மரம் | ஐ+ம் |
| 4. | மெய்+மெய் | தேன்+மழை | ன்+ம் |

5. சொற்களின் அடிப்படையில் நிகழும் புணர்ச்சியைக் கூறுக.

- இலக்கண வகையில் சொற்கள் நால்வகைப்படும்.
- இடைச்சொல்லும் உரிச்சொல்லும் பெயரையும் வினையையும் சார்ந்தே வரும்.
- இவ்விரு சொற்களும் நிலைமொழியாகவும் வருமொழியாகவும் வந்தாலும் அவற்றின் புணர்ச்சி எழுத்துகளின் புணர்ச்சியே ஆகும்.

| வ.எண் | நிலைமொழி வருமொழி | எ.கா | தொடர்வகை |
|---|---|---|---|
| 1. | பெயர் + பெயர் | கனி + சாறு | பெயர் பெயர்த்தொடர் |
| 2. | பெயர் + வினை | தமிழ் + படி | பெயர் வினைத்தொடர் |
| 3. | வினை + வினை | நடந்து + செல் | வினை வினைத்தொடர் |
| 4. | வினை + பெயர் | படித்த + நூல் | வினை பெயர்த்தொடர் |



www.tnpscjob.com

# இயல் - 2

| | | |
|---|---|---|
| உரைநடை | : | இயற்கை வேளாண்மை |
| செய்யுள் | : | ஏதிலிக்குருவிகள் |
| | | காவியம் |
| | | திருமலை முருகன் பள்ளு |
| | | ஐங்குறுநூறு |
| துணைப்பாடம் | : | யானை டாக்டர் |
| இலக்கணம் | : | புணர்ச்சி விதிகள் |



www.tnpscjob.com

1. **குற்றியலுகரப் புணர்ச்சியை எடுத்துக்காட்டுடன் விளக்குக.**

- குற்றியலுகரச் சொற்களில் நிலைமொழியின் இறுதியில் உள்ள குற்றியலுகரம் வருமொழியின் முதலில் உள்ள உயிரெழுத்துடன் புணரும்போது, தான் ஏறிய மெய்யை நிறுத்தி உகரம் மறையும்.
- பின் நிலைமொழி இறுதியில் உள்ள மெய், வருமொழி முதலெழுத்தாகிய உயிரெழுத்துடன் புணரும்.

எ.கா :

மாசற்றார் – மாசு + அற்றார்

மாசு (ச்+உ) + அற்றார் – 'உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும்'

என்னும் விதிப்படி 'உ' மறைந்தது.

மாச் + அற்றார் – 'உடல்மேல் உயிர்வந்தொன்றுவது இயல்பே '

என்னும் விதிப்படி 'மாசற்றார்' எனப் புணர்ந்தது.

2. **கருவிழி, பாசிலை, சிறியன், பெருங்கல் ஆகிய சொற்களைப் பிரித்துப் புணர்ச்சி விதி தருக.**

அ) கருவிழி = கருமை + விழி

ஈறுபோதல் = கரு + விழி = கருவிழி

ஆ) பாசிலை = பசுமை + இலை

ஈறுபோதல் = பசு + இலை

ஆதிநீடல் = பாசு+இலை

உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும் = பாச் + இலை

உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே = பாசிலை

இ) சிறியன் = சிறுமை + அன்

ஈறுபோதல் = சிறு + அன்

இடைஉகரம் இய்யாதல் = சிறி + அன்

உடம்படுமெய் = சிறி + ய் + அன்

உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே = சிறியன்

ஈ) பெருங்கல் = பெருமை + கல்

ஈறுபோதல் = பெரு+கல்

இனமிகல் = பெருங்கல்



www.tnpscjob.com

**3. புணர்ச்சி விதி தந்து விளக்குக.**

**புலனறிவு, வில்லொடிந்தது, வழியில்லை, திரைப்படம், ஞாயிற்றுச்செலவு**

அ) புலனறிவு = புலன் + அறிவு

உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே = புலனறிவு

ஆ) வில்லொடிந்தது – வில் + ஒடிந்தது

தனிக்குறில்முன் ஒற்று உயிர்வரின் இரட்டும் = வில்ல்+ஒடிந்தது

உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே = வில்லொடிந்தது.

இ) வழியில்லை = வழி + இல்லை

இ, ஈ, ஐ வழி யவ்வும் = வழி + ய் + இல்லை

உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே – வழியில்லை

ஈ) திரைப்படம் = திரை + படம்

இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் கசதப மிகும் – திரைப்படம்

உ) ஞாயிற்றுச்செலவு = ஞாயிறு + செலவு

நெடிலோடு உயிர்த்தொடர்க் குற்றுகரங்களுள்

டற ஒற்று இரட்டும்

ஞாயிற்று + செலவு = ஞாயிற்றுச்செலவு

**4. விதி வேறுபாடறிந்து விளக்குக.**

தன்னொற்றிரட்டல் – தனிக்குறில் முன் ஒற்று உயிர்வரின் இரட்டும்.

இனமிகல் – வன்மைக்கு இனமாத் திரிபவும் ஆகும்.

**தன்னொற்றிரட்டல்**

பண்புப்பெயர்ப்புணர்ச்சியில் ஈறுபோதல் விதிப்படி 'மை' விகுதி மறைந்த பிறகு நிலைமொழி இறுதி உகர ஈறாகவும், வருமொழி முதல் உயிராகவும் இருக்கும் பொழுது தன்னொற்றிரட்டல் விதியைப் பயன்படுத்த வேண்டும்.

**சான்று**

வெற்றிலை = வெறுமை + இலை

ஈறுபோதல் = வெறு + இலை

தன்னொற்றிரட்டல் = வெற்று + இலை

உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும் = வெற்ற் + இலை

உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே = வெற்றிலை

**தனிக்குறில்முன் ஒற்று உயிர்வரின் இரட்டும்**

நிலைமொழி தனிக்குறில் சார்ந்த மெய்யெழுத்தாக நின்று, வருமொழியின் முதல் உயிரெழுத்தாக இருப்பின் நிலைமொழி ஒற்று இரட்டிக்கும்.



www.tnpscjob.com

**சான்று**

கல்லதர் = கல் + அதர்

தனிக்குறில்முன் ஒற்று உயிர்வரின் இரட்டும் = கல்ல் + அதர்

உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே = கல்லதர்.

**இனமிகல்**

பண்புப்பெயர்ப் புணர்ச்சியில் ஈறுபோதல் விதிப்படி மை விகுதி மறைந்த பிறகு, மகரமெய் வராதநிலையில் இனமிகல் விதியைப் பயன்படுத்த வேண்டும்.

**சான்று**

கருங்கடல் = கருமை + கடல்

ஈறுபோதல் = கரு + கடல்

இனமிகல் = கருங்கடல்

**வன்மைக்கு இனமாத் திரிபவும் ஆகும்.**

நிலைமொழிச் சொல்லின் இறுதி எழுத்தாக மகரமெய் வரும்போது, அச்சொல் மூன்று நிலைகளில் புணரும்.

**i) மகரமெய் கெட்டுப் புணரும்.**

**சான்று :** பாடவேளை = பாடம் + வேளை

மவ்வீறு ஒற்றழிந்து உயிரீறு ஒப்பவும் = பாடவேளை

**ii) மகரமெய் கெட்டு இனமெல்லெழுத்து தோன்றிப் புணரும்.**

**சான்று :**

காலங்கடந்தவன் = காலம் + கடந்தவன்

மவ்வீறு ஒற்றழிந்து உயிரீறு ஒப்பவும் = கால + கடந்தவன்

வன்மைக்கு இனமாத் திரிபவும் ஆகும் = காலங்கடந்தவன்

**iii) மகரமெய் கெட்டு வல்லினம் மிக்குப் புணரும்.**

**சான்று:**

பழத்தோல் = பழம் + தோல்

மவ்வீறு ஒற்றழிந்து உயிரீறு ஒப்பவும்

வன்மைக்கு இனமாத் திரிபவும் ஆகும் = பழ+ தோல் = பழத்தோல்

**5. பொருத்துக**

| | | |
|---|---|---|
| அ) அடி அகரம் ஐ ஆதல் | – | செங்கதிர் |
| ஆ) முன்நின்ற மெய் திரிதல் | – | பெருங்கொடை |
| இ) ஆதிநீடல் | – | பைங்கூழ் |
| ஈ) இனமிகல் | – | காரிருள் |



www.tnpscjob.com

விடை :

அ) அடி அகரம் ஐ ஆதல் – பைங்கூழ்
ஆ) முன் நின்ற மெய் திரிதல் – செங்கதிர்
இ) ஆதிநீடல் – காரிருள்
ஈ) இனமிகல் – பெருங்கொடை

6. **கூற்றுகளைப் படித்துக் கீழ்க்காண்பனவற்றுள் சரியானதைத் தேர்க.**

அ) நிலைமொழியில் குற்றியலுகரமாகவும், வருமொழியின் முதல், உயிரெழுத்தாகவும் அமையும் போது 'உயிர்வரின் உக்குறள் மெய்விட்டு ஓடும்' என்னும் விதியைப் பெறும்.

ஆ) நிலைமொழியின் ஈற்றில் இஈஐ வரும்போது வகர உடம்படுமெய் பெறும்.

இ) பண்புப்பெயர்ப் புணர்ச்சியில் 'ஈறுபோதல்' என்னும் விதியே முதன்மையானதாக விளங்கும்.

ஈ) 'தன்னொற்றிரட்டல்' என்னும் விதி பண்புப்பெயர்ப் புணர்ச்சிக்குப் பொருந்தும்.

i) அ, ஆ, இ, சரி ; ஈ தவறு ii) அ, இ, ஈ சரி ; ஆ தவறு

**விடை:** ii) அ, இ, ஈ சரி; ஆ தவறு

**கூடுதல் வினாக்கள் – புணர்ச்சி விதி தருக.**

1. பெருவழி – பெருமை + வழி
பெரு + வழி – ஈறுபோதல்.

2. பெரியன் – பெருமை + அன்
பெரு + அன் – ஈறுபோதல்.
பெரி + அன் – இடை உகரம் இய்யாதல்.
பெரி + ய் + அன் – உடம்படுமெய் 'ய்' இடையில் தோன்றும்.
பெரியன் (ய் + அ) – உடல்மேல் உயிர்வந்தொன்றுவது இயல்பே.

3. மூதூர் – முதுமை + ஊர்
முது + ஊர் – ஈறுபோதல்
மூது + ஊர் – ஆதிநீடல்
மூத் + ஊர் – உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும்.
மூதூர் – (த் + ஊ) – உடல்மமேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே.



www.tnpscjob.com

4. பைந்தமிழ் – பசுமை + தமிழ்

பசு + தமிழ் – ஈறுபோதல்

பைசு + தமிழ் – அடி அகரம் 'ஐ' ஆதல்.

பை + தமிழ் – இனையவும் 'சு' கெட்டது.

பைந்தமிழ் – (ந்) இனமிகல் என்னும் விதிப்படி.

5. நெட்டிலை – நெடுமை + இலை

நெடு + இலை – ஈறுபோதல்

நெட்டு + இலை – தன்னொற்றிரட்டல்.

நெட்ட் + இலை – உயிர்வரின் உக்குறள் மெய்விட்டு ஓடும்.

நெட்டிலை –(ட் + இ) – உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே.

6. செந்தமிழ் – செம்மை + தமிழ்

செம் + தமிழ் – ஈறுபோதல்.

செந் + தமிழ் – முன்னின்ற மெய் திரிதல்.

7. கருங்கடல் – கருமை + கடல்

கரு + கடல் – ஈறுபோதல்

கருங் + கடல் – இனமிகல்.

8. பைந்தளிர் – பசுமை + தளிர்

பசு + தளிர் – ஈறுபோதல்

பைசு + தளிர் – அடி அகரம் 'ஐ' ஆதல்.

பை + தளிர் – இனையவும்

பைந் + தளிர் – இனமிகல்

9. வாயொலி – வாய் + ஒலி

வாயொலி – உடல்மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே.

10. மரக்கலம் – மரம் + கலம் – மவ்வீறு ஒற்றழிந்து உயிரீறு ஒப்பவும்.

மர + கலம் – இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் க, ச, த, ப மிகும்.

மர + க் + கலம் – மரக்கலம்.



www.tnpscjob.com

## நம்மை அளப்போம்

பலவுள் தெரிக.

**1. பொருத்தமான இலக்கிய வடிவம் எது?**

அ) ஏதிலிக் குருவிகள் – மரபுக் கவிதை

ஆ) திருமலை முருகன் பள்ளு – சிறுகதை

இ) யானை டாக்டர் – குறும் புதினம்

ஈ) ஐங்குறுநூறு – புதுக்கவிதை

**விடை :** இ) யானை டாக்டர் – குறும்புதினம்

**2. மண்ணுக்கு வளம் சேர்ப்பன –**

அ) மண்புழு ஆ) ஊடுபயிர்

இ) இயற்கை உரங்கள் ஈ) இவை மூன்றும்

**விடை:** ஈ) இவை மூன்றும்

**3. "வான் பொய்த்தது" என்ற சொற்றொடர் உணர்த்தும் மறைமுகப்பொருள்**

அ) வானம் இடிந்தது ஆ) மழை பெய்யவில்லை

இ) மின்னல் வெட்டியது ஈ) வானம் என்பது பொய்யானது

**விடை :** ஆ) மழை பெய்யவில்லை

**4. கருப்பட்டி, பனங்கற்கண்டு போன்றவை**

அ) மதிப்புக் கூட்டுப் பொருள்கள் ஆ) நேரடிப்பொருள்கள்

i) அ – மட்டும் சரி ii) ஆ – மட்டும் சரி

iii) இரண்டும் சரி iv) அ – தவறு, ஆ – சரி

**விடை :** அ – மட்டும் சரி

**5. பிழையான தொடரைக் கண்டறிக.**

அ) பதநீரிலிருந்து பனங்கற்கண்டு, கருப்பட்டி போன்றவற்றைத் தயாரிக்கின்றனர்.

ஆ) ஏதிலிக்குருவிகள் என்பது வாழ்வதற்கான சூழல் கிடைக்காத குருவிகளாகும்.

இ) குறைந்த எட்டுத்தொகை அடிகளை ஐங்குறுநூறு நூல்களுள் உடையது.

ஈ) யானைகளால் வெகுதொலைவில் உள்ள நீரினை வாசனைமூலம் அறியமுடியும்.

**விடை:** இ) குறைந்த எட்டுத்தொகை அடிகளை ஐங்குறுநூறு நூல்களுள் உடையது.



www.tnpscjob.com

## குறுவினா

**1. தமிழ்நாட்டின் மாநில மரம் – சிறுகுறிப்பு வரைக.**

- தமிழ்நாட்டின் மாநில மரம் பனை மரமாகும்.
- சிறந்த காற்றுத்தடுப்பான்.
- ஏழைகளின் கற்பக விருச்சம்.
- ஆழத்தில் நீர்மட்டம் குறையாமல் நீரைச் சேமிக்கும் தன்மையுடையதால் நிலத்தடி நீர்மட்டம் குறையாது.
- பனை வளர, பெரிய அளவுக்குத் தண்ணீர் தேவையில்லை.
- பனைமரத்திலிருந்து நுங்கு, பதநீர் மட்டுமல்ல கருப்பட்டி, பனங்கற்கண்டு போன்ற மதிப்புக் கூட்டுப் பொருள்களும் தயாரிக்கலாம்.

**2. ஏதிலியாய்க் குருவிகள் எங்கோ போயின – தொடரின் பொருள் யாது?**

- மரங்கள் வெட்டப்பட்டதால் வான்மழை பொய்த்தது.
- வான்மழை பொய்த்ததால் மண் வளம் குன்றியது.
- மண்ணில் விளைந்த பொருள்களை உண்டு வாழ்ந்த குருவிகளுக்கு உணவு கிடைக்கவில்லை.
- உணவைத் தேடிக் குருவிகள் ஏதிலியாய் எங்கோ பறந்து போயின.

**3. வளருங் காவில் முகில்தொகை ஏறும் – பொன் மாடம் எங்கும் அகிற்புகை நாறும்–அடிக்கோடிட்ட தொடர் குறிப்பிடுவது என்ன?**

**'காவில் முகில்தொகை ஏறும்' தொடர் குறிப்பிடுவது.**

- தென்கரை நாட்டின் நீண்டு வளர்ந்த சோலையில் மேகக் கூட்டங்கள் தங்கிச் செல்லும்.

**4. அலர்ந்து – பகுபத உறுப்பிலக்கணம் தருக.**

அலர்ந்து = அலர் + த் (ந்) + த் + உ

அலர் – பகுதி; த்– சந்தி; ந்–விகாரம் ; த்–இறந்த கால இடைநிலை;

உ– வினையெச்ச விகுதி



www.tnpscjob.com

**5. ய்,வ்,ஞ்,ட்,ற்,ந்– மெய்களுக்கான வேற்றுநிலை, உடனிலை மெய்மயக்கங்களுக்கு எடுத்துக்காட்டுகள் தருக.**

| வேற்றுநிலை மெய்மயக்கம் | உடனிலை மெய்மயக்கம் |
|---|---|
| ய்–வாய்மை | ய்– செய்யாறு |
| வ்–தெவ்யாது | வ் – செவ்வாய் |
| ஞ்–மஞ்சள் | ஞ்–மஞ்ஞை |
| ட் – காட்சி | ட் – பட்டம் |
| ற் – பயிற்சி | ற் – நாற்றம் |
| ந் – தந்தம் | ந் – எந்நாள் |

**6. காற்றின் தீராத பக்கங்களில் எது எதனை எழுதிச் சென்றது?**

சிறகிலிருந்து பிரிந்த இறகு ஒன்று காற்றின் தீராத பக்கங்களில் ஒரு பறவையின் வாழ்வை எழுதிச் சென்றது.

**சிறுவினா**

**1. வேதிக்கலப்பில்லாத பூச்சிக்கொல்லி நடைமுறைக்குச் சாத்தியமா? – நும் கருத்தை எழுதுக.**

- வேதிக்கலப்பில்லாத பூச்சிக்கொல்லி நடைமுறைக்குச் சாத்தியமே.
- நம் முன்னோர்கள் எந்த வேதியியல் பூச்சிக் கொல்லியையும் பயன்படுத்தவில்லை.
- பூச்சிக் கொல்லியைப் பயன்படுத்துவதால் மனிதர்களுக்கு புற்று நோய், வயிற்றுப்புண், மலட்டுத் தன்மை போன்ற நோய்கள் ஏற்படுகின்றன.
- வேப்பங்கொட்டை, நொச்சி இலை, புங்கன், பிரண்டை, கற்றாழை ஆகியவற்றை நன்றாக இடித்துக் கோமியத்தில் ஊற வைத்துப் பயிர்களில் தெளித்தால் பூச்சிகள் படிப்படியாகக் குறைந்து காணாமல் போய்விடும்.
- நிலத்தில் இருக்கும் மண்புழு போன்ற சிறிய உயிர்கள் அழியாமல் காக்கப்படும்.
- இந்த வேதிக் கலப்பில்லாத பூச்சிக் கொல்லியால் நுண்ணுயிர்ப் பெருக்கம் ஏற்பட்டு மண்வளம் அதிகமாகும்.

**2. காற்றில் ஆடும் புல்வீடுகளுக்கு அழகிய பெரியவன் தரும் ஒப்பீடு யாது? ஏன்?**

**ஒப்பீடு:**

- காற்றில் ஆடும் புல்வீடுகளுக்கு அழகிய பெரியவன் தரும் ஒப்பீடு தூக்கணாங்குருவியின் கூடாகும்.



www.tnpscjob.com

**காரணம் :**

- தேர்ந்த கட்டடக்கலை வல்லுநராலும்கூட கட்டமுடியாத தொழில் நுட்பத்துடன் புல்லைக்கொண்டு தூக்கணாங்குருவி கட்டிய கூடு காற்றில் அசைந்தாடுகிறது.
- அந்தக் கூடுதான் தூக்கணாங்குருவியின் வீடு.
- அதனால்தான் கவிஞர் தூக்கணாங்குருவியின் கூட்டைக் காற்றில் ஆடும் புல்வீடுகள் என்று கூறுகிறார்.

**3. "சலச வாவியில் செங்கயல் பாயும்" – இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.**

**இடம் :**

பெரியவன் கவிராயர் எழுதிய 'திருமலை முருகன் பள்ளு' என்னும் நூலில் வடகரை நாட்டின் இயற்கை வளத்தைக் கூறும் பாடலில் இவ்வரிகள் இடம் பெற்றுள்ளது.

**பொருள் :**

தாமரைத் தடாகத்தில் மீன்கள் துள்ளிப் பாய்ந்து விளையாடும்.

**விளக்கம்:**

வடகரை நாட்டில் மலரில் மொய்க்கும் வண்டுகள் 'இந்தளம்' என்ற பண்ணை ரீங்காரமிட்டுப் பாடுவதைக் கேட்டு, மீனைப் பிடித்து உண்பதற்காக வந்த 'உள்ளான்' பறவை வண்டுகளின் இசையில் மயங்கி அமர்ந்திருப்பதால் தாமரைத் தடாகத்தில் மீன்கள் அச்சமின்றித் துள்ளிப் பாய்ந்து விளையாடுகிறது.

**4. ஐங்குறுநூற்றுப் பாடல் சுட்டும் திணை, முதற்பொருள், கருப்பொருள்களை அட்டவணைப்படுத்துக.**

| | | |
|---|---|---|
| திணை | : | முல்லைத் திணை |
| முதற்பொருள் | : | நிலமும் பொழுதும் முதற்பொருளாகும். |
| நிலம் | : | காடும் காடு சார்ந்த இடமும் |
| பெரும்பொழுது | : | கார்காலம் |
| சிறுபொழுது | : | மாலை |

**கருப்பொருள்**

| | | |
|---|---|---|
| தெய்வம் | – | மாயோன் (திருமால்) |
| மக்கள் | – | குறும்பொறை, நாடன், தோன்றல், மனைவி, கிழத்தி, இடையர், இடைச்சியர், ஆயர், ஆய்ச்சியர். |
| புள் (பறவை) | – | காட்டுக்கோழி |
| விலங்கு | – | மான், முயல் |



www.tnpscjob.com

ஊர் - பாடி

நீர் - குறுஞ்சுனை, கானாறு

மரம் - முல்லை, தோன்றி, கொன்றை, காயா, குருந்தம், பிடவம், தளவம்

உணவு - வரகு, சாமை, முதிரை

பறை - ஏறுகோட்பறை

யாழ் - முல்லையாழ்

பண் - சாதாரிப்பண்

தொழில் - சாமை, வரகு விதைத்தல், களைகட்டல், அரிதல், ஆநிரை மேய்த்தல்.

**5. தமிழ் நெடுங்கணக்கு வரிசையில் இனவெழுத்துகளின் பங்கைக் குறிப்பிடுக.**

- மெய்யெழுத்துகள் வல்லினம், மெல்லினம் இடையினம் என மூவகைப்படும்.
- சொற்களின் இடையில் மெல்லின எழுத்துகளுக்குப்பின் வல்லின மெய்கள் மட்டுமே வருவதை இனவெழுத்துகள் அல்லது நட்பெழுத்துகள் என்பர்.

ங் - க் (அங்கம்)
ஞ் - ச் (பஞ்சம்)
ண் - ட் (பண்டம்)
ந் - த் (சந்தம்)
ம் - ப் (கம்பம்)
ன் - ற் (தென்றல்)

- பிழையின்றிப் பேசவும் எழுதவும் ணகர, நகர, னகர வேறுபாட்டினை அறிந்து கொள்ள வேண்டும்.
- எங்கெங்கு இவ்வெழுத்துகளைச் சரியாகப் பயன்படுத்த வேண்டும் என்பதை இனவெழுத்துகளால் அறியலாம்.

## நெடுவினா

**1. 'சுற்றுச்சூழலை வளப்படுத்துவது இயற்கை வேளாண்மையே ' என்னும் தலைப்பில் மேடைப்பேச்சிற்கான உரையை உருவாக்குக.**

"இனிய பொழில்கள் நெடிய வயல்கள்
எண்ணரும் பெருநாடு
கனியும் கிழங்கும் தானியங்களும்
கணக்கின்றித் தரு நாடு"

– என்று முண்டாசுக் கவிஞன் பாரதியால் புகழப்பட்ட இயற்கை வளம் மிக்க நாடு நமது பாரத நாடு.



www.tnpscjob.com

விதைப்பதில் தொடங்கி அறுவடைவரை எந்தவித வேதிக்கலப்பையும் பயன்படுத்தாமல் இயற்கை உரம், இயற்கை பூச்சிக்கொல்லிகள் மூலமாக விவசாயம் செய்வதற்குத்தான் இயற்கை வேளாண்மை என்று பெயர். இயற்கையில் உள்ள வளங்களை ஒருங்கிணைத்து மண் வளத்தையும், சுற்றுச்சூழலையும் பாதுகாத்து அதிக மகசூலைப் பெறலாம்.

மாட்டுச் சாணம், கோமியம், வைக்கோல், காய்ந்த இலைச் சருகு, சாம்பல் ஆகியவற்றைக்கொண்டு தொழுஉரம் தயார் செய்து பயன்படுத்தலாம். பூச்சிக் கொல்லிகள் உண்மையில் ஆட்கொல்லிகளே. இயற்கையில் கிடைக்கும் கசப்புத் தன்மை கொண்ட பொருட்களைப் பயன்படுத்தி பூச்சிகளை விரட்டியடிக்கலாம்.

இயற்கை வேளாண்மை பற்றிப் பேசும் இந்நேரத்தில் இயற்கை வேளாண்மையின் தந்தை மசானபு ஃபுகோகாவை கட்டாயம் நினைவுகூர வேண்டும். ஜப்பான் நாட்டைச் சேர்ந்த மசானபு 'ஒற்றை வைக்கோல் புரட்சி' என்னும் நூலின் மூலம் இயற்கை வேளாண்மையின் இன்றியமையாமையைப் பற்றி எடுத்தியம்புகின்றார்.

வேதிக்கலப்புகளைப் பயன்படுத்தியதால் உணவே நஞ்சாகிவிட்டது. மண்ணின் வளமும் குறைந்துவிட்டது. இன்று மக்களிடையே இயற்கை முறையில் உருவான காய்கறிகளும் தானியங்களும் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளன.

பாரம்பரிய முறையில் இயற்கை விவசாயம் செய்வதன் மூலம் வேலையில்லாப் பிரச்சனை, வறுமை, கிராமங்களிலிருந்து நகரங்களுக்குக் குடியேறும் நிகழ்வும் தடுக்கப்படும். இயற்கை விவசாயம் செய்கையில் விவசாயிக்கு தன் நிலத்துடனான உறவு நெருக்கமாகிறது. இந்தியாவின் முதுகெலும்பே விவசாயம்தான். இயற்கை உரம், இயற்கை பூச்சிக்கொல்லிகளைப் பயன்படுத்தி இயற்கை முறையில் வேளாண்மை செய்து நுண்ணுயிர்ப் பெருக்கத்தையும், மண் வளத்தையும் அதிகரித்து சுற்றுச்சூழலைப் பாதுகாப்போம்.

'சுழன்றும் ஏர்ப்பின்ன துலகம் அதனால்

உழந்தும் உழவே தலை'

- என்ற வள்ளுவரின் வாய்மொழிப்படி இயற்கை வேளாண்மை செய்து உலகைக் காப்போம்.



www.tnpscjob.com

2. திருமலை முருகன் பள்ளு கூறும் வடகரை, தென்கரை நாட்டுப் பாடல்கள்வழி இயற்கை வளங்களை விவரிக்க.

**வடகரை நாட்டின் இயற்கை வளம்**

- வடகரை நாட்டில் மலரில் மொய்க்கும் வண்டுகள் இந்தளம் என்ற பண்ணை ரீங்காரமிட்டுப் பாடும்.
- வண்டின் இசை கேட்டு வாய்க்காலின் மதகுகளிடையே கட்டப்பட்ட சங்கிலியில் மீனைப் பிடித்து உண்பதற்காக வந்த உள்ளான் பறவை வாலை ஆட்டிக் கொண்டு அமர்ந்திருக்கும்.
- தாமரைத் தடாகத்தில் மீன்கள் துள்ளிப் பாய்ந்து விளையாடும்.
- முத்துகளை ஈன்ற வெண்மையான சங்குகள் பரவிக் காணப்படும்.
- மின்னலையொத்த பெண்கள், பெய் என்றால் மழை பெய்யும்.
- உள்ளங்கை ஏந்தி இரந்துண்ணும் இயல்புடைய முனிவர்கள் கூறும் வார்த்தைகள் மெய்யாகும்.
- இத்தன்மை கொண்ட திருமலையில் புலவர்கள் போற்றுகின்ற திருமலைச் சேவகன் வீற்றிருக்கின்றார்.

**தென்கரை நாட்டின் இயற்கை வளம்**

- தென்கரை நாட்டின் நீண்டு வளர்ந்த சோலையில் மேகக் கூட்டங்கள் தங்கிச்செல்லும்.
- இந்நாட்டில் உள்ள பொன்னாலான மாடமாளிகைகளில் அகில்புகையின் நறுமணம் பரவிக்கொண்டே இருக்கும்.
- இம்மாளிகைகளை மயில்களும் கார்கால மேகங்களும் சூழ்ந்து காக்கும்.
- செங்கோலைக் கொண்ட மன்னர் தென்கரை நாட்டை நீதி தவறாது காவல் காப்பர்.
- இளைய பெண்கள் பொன்னாலான அரங்கில் நடித்து விளையாடி மகிழ்ந்திருப்பர்.
- இங்குள்ள குளங்களின் அலைகள் முத்துகளை ஏந்தி வரும்.
- அவ்வலைகள் கரைகளில் மோதும் பொழுது முத்துகள் சிதறி வெடிக்கும்.
- இத்தன்மை கொண்ட குற்றாலத்தில் வண்டுகள் மொய்க்கும் கொன்றை மலரைச் சூடிய தென்னாடுடைய சிவபெருமானாகிய குற்றாலநாதர் வீற்றிருக்கின்றார்.



www.tnpscjob.com

3. யானை டாக்டர் கதை வாயிலாக இயற்கை, உயிரினப் பாதுகாப்பு ஆகியவை குறித்து நீவிர் அறிந்தவற்றைத் தொகுத்து எழுதுக.

- மனிதனின் கீழ்மைகள் நாள்தோறும் வளர்வதன் சாட்சியாக யானைகளின் மரணங்கள் நிகழ்கின்றன.
- சுற்றுப்பயணம் என்ற பெயரில் காட்டுக்கு வரும் வசதியானவர்களும் படித்தவர்களும் குடித்துவிட்டு வெறியுடன் காட்டு மரத்தின் மீது வீசி எறியும் மதுக்குப்பிகள் மிகவும் ஆபத்தானவை.
- காட்டு உயிரினங்களின் வாழ்விடங்களுக்குச் சென்று அவற்றுக்கு ஊறு விளைவிப்பது மன்னிக்க முடியாத குற்றமாகும்.
- மற்ற எந்த உயிரினங்களைவிடவும் யானைகளுக்கு மதுக்குப்பிகள் மிகவும் ஆபத்தானவை.
- காட்டிற்குச் செல்லும்போது மரங்களின் அடியில் வீசப்பட்டிருக்கும் இம்மதுக்குப்பிகளை பொறுக்கியெடுத்து அப்புறப்படுத்துவேன்.
- சாலைஓரத்துக் குரங்குகளுக்கு தரும் பழங்களிலே மிளகாய்ப்பொடியை நிரப்பிக் கொடுப்பது, மான்களை நோக்கி கற்களை வீசுவது, யானை குறுக்கே வந்தால் சீருந்தின் ஒலிப்பானை உரக்க அடித்து அதை அச்சுறுத்தி துரத்துவது போன்ற மனிதன் தன் மனம் போன போக்கில் செய்யும் தவறுகளைச் செய்ய மாட்டேன்.
- இவற்றை வலியுறுத்தும் வாசகங்களை அட்டையில் எழுதி வனச்சாலையின் ஓரத்தில் பயணிகளின் பார்வையில் படும்படி வைப்பேன்.
- யானைக்கு வெண்மை நிறம் பிடிக்காது, ஆகவே காடுகளுக்குச் செல்லும்போது வெண்மை நிற ஆடைகளைத் தவிர்ப்பேன்.
- என்றாவது தமிழ்நாட்டில் யானைகள் இல்லாமல்போனால் நமது பண்பாட்டுக்கே அர்த்தம் இல்லாமல் போய்விடும்.
- தமிழகக் கோவில் யானைகளுக்கு வனப்புத்துணர்ச்சி திட்டத்தின் மூலமாக புத்துணர்வு முகாமுக்குச் செல்வது அவற்றின் உடல் நலனும், உள நலனும் காக்கப்படுகிறது என்பதை அறிந்து கொண்டேன்.
- யானைகள் அடையாளங்களைக் கண்டு கொண்டு முந்நூறு கிலோ மீட்டர் தூரம்கூட தேடிச் செல்வது உண்டு என்பதும், மிகுந்த நினைவாற்றல் கொண்டது என்பதும் ஆச்சரியமான செய்தியாக எனக்குப்பட்டது.
- உயிர்போற வலி இருந்தாலும் யானை அலறாது, துடிக்காது, அந்தளவிற்கு பொறுமையான கடவுளின் நல்ல மனநிலைப் படைப்பு.
- காட்டின் மூலவர் என்றழைக்கப்படுகின்ற யானைகள் நமது பண்பாடு கலைகளின் பிரிக்க முடியாத அங்கமாகத் திகழ்கின்றன.



www.tnpscjob.com

**இலக்கணக்குறிப்பு**

| | | |
|---|---|---|
| செங்கயல் | – | பண்புத்தொகை |
| வெண்சங்கு | – | பண்புத்தொகை |
| அகிற்புகை | – | ஆறாம் வேற்றுமைத்தொகை |
| மஞ்ஞையும் கொண்டலும் | – | எண்ணும்மை |
| கொன்றை சூடு | – | இரண்டாம் வேற்றுமைத் தொகை |
| ஆல் | – | அசைநிலை |
| கண்ணி | – | அண்மை விளிச்சொல் |
| ஆடுகம் | – | தன்மை பன்மை வினைமுற்று. |

**பகுபத உறுப்பிலக்கணம் :**

1. ஈன்ற – ஈன் + ற் + அ
   ஈன் – பகுதி; ற் – இறந்தகால இடைநிலை ; அ – பெயரெச்ச விகுதி
2. அலர்ந்து – அலர் + த் (ந்) + த் + உ
   அலர் – பகுதி ; த் – சந்தி, ந் – ஆனது விகாரம், த் – இறந்தகால இடைநிலை, உ – வினையெச்ச விகுதி.

**புணர்ச்சி**

1. செங்கயல் – செம்மை + கயல்
   ஈறுபோதல் – செம் + கயல்
   முன்னின்ற மெய் திரிதல் – செங்கயல்

## மொழியை ஆள்வோம்

**சான்றோர் சித்திரம்**



தமிழிசை இயக்கத்தின் தந்தை என்று போற்றப்படும் ஆபிரகாம் பண்டிதர் தென்காசிக்கு அருகேயுள்ள சாம்பவர் வடகரை என்னும் சிற்றூரில் பிறந்தவர். இளமையிலேயே புகைப்படக்கலை. அச்சுக்கலை, சோதிடம், மருத்துவம், இசை ஆகிய துறைகளில் பெருவிருப்பம் கொண்டு, நேரம் கிடைக்கும்போதெல்லாம் அதன் நுட்பங்களைப் பயின்றார். திண்டுக்கல்லில் ஆசிரியராகப் பணியாற்றும்போதே சித்த மருத்துவத்தில் சீரிய அறிவு பெற்று மக்களால் அன்புடன் 'பண்டுவர்' (மருத்துவர்) என்று அழைக்கப்பட்டார். சில ஆண்டுகள் பணியாற்றியபின் அதைவிடுத்து முழுமையாகச் சித்த மருத்துவத்தில் கவனம் செலுத்தினார். தஞ்சையில் குடியேறினார். மக்கள் அவரைப் 'பண்டிதர்' என அழைக்கத் தொடங்கினர். பண்டைத் தமிழ் நூல்களையெல்லாம் ஆழ்ந்து கற்று.



www.tnpscjob.com

'சங்கீத வித்தியா மகாஜன சங்கம்' என்னும் அமைப்பை உருவாக்கி, தமது சொந்தச் செலவிலேயே தமிழிசை மாநாடுகள் நடத்தினார். அனைத்திந்திய அளவில் நடந்த இசை மாநாடுகளுக்கும் சென்று உரையாற்றினார். அவருடைய இசைத்தமிழ்த் தொண்டின் சிகரம் 'கருணாமிர்த சாகரம்' எழுபத்தோராண்டுகள் வாழ்ந்து தமிழுக்குத் தொண்டு செய்தவர் ஆபிரகாம் பண்டிதர்.

**வினாக்களுக்கு விடையளிக்க.**

1. **உடனிலை மெய்ம்மயக்கச் சொற்களை எடுத்து எழுதுக.**

இயக்கத்தின், போற்றப்படும், சிற்றூரில், புகைப்பட, அச்சுக்கலை, மருத்துவம், பெருவிருப்பம், போதெல்லாம், பெற்று, மருத்துவர், அழைக்கப்பட்டார், நடத்தினார், உரையாற்றினார், இசைத்தமிழ், ஆற்றும், மக்கள்.

2. **வேற்றுநிலை மெய்ம்மயக்கச் சொற்களை எடுத்து எழுதுக.**

ஆழ்ந்து, சங்கீத, சென்று, கருணாமிர்த, வாழ்ந்து, தந்தை, பண்டிதர், நடந்த, தொண்டு, நூல்கள்.

3. **உடனிலை மெய்ம்மயக்கமாகவும், வேற்றுநிலை மெய்ம்மயக்கமாகவும் உள்ள சொற்களை எழுதி, மெய்களை அடிக்கோடிடுக.**

**உடனிலை**

இயக்கம் – இய + க் + க் + அ + ம்
திண்டுக்கல்லில் – திண்டுக்கல் + ல் + இல்
பெற்று – பெ + ற் + ற் + உ

**வேற்றுநிலை**

ஆழ் + ந் + த் + உ – ஆழ்ந்து
ச + ங் + க் + ஈ + த் + அ + ம் – சங்கீதம்
வாழ் + ந் + த் + உ – வாழ்ந்து

4. **கீழ்க்காணும் வடமொழிச் சொற்களைத் தமிழாக்குக.**

அ) சங்கீதம் ஆ) வித்தியா இ) மகாஜனம் ஈ) சாகரம்

| | |
|---|---|
| சங்கீதம் – இசை | வித்தியா – கல்வி |
| மகாஜனம் – பொதுமக்கள் | சாகரம் – கடல் |

5. **இலக்கணக் குறிப்பும், பகுபத உறுப்பிலக்கணமும் தருக.**

அ) பயின்றார் ஆ) தொடங்கினர்

**இலக்கணக்குறிப்பு :** அ) பயின்றார் – பலர்பால் வினைமுற்று
ஆ) தொடங்கினர் – பலர்பால் வினைமுற்று



www.tnpscjob.com

பகுபத உறுப்பிலக்கணம் :

அ) **பயின்றார்**

பயில் (ன்) + ற் + ஆர்

பயில் – பகுதி; ல், ன் ஆனது விகாரம்; ற் – இறந்தகால இடைநிலை ;
அர் – பலர்பால் வினைமுற்று விகுதி

ஆ) **தொடங்கினர்**

தொடங்கு + இ(ன்) + அர்

தொடங்கு – பகுதி; இ(ன்) – இறந்தகால இடைநிலை ;
அர் – பலர்பால் வினைமுற்று விகுதி.

**தமிழாக்கம் தருக.**

1. Just living is not enough. One must have sunshine, freedom and little flower - Hans Anderson.

   பெயருக்கு வாழ்வது வாழ்க்கையல்ல. ஒவ்வொருவருடைய வாழ்க்கையும் ஒளிமயமானதாகவும், சுதந்திரமாகவும், மலர்களைப் போன்று மணமும் அழகும் உள்ளதாக அமைய வேண்டும் – ஹேன்ஸ் ஆண்டர்சன்.

2. In nature, light creates the colour. In the picture, colour creates the light-Hans Hofmann.

   இயற்கையில் ஒளி வண்ணங்களை உருவாக்குகிறது. படங்களில் வண்ணங்கள் ஒளியை உருவாக்குகிறது. – ஹான்ஸ் ஹாஃப்மன்.

3. Look deep into nature and then you will understand everything better –Albert Einstein.

   இயற்கையை உற்றுப் பார். அனைத்தையும் தெளிவாகப் புரிந்து கொள்ளலாம். – ஆல்பிரட் ஐன்ஸ்டீன்.

4. Simplicity is nature's first step, and the last of art - Philip James Bailey.

   எளிமையே இயற்கையின் முதல்படி; கலையின் இறுதிப்படி – பிலிப்ஸ் ஜேம்ஸ் பெய்லி.

5. Roads were made for journeys not destinations - Confucius.

   பாதைகள் என்பது பயணங்களுக்கானது, இலக்குகளுக்கானது அல்ல – கன்பூசியஸ்.

**மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக.**

1. உலை, உளை, உழை
2. வலி, வளி, வழி
3. கலை, களை, கழை
4. கனை, கணை
5. குரை, குறை
6. பொரி, பொறி

1. **உலை,உளை, உழை**

   மன உளைச்சல் தீரவும் வீட்டில் உலை கொதிக்கவும் உழைக்க வேண்டும்.



www.tnpscjob.com

2. **வலி,வளி, வழி**
உடல் வலி தீர உயிர்வளி தடையில்லாமல் பெற வழி யாது?

3. **கலை,களை, கழை**
கலைகளில் மேல் உள்ள பக்தியினால் மிகவும் களைத்துப் போனார்கள் கழைக்கூத்தாடிகள்.

4. **கனை,கணை**
குதிரைகள் கனைக்கும் குரல்கேட்டு தன் கணையைக் கரிகாலன் தொடுத்தான்.

5. **குரை, குறை**
தெருநாய்களின் தொடர் குரைப்பொலியால் என் மன அமைதி குறைந்தது.

6. **பொரி,பொறி**
பொரிகளைப் பதப்படுத்தும் பொறிகளைக் கண்டுபிடித்தவர்கள் புண்ணியவான்கள்.

**கீழ்க்காண் விளம்பரத்தைப் பத்தியாக மாற்றி அமைக்க.**

உடல் வளர்த்தேன்! உயிர் வளர்த்தேன்!

இயற்கை உணவுத் திருவிழா

நாள் : தை 5 முதல் 11வரை நேரம் : மாலை 6 – 10 மணி

இடம் : தீவுத்திடல், சென்னை



| | |
|---|---|
| ஆவாரம்பூச் சாறு | தூதுவளைச்சாறு |
| குதிரைவாலிப் பொங்கல் | சாமைப் பாயசம் |
| வாழைப்பூ வடை | கேழ்வரகு உப்புமா |
| தினைப் பணியாரம் | கம்புப் புட்டு |
| வல்லாரை அப்பளம் | அகத்திப்பூ போண்டா |
| முடக்கத்தான் தோசை | முள்முருங்கை அடை |
| | இன்னும் பல..... |

உடல் வளர்த்தேன் உயிர் வளர்த்தேன் என்ற குறிக்கோளுடன் நடத்தப்படும் இயற்கை உணவுத் திருவிழா சென்னை, தீவுத்திடலில் தை மாதம் 5–ஆம் தேதி முதல் 11–ம் தேதி வரை 7 நாள்கள் மாலை 6 மணிமுதல் 10 மணிவரை நடைபெற உள்ளது. அந்த இயற்கை உணவுத் திருவிழாவில் ஆவாரம்பூச் சாறு, தூதுவளைச் சாறு, குதிரைவாலிப் பொங்கல், சாமைப் பாயசம், வாழைப்பூ வடை, கேழ்வரகு உப்புமா, தினைப் பணியாரம், கம்புப் புட்டு, வல்லாரை அப்பளம், அகத்திப்பூ போண்டா, முடக்கத்தான் தோசை, முள்முருங்கை அடை போன்ற இன்னும்பல இயற்கை உணவுகள் வழங்கப்பட உள்ளன.

அனைவரும் வருக ! அறுசுவை பெறுக ! ஆனந்தம் அடைக !



www.tnpscjob.com

## மொழியோடு விளையாடு

**எண்ணங்களை எழுத்தாக்குக :**



மரங்கள் மலர்தரும் இலைதரும் காய் தரும் கனிதரும். அது மட்டுமல்ல தன் இனத்தை அழித்தவனுக்கும் நிழல் தரும். சுகம் தரும். மரங்களுக்குத் 'தரு' என்று பெயர் வைத்த தமிழன் வாயிலே சர்க்கரையைக் கொட்டி சந்தோஷப்பட வேண்டும்.

**புதிர்களில் மறைந்துள்ள சொற்களைக் கண்டுபிடிக்க.**

1. ஐந்தெழுத்துக்காரன்
முதலிரண்டோ
பாட்டெழுதுபவரின் பட்டம்
இரண்டும் மூன்றுமோ
பசும்பால் என்பதன் பின் இறுதி
கடைசி இரண்டெழுத்தோ
மானினத்தில் ஒரு வகையாம்
இரண்டும் ஐந்துமோ
பொருளை விற்கத் தேவையாம்
அது என்ன?
**விடை :** கவின்கலை

2. இறுதி இரண்டெழுத்தோ
பழத்தின் முந்தைய பச்சை நிலை
தமிழ்க்கடவுளின் முற்பாதியை
முதலிரு எழுத்தில் வைத்திருக்கும்
நடுவிலோ ஒரெழுத்து ஒருமொழி
அதற்கும் முன் பொட்டு வைத்த ஙகரம்
சேர்த்தால் காயாவான்
பிரித்தால் நிலைமொழியில் மரமாவான்
ஏழெழுத்துக்காரன் அவன் யார்?
**விடை :** முருங்கைக்காய்

**சுற்றுச்சூழல் விழிப்புணர்வு, இயற்கைப் பாதுகாப்பு குறித்த முழக்கத் தொடர்கள் எழுதிக் காட்சிப்படுத்துக.**

### முழக்கத் தொடர்கள்

**சுற்றுச்சூழல் விழிப்புணர்வு**

காற்றைக் கெடுக்காதே !
காலனை அழைக்காதே !

குடிக்கும் நீரைக் கெடுக்காதே !
குடிமக்கள் வாழ்வை முடிக்காதே

**இயற்கைப் பாதுகாப்பு**

இயற்கை இருந்தால் பேரின்பம்
இயற்கை மறந்தால் பெருந்துன்பம்

இயற்கை இன்பம் தரும்
செயற்கை துன்பம் தரும்



www.tnpscjob.com

**ஒரு மதிப்பெண் வினாக்கள் :**

1. தமிழ்நாட்டின் மாநில மரம் எது?
பனைமரம்
2. 'உழவு உலகிற்கு அச்சாணி' என்று கூறியவர் யார்?
திருவள்ளுவர்
3. 'உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்' என்று பாடியவர் யார்?
பாரதியார்
4. 'ஏழைகளின் கற்பக விருட்சம்' எது?
பனைமரம்
5. பதநீரிலிருந்து கிடைக்கும் மதிப்புக் கூட்டுப் பொருள்கள் எவை?
பனங்கற்கண்டு, கருப்பட்டி
6. ஒற்றை வைக்கோல் புரட்சி என்னும் நூலின் ஆசிரியர் யார்?
மசானபுஃபுகோகா
7. சிறந்த காற்றுத் தடுப்பானாகப் பயன்படும் மரம் எது?
பனை மரம்
8. மசானபுஃபுகோகா எந்த நாட்டு அறிஞர்?
ஜப்பான்
9. வைக்கோல் குறித்த ஆய்வைச் செய்த அறிஞர் யார்?
மசானபுஃபுகோகா
10. அழகிய பெரியவனின் இயற்பெயர் யாது?
அரவிந்தன்
11. அழகிய பெரியவனின் எப்புதினம் 2003ஆம் ஆண்டில் தமிழக அரசின் விருது பெற்றது?
தகப்பன் கொடி
12. உலக சிட்டுக் குருவிகள் நாள் எது?
மார்ச் 20.
13. 'உழத்திப் பாட்டு' என்று அழைக்கப்படும் சிற்றிலக்கியம் எது?
பள்ளு
14. தொல்காப்பியம் குறிப்பிடும் 'புலன்' என்னும் இலக்கிய வகையைச் சார்ந்த சிற்றிலக்கியம் எது?
பள்ளு
15. திருமலை முருகன் பள்ளு நூலின் ஆசிரியர் யார்?
பெரியவன் கவிராயர்



www.tnpscjob.com

16. கண்காணி என்பது யாரைக் குறிக்கும்?
நெல் ஒப்படியை மேற்பார்வை செய்பவர்.

17. வடகரை நாட்டில் வண்டுகள் ரீங்காரமிட்டுப் பாடும் பண்ணின் பெயர் என்ன?
இந்தளம்

18. வண்டின் இசை கேட்டு மெய் மறந்து வாலாட்டிக் கொண்டிருக்கும் பறவை எது?
உள்ளான்

19. 'கா' என்பதன் பொருள் யாது?
சோலை

20. 'மஞ்ஞை' என்பதன் பொருள் யாது?
மயில்

21. 'தரளம்' என்பதன் பொருள் யாது?
முத்து

22. ஐங்குறு நூறு–பிரித்து எழுதுக.
ஐந்து +குறுமை +நூறு

23. ஐங்குறுநூற்றின் அடி வரையறை யாது?
மூன்றடிச் சிற்றெல்லையும் ஆறடிப்பேரெல்லையும் (3 அடி முதல் 6 அடி வரை)

24. ஐங்குறுநூற்றைத் தொகுத்தவர் யார்?
புலத்துறை முற்றிய கூடலூர்க்கிழார்

25. ஐங்குறுநூற்றைத் தொகுப்பித்தவர் யார்?
யானைகட்சேய் மாந்தரஞ் சேரலிரும்பொறை.

26. முல்லைத் திணையைப் பாடியவர் யார்?
பேயனார்

27. ஐங்குறுநூற்றின் கடவுள் வாழ்த்துப் பாடலைப் பாடியவர் யார்?
பாரதம் பாடிய பெருந்தேவனார்

28. ஐங்குறுநூற்றில் திணை ஒன்றிற்கு எத்தனை பாடல்கள் உள்ளன?
நூறு (100)

29. முல்லை நிலத்தின் பெரும்பொழுது யாது?
கார்காலம்

30. முல்லை நிலத்தின் சிறுபொழுது யாது?
மாலை

31. முல்லையின் நிலம் எது?
காடும் காடு சார்ந்த இடமும்.



www.tnpscjob.com

32. முல்லையின் உரிப்பொருள் யாது?
இருத்தலும் இருத்தல் நிமித்தமும்
33. மழைக்கால மலர்களைப் பார்த்து மகிழ்ந்து ஆட, 'விரைந்து வா' என்று யா
யாரை அழைக்கிறார்?
தலைவன், தலைவியை அழைக்கிறான்.
34. 'கிழவன்' என்று குறிப்பிடப்படுபவன் யார்?
தலைவன்
35. டாக்டர். கே. என்று அனைவராலும் அன்புடன் அழைக்கப்படுபவர் யார்?
டாக்டர். வி. கிருஷ்ணமூர்த்தி
36. யானை டாக்டர் என்னும் குறும் புதினத்தின் ஆசிரியர் யார்?
ஜெயமோகன்
37. அதிக ஞாபக சக்தி கொண்ட விலங்கு எது?
யானை
38. இன்று எஞ்சியுள்ள யானைச் சிற்றினங்கள் எத்தனை?
மூன்று சிற்றினங்கள்
39. யானைகளின் வாழ்நாள் எத்தனை ஆண்டுகள் ?
70 ஆண்டுகள்
40. யானைகளுக்குப் பிடிக்காத நிறம் எது?
வெள்ளை
41. டாக்டர். கே. யைத் தேடி எங்கிருந்து யானை வந்தது?
முதுமலை
42. டாக்டர் கே. பெற்ற விருது எது?
வேணுமேனன் ஏலீஸ் விருது (2000)
43. 'யானை டாக்டர்' குறும் புதினம் இடம்பெற்றுள்ள சிறுகதைத் தொகுப்பு எது
அறம்
44. ஜெயமோகன் எந்த ஊரைச் சேர்ந்தவர்?
நாகர்கோவில்
45. ஜெயமோகன் எழுதிய நாவல்களைக் கூறு,
விஷ்ணுபுரம், கொற்றவை
46. யானையைப் பாத்திரமாக வைத்து ஜெயமோகன் எழுதிய கதைகள் எவை?
ஊமைச்செந்நாய், மத்தகம்
47. 'காட்டின் மூலவர்' என்றழைக்கப்படுவது எது?
யானை



www.tnpscjob.com

48. சொல்லின் இடையில் மெய்யெழுத்துகள் அடுத்தடுத்து வருவதற்கு என்ன பெயர்?

மெய்ம்மயக்கம்

49. மெய்ம்மயக்கம் எத்தனை வகைப்படும்?

இரண்டு

50. சொற்களின் இடையில் ஒரே மெய்யெழுத்து அடுத்தடுத்து வருவது ............ எனப்படும்.

உடனிலை மெய்ம்மயக்கம்.

51. உடனிலை மெய்ம்மயக்க எழுத்துகள் எவை?

க், ச், த், ப்

52. சொல்லின் இடையில் வெவ்வேறு மெய்யெழுத்துகள் தொடர்ந்து வருவதற்குப் பெயர் யாது?

வேற்றுநிலை மெய்ம்மயக்கம்

53. வேற்றுநிலை மெய்ம்மயக்க எழுத்துகள் எவை?

ர், ழ்

54. சொற்களின் இடையில் மூன்று மெய்கள் வருவதற்கு என்ன பெயர்?

ஈரொற்று மெய்ம்மயக்கம்

55. ஈரொற்று மெய்ம்மயக்க எழுத்துகள் எவை?

ய், ர், ழ்

**குறுவினா – கூடுதல் வினாக்கள்**

**1. மதிப்புக் கூட்டுப் பொருள் என்றால் என்ன?சான்று தருக.**

ஒரு பொருளை மேம்படுத்தப்பட்ட மாற்றுப் பொருள்களாக மாற்றுவதை மதிப்புக்கூட்டுப் பொருள் என்று அழைப்பர்.

**சான்று**

பனைமரத்திலிருந்து கிடைக்கும் பதநீரிலிருந்து பனங்கற்கண்டு, கருப்பட்டி தயாரித்து விற்றல்.

**2. மசானபு ஃபுகோகா கூறும் ஐந்து விவசாய மந்திரங்கள் எவை?**

- உழப்படாத நிலம்.
- இரசாயன உரம் இல்லாத உற்பத்தி.
- பூச்சிக்கொல்லி தெளிக்கப்படாத பயிர்ப் பாதுகாப்பு.
- தண்ணீர் நிறுத்தாத நெல் சாகுபடி.
- ஒட்டுவிதை இல்லாமல் உயர் விளைச்சல்.



www.tnpscjob.com

**3. தொழு உரம் என்றால் என்ன?**

- மாட்டுச் சாணம், கோமியம் ஆகியவற்றைக் கலந்து வைக்கோலை மட்கச் செய்து உருவாக்குவதை நன்செய் நிலத்திற்கும்,
- காய்ந்த இலைச் சருகு, ஆடு, மாடு முதலிய கால்நடைகளின் சாணத்தை எரிப்பதனால் கிடைக்கும் சாம்பல் ஆகியவற்றைக் கலந்து புன்செய் நிலத்திற்கும் பயன்படுத்துவதற்குத் 'தொழு உரம்' என்று பெயர்.

**4. நெல்லுக்கு ஊடுபயிராக உளுந்து போடுவதன் பயன் யாது?**

உளுந்தை அறுவடை செய்த பின், அதன் வேர் முடிச்சுகளில் இருக்கும் நைட்ரஜன், நிலத்தின் வளத்தைப் பெருக்கி அடுத்த விளைச்சலை அதிகரிக்கச் செய்யும். எனவே நெல்லுக்கு ஊடுபயிராக உளுந்து போடுகிறார்கள்.

**5. பூச்சிக்கொல்லி பயன்படுத்துவதால் ஏற்படும் நோய்கள் எவை?**

- புற்றுநோய்
- வயிற்றுப்புண்
- மலட்டுத்தன்மை

**6. இயற்கை வேளாண்மை என்றால் என்ன?**

விதை விதைப்பதில் இருந்து விளைச்சல் முடிகின்றவரையும் வேதிக்கலப்பைப் பயன்படுத்தாத வேளாண்மையே இயற்கை வேளாண்மை எனப்படும்.

**7. வேதிக்கலப்பு இல்லாத பூச்சிக்கொல்லியை எவ்வாறு தயார் செய்வாய்?**

வேப்பங்கொட்டை, நொச்சி இலை, புங்கன், பிரண்டை, கற்றாழை போன்ற இயற்கையில் கிடைப்பவற்றை எல்லாம் நன்றாக இடித்துக் கோமியத்தில் ஊற வைத்து வேதிக்கலப்பு இல்லாத பூச்சிக் கொல்லியைத் தயாரிக்கலாம்.

**8. அழகிய பெரியவனின் (அரவிந்தன்) படைப்புகள் யாவை?**

- தகப்பன் கொடி – புதினம்
- குறடு, நெரிக்கட்டு – சிறுகதைத் தொகுப்புகள்.
- உனக்கும் எனக்குமான சொல், அருப நஞ்சு – கவிதைத் தொகுப்புகள்.
- மீள்கோணம் , பெருகும் வேட்கை – கட்டுரைத் தொகுப்புகள்.

**9. திருமலை முருகன் பள்ளுவில் பயின்று வந்துள்ள பாவகைகளைக் கூறு.**

- கலித்துறை
- கலிப்பா
- சிந்து



www.tnpscjob.com

**10. ஐங்குறுநூறு கூறும் முல்லை நிலத்தில் பூத்துள்ள மழைக்கால மலர்கள் எவை?**

- காயா
- கொன்றை
- நெய்தல்
- முல்லை
- தளவம்
- பிடவம்

**11. ஜெயமோகனின் படைப்புகளைக் கூறு.**

- விஷ்ணுபுரம், கொற்றவை – நாவல்கள்
- ஊமைச் செந்நாய், மத்தகம் – கதைகள்
- அறம் – சிறுகதைத் தொகுப்பு

**12. மெய்ம்மயக்கம் என்றால் என்ன? அது எத்தனை வகைப்படும்?**

- சொற்களின் இடையில் மெய்யெழுத்துகள் அடுத்தடுத்து வருவது மெய்ம்மயக்கம் எனப்படும்.
- இது உடனிலை மெய்ம்மயக்கம், வேற்றுநிலை மெய்ம்மயக்கம் என இரண்டு வகைப்படும்.

**13. உடனிலை மெய்ம்மயக்கம் என்றால் என்ன? சான்று தருக.**

- சொற்களின் இடையில் ஒரே மெய்யெழுத்து அடுத்தடுத்து வருவது உடனிலை மெய்ம்மயக்கம் எனப்படும்.
- க், ச், த், ப் ஆகிய மெய்கள் தம் எழுத்துகளுடன் மட்டுமே சேர்ந்து வரும்.

**சான்று :** பக்கம் (க – க் + அ)

அச்சம் (ச – ச் + அ)

மொத்தம் (த – த் + அ)

அப்பம்(ப – ப் + அ)

**14. வேற்றுநிலை மெய்ம்மயக்கம் என்றால் என்ன? சான்று தருக.**

- சொற்களின் இடையில் வெவ்வேறு மெய்யெழுத்துகள் தொடர்ந்து வருவது வேற்றுநிலை மெய்ம்மயக்கம் எனப்படும்.
- தமிழில் ர்,ழ் ஆகிய இரண்டு மெய்யெழுத்துகள் தம் வரிசை எழுத்துகளுடன் சேர்ந்து வராமல் பிற மெய்யெழுத்துகளுடன் மட்டுமே சேர்ந்து வரும்.

**சான்று**

ர் – தேர்தல், உயர்வு

ழ் – வாழ்வான், சூழ்க

**15. ஈரொற்று மெய்ம்மயக்கம் என்றால் என்ன?**

- தனிச்சொற்களிலோ கூட்டுச் சொற்களிலோ சொற்களின் இடையில் ய்,ர்,ழ் ஆகிய மெய்கள் ஈரொற்றாய் (மூன்று மெய்களாக மயங்கி வரும்) வருவது ஈரொற்று மெய்ம்மயக்கம் எனப்படும்.



www.tnpscjob.com

சான்று : ய் – காய்ச்சல், நாய்க்கால்
ர் – உயர்ச்சி, தேர்க்கால்
ழ் – வீழ்ச்சி, காழ்ப்புணர்ச்சி

**16. புணர்ச்சி என்றால் என்ன?**

நிலைமொழியின் இறுதி எழுத்தும் வருமொழியின் முதலெழுத்தும் ஒன்று சேர்வதற்குப் புணர்ச்சி என்று பெயர்.

**17. புணர்ச்சி விதிகளின் பயன்களைக் கூறு.**

மொழியைப் பிழையின்றிக் கையாளவும், பாடலடிகளைப் பொருள் உணர்வுக்கு ஏற்ற வகையில் பிரித்தறியவும், மொழி ஆளுமையைப் புரிந்து கொள்ளவும் புணர்ச்சி விதிகள் பயன்படுகின்றன.

**சிறுவினா – கூடுதல் வினாக்கள்**

**1. திருமலை முருகன் பள்ளு கூறும் மாடு வகைகள் எவை?**

- காரி
- தொந்திக்காளை
- மால்காளை
- மறைகாளை
- மயிலைக்காளை
- மேழைக்காளை
- செம்மறையான்
- கருமறையான்

**2. திருமலை முருகன் பள்ளு கூறும் உழவுக் கருவிகள் எவை?**

- கலப்பை
- நுகம்
- பூட்டு
- கயிறு வள்ளைக்கை
- உழக்கோல்
- கொழுகயமரம்
- மண்வெட்டி
- வடம்

**3. கண்காணி, கண்காணம் – பொருள் தருக.**

**கண்காணி**

- பேச்சு வழக்கில் கங்காணி என்று பயன்படுத்தப்படுகிறது.
- கண்காணி என்பது நெல் ஒப்படியை மேற்பார்வை செய்பவரைக் குறிக்கும்.

**கண்காணம்**

- கண்காணம் என்பது பயிர்த்தொழிலில் கையாளப்படும் ஒரு சொல்.
- கங்காணம் என்று வழங்கப்படுகிறது.
- இதன் பொருள், நாள்தோறும் வயலில் நெல் அறுவடை செய்து களத்தில் ஒப்படி செய்யப்படும் நெல் அளவு என்பதாகும்.

**4. திருமலை முருகன் பள்ளு கூறும் நெல் வகைகள் யாவை?**

- பைங்குழலாள்
- சிறைமீட்டான்
- சீதா போகம்
- கருங்சூரை
- ரங்கஞ்சம்பா
- பூம்பாளை
- மணல்வாரி
- குற்றாலன்
- அதிக்கிராதி



www.tnpscjob.com

- பாற்கடுக்கன்
- அரிக்ராவி
- கற்பூரப்பாளை
- முத்துவெள்ளை
- காடை கழுத்தன்
- புழுகுசம்பா
- மிளகு சம்பா
- சொரி குரம்பை
- பனை முகத்தன்
- புத்தன்வாரி

**5. ஐங்குறுநூறு – குறிப்பு வரைக.**

- ஐந்து + குறுமை + நூறு = ஐங்குறுநூறு.
- மூன்றடிச் சிற்றெல்லையும் ஆறடிப் பேரெல்லையும் கொண்ட அகவற்பாக்களால் ஆன நூல்.
- திணை ஒன்றிற்கு நூறு பாடல்களாக ஐந்து திணைகளுக்கு ஐந்நூறு பாடல்கள் கொண்டது.
- ஐங்குறுநூற்றின் கடவுள் வாழ்த்துப் பாடலைப் பாடியவர் பாரதம் பாடிய பெருந்தேவனார்.
- இந்நூலைத் தொகுத்தவர் புலத்துறை முற்றிய கூடலூர்க் கிழார்.
- தொகுப்பித்தவர் யானைக்கட்சேய் மாந்தரஞ் சேரலிரும்பொறை.

**6. ஐங்குறுநூற்றின் ஐந்து திணைகளைப் பாடிய புலவர்கள் யாவர்?**

| | | |
|---|---|---|
| குறிஞ்சித்திணை | – | கபிலர் |
| முல்லைத்திணை | – | பேயனார் |
| மருதத்திணை | – | ஓரம்போகியார் |
| நெய்தல் திணை | – | அம்மூவனார் |
| பாலைத்திணை | – | ஓதலாந்தையார் |

**7. நிகண்டுகளில் யானையைக் குறிக்கும் வேறு சொற்களைக் கூறுக.**

- கயம்
- வாரணம்
- ஆனை
- வேழம்
- அஞ்சனாவதி
- இபம்
- களிறு
- அத்தி
- இரதி
- பிளிறு
- அத்தினி
- குஞ்சரம்
- களபம்
- அரசுவா
- வல்விலங்கு
- மாதங்கம்
- அல்லியன்
- கரி
- கைம்மா
- அனுபமை
- அஞ்சனம்



www.tnpscjob.com

8. **யானையைப் பற்றி நீ அறிந்த செய்திகளை எழுது.**

- மனிதர்கள் தவிர்த்த மற்றைய விலங்குகளில் யானை, அதிக நாள்கள் வாழும் தரைவாழ் விலங்கு ஆகும்.
- வேட்டை விலங்குகளும், காட்டுயிர்களின் உணவுப் படிநிலையில் உயர்நிலையிலுள்ளவையுமான சிங்கம், புலி முதலியனவும் நெருங்க அஞ்சும் வலிமை கொண்டவை.
- யானைகள் குடும்பமாக வாழும்.
- உயிர்போற வழி இருந்தாலும் யானை அலறாது, துடிக்காது.
- யானைகளுக்கு வெள்ளை நிறம் பிடிக்காது.
- அதிக ஞாபக சக்தி கொண்டவை.
- யானைகள் அடையாளங்களைக் கொண்டு முந்நூறு கிலோமீட்டர் தூரம் வரை நடந்து செல்லும்.
- ஆப்பிரிக்கப் புதர்வெளி யானைகள், ஆப்பிரிக்கக் காட்டு யானைகள் மற்றும் ஆசிய யானைகள் என்ற மூன்று சிற்றினங்கள் மட்டுமே உலகில் எஞ்சியுள்ளன.
- ஏறத்தாழ 70 ஆண்டுகள் வரை யானைகள் உயிர் வாழும்.

9. **மகர ஈற்றுப்புணர்ச்சியை விளக்குக.**

நிலைமொழிச் சொல்லின் இறுதி எழுத்தாக மகரமெய் வரும்போது, அச்சொல் மூன்று நிலைகளில் புணரும்.

1. மகரமெய் கெட்டுப்புணரும்.
2. மகரமெய் கெட்டு இனமெல்லெழுத்துத் தோன்றிப் புணரும்.
3. மகரமெய் கெட்டு வல்லினம் மிக்குப்புணரும்.

**எ.கா :** பாடம் + வேளை = பாடவேளை – மகரமெய் கெட்டுப்புணர்ந்தது.

காலம் + கடந்தவன் – கால + கடந்தவன் – காலங்கடந்தவன்

– மகரமெய் கெட்டு இனமெல்லெழுத்துத் தோன்றிப் புணர்ந்தது.

பழம் + தோல் – பழ + தோல் – பழத்தோல்

– மகரமெய் கெட்டு வல்லினம் மிக்குப்புணர்ந்தது.

10. **பூப்பெயர்ப் புணர்ச்சியைச் சான்றுடன் விளக்குக.**

பூ என்னும் சொல் நிலைமொழியாய் நிற்க வருமொழியின் முதலில் வல்லின மெய்யெழுத்துகள் வரும்போது வல்லினமெய் மிகுந்து புணர்வது மட்டுமன்றி, அவற்றிற்கு இனமான மெல்லின மெய் மிகுதலும் உண்டு. எனினும் மெல்லின மெய் மிகுதலே பெருவழக்காக உள்ளது.



www.tnpscjob.com

எ.கா :

பூ + கொடி – பூக்கொடி, பூங்கொடி

பூ + சோலை – பூச்சோலை, பூஞ்சோலை

பூ + தொட்டி – பூத்தொட்டி, பூந்தொட்டி

பூ + பந்து – பூப்பந்து, பூம்பந்து

**விதி :** பூப்பெயர் முன் இனமென்மையும் தோன்றும்.

**11. முல்லைத் திணையை விளக்குக.**

**முதற்பொருள்**

| | | |
|---|---|---|
| நிலம் | : | காடும் காடு சார்ந்த இடமும் |

**பொழுது**

| | | |
|---|---|---|
| சிறுபொழுது | : | மாலை |
| பெரும்பொழுது | : | கார்காலம் |

**கருப்பொருள்**

| | | |
|---|---|---|
| தெய்வம் | : | திருமால் |
| மக்கள் | : | ஆயர், ஆய்ச்சியர் |
| பறவை | : | கானக்கோழி |
| விலங்கு | : | முயல், மான் |
| ஊர் | : | பாடி, சேரி |
| நீர் | : | கானாறு |
| பூ | : | முல்லை, தோன்றி |
| மரம் | : | கொன்றை, காயா |
| உணவு | : | வரகு, சாமை |
| பறை | : | ஏறு கோட்பறை |
| பண் | : | முல்லைப்பண் (சாதாரி) |
| யாழ் | : | முல்லையாழ் |
| தொழில் | : | வரகு விதைத்தல், ஆநிரை மேய்த்தல் |

**உரிப்பொருள்**

இருத்தலும் இருத்தல் நிமித்தமும்

**சான்று**

"காயா கொன்றை நெய்தல் முல்லை" எனத்தொடங்கும் பேயனார் பாடிய ஐங்குறுநூற்றுப் பாடல்.



www.tnpscjob.com

**சான்று விளக்கம்**

பெரிய கண்களையுடையவளே! அழகிய மாலை நேரத்தில் முல்லை நிலத்தில் காயா, கொன்றை, நெய்தல், முல்லை, செம்முல்லை, பிடவம் ஆகிய மலர்கள் பூத்திருக்கின்றன. அப்பூக்களைப் பார்த்து மகிழ்ந்து ஆட, 'விரைந்து வா' என்று தலைவன் தன் தலைவியை அழைக்கிறான்.

**12. பருவங் (கார்காலம்) குறித்துப் பிரிந்த தலைமகன், அப்பருவத்திற்கு முன்னே வந்தமை தோன்ற தலைவிக்கு உரைத்தது.**

**துறை விளக்கம்:**

பொருளீட்டுவதற்காக வெளியூர் சென்ற தலைவன், தான் வருவதாகக் கூறிச் சென்ற கார்காலம் முடியும் முன்பே வந்துவிட்டதைத் தலைவிக்கு உணர்த்த நினைத்து தலைவியிடம் உரைத்தது.

**சான்று**

"காயா கொன்றை நெய்தல் முல்லை" எனத் தொடங்கும் ஐங்குறுநூற்றுப் பாடல்.

**சான்று விளக்கம்**

பெரிய அழகிய கண்களையுடையவளே! அழகிய மாலை நேரத்தில் முல்லை நிலத்தில் காயா, கொன்றை, நெய்தல், முல்லை, செம்முல்லை, பிடவம் ஆகிய மலர்கள் பூத்துள்ளதைப் பார்த்து மகிழ்ந்து ஆட, 'விரைந்து வா' என்று தலைவன் தலைவியை அழைத்துத் தான் மழைக்காலம் முடியும் முன்பே வந்துவிட்டதை உணர்த்துகிறான்.

**துறைப்பொருத்தம்**

தலைவன் மழைக்கால மலர்களைப் பார்த்து மகிழ்ந்து ஆட விரைந்து வா என்று தலைவியை அழைத்துத் தான் கார்காலம் முடியும் முன்பே வந்ததை உணர்த்துவது இத்துறைக்குப் பொருந்தி வருகிறது.



www.tnpscjob.com

# இயல் - 3

| | | |
|---|---|---|
| உரைநடை | : | மலை இடப்பெயர்கள் : ஓர் ஆய்வு |
| செய்யுள் | : | காவடிச் சிந்து |
| | | குறுந்தொகை |
| | | புறநானூறு |
| துணைப்பாடம் | : | வாடிவாசல் |
| இலக்கணம் | : | பகுபத உறுப்புகள் |
| வாழ்வியல் | : | திருக்குறள் |



www.tnpscjob.com

**1. பகுபத உறுப்புகள் எத்தனை? அவை யாவை?**

பகுபத உறுப்புகள் ஆறு வகைப்படும். அவை

- பகுதி
- விகுதி
- இடைநிலை
- சாரியை
- சந்தி
- விகாரம்

**2. காலம் காட்டும் இடைநிலைகளை எடுத்துக்காட்டுடன் விளக்குக.**

ஒரு வினைப் பகுபதத்தில் பகுதிக்கும் விகுதிக்கும் இடையில் வந்து காலம் உணர்த்தும் உறுப்பு காலம் காட்டும் இடைநிலை எனப்படும்.

- காலம் காட்டும் இடைநிலைகள் மூன்று வகைப்படும். அவை,

  இறந்த கால இடைநிலைகள் – த், ட், ற், இன்

  நிகழ்கால இடைநிலைகள் – கிறு, கின்று, ஆநின்று

  எதிர்கால இடைநிலைகள் – ப், வ்

**3. பகுபதத்தில் சந்தி, சாரியை எவ்வெவ்விடங்களில் அமையும்?**

**சந்தி அமையும் இடம் :**

- பகுதிக்கும் இடைநிலைக்கும் இடையில் சந்தி அமையும்.

**சாரியை அமையும் இடம்**

- இடைநிலைக்கும் விகுதிக்கும் இடையில் சாரியை அமையும்.

**4. விகுதிகள் எவற்றை உணர்த்தும்?**

- ஒரு வினைமுற்றுச் சொல்லின் இறுதியில் நின்று திணை, பால், எண், இடம் ஆகியவற்றை வெளிப்படுத்தும் உறுப்பு விகுதி எனப்படும்.
- வியங்கோள், தொழிற்பெயர், பெயரெச்சம், வினையெச்சம் போன்ற பல்வேறு இலக்கணப் பொருண்மைகளை உணர்த்தவும் விகுதி பயன்படுகிறது.

**சான்று :**

எழுதுக = எழுது + க

செய்தல் = செய் + தல்

உரைத்த = உரை + த் + த் + அ

படித்து = படி + த் + த் + உ



www.tnpscjob.com

5. **உறுப்பிலக்கணம் தருக.**

| | பகுதி | சந்தி | விகாரம் | இடைநிலை | சாரியை | விகுதி |
|---|---|---|---|---|---|---|
| அமைந்து | அமை | த் | (ந்) | த் | | உ |
| பார்த்தான் | பார் | த் | | த் | | ஆன் |
| தோன்றி | தோன்று | | | | | இ |
| வருகிறார் | வா | | (வரு) | கிறு | | ஆர் |
| செய்க | செய் | | | | | க |
| நடந்தனன் | நட | த் | (ந்) | த் | அன் | அன் |
| கொடுத்த | கொடு | த் | | த் | | அ |

6. **பின்வருவனவற்றுள் பொருந்தாத இணையைத் தேர்க.**

அன்–வந்தனன் இன்–முறிந்தது கு–காண்குவன் அன்–சென்றன

**விடை :** இன் – முறிந்தது

7. **பகுதி, விகுதி, இடைநிலை ஆகியவற்றைப் பயன்படுத்திச் சொற்களை உருவாக்குக.**




**விடை :**

அ) பேசு + இன் + ஆன் – பேசினான்

ஆ) பேசு + கிறு + ஆன் – பேசுகிறான்

இ) பேசு + வ்+ ஆன் – பேசுவான்

ஈ) பேசு + ஆ + ஆன் – பேசான்

அ) எழுது + இன் + ஆன் – எழுதினான்

ஆ) எழுது + கிறு + ஆன் – எழுதுகிறான்

இ) எழுது + வ் + ஆன் – எழுதுவான்

ஈ) எழுது + ஆ + ஆன் – எழுதான்



www.tnpscjob.com

அ) வணங்கு + இன் + ஆன் – வணங்கினான்

ஆ) வணங்கு + கிறு + ஆன் – வணங்குகிறான்

இ) வணங்கு + வ் + ஆன் – வணங்குவான்

ஈ) வணங்கு + ஆ + ஆன் – வணங்கான்

8. **வேர்ச்சொல், எதிர்மறை இடைநிலை, விகுதி ஆகியவற்றைச் சேர்த்து சொற்களை உருவாக்குக.**






www.tnpscjob.com

## நம்மை அளப்போம்

பலவுள் தெரிக.

**1. கூற்று – "கோடு" என்பது தமிழ்ச்சொல் ஆகும்.**

விளக்கம் –"கோடு" என்னும் சொல்லுக்கு மலையுச்சி, வல்லரண், கோட்டை என்னும் பொருள்களும் உண்டு.

அ) கூற்று சரி, விளக்கம் தவறு
ஆ) கூற்றும் சரி, விளக்கமும் சரி
இ) கூற்று தவறு, விளக்கம் சரி
ஈ) கூற்றும் தவறு, விளக்கமும் தவறு

**விடை:** ஆ) கூற்றும் சரி விளக்கமும் சரி

**2. காவடிச் சிந்துக்குத் தந்தை என்று அழைக்கப்படுவர் யார்?**

அ) பாரதிதாசன்
ஆ) அண்ணாமலையார்
இ) முருகன்
ஈ) பாரதியார்

**விடை :** ஆ) அண்ணாமலையார்

**3. பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுக்க.**

1) வெள்ளி வீதியார் – அ) புறநானூறு
2) அண்ணாமலையார் – ஆ) சி.சு. செல்லப்பா
3) வாடிவாசல் – இ) குறுந்தொகை
4) இளம்பெருவழுதி – ஈ) காவடிச்சிந்து

i) அ,ஆ, இ,ஈ ii) ஆ,ஈ, அ, இ iii) இ,ஈ,ஆ,அ iv) இ,ஈ,அ,ஆ

**விடை :** iii) இ,ஈ,ஆ,அ

**4. "இனிதென" இச்சொல்லில் அமைந்த புணர்ச்சி விதிகளை வரிசைப்படுத்துக.**

அ) உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும், உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே.

ஆ) தனிக்குறில் முன் ஒற்று உயிர்வரின் இரட்டும், உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும்.

இ) உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே.

ஈ) உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும்.

**விடை:** அ) உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும், உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே.

**5. பகுபத உறுப்புகளுள் இடம்பெறும் அடிப்படை உறுப்புகள் எவை?**

அ) பகுதி, இடைநிலை, சந்தி, சாரியை, விகுதி, விகாரம்

ஆ) பகுதி, இடைநிலை, சாரியை

இ) பகுதி, சந்தி, விகாரம்

ஈ) பகுதி, விகுதி

**விடை:** ஈ) பகுதி, விகுதி



www.tnpscjob.com

**குறுவினா**

**1. "கோட்டை" என்னும் சொல் திராவிட மொழிகளில் எவ்வாறு எடுத்தாளப்பட்டு உள்ளது?**

| | | |
|---|---|---|
| தமிழ் | – | கோட்டை, கோடு |
| மலையாளம் | – | கோட்ட, கோடு |
| கன்னடம் | – | கோட்டே, கோண்டே |
| தெலுங்கு | – | கோட்ட |
| துளு | – | கோட்டே |
| தோடா | – | க்வாட் |

**2. காவடிச்சிந்து என்பது யாது?**

- தமிழ்நாட்டில் பண்டைக்காலம் முதல் நாட்டார் வழக்கிலுள்ள இசைமரபே காவடிச்சிந்து எனலாம்.
- முருகப்பெருமானுக்கு அடியார்கள் காவடி எடுத்துச் செல்லும்போது பாடப்படும் பாடல்கள், காவடிச்சிந்து ஆகும்.
- அவர்களின் வழிநடைப் பாடல் வகைகளிலிருந்து காவடிச்சிந்து என்ற பாவடிவம் தோன்றியது.

**3. குறுந்தொகை குறித்து நீங்கள் அறியும் செய்தி யாது?**

- குறுந்தொகை எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று.
- அகத்திணை சார்ந்த 401 பாடல்களை உடையது.
- 'நல்ல குறுந்தொகை' எனச் சிறப்பித்து உரைக்கப்படும் நூல்.
- உரையாசிரியர்கள் பலராலும் அதிகமாக மேற்கோள் காட்டப்பட்ட நூல்.
- ஆதலால் இந்நூலே முதலில் தொகுக்கப்பட்ட தொகை நூலாகக் கருதப்படுகிறது.
- இந்நூலைத் தொகுத்தவர் பூரிக்கோ ஆவார்.
- இந்நூலின் கடவுள் வாழ்த்துப் பாடலைப் பாடியவர் பாரதம் பாடிய பெருந்தேவனார் ஆவர்.

**4. தமிழர்கள் புகழ், பழி ஆகியவற்றை எவ்வாறு ஏற்றதாகப் புறநானூறு கூறுகிறது?**

- புகழ் வரும் என்றால் தம் உயிரையும் கொடுப்பர்;
  பழிவரும் என்றால் உலகம் முழுவதும் கிடைத்தாலும் ஏற்றுக் கொள்ளார்.
  "புகழ் எனின் உயிருங் கொடுக்குவர்; பழியெனின்
  உலகுடன் பெறினும் கொள்ளலர்"



www.tnpscjob.com

சிறுவினா

**1. 'மலை மனித வாழ்வில் சிறப்பிடம் பெற்றுள்ளது' – என்பதை எடுத்துக்காட்டுகளுடன் விவரிக்க.**

- மலை, மனித சமூகத்தின் ஆதி நிலமாகும்.
- தமிழ் அகத்திணையியல் மலை மற்றும் மலை சார்ந்த பகுதியைக் குறிஞ்சி என்று குறிக்கும்.
- குறிஞ்சி நிலம் சார்ந்த சங்கப் பாடல்கள் மலையோடு இயைந்த தமிழர்தம் சீரிய வாழ்வைப் பேசின.
- திராவிடர்கள் அடிப்படையில் மலைவாழ் மக்கள். திராவிடர்களை, மலைநில மனிதர்கள் என்று அழைக்கிறார் கமில் சுவலபில்.
- "சேயோன் மேய மைவரை உலகம்" என்று உரைக்கிறது தொல்காப்பியம்.
- "விண்பொரு நெடுவரை குறிஞ்சிக்கிழவ" என்கிறது திருமுருகாற்றுப்படை.
- பழந்தமிழ் இலக்கியங்கள் குறிப்பிடும் கடையெழு வள்ளல்கள் எழுவருமே மலைப்பகுதிகளின் தலைவர்களாகவே விளங்கியுள்ளனர்.
- திராவிட மலைவாழ் மக்களின் குடியிருப்புகள், அப்பழங்குடியினர்தம் மலைசார்ந்த வாழ்வியலின் சமூக, சமயக்கூறுபாடுகள் குறித்த புரிதலைத் தருகின்றன.
- பாண்டிய மன்னன் ஒருவன் 'மலயத்துவஜ' என்று அழைக்கபட்டான் என்பதும் 'மலய' என்ற சொல்லின் திராவிடத் தொடர்புக்கு அரண் சேர்க்கிறது.

**2. தமிழ்ப் பண்பாட்டின் அடையாளம் காவடிச்சிந்து என்பதை விளக்குக.**

- காவடி தமிழ்ப் பண்பாட்டுக் கூறுகளுள் ஒன்று.
- உலகெங்கும் வாழும் தமிழர்கள் குன்றுதோறும் ~~வீற்றிருக்கும்~~ முருகன் கோவில்களில் காவடி எடுத்து ஆடுவது வழக்கமாக உள்ளது.
- அதைச் சுமையாக எண்ணாமல் பாடியவாறே செல்வதற்கு வழிநடைப் பாடல்களைப் பாடினர்.
- வழிபாட்டிற்காகப் பால் முதலான வழிபாட்டுப் பொருட்களைக் கொண்டு செல்வோர் வழிநடைப் பாடலாகப் பாடும் பாடல்வகை காவடிச்சிந்து.

**3. பகுபத உறுப்பிலக்கணம் கூறுக.**

அ) வருகின்றாள் = வா(வரு) + கின்று + ஆள்

வா – பகுதி; வரு – விகாரம்; கின்று – நிகழ்கால இடைநிலை;

ஆள் – பெண்பால் வினைமுற்று விகுதி.



www.tnpscjob.com

ஆ) வாழ்வான் = வாழ் + வ் + ஆன்

வாழ் – பகுதி; வ் – எதிர்கால இடைநிலை;

ஆன் – ஆண்பால் வினைமுற்று விகுதி.

இ) காண்பிப்பார் = காண்பி + ப் + ப் + ஆர்

காண்பி – பகுதி; ப் – சந்தி; ப் – எதிர்கால இடைநிலை;

ஆர் – பலர்பால் வினைமுற்று விகுதி.

ஈ) பிரிந்த = பிரி + த் (ந்) + த் + அ

பிரி – பகுதி; த் – சந்தி; ந் – விகாரம்; த் – இறந்தகால இடைநிலை;

அ – பெயரெச்ச விகுதி.

**4. சங்ககாலத்தில் நடைபெற்ற சமூக நிகழ்வு வெள்ளிவீதியார் பாடலில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. இக்காலச் சமூக நிகழ்வுகள் எழுத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளமையை ஒப்பிட்டு விளக்குக.**

**சங்க காலச் சமூக நிகழ்வு**

- சங்க காலத்தில் தலைவன் முதியவர்கள் மூலமாக தலைவியின் இல்லத்திற்கு போதுமென்று சொல்லத்தக்க அளவு பரிசப் பொருட்களைக் கொண்டு வந்து அவைமுன் வைத்துள்ளான்.
- அக்காலத்தில் மணப்பெண் வீட்டாருக்கு மணமகன் மிகுதியான பரிசப் பொருட்களைத் தந்து மணமுடித்துள்ளான் என்பது வெள்ளிவீதியார் பாடலில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

**இக்காலச் சமூக நிகழ்வு**

- இக்காலத்தில் மணப்பெண் வீட்டாரிடம் பொன்னாகவும், பொருளாகவும், இல்லத்திற்குத் தேவையான பொருட்களையும் மணமகன் வீட்டார் கேட்டுப்பெறுகின்ற இழிநிலை நடைபெறுகிறது.
- சில இடங்களில் கேட்கின்ற வரதட்சணை கிடைக்காததால் 'திருமண முறிவு' ஏற்படுகின்ற அவலங்களும் நடக்கின்றன.
- பெண்ணைத் தானமாகத் தருவதுடன், பொருளையும் தருகின்ற கட்டாயத்திற்கு தற்காலத்தில் பெண்வீட்டார் தள்ளப்படுகின்றனர்.
- தற்போது இங்கொன்றும் அங்கொன்றுமாக மணப்பெண் வீட்டாரிடம் வரதட்சணை பெறாமல் திருமணம் செய்து கொள்கின்ற நிகழ்வு நடைபெறுகிறது.
- சமூகத்திற்கு நலமான இந்நிகழ்வு மேலும் பல்கிப் பெருக வேண்டும்.



www.tnpscjob.com

5. புறநானூற்றுப் பாடலின் கருத்திற்கு இணையான குறட்பாக்களைக் குறிப்பிடுக.

**புறநானூறு**

''உண்டால் அம்ம இவ்வுலகம் இந்திரர்
அமிழ்தம் இயைவது ஆயினும், இனிது எனத்
தமியர் உண்டலும் இலரே''

**திருக்குறள்**

விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா
மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று.

**புறநானூறு**

''துஞ்சலும் இலர்''

**திருக்குறள்**

கலங்காது கண்ட வினைக்கண் துளங்காது
தூக்கங் கடிந்து செயல்.

**புறநானூறு**

''புகழ் எனின் உயிருங் கொடுக்குவர்; பழியெனின்
உலகுடன் பெறினும் கொள்ளலர்.''

**திருக்குறள்**

வசைஒழிய வாழ்வாரே வாழ்வார் இசையொழிய
வாழ்வாரே வாழா தவர்.

## நெடுவினா

**1. இயற்கையோடு இயைந்து வாழ்வு நடத்திய தமிழர்களின் வாழ்வில் இருப்பிடங்களின் பெயர்களும் இயற்கையோடு இயைந்தே இருந்தன – கூற்றினை மெய்ப்பிக்க.**

**முன்னுரை**

மலை மனித சமூகத்தின் ஆதி நிலமாகும். தமிழ் அகத்திணையியல், மலை மற்றும் மலை சார்ந்த பகுதியைக் குறிஞ்சி என்று குறிக்கும். குறிஞ்சி நிலம் சார்ந்த சங்கப் பாடல்கள் மலையோடு இயைந்த தமிழர்தம் சீரிய வாழ்வினைப் பேசின. மலை, குன்றுகளின் பெயர்கள் குறித்த ஆய்வை OROLOGY என்ற கலைச் சொல்லால் அழைப்பர்.

**இலக்கியப் பதிவு**

- தமிழர் வாழ்வில் மலைகள் பெரும் சிறப்பு குறிப்பிடத்தக்கது.
- திராவிடர்கள் அடிப்படையில் மலைவாழ் மக்கள். திராவிடர்களை மலைநில மனிதர்கள் என்று அழைக்கிறார், கமில் சுவலபில்.
- ''சேயோன் மேய மைவரை உலகம்'' என்று உரைக்கிறது தொல்காப்பியம்.



www.tnpscjob.com

- "விண்பொரு நெடுவரை குறிஞ்சிக்கிழவ" என்கிறது திருமுருகாற்றுப்படை.
- மேற்குறிப்பிட்டுள்ள பாடல் அடிகள் தமிழரின் கடவுளையும் மலையையும் தொடர்புபடுத்தும் பண்டைய பதிவுகளாக விளங்குகின்றன.
- பழந்தமிழ் இலக்கியங்கள் குறிப்பிடும் கடையெழு வள்ளல்கள் எழுவருமே மலைப்பகுதிகளின் தலைவர்களாகவே விளங்கியுள்ளனர்.

**இயற்கையோடு இயைந்த வாழ்வின் இருப்பிடங்கள்**

- நீலகிரியில் உள்ள தோடர் இனத்தவர் பால் எருமைக் கொட்டில்களைப் புனித இடமாகக் கருதுபவர்கள்.
- எனவே அவற்றைச் சுற்றி உயர்ந்த மதிற்சுவர்கள் அமைத்திருக்கின்றனர். அவர்களின் வீடுகளில் திண்டுகள் (மேடைகள் ) முக்கிய இடம்பெறுகின்றன.
- தமிழில் குறிஞ்சி நிலம் தொடர்பான சொற்களில் 'மலை' என்பது 'உயரமானது' என்றும், 'குன்று' என்பது உயரம் 'குறைவானது' என்றும் பொருள்படுவனவாகும்.
- மலை, குன்று என்னும் இரண்டு சொல்லாட்சிகளும் வெளிக்கொணரும் உயர வேறுபாட்டை வடமேற்குப் பகுதிகளில் பயன்படுத்தப்பட்டிருக்கும் மலை சார்ந்த இடப்பெயர்கள் உறுதி செய்வது வியப்பளிக்கின்றது.

**கோட்டை**

- தமிழ் மொழியில் 'கோட்டை' என்ற சொல், காவல் மிகுந்த காப்பரண் கொண்ட மதில் சுவர்களால் சூழப்பட்ட கட்டமைப்பைக் குறிக்கிறது.
- எழுத்து வழக்கு கொண்ட திராவிட மொழிகளில் மட்டுமல்லாமல் திராவிடப் பழங்குடி மொழிகளிலும்கூட கோட்டை என்ற சொல்லாக்கத்தின் வேர்களை இனங்காண முடிகிறது.
- 'கோட்டை' என்று முடியும் 248 இடப்பெயர்களும் தமிழ்நாட்டில்தான் உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.
- இச்சொல் செயற்கையான காப்பரண்களான கோட்டைகளைக் கட்டியெழுப்பிய நகர நாகரிகத்தின் பின்னணியில் தோன்றியது என்பதைவிட அதற்கும் தொன்மையான மலைசார்ந்த வாழ்வியல் சூழலில் உருப்பெற்றிருக்கும் என்பதுதான் உண்மையாகத் தோன்றுகிறது.
- ஏனெனில் 'கோடு' என்ற தமிழ்ச்சொல்லுக்கு மலையுச்சி, சிகரம், மலை என்ற பொருளோடு வல்லரண், கோட்டை என்ற பொருளும் உண்டு.
- மலையரண், காட்டரண் போன்ற இயற்கை அரண்கள், மதில் சுவர்களால் அமைந்த செயற்கையான கோட்டைகளை விடவும் தொன்மையானவை.



www.tnpscjob.com

முடிவுரை

- 'கோடை' என்னும் தமிழ்ச் சொல் 'மலை' என்னும் பொருளில் வழங்குவதையும் இங்கே கவனத்தில் கொள்ள வேண்டும்.
- திராவிடர்களின் மலைப் பெருமிதத்தின் நீட்சியாக வடமேற்கு நாடுகளான பாகிஸ்தான் மற்றும் ஆப்கானிஸ்தானின் நெடுமலைகளோடு பொருந்திப் போகும் சான்றுகள் கண்டறியப்பட்டுள்ளன.
- இச்சான்றுகள், அப்பகுதிகளில் திராவிடர்கள் வாழ்ந்ததற்கான அடையாளங்களை உறுதி செய்வதோடு, மலை இடப்பெயர் ஆய்வுகளின் இன்றைய வளர்ச்சிப் போக்கினை வெளிப்படுத்துவனவாகவும் அமைந்துள்ளன.
- இக்கூற்றிலிருந்து தமிழ்களின் வாழ்வில் இருப்பிடங்களின் பெயர்களும் இயற்கையோடு இணைந்தே இருந்தன என்பதை அறியலாம்.

**2. நடைப்பயணிகளின் வழிநடைப் பாடலாகக் காவடிச்சிந்து உள்ளது – இக்கூற்றை அண்ணாமலையாரின் பாடல்வழி மதிப்பீடு செய்க.**

முன்னுரை

காவடி, தமிழ்ப்பண்பாட்டுக் கூறுகளுள் ஒன்று. உலகெங்கும் வாழும் தமிழர்கள் குன்றுதோறும் வீற்றிருக்கும் முருகன் கோவில்களில் காவடி எடுத்து ஆடுவது வழக்கமாக உள்ளது. காவடி எடுத்துச் செல்வோர், அதைச் சுமையாக எண்ணாமல் பாடியவாறே செல்வதற்கு வழிநடைப் பாடல்கள் உதவுகின்றன. அண்ணாமலையார் 'காவடிச்சிந்தின் தந்தை' என அழைக்கப்படுகிறார்.

மதுரகவி

- தமிழில் கற்றுத் தேர்ந்தவனாக உள்ள அண்ணாமலைதாசன் என்கிற புலவர் பாடுவது காவடிச்சிந்து.
- உலகம் புகழ்ந்திடக் கூடிய மதுரம் நிறைந்த கவிதையினைத் தன்னுடைய தோள்களில் தாங்கக்கூடிய தீரனாகத் திகழ்வதுடன், தன் கைகளில் வேலினையும் தாங்கிக் கொண்டிருக்கும் வீரன் முருகன்..
- வாழ்ந்திட உதவக் கூடிய வரங்களை மட்டுமே அள்ளித் தந்திடக் கூடிய கழுகாசலபதியின் கோயிலின் வளங்களைப் பற்றி நான் பாடப்போகின்றேன் என பாதசாரிகள் பாடுவதாக இயற்றியுள்ளார்.

கோவில் கோபுரம்

- தொலை தூரத்திலிருந்து வழிநடையாக வருகின்றவர்களுக்கு முதலில் தெரிவது கோபுரமே.



www.tnpscjob.com

- கழுகுமலையினில் அமைந்துள்ள கோவில் கோபுரத்தின் தங்க நிறத்திலான கவசமானது தேவர்களுடைய வானத்தினை விடவும் மேலே உயர்ந்துள்ளதனால், அதிலிருந்து வருகின்ற ஒளியானது, பார்ப்பவர்களின் கண்களைக் கூசச் செய்வதுடன் இந்த உலகம் முழுவதும் மாசுபடியாமல் பரவியபடி வலம் வருகின்றது.
- அத்தகைய கோயிலில் மெல்லியதான இடையினை உடைய பெண்கள் தங்களுடைய சிலம்புகள் ஒலித்திடும்படியாக நடனமாடுவார்கள்.
- பூமியினைத் தாங்கிக் கொண்டிருக்கும் நாகமோ இந்த மத்தளம் மற்றும் தாளங்களின் ஓசையினை இடியின் ஓசை என்று நினைத்து பயந்து அதனை உற்றுக் கேட்கின்றது.

**கொடிக்கம்பம் :**

- கோயிலுக்கு பாதசாரிகள் பக்தி பரவசத்தில் ஆடிப்பாடி வருகின்றனர்.
- அப்பொழுது அக்கோயிலில் நடப்பட்டிருந்த கொடிக்கம்பமானது உயர்ந்து விண்ணிற்குத் தாவுவதனைப் போன்று அமைந்திருந்தது.

**அழகு மதில்**

- பாதசாரிகள் கோயிலைச் சுற்றிலும் அழகாக இருக்கும் மதிலைப் பார்க்கிறார்கள்.
- அந்த மதிற்சுவரும், வானுலகினையே தொட்டு அதனையும் தாண்டிவிடக் கூடிய அளவில் உயர்ந்து அமைந்திருந்தது.
- அதன் காரணமாக வானில் உலா வந்து கொண்டிருக்கக் கூடிய நன்கு குளிர்ந்த தன்மையுடைய மழைமேகங்கள் அந்த மதிலின் மீது தங்கி களைப்பாறி உறங்கச் செல்லும் வழக்கமுடியதாக இருக்கும்.
- அவ்வாறு தங்கி எழுந்து செல்லுகின்றபோது அவை உரசுகின்ற காரணத்தினால் மின்னலையும் இடியினையும் உண்டாக்கிச் செல்லும்.

**திருப்புகழ் :**

- அருணகிரிநாதரைப் போலவே அவருடைய திருப்புகழ் பாடல்களைச் சத்தமாகப் பாடிக் கொண்டிருப்பார்கள்.
- சிலர் பாடுவதைக் கேட்டுக்கேட்டுப் பழகிய அடியவர்களின் கூட்டமும் அவர்களுடன் சேர்ந்து ஒரே விதமான இசையுடன் பாடத் தொடங்குவார்கள்.
- அந்த ஒலி, வானுலக தேவர்களின் காதுகளை அடைப்பதாகவும், பெரிய அண்டத்தினையே உடைக்கும் ஆற்றலுடையதாகவும் இருந்தது.



www.tnpscjob.com

உருகும் பக்தர்கள்

- கருணை வடிவான முருகனின் மீது பக்தி கொண்டு, வேலைத் துதித்து காவடியினைத் தங்களின் தோளில் சுமந்த நிலையிலும், மெழுகினைப்போல உள்ளம் உருக்கத்துடனும் இருப்பார்கள்.
- இவ்வாறு கழுகுமலையினை வந்தடைபவர்கள் முருகனை நினைப்பதே தமக்கு இன்பம் என்று நினைத்து முருகனையே தங்கள் அணிகலனாய் அணிந்து மகிழ்வார்கள்.

முடிவுரை

பண்டையக் காலம் முதல் பேணப்பட்டு வரும் ஒரு நாட்டார் வழக்கிலுள்ள இசை மரபே காவடிச்சிந்து எனலாம். முருகப்பெருமானின் வழிபாட்டிற்காகப் பால் முதலான பூசைப் பொருட்களை எடுத்து வருபவர்கள் ஆடல் பாடல்களுடன் ஆலயங்களை நோக்கிச் செல்வது வழக்கம். அப்படி வழிநடையாகச் செல்லும் பொழுது பயணக்களைப்பும், பாம்பு முதலான உயிரினங்களால் பாதிப்பு ஏற்படாத வகையிலே பாடப்படும் பாடல் வகை இக்காவடிச்சிந்து.

ஆகவே பாதசாரிகளின் வழிநடைப் பாடல் காவடிச்சிந்து என்ற கூற்று மெய்யாகிறது.

**3. வாடிவாசல் கதை வாயிலாக நீங்கள் உணர்ந்த கருத்துகளை விளக்குக.**

**முன்னுரை:**

ஒத்தைக்கு ஒத்தையாகக் கோதாவில் இறங்கும் மிருகத்துக்கும் மனுஷனுக்கும் நடக்கும் விவகாரத்துக்கு இரண்டிலொரு முடிவு காணும் இடம் வாடிவாசல். அந்த வாடிவாசலில் மனுஷ ரத்தம் சிந்தலாம்; காளை உடலில் ஒரு சொட்டு ரத்தம் காணக்கூடாது. எதன் கை ஓங்குதோ அதுதான் தூக்கும். மனுஷன் இதை விளையாட்டாக நினைத்தாலும் மிருகத்துக்கு அது விளையாட்டன்று. அதுதான் ஜல்லிக்கட்டு.

**காளையின் தோற்றம் :**

"வாடிபுரம் காளை", "கருப்புப் பிசாசு !"

தொழுவத்தில் அதன் அலங்காரங்கள் கலைக்கப்பட்டு உள்வாடிக்குக் கொணரப்பட்ட காளை ஒரு தடவை முக்காரமிட்டுவிட்டு ஒரு சிறுவன் பிடிகயிற்றுக்கு அடங்கிப் பரம சாதுவாக அடைப்புக்குள் ஆடி அசைந்து வந்தது. திட்டி வாசலில் காரி ராஜாங்கமாக நின்றது. அதன் புடைத்த பளீரிடும் கருந்திமில் நெஞ்சுயர மரக்கட்டை அடைப்புக்கு மேலாக எடுப்பாகத் துருத்திக் கொண்டு வாடிவாசலில் வந்து நின்றது. "ராஜாளி" மாதிரி வந்து நிக்குது பாரு!" நின்னுகுத்திக்



www.tnpscjob.com

காளைன்னா இதுதான். "இதையோ கிழக்கத்தியான் பிடிக்கப் போறான் !'' என்று கூட்டத்தில் பேசினார்கள். நின்ற காரி, வாடிசாலில் தன்மீது கை போடும்படி சவால்விட்ட மாதிரி இருந்தது. அதன் மூச்சு தரையில் பட்ட இடங்களில் மண் சிதறிப் பறந்தது. ஒருதரம் செறுக்கடித்தது. தரையை முகர்ந்து கொண்டிருந்தது.

**மாடு பிடி வீரன் பிச்சி**

பிச்சி இவன்தான் காரியெனும் காளையைப் பிடிக்கப்போகும் மாடுபிடி வீரன். வயிற்றை எக்கிக் கொடுத்து ஒரு முழு மூச்சு இழுத்தான். குனிந்து இரு கைகளையும் தரையில் தேய்த்து, பிடி வழுக்காமல் இருக்கச் சுரசுரப்பாக்கிக் கொண்டான். அப்பன் ஆசைக்கு மட்டுமன்றி உசிருக்கே உலை வைத்த காரி, அதன் கொம்பில் இன்னும் அப்பன் ரத்தம் வழிந்துகொண்டிருப்பது போன்ற பிரமை ஏற்பட, பிச்சிக்கு நேரெதிரில் காரி வந்து நிற்க, அதன் வால் பக்கமாக மருதன் நிற்க, அசையாமல் இருவரும் நின்றார்கள்.

**ஊர்ப்பேச்சு**

"கிழக்கத்தியான் காரியைப் பிடிக்கப் போறான்! '' "பய செத்தான் !''. "செல்லாயி வாடியிலே அவனுக்கு முடிவு போட்டிருக்கு!'' "குருத்துப் பையன், அநியாயமா...!'' "பட்டு உருமாவுக்கு ஆசைப்பட்டு உசிரை இந்தான்னு கொடுக்கிறானே பாவி!'' " ரெண்டு பவுனுத் தங்கம் கண்ணுல உறுத்துமுல்லே!'' ஆளுக்கொரு அபிப்ராயமாகக் கூட்டம் பரிமாறிக் கொண்டது.

**களத்தில் மோதும் காளைகள்**

மருதன் கைபடவும் காளை அவன் மீது பாய, சடக்கெனத் திரும்பியது. அது பிச்சியை விட்டுவிட்டு ஒரு சிறு கோண அளவுக்குத் திரும்பி இருக்கும். சில்வண்டு மாதிரி அட்டத்திலிருந்து பாய்ந்து அதன் திமிலில் இடது கையைப் போட்டு நெஞ்சோடு நெருக்கி அணைத்துக் கழுத்தோடு தன் உடலை ஒட்டிக்கொண்டு அதன் வலக்கொம்பில் கை போட்டான் பிச்சி. எதிர்பாராத இந்தப் பாய்ச்சல், காளைக்கு எடுத்த எடுப்பில் பிந்திவிட, ஆனாலும் அதனுடைய சுபாவமான மிருகக்குணம் மறுகணத்தில் சமாளிப்பைக் கொடுத்தது.

**கிழக்கத்தியான் வென்டெடுத்துட்டான்**

காளையின் தலை, கீழ்நோக்கி அழுத்தப்படவே காளை உத்தியை மாற்றி ஒரு எகிறு எகிறி நான்கு கால்களையும் உயரே தூக்கித் தவ்வியது. பிச்சியும் அதோடு உயரே போனான். மருதன் கத்தினான் "பிடியை உட்டிராதே, பிச்சி! '' ஆள் உயரத்துக்கு மேல் எழும்பிய காளை அந்தரத்தில் முதுகு குவிந்து தலை உள்ளடக்கி



www.tnpscjob.com

கால்களைத் தரையில் அடித்துக் கொண்டு கீழே இறங்கியது. அவன் நிலைக்கத் துவங்கும் முன்பே மறுபடியும் காளை எம்பித் தவ்வி விட்டது. மூன்று தவ்வுக்கும் நின்று விட்டான். கீழக்கத்தியான் வெண்டெடுத்துட்டான்.

**கிழவனின் பாராட்டு**

ஆர்ப்பரித்த வாடிபுரம் கூட்டத்துக்குள் நெக்கி வரமுடியாமல் திணறி, பிச்சியைப் பார்க்கத் தவித்துக் கொண்டிருந்த கிழவன், "இந்தா மவனே" என்று உணர்ச்சிப் பெருக்கால் பிச்சியைப் பார்த்து, 'உசிலனூர் அம்பிலியின் பேரைக் காப்பாத்திட்டேடா. நீ மனுசனுக்குப் பொறக்கல்லேடா, புலிக்குப் பொறந்த பய ! வேறெத்தைச் சொல்றது!" என்று உருமாப்பட்டையை நீட்ட, பிச்சியின் கண்களிலிருந்து ஆனந்தக் கண்ணீர் வழிந்து கொண்டிருந்தது.

**முடிவுரை**

'கொல்லேற்றுக் கோடஞ்சுவானை' என்ற கலித்தொகைப் பாடல் மூலம் 'ஏறுதழுவுதல்' பழந்தமிழரின் வீரவிளையாட்டு என்பது புலனாகிறது. சிறுவர்களும், பெண்களும் வாடிவாசல் காளையை தங்கள் குடும்பத்தின் உறுப்பினர்போல பாசங்காட்டி வளர்த்து வருகின்றனர்.

தமிழரின் வீரவிளையாட்டு ஜல்லிக்கட்டு என்பது மட்டுமல்ல, உணர்வோடு கலந்துவிட்ட வாழ்வியல் பண்பாடு என்பது 'வாடிவாசல்' கதை வாயிலாக உணர்ந்த உண்மையாகும்.

**இலக்கணக் குறிப்பு**

தாவி – வினையெச்சம்

மாதே – விளி

பிரிந்தோர் – வினையாலணையும் பெயர்

நன்று நன்று – அடுக்குத்தொடர்

அம்ம – அசைநிலை

உண்டல் – தொழிற்பெயர்

துஞ்சல் – தொழிற்பெயர்

முயலா – ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்

**பகுபத உறுப்பிலக்கணம்**

1. வருகின்ற – வா(வரு) + கின்று + அ
   வா – பகுதி; 'வரு' எனத் திரிந்தது விகாரம்; கின்று – நிகழ்கால இடைநிலை; அ – பெயரெச்ச விகுதி.



www.tnpscjob.com

2. பிரிந்தோர் – பிரி + த் (ந்) + த் + ஓர்

பிரி – பகுதி; த் – சந்தி; 'ந்' ஆனது விகாரம்; த் – இறந்தகால இடைநிலை; ஓர் – பலர்பால் வினைமுற்று விகுதி.

3. துஞ்சல் – துஞ்சு + அல்

துஞ்சு – பகுதி; அல் – தொழிற்பெயர் விகுதி.

4. முனிவிலர் – முனி + வ் + இல் + அர்

முனி – பகுதி; வ் – உடம்படு மெய், சந்தி; இல் – எதிர்மறை இடைநிலை; அர் – பலர்பால் வினைமுற்று விகுதி.

**புணர்ச்சி விதி**

1) திருப்புகழ் = திரு + புகழ்

இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் கசதப மிகும்

திருப்புகழ்

2) உயர்ந்தோங்கும் = உயர்ந்து + ஓங்கும்

உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும் = உயர்ந்த் + ஓங்கும்

உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே = உயர்ந்தோங்கும்

3) தண்டுடை = தண்டு + உடை

உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும் = தண்ட் + உடை

உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே = தண்டுடை



www.tnpscjob.com

## மொழியை ஆள்வோம்

**சான்றோர் சித்திரம்**



'தமிழ்ப் பதிப்புலகின் தலைமகன்' என்று போற்றப்படும் சி.வை. தாமோதரனார் இலங்கை, யாழ்ப்பாணத்தில் பிறந்தவர். தமிழ்நாட்டுக்கு வருகை புரிந்து, தம் இருபதாவது வயதிலேயே நீதிநெறி விளக்கம் என்னும் நூலை உரையுடன் பதிப்பித்து வெளியிட்டு, அறிஞர்களின் கவனத்தைக் கவர்ந்தார். 1868 ஆம் ஆண்டு, தொல்காப்பியச் சொல்லதிகாரத்திற்குச் சேனாவரையர் உரையையும் பின்னர்க் கலித்தொகை, இறையனார் அகப்பொருள், வீரசோழியம் உள்ளிட்ட பல நூல்களையும் செம்மையாகப் பதுப்பித்துப் புகழ்கொண்டார். அத்துடன் நில்லாது, கட்டளைக் கலித்துறை, நட்சத்திர மாலை,சூளாமணி வசனம் ஆகிய நூல்களையும் எழுதியுள்ளார். ஆறாம் வாசகப் புத்தகம் முதலிய பள்ளிப்பாட நூல்களையும் எழுதினார்.

அவருடைய தமிழ்ப்பணியைக் கண்ட பெர்சிவல் பாதிரியார், அவரைத் தாம் நடத்திய 'தினவர்த்தமானி' என்னும் இதழுக்கு ஆசிரியராக்கினார். அவ்வமயம் அவர் ஆங்கிலேயர் பலருக்கும் தமிழ் கற்றுத் தந்தார். அரசாங்கத்தாரால், சென்னை மாநிலக் கல்லூரியில் தமிழ்ப் பண்டிதராக நியமிக்கப்பட்டார். பிறகு, பி.எல். தேர்விலும் தேர்ச்சி பெற்று, கும்பகோணத்தில் வழக்கறிஞராகப் பணியாற்றி, 1884 ஆம் ஆண்டில் புதுக்கோட்டை உயர்நீதிமன்ற நீதிபதியாக நியமிக்கப்பட்டார். தாமோதரனார் எந்தப் பணி ஆற்றினாலும் தமது சொந்தப் பணியாகக் கருதிக் கடமையாற்றினார்.

1. மாநிலக்கல்லூரி – புணர்ச்சி விதி கூறுக.

மாநிலம் + கல்லூரி

**விதி :** மவ்வீறு ஒற்றொழிந்து உயிரீறு ஒப்பவும் வன்மைக்கினமாத் திரிபவும் ஆகும்.

2. ஆசிரியராக்கினார் –இதன் பகுதி

அ) ஆசு     ஆ) ஆசிரி     இ) ஆசிரியராக்கு     ஈ) ஆசி

**விடை :** இ) ஆசிரியராக்கு

3. சிறு சிறு தொடர்களாக மாற்றி எழுதுக.

தாமோதரனார் நீதிநெறி விளக்கம் என்ற நூலைப் பதிப்பித்து வெளியிட்டுக் கலித்தொகை, வீரசோழியம் உள்ளிட்ட நூல்களைப் பதிப்பித்துக் கட்டளைக் கலித்துறை, நட்சத்திர மாலை, சூளாமணி வசனம் ஆகிய நூல்களை எழுதியுள்ளார்.

**விடை :** தாமோதரனார், நீதிநெறி விளக்கம் என்ற நூலைப் பதிப்பித்து வெளியிட்டார்.

தாமோதரனார், கலித்தொகை, வீரசோழியம் உள்ளிட்ட நூல்களைப் பதிப்பித்தார்.



www.tnpscjob.com

தாமோதரனார், கட்டளைக் கலித்துறை, நட்சத்திர மாலை, சூளாமணி வசனம்

ஆகிய நூல்களை எழுதியுள்ளார்.

4. பெரும்புகழ் – இலக்கணக் குறிப்புத் தருக.

பெரும்புகழ் – பண்புத்தொகை

5. கல்லூரி, உயர்நீதிமன்றம், வரலாறு, பணி ஆகியவற்றிற்குப் பொருத்தமான ஆங்கிலச் சொற்களை எழுதுக.

கல்லூரி – College.

உயர்நீதிமன்றம் – High Court.

வரலாறு – History

பணி – Work / Job

வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக.

1. குமரனை பற்றி தெரிந்துக் கொள்ள வேண்டுமா? என் வீட்டிற்கு வருகைத் தாருங்கள். என் வீட்டிற்கு பக்கத்து வீடுதான் குமரனது வீடு.

விடை : குமரனைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டுமா? என் வீட்டிற்கு வருகை தாருங்கள். என் வீட்டிற்குப் பக்கத்து வீடுதான் குமரனது வீடு.

2. அனைத்துத்துறைகளிலும் ஆண்களை போலவேப் பெண்களும் அரசு பணியை பெறவேண்டும்

விடை : அனைத்துத்துறைகளிலும் ஆண்களைப் போலவே பெண்களும் அரசுப் பணியைப் பெறவேண்டும்

3. கல்வி கேள்விகளில் சிறந்தவர் நன்மைத் தீமைகளை புரிந்து பேசுவர்.

விடை : கல்வி கேள்விகளில் சிறந்தவர் நன்மை தீமைகளைப் புரிந்து பேசுவர்.

4. தமிழர் ஆற்று தண்ணீரை தேக்கி சேமித்து கால்வாய் வெட்டிப் பாசனம் செய்தனர்.

விடை : தமிழர் ஆற்றுத் தண்ணீரைத் தேக்கிச் சேமித்துக் கால்வாய் வெட்டிப் பாசனம் செய்தனர்.

5. சான்றோர் மிகுந்தப் பொறுப்புடன் சிறப்பான சேவைப் புரிந்து கொள்கை நிலைநாட்ட செய்தனர்.

விடை : சான்றோர் மிகுந்த பொறுப்புடன் சிறப்பான சேவை புரிந்து கொள்கை நிலைநாட்டச் செய்தனர்.



www.tnpscjob.com

தமிழாக்கம் தருக

1. Education is the most Powerful weapon, which you can use to change the world.

கல்வி ஓர் ஆற்றல் வாய்ந்த கருவி. அதைக் கொண்டு உலகை மாற்றலாம்.

2. Looking at beauty in the world is the first step of purifying the mind.

இயற்கை அழகை ரசிப்பது மனதைத் தூய்மைப்படுத்துவதற்கான முதல் படியாகும்.

3. Culture does not make people. People make culture.

கலாச்சாரம் மக்களை உருவாக்கவில்லை, மக்கள் கலாச்சாரத்தை உருவாக்குகிறார்கள்.

4. A people without the knowledge of their past history and culture is like a tree without roots.

மக்கள் கடந்த கால வரலாறு மற்றும் கலாச்சார அறிவில்லாமல் இருப்பது, வேரில்லாத மரத்திற்கு ஒப்பாகும்.

5. A nation's culture resides in the hearts and in the soul of its people

ஒரு நாட்டின் கலாச்சாரம் அந்த மக்களின் மனதிலும், ஆன்மாவிலும் இருக்கிறது.

**கீழ்க்காணும் செய்தியைப் படித்து அறிவிப்புப் பதாகை ஒன்றை உருவாக்குக.**

**தமிழ்ப்பண்பாட்டுக் கருத்தரங்கு**

| | |
|---|---|
| ஜனவரி -10, மதுரை. தமிழர்களின் பண்பாட்டுச் சிறப்புக் குறித்தும், பண்பாடு குறித்தான தேடலின் தேவை குறித்தும் சிறகுகள் சமூக அமைப்பின் சார்பாக ஒருநாள் கருத்தரங்கம் நடைபெற உள்ளது. | மதுரையை மையமாகக் கொண்டு இயங்கி வரும் சமூகநல அமைப்பான சிறகுகள் சார்பில் ஒருநாள் கருத்தரங்கம் தெப்பக்குளம் அருகில், பாரதி கலைக்கூட அரங்கில் ஜனவரி 13-ஆம் நாள் நடைபெற உள்ளது. இதில் தமிழர்களின் பண்பாட்டுச் சிறப்புக் குறித்தும், தொலைத்த பண்பாட்டை மீட்டெடுப்பது குறித்தும் "பண்பாடுகளால் வாழும் தமிழர்" என்னும் தலைப்பில் சமூக ஆர்வலரும் கவிஞருமான அன்பரசி பேசவிருக்கிறார். இதன் இறுதிப் பகுதியாகக் கலந்துரையாடலும் நடைபெற இருக்கிறது. விருப்பமுள்ள சமூக ஆர்வலர்கள், கல்லூரி மாணவர்கள், பள்ளி மாணவர்கள் கலந்து கொள்ளலாம் என்று சிறகுகள் அமைப்பின் ஒருங்கிணைப்பாளரான இனியன் தெரிவித்துள்ளார். |



www.tnpscjob.com

## அறிவிப்புப் பதாகை உருவாக்குதல்
## தமிழ்ப்பண்பாட்டுக் கருத்தரங்கு
## ஒருநாள் கருத்தரங்கு

நாள் : 13.1.2019

இடம் : மதுரை தெப்பக்குளம் அருகில் பாரதி கலைக்கூட அரங்கு

சிறப்புரை : கவிஞர் அன்பரசி (சமூக ஆர்வலர்)

தலைப்பு : பண்பாடுகளால் வாழும் தமிழர்

கூட்டத்தின் முடிவில் சமூக ஆர்வலர்கள், கல்லூரி மாணவர்கள், பள்ளி மாணவர்கள் ஆகியோருக்கான கலந்துரையாடலும் உண்டு.

தமிழ்ப்பண்பாட்டுச் சிறப்பையும், தொலைந்த பண்பாட்டை மீட்டெடுப்பது குறித்தும்.

அனைவரும் வருக !

இப்படிக்கு
இனியன்
ஒருங்கிணைப்பாளர்
சிறகுகள் அமைப்பு, மதுரை

### மொழியோடு விளையாடு

**கட்டுரை எழுதுக :**

"பண்பாட்டைப் பாதுகாப்போம்
பகுத்தறிவு போற்றுவோம்"

– என்னும் பொருள்பட ஒருபக்க அளவில் கட்டுரை எழுதுக.

**முன்னுரை :**

மனிதப்பிறவி மக்கதான பிறவி. அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது என்று பாடுவார் அமுதத் தமிழ்ப்பாட்டி ஔவையார். அத்தகைய மனிதப் பிறவி கொண்ட நாம் பண்பாட்டை – தமிழ்ப்பண்பாட்டை மதித்து வாழ வேண்டும். அதனை இக்கட்டுரையில் காண்போம்.

**தமிழ்ப் பண்பாடு :**

வீரமும் அன்பும் தமிழ்ப்பண்பாட்டின் இரு கண்கள்.தனக்கென வாழாமல் பிறர்க்கெனவே வாழ்வது மனிதப் பண்பாட்டின் மகத்தான வாழ்க்கை முறை. உலகையே பெறுவதாக இருந்தாலும் பொய் சொல்லக்கூடாது. உண்மையே பே வேண்டும். இது தமிழர் தனக்குத்தானே போட்டுக் கொண்ட வேலியாகும். ஏ எளிய மக்களுக்கு ஈதலும் அதனால் புகழ் உண்டாக வாழ்தலும் மனித வாழ்வி மகத்தான பணிகள்.



www.tnpscjob.com

**பகுத்தறிவின் பாதை :**

நன்மைகளையும் தீமைகளையும் பகுத்தறியும் திறன் வேண்டும். உண்மைகளை ஏற்றுக் கொள்ளவும், பொய்களைப் புறம் தள்ளவும் நமக்குப் பக்குவம் வேண்டும். அசலையும் நகலையும் உள்ளபடி அறிந்து கொள்ள வேண்டும்.

**நம் கடமை :**

பண்பாடுகளை அறிந்து நாம் கடைப்பிடிப்பது மட்டுமல்லாமல் நம் நாட்டு மக்கள் அனைவரையும் கடைப்பிடித்து வாழ வழி ஏற்படுத்தித் தரவேண்டும். அதற்கு பகுத்தறிவின் துணை வேண்டும்.

பண்பாட்டைப் பாதுகாப்போம் !

பகுத்தறிவைப் போற்றுவோம் !!

**சித்திரக்கவி**

**மாலைமாற்று**




தேரு வருதே நீ வா பாப்பா

பாப்பா வா நீ தேரு வருதே




வா விகடகவி

விகடகவி வா



www.tnpscjob.com

உடன்பட்டும் மறுத்தும் பேசுக.

அ) தொழில்நுட்பத்தால் விளைந்தது வளர்ச்சியே / வீழ்ச்சியே.

- **தொழில்நுட்பத்தால் விளைந்தது வளர்ச்சியே.**

1. நாட்டின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்குக் காரணம் தொழில்நுட்பமே ஆகும்.
2. நாட்டின் முதுகெலும்புத் தொழிலான விவசாயம் ஒருபோகம், இருபோகம், முப்போகம், நான்கு போகம் கண்டது தொழில்நுட்பத்தால்தான்.
3. நாட்டில் பிறப்பு விகிதம் அதிகரித்து இறப்பு விகிதம் குறைந்து இருப்பது தொழில்நுட்பத்தால் ஆகும்.
4. அயல்நாடுகள், அயல் வீடுகளைப்போல நெருங்கி வந்தது தொழில்நுட்பத்தால் தான்.
5. உலகமே ஒரு சந்தையாக மாறிப்போனது தொழில்நுட்பத்தால்தான்.
6. தொழில்நுட்பம் நமக்குக் கிடைத்த வரம்.

- **தொழில்நுட்பத்தால் விளைந்தது வீழ்ச்சியே**

1. தனி மனிதச் சுதந்திரம் பறிபோனது தொழில்நுட்பத்தால்தான்.
2. மதிக்கப்பட வேண்டிய பெண்மை இன்று மிதிக்கப்பட்டுக் கொண்டிருப்பது தொழில்நுட்பத் தொல்லையால்தான்.
3. கலப்படங்கள் பெருகி உண்மை புலப்படாமல் போனது தொழில்நுட்பத்தால் தான்.
4. சின்னச்சின்ன செய்திகள் பெரும் பூதங்களாக மாறிக்கொண்டிருப்பது தொழில்நுட்பத்தால்தான்.
5. தொழில்நுட்பம் மனிதர்களைக் கொல்லாமல் கொல்கிறது.
6. ஆதலால் தொழில்நுட்பம் நாம் செய்த பாவம்.

**ஆ) தற்போதைய உணவு முறை நல்வாழ்வை வளர்க்கிறது / குறைக்கிறது.**

- **தற்போதைய உணவு முறை நல்வாழ்வை வளர்க்கிறது**

1. நாம் ஊட்டச்சத்து மிகுந்த உணவுகளை அறிகிறோம். அதனை உண்கிறோம். அதனால் நல்வாழ்வு வாழ்கிறோம்.
2. தவிர்க்கவேண்டிய உணவுப் பொருள்களை நாம் தள்ளி வைத்து விடுகிறோம். எனவே நல்வாழ்வு நம் கைவசமாகும்.
3. உண்ணும் அளவறிந்து உண்ணுதல், உண்ணும் கால இடைவெளி அறிந்து உண்ணுதல் ஆகியவற்றால் நலவாழ்வு நமக்குச் சாத்தியமே.
4. ஆவியில் வேகவைக்கப்பட்ட உணவு வகைகள் நம் ஆவி போகாமல் பார்த்துக் கொள்ளும். எனவே நலவாழ்வு நாம் வாழலாம்.



www.tnpscjob.com

- **தற்போதைய உணவு முறை நல்வாழ்வைக் குறைக்கிறது**

1. பொட்டலப்படுத்தப்பட்ட உணவுப்பொருள்கள் நம் கட்டுடலைக் காணாமல் போய்விடச் செய்கிறது. எனவே நம் நல்வாழ்வு நம்மைவிட்டுப் போய்விடுகிறது.
2. விரைவு உணவு (Fast Food) உண்பது இப்போது விருப்பமான உணவாகிவிட்டது. அதன் கலப்படப் பொருள்கள் நம் நல்வாழ்வைக் காணாமல் போய்விடச் செய்கிறது.
3. சர்க்கரை நோயில் இந்தியா முதலிடத்தில் உள்ளது. தற்போதைய உணவுமுறை மட்டுமே இதற்குக் காரணமாகும்.
4. விருப்பமான உணவு என்பதால் வேண்டாத பொருள்களையெல்லாம் அளவிற்கு அதிகமாக உண்கிறோம். பின் நமக்கு எப்படி நல்வாழ்வு வசமாகும்.

**இ) தமிழர்கள் பண்பாட்டைத் தக்க வைத்திருக்கிறார்கள் / தள்ளி வைத்திருக்கிறார்கள்**

- **தமிழர்கள் பண்பாட்டைத் தக்க வைத்திருக்கிறார்கள்**

1. தமிழர்களின் பண்பாட்டின் தலைமைப் பண்பு விருந்தோம்பல். தமிழர்களின் வீடுகளில் விருந்தோம்பல் தவறாமல் நடக்கிறது. பண்பாட்டைத் தக்க வைத்திருக்கிறார்கள்.
2. முன்னோர்களை மதிப்பது, முன்னோர்களின் சொல்லைக் கேட்டு நடப்பது தமிழர்களின் தலைமைக் குணம். பண்பாட்டைத் தக்க வைக்கிறார்கள் தமிழர்கள்.
3. பண்பாட்டு விழாக்களான தைப்பொங்கல், கார்த்திகை தீபம் போன்ற விழாக்கள் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. தமிழ்ப் பாண்பாட்டின் தொடர்ச்சி தானே இது.

- **தமிழர்கள் பண்பாட்டைத் தள்ளி வைத்திருக்கிறார்கள்.**

1. முதியோர் இல்லங்கள் முளைத்துக் கொண்டே இருக்கிறது. இது பண்பாட்டைக் கைக்கொள்வதா?
2. சீனர்களால் கண்டுபிடிக்கப்பட்ட பட்டாசு, விலங்குகளை விரட்டப் பயன்பட்டது. அதை நாம் வெடிப்பதால், காசு விரயமாவதோடு, காற்றும் மாசுபடுகிறது. எங்கே இருக்கிறது பண்பாடு.
3. வீட்டிற்கு வந்தவர்களை வாசல்வரை வந்து வழியனுப்பியது நம் பண்பாடு. இன்று வருகிறவர்களிடம் போகும்போது வாசற்கதவை மூடிவிட்டுச் செல்லுங்கள் என்று கூறுவது பண்பாட்டுத் தொடர்பா? பண்பாட்டின் பாதை அடைக்கப்பட்டுவிட்டது.



www.tnpscjob.com

| வேலைகள் | ஆண் | பெண் | இருவரும் | ஆண்/ பெண் ஏதேனும் ஒன்றை மட்டும் தேர்வு செய்தால் அதற்கான காரணத்தை எழுதுக. |
|---|---|---|---|---|
| பூ கட்டுவது | ✓ | ✓ | ✓ | |
| கணினியில் பணி | ✓ | ✓ | ✓ | |
| காவலர் | ✓ | ✓ | ✓ | |
| சமைப்பது | ✓ | ✓ | ✓ | |
| மருத்துவம் | ✓ | ✓ | ✓ | |
| வழக்கறிஞர் | ✓ | ✓ | ✓ | |
| வீட்டின் தூய்மை | ✓ | ✓ | ✓ | |
| தொழில் முனைவோர் | ✓ | – | – | இரவு பகல் பாராமல் குடும்ப நினைவு இல்லாமல் தூரந் தொலைவு பாராமல் பணியாற்றாதது. |

**திருக்குறள் :**

1. படத்துக்குப் பொருத்தமான திருக்குறளைக் கண்டுபிடிக்க.



அ) வேண்டிய வேண்டியாங்கு எய்தலால் செய்தவம்
ஈண்டு முயலப் படும்.

ஆ) அளவறிந்து வாழாதான் வாழ்க்கை உளபோல
இல்லாகித் தோன்றாக் கெடும்.



www.tnpscjob.com

இ) நிலையின் திரியாது அடங்கியான் தோற்றம்
மலையினும் மாணப் பெரிது.

**படத்துக்குப் பொருத்தமான திருக்குறள் :**

இ) நிலையின் திரியாது அடங்கியான் தோற்றம்
மலையினும் மாணப் பெரிது.

2. துன்பப்படுபவர் ..............

அ) தீக்காயம் பட்டவர் ஆ) தீயினால் சுட்டவர்

இ) பொருளைக் காக்காதவர் ஈ) நாவைக் காக்காதவர்

**விடை :** ஈ) நாவைக் காக்காதவர்

3. பின்வரும் நாலடியார் பாடலின் பொருளுக்குப் பொருத்தமான திருக்குறளைக் கண்டறிக.

மலைமிசைத் தோன்றும் மதியம்போல் யானைத்
தலைமிசைக் கொண்ட குடையர் – நிலமிசைத்
துஞ்சினார் என்றெடுத்துத் தூற்றப்பட டாரல்லால்
எஞ்சினார் இவ்வுலகத் தில்.

அ) ஒன்றா உலகத்து உயர்ந்த புகழல்லால்
பொன்றாது நிற்பதொன்று இல்.

ஆ) நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்துஇவ் வுலகு.

இ) அளவறிந்து வாழாதான் வாழ்க்கை உளபோல
இல்லாகித் தோன்றாக் கெடும்.

**விடை :** ஆ) நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்துஇவ் வுலகு.

4. கீழ்க்காணும் புதுக்கவிதைக்குப் பொருந்தும் திருக்குறளைத் தேர்ந்தெடுக்க.

பூக்களுக்கும் முட்களுக்கும் இடையில்
புழங்குகிறது யோசனை
பாசத்துக்கும் நியாயத்துக்கும் நடுவில்
நசுங்குகிறது அறம்
இன்பத்துக்கும் பேராசைக்கும் நடக்கும்
போராட்டத்தில் வெடிக்கின்றன
வெளியில் குண்டுகளும்
வீட்டில் சண்டைகளும் ...........
ஆசை அறுத்தல் எளிதல்ல !
முயன்று பார்க்கலாம் வா !



www.tnpscjob.com

அ) அருவினை யென்ப உளவோ கருவியான்
காலம் அறிந்து செயின்.

ஆ) பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டம்
சால மிகுத்துப் பெயின்.

இ) இன்பம் இடையறாது ஈண்டும் அவாவென்னும்
துன்பத்துள் துன்பம் கெடின்.

**விடை :** இ) இன்பம் இடையறாது ஈண்டும் அவாவென்னும்
துன்பத்துள் துன்பம் கெடின்.

5. ஒப்புரவு என்பதன் பொருள் ..................

அ) அடக்கமுடையது
ஆ) பண்புடையது
இ) ஊருக்கு உதவுவது
ஈ) செல்வமுடையது

**விடை :** இ) ஊருக்கு உதவுவது

6. பொருத்துக

| | |
|---|---|
| அ) வாழ்பவன் | i) காத்திருப்பவன் |
| ஆ) வாழாதவன் | ii) மருந்தாகும் மரமானவன் |
| இ) தோன்றுபவன் | iii) ஒத்ததறிபவன் |
| ஈ) வெல்ல நினைப்பவன் | iv) புகழ் தரும் பண்புடையவன் |
| உ) பெரும் பண்புடையவன் | v) இசையொழித்தவன் |
| | vi) வீழ்பவன் |

**விடை :**

| | |
|---|---|
| அ) வாழ்பவன் | i) ஒத்ததறிபவன் |
| ஆ) வாழாதவன் | ii) இசையொழித்தவன் |
| இ) தோன்றுபவன் | iii) புகழ் தரும் பண்புடையவன் |
| ஈ) வெல்ல நினைப்பவன் | iv) காத்திருப்பவன் |
| உ) பெரும் பண்புடையவன் | vi) மருந்தாகும் மரமானவன் |

7. **இலக்கணக் குறிப்புத் தருக.**

அ) சுடச்சுடரும் – வினையெச்சம்

ஆ) சுடச்சுடரும் பொன் – செய்யும் என்னும் வாய்பாட்டுப் பெயரெச்சம்

இ) சுடச்சுட – அடுக்குத்தொடர்



www.tnpscjob.com

8. விரைந்து கெடுபவன் யார்?

அ) பிறருடன் ஒத்துப் போனவன், தன் வலிமை அறிந்தவன், தன்னை உயர்வாக நினைப்பவன்.

ஆ) பிறருடன் ஒத்துப் போகாதவன், தன் வலிமை அறியாதவன், தன்னை உயர்வாக நினைக்காதவன்.

இ) பிறருடன் ஒத்துப் போனவன், தன் வலிமை அறிந்தவன், தன்னை உயர்வாக நினக்காதவன்.

ஈ) பிறருடன் ஒத்துப் போகாதவன், தன் வலிமை அறியாதவன், தன்னை உயர்வாக நினைப்பவன்.

**விடை :** ஈ) பிறருடன் ஒத்துப் போகாதவன், தன் வலிமை அறியாதவன், தன்னை உயர்வாக நினைப்பவன்.

9. வேளாண்மை செய்தற் பொருட்டு – பொருள் கூறுக.

பிறருக்கு உதவி செய்வதற்கே என்பது பொருள்.

10. பற்று நீங்கியவனுக்கு உண்டாவது – பற்றற்றவனைப் பற்றுவதால் உண்டாவது.

அ) பற்றுகள் பெருகும் – பொருள்களின் இன்பம் பெருகும்.

ஆ) பற்றுகள் அகலும் – பொருள்களின் துன்பம் அகலும்.

இ) பொருள்களின் துன்பம் அகலும் – பற்றுகள் அகலும்.

ஈ) பொருள்களின் இன்பம் பெருகும் – பற்றுகள் பெருகும்.

**விடை :** இ) பொருள்களின் துன்பம் அகலும் – பற்றுகள் அகலும்.

11. அருவினை– புணர்ச்சி விதி கூறுக.

அருமை + வினை

அரு + வினை

விதி : ஈறுபோதல்



www.tnpscjob.com

குறுவினா

**1. தீயினால் சுட்டதைப் புண் என்றும் நாவினால் சுட்டதை வடு என்றும் வள்ளுவ கூறுவது ஏன்?**

- தீயினால் சுட்ட புண்ணால் வடு உண்டானாலும் உள்ளே ஆறிவிடும்.
- நாவினால் சுட்ட புண்ணால் உடலின் புறத்தே வடு உண்டாகாவிட்டாலும் உள்ளே ஆறாது.
- ஆகவே, தீயினால் சுட்டதைப் புண் என்றும் நாவினால் சுட்டதை வடு என்றும் வள்ளுவம் கூறுகின்றது.

2. **"மருந்தாகித் தப்பா மரத்தற்றால் செல்வம்**
**பெருந்தகை யான்கண் படின்"**
**– இக்குறட்பாவின் உவமையைப் பொருளோடு பொருத்துக.**

மருந்தாகித் தப்பா மரத்தற்றால் செல்வம்
பெருந்தகை யான்கண் படின்.

**உவமை** : தன் எல்லா உறுப்புகளையும் மருந்தாகத் தரும் மரம்.

**உவமேயம்** : பிறர்க்கு உதவி செய்யும் பெருந்தன்மை உள்ளவனிடத்தில் உள்ள செல்வம்.

**பொருத்தம் :**

பெருந்தகையானுக்கு மருந்து மரமும், பெருந்தகையான் செல்வம் பயன்படுதலுக்கு மருந்து மரம் பயன்படுதலும் உவமைகளாம்.

**3. எதற்கு முன் நல்ல செயல்களை விரைந்து செய்ய வேண்டும் என்று குறள் கூறுகிறது?**

நாக்கு அடைத்து, விக்கல் வந்து, உயிர்க்கு இறுதி வரும்முன், நல்ல செயல்களை விரைந்து செய்ய வேண்டும்.

"நாச்செற்று விக்குள்மேல் வாராமுன் நல்வினை
மேற்சென்ற செய்யப் படும்."

**4. சீர்தூக்கி ஆராய வேண்டிய ஆற்றல்கள் யாவை?**

செயலின் வலிமையும், தன் வலிமையும், பகைவனின் வலிமை, தனக்கும் பகைவர்க்கும் துணையாவார் வலிமை என இவற்றை நன்கு ஆராய்ந்த அச்செயலைச் செய்ய வேண்டும்.



www.tnpscjob.com

"வினைவலியும் தன்வலியும் மாற்றான் வலியும்
துணைவலியும் தூக்கிச் செயல்"

**5. மருந்து எது? மருந்து மரமாக இருப்பவர் யார்?**

மருந்து மரமாக இருப்பவர், பிறர்க்கு உதவி செய்யும் பெருந்தகையாளன்.
மருந்து அவனிடம் உள்ள செல்வம்.

**சிறுவினா:**

1. **"தீயினால் சுட்ட புண் உள்ளாறும் ஆறாதே
நாவினால் சுட்ட வடு" – இக்குறட்பாவில் பயின்று வரும் அணியை விளக்குக.**

தீயினால் சுட்ட புண் உள்ளாறும் ஆறாதே
நாவினால் சுட்ட வடு.
– இக்குறட்பாவில் வேற்றுமையணி பயின்று வந்துள்ளது.

**அணி விளக்கம் :**

முதலில் இரு பொருள்களுக்கும் ஒப்புமை கூறி, பின்னர் அவற்றை வேறுபடுத்தி ஒன்றை விட ஒன்று உயர்ந்ததாய்க் கூறுதல் வேற்றுமையணி ஆகும்.

**சான்று விளக்கம்:**

நெருப்பால் சுட்ட புண் விரைந்து ஆறும் ; நாவினால் சுட்ட வடு ஆறாது என்பது இப்பாட்டின் பொருள். முதலில், தீயினால் சுடுதலும் நாவினால் சுடுதலும் ஒப்புமை தோன்றக் கூறப்பட்டன. பின்னர்த் தீயினால் சுட்ட புண் ஆறும், நாவினால் சுட்டது ஆறாது என வேறுபடுத்திக் கூறப்பட்டமையால் இது வேற்றுமையணி ஆகும்.

**2. புகழுக்குரிய பண்புகளாக நீவிர் கருதுவன யாவை? புகழின் பெருமையைப் பொதுமறை வழி நின்று கூறுக.**

**புகழுக்குரிய பண்புகளாக நான் கருதுவன:**

அன்பு, ஈகை, ஒழுக்கம், பொறுமை, அடக்கம், இரக்கம், வாய்மை ஆகும்.

- இணையற்ற உயர்ந்த புகழைப் போல உலகத்தில் ஒப்பற்ற ஒன்றாக நிலைத்து நிற்பது வேறொன்றும் இல்லை.
- தோன்றினால் புகழ்தரும் பண்புகளுடன் தோன்றவேண்டும். இல்லையெனில் இவ்வுலகில் தோன்றாமல் இருப்பதே நல்லது.
- தம்மீது பழியில்லாமல் புகழ் உடையவராய் வாழ்பவரையே உலகம் போற்றும். அவர்களே உயிர்வாழ்பவர்கள். புகழ் இல்லாமல் வாழ்பவர்கள் உலகில் உயிர் வாழ்ந்தாலும் அவர்கள் நடைபிணமாகவே கருதப்படுவர்.



www.tnpscjob.com

3. நாச்செற்று விக்குள்மேல் வாராமுன் நல்வினை
மேற்சென்று செய்யப் படும் – இக்குறட்பாவை அலகிட்டு வாய்பாடு கூறுக.

| சீர் | அசை | வாய்பாடு | |
|---|---|---|---|
| நாச்/செற்/று | நேர் நேர் நேர் | தேமாங்காய் | |
| விக்/குள்/மேல் | நேர் நேர் நேர் | தேமாங்காய் | இக்குறள் 'மலர்' |
| வா/ரா/முன் | நேர் நேர் நேர் | தேமாங்காய் | என்னும் |
| நல்/வினை | நேர் நிரை | கூவிளம் | வாய்பாட்டால் |
| மேற்/சென்/று | நேர் நேர் நேர் | தேமாங்காய் | முடிந்துள்ளது |
| செய்/யப் | நேர் நேர் | தேமா | |
| படும் | நிரை | மலர் | |

4. சொற்பொருள் பின்வருநிலையணியை விளக்கிக் கீழ்க்காணும் குறளுக்கு இவ்வணியைப் பொருத்தி எழுதுக.

''வினைவலியும் தன்வலியும் மாற்றான் வலியும்
துணைவலியும் தூக்கிச் செயல்''

அணி விளக்கம்

வந்த சொல்லே மீண்டும் மீண்டும் வந்து, தந்த பொருளையே மீண்டும் தருமாயின் அது சொற்பொருள் பின்வருநிலையணி எனப்படும்.

சான்று விளக்கம் :

செயலின் வலிமையும், தன் வலிமையும், பகைவனின் வலிமையும், துணையாளர் வலிமையும் சீர்தூக்கிச் செயல்படுக.

பொருத்தம்

இக்குறட்பாவில் 'வலி' என்னும் சொல் மீண்டும் மீண்டும் வந்து 'வலிமை' என்ற ஒரே பொருளைத் தருவதால் இது சொற்பொருள் பின்வருநிலையணி ஆயிற்று.

5. விரும்பியதை அடைவது எப்படி? குறள் வழி விளக்குக.

1) செய்யும் வகையையும், தக்க காலத்தையும் அறிந்து செய்வானானால் அவனால் முடிக்க முடியாத செயல் என்பது எதுவும் இல்லை.

2) ஒருவன் தக்க காலமறிந்து, ஏற்ற இடம் அறிந்து ஒரு செயலைச் செய்வானாயின் அவன் இவ்வுலகத்தையே ஆளக்கருதினாலும் அது கைகூடும்.

3) உலகம் முழுவதையும் தம் கைக்கொள்ளக் கருதுபவர் வலிமை உடையவராயினும் அவ்வலிமையைப் பெரிதாகக் கருதாமல் தக்க காலத்தையே எதிர்பார்த்துக் காத்திருப்பர்.



www.tnpscjob.com

4) கிடைத்தற்கரிய காலம் கிடைத்தவிடத்து அதைப் பயன்படுத்திச் செய்தற்கரிய செயல்களைச் செய்தல் வேண்டும்.

**நெடுவினா**

**1. கொடையில் சிறந்து விளங்க வள்ளுவம் கூறும் வழிகளை ஒப்புரவறிதல் அதிகாரம் வழி நிறுவுக.**

1. ஒப்புரவாளன் ஒருவன் முயற்சி செய்து ஈட்டிய பொருள் அனைத்தும் தகுதி உடையவருக்கு உதவி செய்வதற்கேயாம்.

"தாளாற்றித் தந்த பொருளெல்லாம் தக்கார்க்கு
வேளாண்மை செய்தல் பொருட்டு".

2. உலக நடையறிந்து உதவும் நற்பண்புடையவன் ஒருவனே உயிர் வாழ்பவன்; மற்றவன் இறந்தவனுக்கு ஒப்பானவன் ஆவான்.

"ஒத்த தறிவான் உயிர்வாழ்வான் மற்றையான்
செத்தாருள் வைக்கப் படும்".

3. ஒப்புரவாகிய பெருந்தன்மை உடையவனிடத்தில் செல்வம் சேர்ந்தால், அது எல்லா உறுப்புக்களும் மருந்தாகிப் பயன்படத் தவறாத மரத்தைப் போன்றது.

"மருந்தாகித் தப்பா மரத்தற்றால் செல்வம்
பெருந்தகை யான்கண் படின்".

**2. அடக்கமுடைமை ஒருவரை வாழ்வினில் உயர்த்தும் –இக்கூற்றை முப்பால் வழி விளக்குக.**

1. எத்தகைய சூழ்நிலையிலும் அறநெறியிலிருந்து மாறுபடாமல் அடக்கம் உடையவனாய் வாழ்பவனது உயர்வு மலையின் உயர்வைவிட மிகவும் பெரியதாகும்.

"நிலையின் திரியாது அடங்கியான் தோற்றம்
மலையினும் மாணப் பெரிது".

2. ஒருவர் எவற்றை அடக்காவிட்டாலும் நாக்கு ஒன்றையாவது தீயசொற்கள் பயிலாமல் அடக்கியாள வேண்டும். அவ்வாறு அடக்கியாளாவிட்டால் பேசும்போது சொற்குற்றத்திற்கு ஆளாகிப் பெரிதும் துன்பப்படுவர்.

"யாகாவார் ஆயினும் நாகாக்க காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு".



www.tnpscjob.com

3. தீயினால் சுட்ட புண் புறத்தே வடு இருந்தாலும் உள்ளே ஆறிவிடும். ஆனால் நாவினால் சுட்ட வடுவானது ஒருபோதும் மறையாது.

"தீயினால் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே
நாவினால் சுட்ட வடு".



www.tnpscjob.com

## கூடுதல் வினாக்கள்

### ஒரு மதிப்பெண் வினாக்கள்

1. மனித சமூகத்தின் ஆதி நிலம் எது?
மலை
2. மலை, குன்றுகளின் பெயர்கள் குறித்த ஆய்வை எக்கலைச்சொல்லால் அழைப்பர்?
OROLOGY
3. திராவிடர்களை 'மலைநில மனிதர்கள்' என்று அழைத்தவர் யார்?
கமில் சுவலபில்
4. "சேயோன் மேய மைவரை உலகம்" என்று உரைக்கும் நூல் எது?
தொல்காப்பியம்
5. "விண்பொரு நெடுவரை குறிஞ்சிக்கிழவ" என்று கூறும் நூல் எது?
திருமுருகாற்றுப்படை
6. 'மலயத்துவஜ' என்று அழைக்கப்பட்டவன் யார்?
பாண்டிய மன்னன்
7. 'குன்று' என்பதன் பொருள் யாது?
உயரம் குறைவானது.
8. கோடு, மலை. சிகரம், விளிம்பு, கரை, எல்லை, நுனி போன்ற பொருள்களில் பயன்படுத்தப்படும் சொல் எது?
வரை
9. அன்புள்ள அம்மா,சிறகுக்குள் வானம் என்ற நூல்களின் ஆசிரியர் யார்?
ஆர். பாலகிருஷ்ணன்
10. வழி நடைப்பாடல் வகைகளிலிருந்து தோன்றிய பாவடிவம் எது?
காவடிச்சிந்து
11. காவடிச்சிந்து பாடியவர் யார்?
சென்னிகுளம் அண்ணாமலையார்
12. காவடிச்சிந்தின் மெட்டுகள் யாரால் அமைக்கப்பட்டன?
அண்ணாமலையார்
13. "காவடிச்சிந்தின் தந்தை" என்றழைக்கப்பட்டவர் யார்?
அண்ணாமலையார்
14. ஊற்றுமலை இருதயாலய மருதப்பத் தேவரின் அரசவைப் புலவராக இருந்தவர் யார்?
அண்ணாமலையார்



www.tnpscjob.com

15. உரையாசிரியர்கள் பலராலும் அதிகமாக மேற்கோள் காட்டப்பட்ட
எட்டுத்தொகை நூல் எது?
குறுந்தொகை

16. தொகை நூலில் முதலில் தொகுக்கப்பட்ட நூல் எது?
குறுந்தொகை

17. குறுந்தொகையைத் தொகுத்தவர் யார்?
பூரிக்கோ

18. குறுந்தொகையின் கடவுள் வாழ்த்துப் பாடியவர் யார்?
பெருந்தேவனார்

19. குறுந்தொகைப் பாடல்களின் எண்ணிக்கை யாது?
401

20. ''தலைவன் வரைவை நமர் ஏற்றுக்கொண்டனர்; நீ கவலை ஒழிவாயாக'' என்று
யார், யாரிடம் கூறியது?
தோழி, தலைவனிடம் கூறினாள்.

21. தமிழரின் வாழ்வியல் கருவூலம் எது?
புறநானூறு

22. மக்களுக்கு நலம் செய்யும் வாழ்வியல் நெறிகளை எடுத்துக்கூறும் துறை எது?
பொருண்மொழிக்காஞ்சித் துறை.

23. 1894இல் முதன் முதலில் புறநானூற்றை பதிப்பித்தவர் யார்?
உ.வே.சா

24. புறநானூற்றுப் பாடல்கள் சிலவற்றை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர் யார்?
ஜி.யு.போப்

25. ''உண்டால் அம்ம இவ்வுலகம்'' என்னும் பாடல் இடம்பெற்ற நூல் எது?
புறநானூறு

26. வாடிவாசல் குறும்புதினத்தின் ஆசிரியர் யார்?
சி.சு. செல்லப்பா

27. 'எழுத்து' இதழினைத் தொடங்கி நவீன தமிழ் இலக்கிய மறுமலர்ச்சிக்கு
வித்திட்டவர் யார்?
சி.சு. செல்லப்பா

28. 'ஏறுதழுவல்' பற்றிக் குறிப்பிடும் எட்டுத்தொகை நூல் எது?
கலித்தொகை

29. வாடிவாசலில் 'காரி' என்ற காளையை அடக்கியவன் யார்?
பிச்சி



www.tnpscjob.com

30. இலக்கண வகையில் சொற்கள் எத்தனை வகைப்படும்?
நான்கு
31. பகுபத உறுப்புகள் எத்தனை?
ஆறு
32. பகுபதத்தில் அடிப்படை உறுப்புகள் எவை?
பகுதி, விகுதி
33. பகுபதத்தில் 'முதனிலை' என்றழைக்கப்படுவது எது?
பகுதி
34. விகுதி பெறாத ஏவல் வினையாக வருவது எது?
பகுதி
35. திணை, பால், எண், இடம் ஆகியவற்றை வெளிப்படுத்தும் உறுப்பு எது?
விகுதி
36. பகுதிக்கும் விகுதிக்கும் இடையில் தோன்றும் உறுப்பு எது?
இடைநிலை
37. இறந்த கால இடைநிலைகள் யாவை?
த், ட், ற், இன்
38. நிகழ்கால இடைநிலைகள் யாவை?
கிறு, கின்று, ஆநின்று
39. எதிர்கால இடைநிலைகளாக வருபவை எவை?
ப், வ்
40. எதிர்மறை இடைநிலைகள் எவை?
ஆ, ஆல், இல்
41. சந்தி என்பதற்குத் தமிழில் என்ன பெயர்?
புணர்ச்சி
42. பகுதிக்கும் இடைநிலைக்கும் இடையில் வரும் உறுப்பு எது?
சந்தி
43. சந்தியாக வரும் உடம்படுமெய்கள் எவை?
ய், வ்
44. பகுபத உறுப்புகளில் அடங்காமல் ஏழாவது உறுப்பாக வரும் புறத்துறுப்பு எது?
எழுத்துப்பேறு
45. சந்தி வரவேண்டிய இடத்தில் உயிர்மெய் எழுத்து வருவதற்கு என்ன பெயர்?
சாரியை
46. அன் என்பது விகுதியாக வரும்போது சாரியையாக வருவது எது?
அன்



www.tnpscjob.com

**குறுவினா – கூடுதல் வினா**

**1. 'வரை' என்ற சொல் தமிழ் மொழியில் எப்பொருள்களில் எடுத்தாளப்பட்டுள்ளது**

- கோடு
- மலை
- சிகரம்
- விளிம்பு
- கரை
- எல்லை
- நுனி

**2. 'கோடு' என்ற தமிழ்ச் சொல்லுக்குரிய பொருள்களைக் கூறுக.**

- மலையுச்சி
- சிகரம்
- மலை
- வல்லரண்
- கோட்டை

**3. அண்ணாமலையார் எழுதிய வேறு நூல்கள் எவை?**

- வீரைத் தலபுராணம்
- வீரை நவநீத கிருஷ்ணசாமி பதிகம்
- சங்கரன் கோவில் திரிபந்தாதி
- கருவை மும்மணிக்கோவை
- கோமதி அந்தாதி

**4. பொதுவியல் திணை என்றால் என்ன?**

வெட்சி முதல் பாடாண் இறுதியாகத் தொல்காப்பியர் கூறும் புறத்திணைகளுள் கூறப்படாத செய்திகளையும், அந்தத் திணைகளுக்குப் பொதுவான செய்திகளையும் கூறுவது பொதுவியல் திணையாகும்.

**5. பொருண்மொழிக்காஞ்சித்துறை என்றால் என்ன?**

முனிவரும் அவரைப் போன்றோரும் இம்மை மறுமைகளில் உயிருக்கு உறுதியைத் தருவது இன்னது என்று தாம் தெளிவாய் அறிந்த பொருளைச் சொல்வது பொருண்மொழிக்காஞ்சி என்னும் துறையாகும்.

6. உண்டால் அம்ம இவ்வுலகம்
தமக்கென முயலா நோன்தாள்
பிறர்க்கென முயலுநர் உண்மை யானே
– என்னும் புறநானூற்றுப் பாடலடிக்கு இணையான திருக்குறளைக் கூறு.



www.tnpscjob.com

**திருக்குறள்**

பண்புடையார்ப் பட்டுண்டு உலகம் அதுஇன்றேல்
மண்புக்கு மாய்வது மன்.

**7. பகுபதங்கள் என்றால் என்ன?**

இலக்கண வகையில் அமைந்த சொற்கள் நான்கனுள், பெயர்ச்சொல்லும் வினைச்சொல்லும் பிரிக்கப்படும் நிலையில் இருப்பதனை பகுபதங்கள் என்பர்.

**8. பகுபத உறுப்புகள் என்றால் என்ன?**

- ஒவ்வொரு சொல்லிலும் உள்ள உறுப்புகள் எவையெவை என்று பிரித்து எழுதுவர்.
- இவ்வாறு பிரித்து எழுதும் உறுப்புகள் பகுபத உறுப்புகள் எனப்படும்.

**9. எதிர்மறை இடைநிலை என்றால் என்ன?**

எதிர்மறை வினைச்சொற்களில் பகுதிக்கும் விகுதிக்கும் இடையில் வந்து எதிர்மறையை உணர்த்தும் இடைநிலை எதிர்மறை இடைநிலை ஆகும்.

**சான்று :** ஓடாது = ஓடு + ஆ + து

காணலன் = காண் + அல் + அன்

எழுதிலன் = எழுது + இல் + அன்

எதிர்மறை இடைநிலைகள் = ஆ, அல், இல்

**சிறுவினா – கூடுதல் வினாக்கள்**

**1. பிரிந்தோரைச் சேர்ப்போர் இருந்தாரோ என்று தலைவி தோழியிடம் வினவக் காரணம்யாது?**

- ஊர் மக்களின் அவையில் முன்பு பலமுறை தலைவனின் பரிசப் பொருட்கள் திருப்பி அனுப்பப்பட்டன.
- இன்றோ தலைப்பாகை அணிந்து கையில் தண்டுடன் இருக்கும் முதியவர்கள் மூலமாகத் தலைவன் போதுமென்று சொல்லத்தக்க அளவு பரிசப் பொருட்களைக் கொண்டு வந்து அவைமுன் வைத்துள்ளான்.
- அவையில் இருந்த தலைவியின் உறவினரும் கண்டு 'நன்று நன்று' என்று கூறி மகிழ்ந்தனர்.
- இக்காட்சியைக் கண்ட தலைவி, ''அடி தோழியே ! நம்முடைய ஊரில் முன்பெல்லாம் பரிசத்தொகை போதவில்லை என்பதற்காகப் பிரித்து விடப்பட்ட தலைவன் தலைவியரைப் போதிய பரிசத்தொகை கிடைத்தவுடன் சேர்த்து வைப்போர் இருந்தனரா?'' என்று வினவுகின்றாள்.



www.tnpscjob.com

**2. புறநானூறு பற்றி நீ அறிந்த செய்திகளை எடுத்துரைக்க.**

- புறம் + நான்கு + நூறு = புறநானூறு.
- இது எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று.
- புறம் எனவும், புறப்பாட்டு எனவும் வழங்கப்படும்.
- நானூறு புறத்திணைப் பாடல்களைக் கொண்டது.
- இந்நூலுக்குக் கடவுள் வாழ்த்துப் பாடலைப் பாடியவர் பாரதம் பாடிய பெருந்தேவனார்.
- இந்நூலைத் தொகுத்தவர், தொகுப்பித்தவர் பெயர்கள் கிடைக்கவில்லை.
- பல்வேறு காலங்களில் வாழ்ந்த பல்வேறு புலவர்கள் பாடிய பாடல்களின் தொகுப்பு.
- இந்நூல் 11 திணைகளையும், 65 துறைகளையும் கொண்டுள்ளது.
- சங்க கால மக்களின் வாழ்க்கையை அறிய இந்நூல் உதவுகிறது.
- காலம் : கி.பி. 2–ம் நூற்றாண்டு.

**3. இவ்வுலகம் இன்றும் இயங்கிக் கொண்டிருப்பதற்கு கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி (அல்லது) புறநானூறு கூறும் காரணங்களை விவரி.**

- தமக்காக உழைக்காமல் பிறர்க்காகப் பெரிய முயற்சியுடன் உழைப்பவர்கள், இந்திரனுக்குரிய அமிழ்தம் கிடைத்தாலும் அஃது இனிமையானது என்பதற்காகத் தனித்து உண்ண மாட்டார்கள்.
- யாரையும் வெறுக்க மாட்டார்கள் .
- பிறர் அஞ்சுவதற்குத் தாமும் அஞ்சுவார்கள்.
- சோம்பலின்றிச் செயல்படுவார்கள்.
- புகழ்வரும் என்றால் தம் உயிரையும் கொடுப்பர்.
- பழிவரும் என்றால் உலகம் முழுவதும் கிடைத்தாலும் ஏற்றுக்கொள்ளார்.
- எதற்கும் மனம் தளர மாட்டார்கள்.
- இத்தகைய சிறப்புடையோர் இருப்பதால்தான் இவ்வுலகம் இன்றும் இயங்கிக் கொண்டிருக்கிறது.

**4. பகுதி என்றால் என்ன? சான்றுடன் விளக்குக.**

- ஒரு சொல்லின் அடிச்சொல்லே பகுதியாகும்.
- இதை முதனிலை என்றும் கூறுவர்.
- பகுதி விகுதி எனப் பிரிக்க இயலாததாய் இருக்கும்.
- விகுதி பெறாத ஏவல் வினையாக வரும்.
- சில சொற்களில் ஒற்று இரட்டித்துக் காலம் காட்டும்.



www.tnpscjob.com

சான்று :

பாடினான் = பாடு + இன் + ஆன்

அறிஞன் = அறி + ஞ் + அன்

பாடு, அறி = பகுதியாகவும் விகுதி பெறாத ஏவல் வினையாகவும் வருகிறது.

**5. சந்தியைச் சான்றுடன் விளக்குக.**

- சந்தி என்பதற்குத் தமிழில் புணர்ச்சி என்று பெயர்.
- பகுதி, விகுதி, இடைநிலை ஆகிய பகுபத உறுப்புகள் புணரும்போது இடையில் தோன்றும் உறுப்பு 'சந்தி' எனப்படும்.
- சந்தி பகுதிக்கும் இடைநிலைக்கும் இடையில் வரும்.
- பெரும்பாலும் த்,ப்,க் என்ற மூன்று மெய்களும் ய்,வ் என்ற உடம்படுமெய்களும் சந்தியாக வரும்.

**சான்று**

அசைத்தான் = அசை + த் + த் + ஆன்

'அசை' என்ற பகுதிக்கும் 'த்' என்ற இடைநிலைக்கும் இடையில் வந்துள்ள 'த்' என்பது சந்தியாகும்.

**6. எழுத்துப்பேறு என்றால் என்ன?**

- பகுபத உறுப்புகளில் அடங்காமல் ஏழாவது உறுப்பாக வரும் புறத்துறுப்பு 'எழுத்துப்பேறு' எனப்படும்.
- சாரியை வரவேண்டிய இடத்தில் புள்ளி பெற்ற எழுத்து உயிர் ஏற இடமளித்து வந்தால் அதனை எழுத்துப்பேறு எனக்குறிப்பிடல் வேண்டும்.
- விகுதி தனியே வராமல் துணையாகப் பெற்று வரும் எழுத்தே எழுத்துப்பேறு ஆகும்.
- எழுத்துப்பேறு காலம் காட்டாது.

எ.கா பாடுதி = பாடு + த் + இ

மொழியாதான் = மொழி + ய் + ஆ + த் + ஆன்

இச்சொற்களில் 'இ' என்னும் முன்னிலை ஒருமை வினைமுற்று விகுதிக்கு முன்னும் 'ஆ' என்னும் எதிர்மறை இடைநிலைக்குப் பின்னும் வரும் 'த்' என்பது எழுத்துப்பேறாகும்.

**7. சாரியை என்பதனை சான்றுடன் விளக்குக.**

- பகுதியோடு இடைநிலையும் இடைநிலையோடு விகுதியும் பொருத்தமாகச் சார்ந்து இயைய வரும் உறுப்பு சாரியை ஆகும்.
- பெரும்பாலும் சாரியை இடைநிலைக்கும் விகுதிக்கும் இடையில் வரும்.
- சந்தி வரவேண்டிய இடத்தில் உயிர்மெய் எழுத்து வந்தால் அதனைச் சாரியை என்று குறிப்பிடல் வேண்டும்.



www.tnpscjob.com

- சாரியைக்குப் பொருள் இல்லை.
- அன் விகுதியாக வரும்போது அன் என்பதே சாரியையாக வரும்.
- ஆன், ஆள், ஆர் விகுதியாக வரும்போது அன் சாரியையாக வராது.

**சான்று:**

பார்த்தனர் = பார் + த் + த் + அன் + அர்

தருகுவென் = தா (தரு) + கு + வ் + என்

இச்சொற்களில் இடைநிலைக்கும் விகுதிக்கும் இடையில் வரும் 'அன்' என்பதும், பகுதிக்கும் இடைநிலைக்கும் இடையில் வரும் 'கு' என்பதும் சாரியையாகும்.

**8. விகாரம் என்றால் என்ன? சான்று தருக.**

- பகுதி, விகுதி, இடைநிலை ஆகியவை புணரும்போது அவற்றின் வடிவத்தில் ஏற்படும் மாற்றம் விகாரம் எனப்படும்.
- இஃது ஓர் எழுத்து மற்றோர் எழுத்தாகத் திரிந்தும் கெட்டும் நெடில் குறிலாகவும் மாற்றம் பெறும். இத்தகைய மாற்றமே விகாரம் எனப்படும்

**சான்று.**

நின்றான் = நில் (ன்) + ற் + ஆன்

'நில்' எனும் பகுதியில், 'ல்', 'ன்' ஆகத்திரிந்தது.

வணங்கிய = வணங்கு + இ (ன்) + ய் + அ

இ(ன்) எனும் இடைநிலையில் னகரம் கெட்டது.

கண்டான் = காண் (கண்) + ட் + ஆன்

'காண்' எனும் பகுதி 'கண்' எனக்குறுகியது.

**9. குறிஞ்சித் திணையை விளக்குக.**

**முதற்பொருள்**

நிலம் : மலையும் மலை சார்ந்த இடமும்

**பொழுது**

சிறுபொழுது : யாமம்

பெரும்பொழுது : கூதிர், முன்பனி

**கருப்பொருள்**

| | | |
|---|---|---|
| தெய்வம் | : | முருகன் |
| மக்கள் | : | குறவர், குறத்தியர் |
| பறவை | : | கிளி, மயில் |
| விலங்கு | : | புலி, கரடி |
| ஊர் | : | சிறுகுடி |



www.tnpscjob.com

| | | |
|---|---|---|
| மரம் | : | அகில், சந்தனம் , வேங்கை |
| நீர் | : | சுனை நீர், அருவி நீர் |
| பறை | : | வெறியாட்டுப் பறை, தொண்டகப்பறை |
| யாழ் | : | குறிஞ்சியாழ் |
| பண் | : | குறிஞ்சிப்பண் |
| உணவு | : | மலை நெல், மூங்கிலரிசி |
| தொழில் | : | தேன் எடுத்தல், கிழங்கு அகழ்தல் |
| உரிப்பொருள் | : | புணர்தலும் புணர்தல் நிமித்தமும் |

**சான்று :**

"அம்மவாழி ! தோழி ! நம்மூர்ப் ......"

என்ற குறுந்தொகைப்பாடல்.

**10. தலைமகன் தமர் வரைவொடு வந்து சொல்லாடுகின்றுழி 'வரைவு மறுப்பவோ' எனக் கவலைகொண்ட தலைமகளுக்குத் தோழி சொல்லிய துறையை விளக்குக.**

**துறை விளக்கம்:**

தலைவன் சான்றோரைத் தலைவியின் தமர்பால் மணம் பேசி வர விடுப்ப தன் தமர் மறுப்பரோ என்று அஞ்சிய தலைவியை நோக்கித் தோழி கூறியது.

**சான்று :**

"அம்ம வாழி ! தோழி ! நம்மூர்ப் ...." - எனத் தொடங்கும் குறுந்தொகைப் பாடல்.

**விளக்கம் :**

தலைவன் தலைவியை மணம் முடிப்பது பற்றிப் பேச, சான்றோரை அனுப்புகிறான். தலைவி, அப்போது எங்கே தன் பெற்றோர் மணம் பேச மறுத்துவிடுவார்களோ என்று கலங்குகிறாள். இந்நிலையில் தோழி அவளிடம் தலைவன் வரைவை நமர் ஏற்றுக்கொண்டனர். நீ கவலை ஒழிவாயாக என்று கூறுகிறாள்.

**பொருத்தம்:**

தலைவன் வரைவை நமர் ஏற்றுக் கொண்டனர். நீ கவலை ஒழிவாயாக என்று தலைவியிடம் தோழி கூறியது இத்துறைக்குப் பொருந்தி வருகிறது.

**11. பொதுவியல் திணையை விளக்குக.**

**திணை விளக்கம்**

வெட்சி முதல் பாடாண் வரை உள்ள திணைகளில் கூறப்படாத செய்திகளையும் பிற பொதுவான செய்திகளையும் தொகுத்துக் கூறுவது பொதுவியல் திணையாகும்.



www.tnpscjob.com

சான்று

"உண்டால் அம்ம இவ்வுலகம்
தமக்கென முயலா நோன்தாள்
பிறர்க்கென முயலுநர் உண்மை யானே"

**விளக்கம் :**

தமக்காக உழைக்காமல் பிறர்க்காகப் பெரிய முயற்சியுடன் உழைப்பவர்க இருப்பதால்தான் இவ்வுலகம் இன்றும் இயங்கிக் கொண்டிருக்கிறது.

**பொருத்தம் :**

தமக்காக உழைக்காமல் பிறர்க்காகப் பெரிய முயற்சியுடன் உழைப்பவர்க இருப்பதால்தான் இவ்வுலகம் இன்றும் இயங்கிக் கொண்டிருக்கிறது என் புறத்திணைகளுக்கெல்லாம் பொதுவான கருத்தைக் கூறுவதால் இது பொதுவிய திணையாகும்.

**12. பொருண்மொழிக்காஞ்சித் துறையை விளக்குக.**

**துறை விளக்கம் :**

மக்களுக்கு நலம் செய்யும் வாழ்வியல் நெறிகளை எடுத்துக் கூறுத பொருண்மொழிக் காஞ்சித் துறையாகும்.

**சான்று:**

"உண்டால் அம்ம இவ்வுலகம்
தமக்கென முயலா நோன்தாள்
பிறர்க்கென முயலுநர் உண்மை யானே"

**விளக்கம் :**

தமக்காக உழைக்காமல் பிறர்க்காகப் பெரிய முயற்சியுடன் உழைப்பவர்க இருப்பதால்தான் இவ்வுலகம் இன்றும் இயங்கிக் கொண்டிருக்கிறது.

**பொருத்தம் :**

தமக்காக உழைக்காமல் பிறர்க்காகப் பெரிய முயற்சியுடன் உழைப்பவர்க இருப்பதால்தான் இவ்வுலகம் இன்றும் இயங்கிக் கொண்டிருக்கிறது என் வாழ்வியல் நெறியைக் கூறுவதால் இது பொருண்மொழிக்காஞ்சித் துறையாகும்.


www.tnpscjob.com

## திருக்குறள் – கூடுதல் வினாக்கள்

### ஒரு மதிப்பெண் வினாக்கள்

1. உலகப்பொதுமறை என்று போற்றப்படும் தமிழ் இலக்கியம் எது?
   திருக்குறள்
2. திருக்குறளுக்கு உரை எழுதியவர்கள் எத்தனை பேர்?
   பத்து
3. திருக்குறளின் சிறப்பினைக்கூறும் நூல் எது?
   திருவள்ளுவமாலை
4. திருக்குறளில் உள்ள இயல்கள் எத்தனை?
   9
5. அறத்துப்பாலில் உள்ள அதிகாரங்கள் எத்தனை?
   38
6. பொருட்பாலின் அதிகாரங்கள் எத்தனை?
   70
7. இன்பத்துப்பாலில் உள்ள அதிகாரங்கள் எத்தனை?
   25
8. அறத்துப்பாலில் உள்ள இயல்களின் எண்ணிக்கை யாது?
   4
9. பொருட்பாலின் இயல்கள் எத்தனை?
   3
10. இன்பத்துப்பாலின் இயல்கள் எத்தனை?
    2
11. திருக்குறளில் உள்ள மொத்த அதிகாரங்கள் எத்தனை?
    133

### குறுவினா – கூடுதல் வினாக்கள்

**1. மலையினும் பெரியது எது?**

நேர்வழி மாறாது அடக்கமாய் இருப்பவனின் உயர்வு, மலையின் மாண்பைக் காட்டிலும் பெரியது.

**2. யாகாவா ராயினும் நாம் காக்கவேண்டியது எது? ஏன்?**

- எதைக் காக்காவிட்டாலும் நாம் நாவைக் காக்க வேண்டும்.
- அவ்வாறு காக்காவிட்டால் சொல் குற்றத்தில் சிக்கித் துன்பப்படுவர்.

**3. தாளாற்றித் தந்த பொருளின் பயன் யாது?**

விடாமுயற்சி செய்து ஈட்டிய பொருளெல்லாம் தகுதியானவருக்கு உதவி செய்தவற்கே ஆகும்.



www.tnpscjob.com

4. உயிர்வாழ்வான் என்று வள்ளுவர் யாரைக் குறிப்பிடுகிறார். ஏன்?

- உயிர் வாழ்வான் என்று வள்ளுவர், உயர்ந்தாரின் உலக நடைமுறையோடு ஒத்துப் போகிறவனைக் குறிப்பிடுகிறார்.
- உலக நடையை அறிந்து நடத்தலே உயிருடையவர்க்குரிய அறிவும் செயலும் ஆகும். ஆகவே அதனை உடையவனே உயிர் வாழ்வான் ஆவான் என்கிறார்.

5. பெருந்தகையான்கண் படும் செல்வம் எதற்கு ஒப்பானது?

- பெருந்தகையாளனிடம் உள்ள செல்வம் தன் எல்லா உறுப்புகளையும் மருந்தாகத் தரும் மரத்திற்கு ஒப்பானது.

6. நாம் தோன்றின் எவ்வாறு தோன்ற வேண்டும்?

- நாம் தோன்றினால் புகழ் தரும் பண்புகளுடன் தோன்ற வேண்டும் இல்லையெனில் தோன்றாமல் இருப்பதே நல்லது.

7. வாழ்பவர் யார்? வாழாதவர் யார்?

- பழியில்லாமல் வாழ்பவரே வாழ்பவர்.
- புகழில்லாமல் வாழ்பவர் வாழாதவர்

8. சுடச்சுடரும் பொன்போல் யாருக்கு எது வளரும்?

- புடமிடச் சுடுகையில் ஒளிவிடும் பொன்போலத் தவமிருப்பவரைத் துன்பம் வருத்த வருத்த ஞானம் வளரும்.

9. ஒருவனுக்கு எப்பொருள்களால் துன்பம் இல்லை?

- ஒருவன், எந்தெந்தப் பொருள்களிடமிருந்து பற்று நீங்கியவனாக இருக்கின்றானோ அந்தப் பொருள்களால் அவன் துன்பம் அடைவதில்லை.

10. நாம் யாரைப் பற்ற வேண்டும்? ஏன்?

- நாம் பற்றில்லாதவனைப் பற்றி நிற்க வேண்டும்.
- பற்றுகளை அகற்றுவதற்காக பற்றில்லாதவனைப் பற்ற வேண்டும்.

11. இன்பம் இடையறாது எப்போது வரும்?

- பேராசை என்னும் பெருந்துன்பம் தொலைந்துபோனால் இன்பம் இடையறாது வரும்.

12. விரைந்து கெடுபவன் யார்?

- மற்றவருடன் ஒத்துப் போகாதவன்.
- தன் வலிமை அறியாதவன்.
- தன்னைப் பெரிதாக நினைப்பவன்.
- விரைவாகக் கெடுவான்.



www.tnpscjob.com

13. பீலிபெய் சாகாடு உணர்த்தும் உண்மை யாது?

- மிகவும் மெல்லிய மயிலிறகையே, தாங்கும் அளவுக்கு மேல் ஏற்றினால் வலிய வண்டியின் அச்சு முரிந்துவிடும்.
- அதுபோல, தனித்தனியே நோக்கின் எளியராயினும் பலர் ஒன்று கூடினால் அவர் மிக்க வலியராவர் என்பதாம்.

14. உளபோல இல்லாகித் தோன்றாக் கெடுவது யாது?

- தன் வருமானத்தின் அளவை அறிந்து வாழாதவனின் வாழ்க்கை, உள்ளது போலத் தோன்றிக் கெடும்.

15. அருவினை என்ப உளவோ– யாருக்கு?

- உரிய கருவிகளுடன் தக்க காலம் அறிந்து செயலைச் செய்பவருக்கு அரிய செயல் என்று ஒன்றும் இல்லை.

16. எவரால் இவ்வுலகத்தையே பெறக் கருதினாலும் பெறமுடியும்?

- ஒருவர் உரிய காலத்தில், பொருத்தமான இடத்தில், ஒரு செயலைச் செய்தால் உலகத்தையே பெறக் கருதினாலும் கிடைத்துவிடும்.

17. காலம் கருதி இருப்பவர் எவர்?

- உலகத்தை வெல்லக் கருதுபவர், கலங்காமல் உரிய காலத்துக்காகக் காத்திருப்பர்.

18. திருக்குறள் ஏன் உலகப் பொதுமறை என்று போற்றப்படுகிறது?

- திருக்குறள் உலக மக்கள் அனைவருக்கும், எந்தக் காலத்திற்கும் எவ்வகையிலும் பொருந்தும் வகையில் அமைந்தமையால் உலகப் பொதுமறை என்று போற்றப்படுகிறது.

19. திருக்குறளுக்கு வழங்கும் வேறு பெயர்கள் எவை?

- உலகப்பொதுமறை
- பொய்யாமொழி
- வாயுறை வாழ்த்து
- முப்பால்
- உத்தரவேதம்
- தெய்வநூல்

20. வள்ளுவருக்கு வழங்கும் வேறு பெயர்கள் யாவை?

- தேவர்
- நாயனார்
- தெய்வப்புலவர்
- செந்நாப்போதர்
- பெருநாவலர்
- பொய்யில் புலவர்
- பொய்யாமொழிப்புலவர்
- மாதானுபங்கி
- முதற்பாவலர்



www.tnpscjob.com

21. **திருக்குறளுக்கு உரை எழுதிய பதின்மர் யாவர்?**

- பரிமேலழகர்
- பரிப்பெருமாள்
- திருமலையர்
- மணக்குடவர்
- தருமர்
- மல்லர்
- காலிங்கர்
- தாமத்தர்
- பரிதி
- நச்சர்

**சிறுவினா – கூடுதல் வினாக்கள்**

1. மருந்தாகித் தப்பா மரத்தற்றால் செல்வம்
பெருந்தகை யான்கண் படின்.

**– இக்குறட்பாவில் பயின்றுவரும் அணியை விளக்குக.**

"மருந்தாகித் தப்பா மரத்தற்றால் செல்வம்
பெருந்தகை யான்கண் படின்."

இக்குறட்பாவில் பயின்று வந்துள்ள அணி உவமையணியாகும்.

**அணி விளக்கம்**

உவமை ஒரு வாக்கியமாகவும், உவமேயம் ஒரு வாக்கியமாகவும் அமை உவம உருபு வெளிப்படையாய் வருவது உவமையணியாகும்.

**சான்று விளக்கம்**

பிறர்க்கு உதவி செய்யும் பெருந்தன்மை உள்ளவனிடத்தில் சென்று சே செல்வம், தன் எல்லா உறுப்புகளும் மருந்தாகிப் பயன்படுதலில் தவறாத மரு மரத்திற்கு ஒப்பானதாகும்.

**அணிப்பொருத்தம்**

உவமை : மருந்தாகித் தப்பா மரம்
உவமேயம் : பெருந்தயைான்கண் செல்வம் படிதல்
உவம உருபு : அற்று.

**2. பிறிதுமொழிதல் அணியைச் சான்றுடன் விளக்குக.**

**அணிவிளக்கம்**

கவிஞன் ஒரு செய்யுளில் உவமையை மட்டும் கூறி, உவமேயத்தைப் ெ வைப்பது பிறிது மொழிதல் அணியாகும்.

**சான்று**

"பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டம்
சால மிகுத்துப் பெயின்."

**விளக்கம்** : மிக மென்மையான மயிலிறகை அளவுக்கு அதிகமாய் வண்டியி ஏற்றினால் வலிமையான வண்டியின் அச்சும் முரிந்துவிடும். இ உவமையிலிருந்து வலியவரை எளியவர் பலர் கூடி வென்றுவிடுவர் என்



www.tnpscjob.com

உவமேயம் பெறப்படுகிறது. அதனால்,இது பிறிது மொழிதல் அணியாகும்.

3. சுடச்சுடரும் பொன்போல் ஒளிவிடும் துன்பம்
சுடச்சுட நோற்கிற் பவர்க்கு.

**- இக்குறட்பாவில் பயின்வரும் அணியை விளக்குக.**

"சுடச்சுடரும் பொன்போல் ஒளிவிடும் துன்பம்
சுடச்சுட நோற்கிற் பவர்க்கு."

- இக்குறட்பாவில் பயின்றுவரும் அணி உவமையணியாகும்.

**அணிவிளக்கம்**

உவமை ஒரு வாக்கியமாகவும், உவமேயம் ஒரு வாக்கியமாகவும் அமைந்து உவமஉருபு வெளிப்படையாய் வருவது உவமையணியாகும்.

**சான்று விளக்கம்**

நெருப்பிலே இட்டுச் சுடச்சுடப் பொன் ஒளிவிடுவது போல, துன்பம் வருத்த வருத்தத் தவம் செய்பவரின் ஞானம் வளரும்.

**அணிப்பொருத்தம் :**

உவமை : சுடச்சுடரும் பொன்

உவமேயம் : துன்பம் சுடச்சுட நோற்கிற் பவர்

உவம உருபு : போல்

**4. சொல்பின்வரு நிலையணியைச் சான்றுடன் விளக்குக.**

**அணி விளக்கம் :**

செய்யுளில் முன்னர் வந்த சொல், மீண்டும் மீண்டும் வந்து வெவ்வேறு பொருளைத் தருவது, சொல்பின் வருநிலையணி ஆகும்.

**சான்று**

'பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு.'

**சான்று விளக்கம்:**

பற்றுகளை அகற்றுவதற்காக பற்று இல்லாதவனைப் பற்றி நிற்க வேண்டும்.

**பொருத்தம்:**

'பற்று' என்னும் ஒரே சொல் பற்றிக் கொள்ளுதல், விருப்பம், பாதம் எனப் பல்வேறு பொருள்களில் வந்துள்ளது. எனவே, இது சொல்பின்வரு நிலையணி ஆகும்.



www.tnpscjob.com

# இயல் - 4

| | | |
|---|---|---|
| உரைநடை | : | தமிழகக் கல்வி வரலாறு |
| செய்யுள் | : | பிள்ளைக்கூடம் |
| | | நற்றிணை |
| | | தொல்காப்பியம் – சிறப்புப் பாயிர உரைவிளக்கப் பாடல் |
| துணைப்பாடம் | : | இதழாளர் பாரதி |
| இலக்கணம் | : | படைப்பாக்க உத்திகள் |



www.tnpscjob.com

## இலக்கணத் தேர்ச்சி கொள்

**1. உவமை எவற்றின் அடிப்படையில் தோன்றும்?**

**சான்று**

- வினை (தொழில்) — புலி போலப் பாய்ந்தான்
- பயன் — மழை போலக் கொடுக்கும் கை
- வடிவம் (மெய்) — துடி போலும் இடை
- உரு (நிறம்) — தளிர் போலும் மேனி

என்ற நான்கின் அடிப்படையில் தோன்றும், என்பார் தொல்காப்பியர்.

**2. உவமைத் தொடர்களால் அழைக்கப்பெறும் சங்கப்புலவர்கள் பெயர்களைத் தொகுத்து அவற்றில் உள்ள உவமைகளைக் கண்டறிக.**

- மக்கள் போகிய அணிலாடு முன்றில் புலப்பில்போல – அணிலாடு முன்றிலார்.
- ஊட்டி அன்ன ஒண்டளிர்ச் செயலை – ஊட்டியார்
- ஈரம்பட்ட செவ்விப் பைம்புனத்து ஓர்ஏர் உழவன்போல – ஓரேர் உழவன்.
- குப்பைக் கோழித் தனிப்போர் போல – குப்பைக் கோழியார்
- செம்புலப் பெயல்நீர் போல
  அன்புடை நெஞ்சம் தாம்கலந்தனவே – செம்புலப் பெயல் நீரார்.

3. ஒட்டுப்போடாத
ஆகாயம்போல – இந்த
உலகமும் ஒன்றே தான் ..... இக்கவிதையில் பயின்று வருவது

அ) உவமை ஆ) உருவகம் இ) உள்ளுறை ஈ) இறைச்சி

விடை : உவமை

4. கீழ்க்காண்பவனவற்றுள் 'இறைச்சி' பற்றிய கூற்றைத் தேர்க.

அ) குறியீடுகளைக் கொண்டு உருவாக்கப்படும்.
ஆ) ஒப்பீட்டுச் செறிவும் பொருள் அழுத்தமும் சிறக்க அமையும்.
இ) வினை, பயன், வடிவம், நிறம் ஆகிய நான்கின் அடிப்படையில் தோன்றும்.
ஈ) உரிப்பொருளோடு நேரிடைத் தொடர்பில்லாத குறிப்புப் பொருள்.

விடை : (ஈ) உரிப்பொருளோடு நேரிடைத் தொடர்பில்லாத குறிப்புப் பொருள்.

**5. உள்ளுறைக்கும் இறைச்சிக்கும் உள்ள வேறுபாட்டினைச் சான்றுகளுடன் ஆய்க.**

**உள்ளுறை, இறைச்சி வேறுபாடு**

- உள்ளுறையில் கருப்பொருள் தொடர்பான, சொல்லும் பொருளும் நேருக்கு நேர் பொருந்தி வரும். கருப்பொருள் உவமை போலவும் அதன் வழி நாம் குறிப்பாக உணர்ந்து கொள்ளும் உட்கருத்து உவமேயம் போலவும் காணப்படும்.



www.tnpscjob.com

- இறைச்சியில் கருப்பொருளும் உட்பொருளும் ஒத்து முடியாமல் எதிர்மறையாகவும் முடியலாம். சொற்பொருள் அதற்கு இணையான குறிப்புப் பொருள் என்னும் இரண்டுக்கும் மேலாக வேறு ஒரு கருத்தும் வெளிப்படுவது இறைச்சியின் தனிப்பண்பாகும்.
- புலவன் சொல்லுகிற உவமத்தோடு ஒத்துக் கூறக்கருதிய பொருள் வந்து முடியுமாறு அமைந்திருப்பது உள்ளுறை.
- புலவன் இயற்றிய செய்யுளின் பொருளுக்குப் புறத்தே தோன்றுவது இறைச்சி

**சான்று**

**உள்ளுறை உவமை**

கவிஞர் தான் கூறக்கருதிய பொருளை வெளிப்படையாகக் கூறாமல் அகமாந்தரின் மன உணர்வுகளைக் கருப்பொருள்கள் மூலம் உவமைப்படுத்துவது உள்ளுறை உவமை ஆகும்.

**எ.கா** ஈயல் புற்றத்து ஈரம்புறத்து இறுத்த
குறும்பி வல்சிப் பெருங்கை ஏற்றை
தூங்குதோல் துதிய வள்ளுகிர் கதுவலின்
பாம்புமதன் அழியும் பானாட் கங்குல்

–பெருங்குன்றூர் கிழார்.

தோழிக்குச் சொல்வது போல் தலைவி, மறைந்து நிற்கும் தலைவனுக்கு சொல்கிறாள்.

தலைவன் பிறர் அறியாமல் தலைவியைச் சந்திக்க இரவு நேரத்தில் வருகிறான். அவ்வேளையில் பசியுடன் அலையும் கரடியொன்று ஈசல்கள் நிறைந்த புற்றில் கையைவிட்டுப் பார்க்கிறது. அந்த ஈசல் புற்றில் சுருண்டு படுத்திருந்த பாம்பினைக் கரடி அறியவில்லை. கரடியின் நகங்கள் பட்டு, பாம்பு வலியால் துடிக்கிறது. இங்குக் கரடியின் செயலும் பாம்பின் துன்பமும் காட்டப்படுகின்றன.

ஆனால், உள்ளே மறைந்திருக்கும், செய்திவேறு. இரவு நேரத்தில் காட்டைக் கடந்து வரும் தலைவன் செயலால் தலைவி அஞ்சி வருந்துவதை இப்பாடல் தெரிவிக்கிறது. கரடி தலைவனுக்கும் பாம்பு தலைவிக்கும் குறியீடுகளாய் அமைந்து உள்ளுறை உவமம் உருவாகிறது.

**இறைச்சி**

இறுத்தல் என்றால் தங்குதல் எனப் பொருள்படும். உரிப்பொருளோடு நேரிடைத் தொடர்பில்லாத குறிப்புப் பொருளே இறைச்சி ஆகும்.

**எ.கா** "நும்மினும் சிறந்தது நுவ்வை ஆகுமென்று
அன்னை கூறினள் புன்னையது சிறப்பே
அம்ம நாணுதும் நும்மொடு நகையே" – நற்றிணை



www.tnpscjob.com

நீ விளையாடி மகிழும் இடத்திலுள்ள இப்புன்னைமரம் உன்னைவிடச் சிறந்தது என்றும் உனக்குத் தங்கையாவாள் என்றும் நற்றாய் என்னிடம் கூறினாள். அதனால் இம்மரத்தடியில் உம்முடன் விளையாட நாணுகிறேன். ஏனெனில் தங்கை அருகிருக்க தலைவனுடன் பழகுவது முறையா? என்று தலைவி தலைவனிடம் கூறுகிறாள்.

இப்பாடலில், நாம் வேறு இடத்தில் சந்திக்கலாம் என்னும் குறிப்புப் பொருளும் தலைவியைத் தலைவன் விரைவில் மணந்து கொள்ள வேண்டும் என்னும் குறிப்புப்பொருளும் அமைந்துள்ளன. இக்குறிப்புப்பொருளே இறைச்சி ஆகும்.

## நம்மை அளப்போம்

**பலவுள் தெரிக.**

1. ஏடு, சுவடி, பொத்தகம், பனுவல் முதலிய சொற்கள் தரும் பொருள் ............ என்பதாகும்.

   அ) நூல் ஆ) ஓலை இ) எழுத்தாணி ஈ) தாள்

**விடை :** அ) நூல்

2. சரியான விடையைத் தேர்க.

| | | |
|---|---|---|
| அ) | கல்வி அழகே அழகு | –1) தொல்காப்பியச் சிறப்புப்பாயிர உரைப்பாடல் (1) |
| ஆ) | இளமையில் கல் | – 2) திருமந்திரம் (3) |
| இ) | துணையாய் வருவது தூயநற்கல்வி | – 3) ஆத்திசூடி (2) |
| ஈ) | பாடம் போற்றல் கேட்டவை நினைத்தல் | – 4) திருக்குறள் |
| | | – 5) நாலடியார் (1) |

i) அ–2, ஆ–3, இ–4, ஈ–1 ii) அ–3, ஆ–4, இ–1, ஈ–2

iii) அ–5, ஆ–3, இ–2, ஈ–1 iv) அ–4, ஆ–1, இ–2, ஈ–5

**விடை :** iii) அ–5, ஆ–3, இ–2, ஈ –1

3. 9 அடி சிற்றெல்லையும் 12 அடி பேரெல்லையும் கொண்ட நூல்

   அ) நற்றிணை ஆ) குறுந்தொகை

   இ) அகநானூறு ஈ) ஐங்குறுநூறு

**விடை :** அ) நற்றிணை

4. தொல்காப்பியத்திலுள்ள மொத்த இயல்களின் எண்ணிக்கை

   அ) 9 ஆ) 3 இ) 27 ஈ) 13

**விடை :** இ) 27



www.tnpscjob.com

5. நிழல்போலத் தொடர்ந்தான் – இது எவ்வகை உவமை?

அ) வினை ஆ) பயன் இ) வடிவம் ஈ) மெய்

**விடை :**அ) வினை

**குறுவினா**

**1. சங்ககாலத்தில் தமிழ்மொழியின் நிலைபற்றி இராசமாணிக்கனாரின் கூற்று யாது?**

"சங்ககாலத் தமிழகத்தில் தமிழ் ஆட்சி மொழியாக, பயிற்று மொழியாக, இலக்கிய மொழியாக விளங்கியுள்ளது. தமிழகம் அப்போது பெற்றிருந்த அரசியல் சுதந்திரத்தினால், தமிழ் நாடெங்கும் தமிழே ஆட்சிமொழியாகவும் கல்விமொழியாகவும் மற்றும் சமயம், வாணிகம் போன்ற எல்லாத் துறைகளிலும் பொது மொழியாகவும் விளங்கி வந்தது" என்னும் மா. இராசமாணிக்கனாரின் கருத்து தமிழகத்தில் அன்று நிலவிய கல்வி முறையின் சிறப்பினை எடுத்துக் கூறுகிறது.

**2. உ.வே.சா அவர்கள் பயின்ற கல்விமுறை குறித்துக் குறிப்பு வரைக.**

தனிநிலையில் புலவர்களிடத்துக் கற்கும் உயர்நிலைக் கல்விமுறையில் திருவாவடுதுறை ஆதீன மடத்தின் தலைமைப் புலவராக விளங்கிய மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்களிடம் தமிழ்தாத்தா உ.வே. சாமிநாதர் பாடம் பயின்றார்.

3. இங்கே, ஐம்பதாண்டு வேம்பு
கோடையில் கொட்டும் பூக்களை
எண்ணச் சொல்கிறார்கள்.
**– எண்ணச் சொல்கிறவர்கள் யார்?**
**எண்ணுபவர்கள் யார்?**

- **எண்ணச் சொல்பவர்கள்**
  இயற்கையோடு இணைந்து கற்பிக்கும் ஆசிரியர்கள்
- **எண்ணுபவர்கள்**
  பிள்ளைக்கூடப் பிள்ளைகள்

**4. கொழுஞ்சோறு – புணர்ச்சி விதி கூறுக.**

கொழுஞ்சோறு – கொழுமை + சோறு

ஈறுபோதல் = கொழு + சோறு

இனமிகல் = கொழுஞ்சோறு



www.tnpscjob.com

5. உவமை, உருவகம் – வேறுபடுத்துக.

| உவமை | உருவகம் |
|---|---|
| ஒரு பொருளை மற்றொரு பொருளோடு ஒப்புமை தோன்றக் கூறுவது உவமையாகும். | உவமை வேறு, உவமேயம் வேறு எனத் தோன்றாமல் இரண்டும் ஒன்றே எனத் தோன்றுமாறு கூறுதல் உருவகமாகும் . |
| உவமை முன்னும் உவமேயம் பின்னும் அமையும். எ.கா.பவளவாய் | உவமேயும் முன்னும் உவமை பின்னும் அமையும். எ.கா. வாய்ப்பவளம் |

**சிறுவினா**

**1. தமிழ் இலக்கியங்களில் கல்வி குறித்து நீங்கள் அறிந்த செய்திகளை அட்டவணைப்படுத்துக.**

**தொல்காப்பியம்**

- பண்டைத்தமிழ் இலக்கண நூலான தொல்காப்பியம், கல்வி கற்பதற்காகப் பிரிந்து செல்வதை ஓதற் பிரிவு எனக் குறிப்பிடுகிறது.
- எண்வகை மெய்ப்பாடு பற்றிக் கூறும்போது, கல்வியின் பொருட்டு ஒருவருக்கு 'பெருமிதம்' தோன்றும் என்று கூறுகிறது.
- தொல்காப்பியமும் நன்னூலும் ஆசிரியர்கள், மாணவர்களுக்கான இலக்கணங்களை வகுத்துள்ளன.

**புறநானூறு**

"உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்
பிற்றை நிலை முனியாது கற்றல் நன்றே!"

– என்ற புறநானூற்று அடிகள் பொருள் கொடுத்தும் தொண்டு செய்தும் ஆசிரியரிடம் மாணவர்கள் கல்வி கற்றதைச் சிறப்புடன் குறிக்கின்றன.

**திருமந்திரம்**

துணையாய் வருவது தூயநற் கல்வி .

**நாலடியார்**

கல்வி அழகே அழகு.

**ஆத்தி சூடி**

இளமையில் கல்.



www.tnpscjob.com

2. சமணப்பள்ளிகளும் பெண் கல்வியும் – குறிப்பு வரைக.

**சமணப் பள்ளி**

- கல்வி, மருந்து, உணவு, அடைக்கலம் ஆகிய நான்கு கொடைகளும் சமண சமயத்தின் தலையாய அறங்களாகும்.
- சமணத்தைச் சேர்ந்த திரகம்பரத் துறவிகள் மலைக்குகையில் தங்கினார்.
- அவர்கள் தங்களின் தங்குமிடங்களிலேயே கல்வியையும் சமயக் கருத்துகளையும் மாணவர்களுக்குப் போதித்தனர்.
- 'பள்ளி' என்ற சொல்லுக்குப் 'படுக்கை' என்று பொருள்.
- அவர்களின் படுக்கைகளின் மீது மாணவர்கள்அமர்ந்து கற்றதனால் கல்விக் கூடம், பள்ளிக்கூடம் என அழைக்கப்படலாயிற்று.
- பள்ளி என்னும் சொல் சமண, பௌத்த சமயங்களின் கொடையாகும்.
- சமணப் பள்ளிகளில் பயின்ற மாணவர்கள் தங்கள் ஆசிரியர்களுக்கு எடுத்த படுக்கைகள் பற்றித் திருச்சி மலைக்கோட்டையிலும், கழுகுமலையிலும் உள்ள கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன.

**பெண் கல்வி**

- வந்தவாசி அருகிலுள்ள வேடல் என்னும் ஊரில் இருந்த சமணப் பள்ளியில் பெண் சமண ஆசிரியர் ஒருவர் 500 மாணவர்களுக்குக் கல்வி கற்பித்தார்.
- பட்டினிக்குரத்தி என்னும் சமணப்பெண் ஆசிரியர் விளாப்பாக்கத்தில் சமணப்பள்ளி ஒன்றை நிறுவினார்.
- இவை சமணப்பள்ளிகளில் பெண்களும் ஆசிரியர்களாக இருந்துள்ளனர் என்பதை வெளிப்படுத்துகின்றன.
- பெண்களுக்கெனத் தனியாகக் கல்வி கற்பிக்கும் சமணப் பள்ளிகள் 'பெண் பள்ளிகள்' என்று அழைக்கப்பட்டன.

3. **"ஏவல் மறுக்கும் சிறுவிளை யாட்டி
அறிவும் ஒழுக்கமும் யாண்டுணர்ந்தனள் கொல்"
– இடம் சுட்டிப் பொருள் விளக்குக.**

**இடம் :**

நற்றிணையில் போதனார் பாடிய பாலைத் திணையில் இத்தொடர் இடம் பெற்றுள்ளது. திருமணம் முடிந்து கணவன் வீட்டில் வசிக்கும் தலைவியைக் காணச் சென்று வந்த செவிலி, நாற்றாயிடம் மகள் வறுமையிலும் செம்மையாக வாழ்வதைச் சொல்லி, "ஏவல் மறுக்கும் சிறுவிளையாட்டி அறிவும் ஒழுக்கமும் யாண்டுணர்ந்தனள் கொல்" என்று வியந்து கூறுகிறாள்.



www.tnpscjob.com

பொருள் :

விளையாட்டுப் பருவம் மாறாத பெண்ணான நம் மகள் இல்லறம் ஆற்றும் நல்ல அறிவும் ஒழுக்கமும் எங்கிருந்து உணர்ந்து கொண்டாளோ? என்று நற்றாயிடம் செவிலித்தாய் வியந்து கூறினாள்.

விளக்கம் :

தேன் கலந்த பாலை உண்ண மறுத்து ஓடிய விளையாட்டுப்பெண் பருவமடைந்து, தானே தன் வாழ்க்கைத் துணையைத் தேடியடைந்து, இல்லறம் நடத்தும்போது, ஒரு பொழுது மறுத்து ஒரு பொழுது உண்ணும் உறுதிப்பாடு பெற்றவளாய் விளங்குகிறாள். இத்தகைய அறிவும் ஒழுக்கமும் எங்கே உணர்ந்து கொண்டாளோ? என்று கணவன் வீட்டில் வசிக்கும் தலைவியைக் காணச் சென்று வந்த செவிலித்தாய் நற்றாயிடம் வியந்து கூறுகிறாள்.

4. சின்னதொரு துண்டைத்
திரும்பத் திரும்பக் கட்டி
அழகு பார்க்கிறாள் செல்ல மகள்
முந்தானையை இழுத்துப் போர்த்திக் கொள்கிறாள்
ஒரு குட்டி நாற்காலியே வீடாகிவிடுகிறது
துண்டைக் கட்டிக்கொண்டு தாயாகவும்
மாறிக்கொள்ள முடிகிறது அவளால்.
துண்டு ஒன்றுதான் .......
அதுவே அவளது மகிழ்ச்சியும்
என் துக்கமும்

-இப்புதுக்கவிதையில் வெளிப்படும் கருத்தை ஆராய்ந்து எழுதுக.

கருத்து :

- பெண் குழந்தை துண்டைக் கட்டிக் கொண்டு இளம் பெண்ணைப் போலவும் தாயைப் போலவும் மாறுகிறாள்.
- ஒரு சிறு நாற்காலி அவளுடைய வீடாகிறது. இது குழந்தையின் விளையாட்டுப் பருவ மகிழ்ச்சி.
- ஆனால், அப்பெண் குழந்தையைப் பெற்றவருக்கோ, அவளை நன்கு படிக்க வைத்து, வளர்த்து நல்லதொரு வாழ்க்கைத் துணையை அமைத்துத் தருகின்ற மிகப்பெரிய பொறுப்பு இருக்கிறது.
- இக்குழந்தைக்கான மிகப்பெரிய பொருளாதாரத் தேவைகளையும் நிறைவேற்றித் தரவேண்டிய கட்டாயமும் இருப்பதால் இதை எப்படி நிறைவேற்றப் போகிறோமோ என்ற துக்கமும் ஏற்படுகிறது.



www.tnpscjob.com

5. உள்ளுறை உவமை, இறைச்சி – எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.

**உள்ளுறை உவமை**

கவிஞர் தான் கூறக்கருதிய பொருளை வெளிப்படையாகக் கூறாம அகமாந்தரின் மன உணர்வுகளைக் கருப்பொருள்கள் மூலம் உவமைப்படுத்து உள்ளுறை உவமை ஆகும்.

**எ.கா**

ஈயல் புற்றத்து ஈரம்புறத்து இறுத்த
குறும்பி வல்சிப் பெருங்கை ஏற்றை
தூங்குதோல் துதிய வள்ளுகிர் கதுவலின்
பாம்புமதன் அழியும் பானாட் கங்குல்

–பெருங்குன்றூர் கிழார்.

தோழிக்குச் சொல்வது போல் தலைவி, மறைந்து நிற்கும் தலைவனுக் சொல்கிறாள்.

தலைவன் பிறர் அறியாமல் தலைவியைச் சந்திக்க இரவு நேரத்தி வருகிறான். அவ்வேளையில் பசியுடன் அலையும் கரடியொன்று ஈசல்கள் நிறை புற்றில் கையை விட்டுப் பார்க்கிறது. அந்த ஈசல் புற்றில் சுருண்டு படுத்திரு பாம்பினைக் கரடி அறியவில்லை. கரடியின் நகங்கள் பட்டு, பாம்பு வலியா துடிக்கிறது. இங்குக் கரடியின் செயலும் பாம்பின் துன்பமும் காட்டப்படுகின்றன

ஆனால், உள்ளே மறைந்திருக்கும் செய்தி வேறு. இரவு நேரத்தில் காட்ட கடந்து வரும் தலைவன் செயலால் தலைவி அஞ்சி வருந்துவதை இப்பாட தெரிவிக்கிறது. கரடி தலைவனுக்கும் பாம்பு தலைவிக்கும் குறியீடுகளாய் அமை உள்ளுறை உவமம் உருவாகிறது.

**இறைச்சி**

இறுத்தல் என்றால் தங்குதல் எனப் பொருள்படும். உரிப்பொருளோ நேரிடைத் தொடர்பில்லாத குறிப்புப் பொருளே இறைச்சி ஆகும்.

**எ.கா**

"நும்மினும் சிறந்தது நுவ்வை ஆகுமென்று
அன்னை கூறினள் புன்னையது சிறப்பே
அம்ம நாணுதும் நும்மொடு நகையே"

– நற்றிணை

நீ விளையாடி மகிழும் இடத்திலுள்ள இப்புன்னைமரம் உன்னைவி சிறந்தது என்றும் உனக்குத் தங்கையாவாள் என்றும் நற்றாய் என்னிடம் கூறினா அதனால் இம்மரத்தடியில் உம்முடன் விளையாட நாணுகிறேன். ஏனெனில் தங் அருகிருக்க தலைவனுடன் பழகுவது முறையா? என்று தலைவி தலைவனி கூறுகிறாள்.



www.tnpscjob.com

இப்பாடலில், நாம் வேறு இடத்தில் சந்திக்கலாம் என்னும் குறிப்புப் பொருளும் தலைவியைத் தலைவன் விரைவில் மணந்து கொள்ள வேண்டும் என்னும் குறிப்புப்பொருளும் அமைந்துள்ளன. இக்குறிப்புப்பொருளே இறைச்சி ஆகும்.

**நெடுவினா**

**1. பௌத்தக்கல்வி, சமணக்கல்வி, மரபுவழிக்கல்வி முறைகளால் தமிழகக் கல்விமுறையில் ஏற்பட்ட பல்வேறு மாறுதல்களை விவரிக்க.**

**முன்னுரை**

கல்வியின் நோக்கம் நாகரிகத்தையும் பண்பாட்டையும் வளர்ப்பதாகும். ஒருவரின் வாழ்க்கை முழுவதும் தொடர் நடைமுறையாகத் திகழும் கல்வியானது சமூகமாற்றத்தின் இன்றியமையாக் காரணியாகவும் விளங்குகிறது. 'தனிமனிதனைச் சமுதாயத்துக்கு ஏற்றவனாக மாற்றுதல்' என்னும் சீரிய பணியில் தமிழகம் கடந்து வந்த பாதை போற்றுதலுக்குரியது.

**சமணக் கல்வி முறை**

- கல்வி, மருந்து, உணவு, அடைக்கலம் ஆகிய நான்கு கொடைகளும் சமண சமயத்தின் தலையாய அறங்களாகும்.
- சமண சமயத்தைச் சேர்ந்த திகம்பரத் துறவிகள் மலைக்குகையில் தங்கி கல்வியையும் சமயக் கருத்துக்களையும் மாணவர்களுக்குப் போதித்தனர்.
- 'பள்ளி' என்ற சொல்லுக்குப் 'படுக்கை' என்று பொருள். அவர்களின் படுக்கைகளின் மீது மாணவர்கள் அமர்ந்து கற்றதனால் கல்விக்கூடம், பள்ளிக்கூடம் என்றானது.
- பள்ளி என்னும் சொல் சமண, பௌத்த சமயங்களின் கொடையாகும்.
- சமணப்பள்ளிகளில் பயின்ற மாணவர்கள் தங்கள் ஆசிரியர்களுக்கு எடுத்த படுக்கைகள் பற்றித் திருச்சி மலைக்கோட்டை, கழுகுமலைக் கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன.
- வந்தவாசி அருகிலுள்ள வேடலில் இருந்த சமணப் பள்ளியில் பெண் ஆசிரியர் ஒருவர் 500 மாணவர்களுக்குக் கல்வி கற்பித்தார் என்பதும் பட்டினிக்குரத்தி என்னும் சமணப் பெண் ஆசிரியர் விளாப்பாக்கத்தில் சமணப்பள்ளியொன்றை நிறுவினார் என்பதும் சமணப் பள்ளிகளில் பெண்களும் ஆசிரியர்களாக இருந்துள்ளனர் என்பதை வெளிப்படுத்துகின்றன.
- பெண்களுக்கெனத் தனியாகக் கல்வி கற்பிக்கும் சமணப் பள்ளிகள் 'பெண் பள்ளிகள்' என்றழைக்கப்பட்டன.



www.tnpscjob.com

## பௌத்தக் கல்வி முறை

தமிழர்கள் இன்று பரவலாக ஏற்றுக் கொண்டிருக்கும் பட்டிமண்டபம் என்பது சமயக் கருத்துகள் விவாதிக்கும் இடமென்று மணிமேகலையில் சுட்டப்படுகின்றது.

"ஒட்டிய சமயத்து உறுபொருள்வாதிகள்
பட்டிமண்டபத்துப் பாங்கறிந்து ஏறுமின்"

– என்று மணிமேகலை பேசுகிறது.

- தமிழகத்திலுள்ள காஞ்சிபுரத்திற்கு வந்து சேர்ந்த சீனப்பயணி யுவான் சுவாங், அங்கிருந்த பௌத்தப் பல்கலைக்கழகத்தில் தங்கிச் சிறப்புரை ஆற்றினார் என்ற செய்தி பௌத்தம் தமிழகத்தின் கல்வி வரலாற்றுக்குச் செய்த பெரும்பங்கினை விளக்குகிறது.

## மரபுவழிக் கல்வி முறைகள்

### குருகுலக் கல்வி முறை

- இம்முறையில் மாணவர்கள் ஆசிரியர்களை அணுகி அவருடன் பல ஆண்டுகள் தங்கி, அவருக்குத் தேவைப்படும் பணிகளைச் செய்து கல்வி கற்றனர்.
- செய்து கற்றல், வாழ்ந்து கற்றல், எளிமையாக வாழ்தல் என்ற அடிப்படையில் இக்குருகுலக் கல்வி முறை அமைந்திருந்தது.
- இம்முறை போதனா முறையைத் தாண்டி வாழ்வியலைக் கட்டமைப்பதில் உறுதியானதாக விளங்கியது.

### திண்ணைப்பள்ளிக் கல்விமுறை

- 19ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் கிராமங்கள்தோறும் பெருமளவில் திண்ணைப் பள்ளிகள் இருந்தன. இவற்றைத் 'தெற்றிப் பள்ளிகள்' என்றனர்.
- திண்ணைப் பள்ளிக்கூட ஆசிரியர்கள் 'கணக்காயர்கள்' என்றே அழைக்கப்பட்டனர்.
- அக்காலக் கல்விமுறை; திண்ணைப் பள்ளிமுறை என்றே தமிழகத்தில் அழைக்கப்பட்டது.
- இப்பள்ளிகள் ஒரே மாதிரியான வரன்முறையுடன் செயல்படவில்லை.
- இப்பள்ளிகள் பாடத்திட்டம், பள்ளி நேரம், பயிற்றுவிக்கும் முறை ஆகியன ஆசிரியரின் விருப்பப்படியே அமைந்திருந்தன.
- திண்ணைப் பள்ளிகளின் கல்வித்தரம் ஐரோப்பிய நாடுகளின் கல்வித் தரத்தைக் காட்டிலும் உயர்ந்ததாகவே காணப்பட்டது என்று தாமஸ் மன்றோ ஆய்வு குறிப்பிட்டுள்ளது.



www.tnpscjob.com

**உயர்நிலைக் கல்விமுறை**

தனிநிலையில் புலவர்களிடத்துக் கற்கும் உயர்நிலைக் கல்விமுறை என்ற வகைமைக்குள் இக்கல்விமுறை விளங்கும். திருவாவடுதுறை ஆதீனமடத்தின் தலைமைப் புலவராக விளங்கிய மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்களிடம் தமிழ்த்தாத்தா உ.வே.சாமிநாதர் பாடம் பயின்ற முறை இம்முறையாகும்.

**முடிவுரை**

குருகுலக்கல்வி முறை, திண்ணைப் பள்ளி, கல்வி நிலையம் என்னும் பல்வேறு பரிணாமங்களைக் கண்ட கல்வி அமைப்புமுறை இன்று அறிவியல் தொழில்நுட்பத்தின் உதவியால் வேகமாக வளர்ச்சி அடைந்து வருகிறது.

**2. தலைவியின் இல்லறப் பாங்கினைப் பற்றிச் செவிலித்தாய் நற்றாயிடம் வியந்து கூறுவன யாவை?**

**செவிலித்தாயின் வியப்பு**

திருமணம் முடிந்து, கணவன் வீட்டில் வசிக்கும் தலைவியைக் காணச் சென்றுவந்த செவிலி, நற்றாயிடம் மகள் வறுமையிலும் செம்மையாக வாழ்வதைச் சொல்லி, இத்தகைய இல்லற அறிவை எப்படிப் பெற்றாள்? என பின்வருமாறு வியந்து கூறுகிறாள்.

- நம் வீட்டில் தேன் கலந்த இனிய பால் உணவை ஒளிமிக்க பொற்கலத்தில் இட்டுச் செவிலியர் ஒரு கையில் ஏந்தி வருவர்.
- நம் மகளை உண்ண வைப்பதற்காக இன்னொரு கையில் பூச்சுற்றிய மென்மையான சிறு கோலை வைத்திருப்பர்.
- வீட்டின் முற்றத்தின் பந்தரின்கீழ் 'இதை உண்பாயாக' எனச் செல்லமாக அக்கோலால் அடித்து வேண்டுவர்.
- மகளோ, 'நான் உண்ணேன்' என மறுத்து முத்துப்பரல்கள் இட்ட பொற்சிலம்பு ஒலிக்க அங்குமிங்கும் ஓடுவாள்.
- செவிலியர் அவளைப் பின்தொடர முடியாமல் நடை தளர்ந்து நிற்பர்.
- இப்படிப்பட்ட விளையாட்டுப் பெண் நம் மகள்.
- இவள் எப்படி இப்போது இத்தகைய அறிவையும் இல்லற நடைமுறையும் கற்றாள்?
- தான் மணந்து கொண்ட கணவன் வீட்டில் வறுமையுற்ற நிலையிலும் தன் தந்தையின் வீட்டில் பெற்ற வளமான உணவினைப் பற்றி நினைத்துப் பாராள்.
- ஓடுகின்ற நீரிலே கிடக்கும் நுண்மணலில் இடைவெளி இருப்பதுபோல் ஒரு பொழுது இடைவெளிவிட்டு ஒருபொழுது உண்ணும் வன்மை பெற்றிருக்கிறாள். இது என்ன வியப்பு?



www.tnpscjob.com

## 3. பாரதியின் இதழாளர் முகம் குறித்து நீங்கள் அறிவன யாவை?

செம்மொழியாகத் திகழும் நம் மொழி புதிய நடையும் புதிய உடையும் பு... பொருளும் கொண்டு எழுச்சியுடன் திகழக் காரணமாக அமைந்த தமிழ்ச்சி... பாரதியின் மற்றொரு பரிமாணம் இதழியல் பணி. பாரதியின் உலகளாவிய பார்... கூர்மைப்பட இதழியல் பணியே தூண்டுகோலாக இருந்திருக்க வேண்டும்.

**இதழாசிரியர்**

இதழியல் துறைக்குப் பாரதி வந்தது சாதாரண நிகழ்வாக இருக்கலா... ஆனால் அதில் அசாதாரணமானவற்றை நிகழ்த்திக் காட்டினார். சுதேசமித்திர... சக்கரவர்த்தினி, இந்தியா, பாலபாரதி (அ) யங் இந்தியா, விஜயா, சூர்யோதய... கர்மயோகி ஆகிய பல இதழ்களில் ஆசிரியராகவும் துணை ஆசிரியராக... பங்காற்றியவர்.

**படைப்பு வெளியீட்டு இதழ்கள்**

சர்வஜன மித்திரன், ஞானபாநு, காமன்வீல், கலைமகள், தேசபக்த... கதாரத்னாகரம் போன்ற இதழ்களிலும் பாரதி வெளியிட்டுள்ளார்.

**புனைப்பெயரும் காரணமும்**

ஆங்கிலேயர்களின் கெடுபிடிகளால், விடுதலை வேட்கையூட்டு... கருத்துகள் மக்களைச் சென்றடைந்தால் போதும் என்று எண்ணி இளசை சுப்ரமணியன், சாவித்திரி, சி.சு. பாரதி, வேதாந்தி, நித்திய தீரர், உத்தம தேசாபிமானி ஷெல்லிதாஷன், காளிதாசன், சக்திதாசன்,ரிஷிகுமாரன், காசி, சரஸ்வதி பிஞ்சுக்காளிதாசன், செல்லம்மா, கிருஷ்ணன் எனப் பல புனைபெயர்களி... எழுதியுள்ளார்.

**கருத்துப்படம்**

பாரதி அன்றே தாம் பணியாற்றிய இதழ்களில் கருத்துப்படங்களையும் கேலி சித்திரங்களையும் வெளியிட்டுள்ளார்.தமிழ் இதழியல் துறையில் முதன்முதலாக கருத்துப் படங்களை அறிமுகப்படுத்தியவர் பாரதிதான்.

**தமிழ்ஆண்டு, திங்கள், நாள்**

தமிழ் இதழ்களில் தமிழ் ஆண்டு, திங்கள், நாள் ஆகியவற்றை முதன்முதலாகக் குறித்தவர் பாரதி. அவரது மூச்சும் பேச்சும் தமிழின் வளர்ச்சியை முன்னிட்டே இருந்தன.

**தமிழில் தலைப்பு**

தமிழ் இதழ்களில் தமிழில் தலைப்பிடுவதற்கும் பாரதியே முன்னோ... தலைப்பிடலை 'மகுடமிடல்' என்றார். இந்தியா, சக்கரவர்த்தினி போன்ற இதழ்களி...



www.tnpscjob.com

1905 – 07 காலப்பகுதியில் ஆங்கிலத் தலைப்பையும் கலந்து பயன்படுத்தியவர். பிறகு ஆங்கிலத் தலைப்பு வைப்பதைக் கைவிட்டதோடு அதைச் சாடியும் எழுதினார்.

**சக்கரவர்த்தினியில் குறள் வெண்பா**

பெண் விடுதலைக்குப் பாடுபட்ட பாரதி பெண்களுக்காகத் தமது சக்கரவர்த்தினி இதழில் குறள் வெண்பா எழுதினார்.

"பெண்மை அறிவுயரப் பீடோங்கும் பெண்மைதான்
ஒண்மையுற ஓங்கும் உலகு" – என்று பாடினார். 1882 - 1921

**சிவப்பு – இந்தியா**

பாரதி 'இந்தியா' இதழை சிவப்பு வண்ணத்தாளில் வெளியிட்டார். சிவப்பு வண்ணம் புரட்சியையும் விடுதலையையும் குறிப்பதால், அடிமைத்தளையில் இருந்து இந்தியாவை விடுவிக்க வேண்டும் என்ற எண்ணம் பாரதியின் இந்தியா இதழிலும் வெளிப்பட்டது.

**பாரதியின் தடம் பற்றி நடந்தவர்கள்**

இதழியலில் பாரதியின் தடம்பற்றி நடந்தவர்களில் பி.பி. சுப்பையா. ஹரிஹரர், என்.நாகசாமி, வ.ராமசாமி, பரலி.சு.நெல்லையப்பர், கனகலிங்கம் போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

எந்த நெருக்கடியான தருணத்திலும் பாரதி தம் இதழியல் பணியைக் கைவிடவில்லை. எடுத்துக்கொண்ட ஒவ்வொரு செயலிலும் தமது கொள்கையையும் உணர்வையும் வெளிப்படுத்தும் பண்பைப் பாரதியிடமிருந்து இளைய சமுதாயம் கற்றுக் கொள்ள வேண்டும்.

**இலக்கணக்குறிப்பு**

| | |
|---|---|
| வெண்சுவை | – பண்புத்தொகை |
| தீம்பால் | – பண்புத்தொகை |
| விரிகதிர் | – வினைத்தொகை |
| ஒழுகுநீர் | – வினைத்தொகை |
| பொற்காலம் | – மூன்றாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை |
| பொற்சிலம்பு | – மூன்றாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை |
| கொண்ட | – பெயரெச்சம் |
| அறிவும் ஒழுக்கமும் | – எண்ணும்மை |
| பந்தர் | – பந்தல் என்பதன் ஈற்றுப்போலி |



www.tnpscjob.com

| | | |
|---|---|---|
| அறிதல் | – | தொழிற்பெயர் |
| போற்றல் | – | தொழிற்பெயர் |
| நினைத்தல் | – | தொழிற்பெயர் |
| கேட்டல் | – | தொழிற்பெயர் |
| பயிறல் | – | தொழிற்பெயர் |
| நனிஇகக்கும் | – | உரிச்சொற்றொடர் |

**பகுபத உறுப்பிலக்கணம்**

1. மெலிந்து = மெலி + த் (ந்) + த் + உ
   மெலி – பகுதி; த் – சந்தி; ந் – விகாரம்; த் – இறந்தகால இடைநிலை;
   உ – வினையெச்ச விகுதி
2. மறுத்து = மறு + த் + த் + உ
   மறு– பகுதி; த் – சந்தி; த் – இறந்தகால இடைநிலை; உ–வினையெச்ச விகு
3. விடுத்தல் = விடு + த் + தல்
   விடு – பகுதி; த்–சந்தி; தல்– தொழிற்பெயர் விகுதி.
4. அறிந்து = அறி + த் (ந்) + த் + உ
   அறி–பகுதி; த்–சந்தி; 'ந்' ஆனது விகாரம்; த் – இறந்தகால இடைநிலை;
   உ– வினையெச்ச விகுதி.

**புணர்ச்சி விதி**

1. சிறுகோல் = சிறுமை + கோல்
   ஈறுபோதல் = சிறு + கோல்
   = சிறுகோல்
2. பொற்சிலம்பு = பொன் + சிலம்பு
   ணன வல்லினம் வர டறவும் = பொற்சிலம்பு
3. இழுக்கின்றி = இழுக்கு + இன்றி
   உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும் = இழுக்க் + இன்றி
   உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே = இழுக்கின்றி
4. முறையறிந்து = முறை + அறிந்து
   இஈஐ வழி யவ்வும் = முறை + ய் + அறிந்து
   உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே = முறையறிந்து



www.tnpscjob.com

## மொழியை ஆள்வோம்

### சான்றோர் சித்திரம்

### ஜி.யு. போப்



செந்தமிழ்ச் செம்மல் டாக்டர் ஜி.யு. போப், 1839 ஆம் ஆண்டில், தென்னிந்தியாவுக்கு வந்தார். சென்னையை அடைந்த போப், 'சாந்தோம்' என்னும் இடத்தில் முதன் முதலாகத் தமிழ் உரையைப் படித்துச் சொற்பொழிவாற்றினார். ஆங்கிலேயரான அவரின் தமிழுரை கூடியிருந்த தமிழர்களுக்குப் பெருவியப்பளித்தது. தமிழ் மொழியைப் பயிலத்தொடங்கிய சிறிது காலத்திலேயே, ஐரோப்பியரும் படித்துப் பயன்பெற வேண்டுமென்ற எண்ணத்தில், தமிழ் நூல்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்ததாகக் குறிப்பிட்டுள்ளார்.இவரது திருக்குறள், திருவாசக ஆங்கில மொழிபெயர்ப்புகள் சிறப்பு வாய்ந்தவை.

போப் அவர்கள் தஞ்சாவூரில் வாழ்ந்தபோது, தமிழ் இலக்கிய இலக்கணங்களைத் தெளிவுற அறிந்தார்.அப்போதுதான் தொல்காப்பியம், நன்னூல் முதலிய பேரிலக்கண நூல்களைப் பாடசாலை மாணவர் படிப்பது எளிதன்று என்பதைக் கண்டு, சிறிய தமிழ் இலக்கண நூல்கள் சிலவற்றை எழுதி வெளியிட்டார். ஐரோப்பியர், தமிழ் மொழியைக் கற்றுக் கொள்வதற்குரிய நூல் ஒன்றை ( Tami Hand Book) எழுதினார். ஆங்கில மொழியில் எழுதப் பெற்றிருந்த தமிழ்நாட்டு வரலாற்றை, தமிழில் எழுதிப் பதிப்பித்தார். பள்ளிக்கூடங்களில் பயிலும் மாணவர்கள், தாய்மொழி வழியாகவே அனைத்துத் துறைக் கல்வியையும் பெறுதலே முறையானதென்றும், அத்தகைய கல்வியே பயனளிக்குமென்றும் போப் கருதினார். எழுபது ஆண்டுகள் தமிழோடு வாழ்ந்திருந்து, தமிழுக்கு நலம் செய்த பெரியார் ஜி.யு. போப் ஆவார்.

**கீழ்க்காணும் வினாக்களுக்கு விடை தருக.**

1. **இலக்கணக் குறிப்பு தருக.**

அ) பிறந்தார்

பிறந்தார் – பலர்பால் வினைமுற்று

ஆ) அருளிய

அருளிய – பெயரெச்சம்



www.tnpscjob.com

2. **திருக்குறளை ஐரோப்பியரும் படித்துப் பயன்பெற வேண்டும் என்ற போப் எண்ணத்தில், அதை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர் ஜி.யு போப். விடைக்கேற்ற வினாவை எழுதுக.**

திருக்குறளை ஐரோப்பியரும் படித்துப் பயன்பெறவேண்டும் என்ற எண்ணத்தில் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர் யார்?

3. **பதிப்பித்தார் – பகுபத உறுப்பிலக்கணம் தருக.**

பதிப்பித்தார் – பதிப்பி + த் + த் + ஆர்

பதிப்பி – பகுதி; த் – சந்தி; த் – இறந்தகால இடைநிலை ;

ஆர் – பலர்பால் வினைமுற்று விகுதி.

4. **வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக.**

பள்ளி கூடங்களில் பயிலும் மாணவர்கள், தாய்மொழி வழியாகவே அனைத்து துறை கல்வியையும் பெறுதலே முறையானதென்றும், அத்தகையக் கல்வியே பயனளிக்குமென்றும் போப் கருதினார்.

விடை : பள்ளிக் கூடங்களில் பயிலும் மாணவர்கள், தாய்மொழி வழியாகவே அனைத்துத் துறைக் கல்வியையும் பெறுதலே முறையானதென்றும், அத்தகைய கல்வியே பயனளிக்குமென்றும் போப் கருதினார்.

5. **பொருத்துக.**

| | |
|---|---|
| அ) தொல்காப்பியம் | – i) சங்க நூல் |
| ஆ) திருக்குறள் | – ii) பக்தி நூல் |
| இ) புறநானூறு | – iii) அற நூல் |
| ஈ) திருவாசகம் | – iv) இலக்கண நூல் |

**விடை :**

| | |
|---|---|
| அ) தொல்காப்பியம் | – i) இலக்கண நூல் |
| ஆ) திருக்குறள் | – ii) அற நூல் |
| இ) புறநானூறு | – iii) சங்க நூல் |
| ஈ) திருவாசகம் | – iv) பக்தி நூல் |



www.tnpscjob.com

செய்திக்குக் கீழுள்ள ஆங்கிலச் சொற்களுக்கு இணையான தமிழ்ச் சொற்களை மொழிபெயர்ப்புப் பகுதியிலிருந்து கண்டறிந்து எழுதுக.

The Chinese have no religious science. The practices of their religion (Buddhism) are derived from India. They believe that it is the Indians who brought idols to them and that the latter were their religious educators. In China and in India they believe in metempsychosis. The Chinese and Indians draw from the same religious principles different conclusions. In India medicine and philosophy are practiced. The Chinese practice medicine equally. Their chief treatment is cauterization. The Chinese practice astronomy but the Indians practice this science still more.

Written by Abu Zayd Al Sirafi, traveller, 10 th Century.

Foreign notices of South India by K.A. Neelakanda Sastri

சீனாவுக்கென்று தனியாக மதங்கள் இல்லை. இந்தியாவின் மதத்தை (பவுத்தம்) அவர்கள் கடைப் பிடிக்கின்றனர். சிலைகளைத் தங்களுக்கு அறிமுகம் செய்தோர் இந்தியர்கள் என்று நம்பும் சீனர்கள், இந்தியர்களே தங்களின் மத ஆசிரியர்கள் என்றும் கருதுகின்றனர். இந்தியாவிலும் சீனாவிலும் மரணத்துக்குப் பின்னான மறுபிறப்பை நம்புகின்றனர். ஒரே மத கோட்பாடு இருந்தாலும், சீனர்களும் இந்தியர்களும் வெவ்வேறு தீர்மானங்களுக்கு வருகிறார்கள்.

இந்தியாவில் மருத்துவமும், தத்துவமும் நடைமுறையில் உள்ளன. அவர்களுக்குச் சமமாகச் சீனர்களும் மருத்துவத்தை நடைமுறையில் வைத்திருக்கிறார்கள். 'தீய்த்தல்' அவர்களது பிரதான சிகிச்சை முறை. சீனர்கள் வானியல் சாஸ்திரப் பயிற்சியில் ஈடுபடுகிறார்கள். ஆனால் இந்த அறிவியலை இந்தியர்கள் இன்னும் அதிகமாய்ப் பயன்படுத்துகின்றனர்.

Religion – மதம்
Medicine – மருத்துவம்
Philosophy – தத்துவம்
Science – அறிவியல்
Idols – சிலைகள்



www.tnpscjob.com

**கீழ்க்காணும் பத்தியில் உள்ள உருவகங்களையும் உவமைகளையும் பட்டியலிடு. உருவகங்களை உவமைகளாக மாற்றுக. உவமைகளை எவ்வகை உவமைகள் என்று எழுதுக.**

விழிச்சுடர் வாசலில் உட்கார்ந்திருந்தாள். அவளது எண்ணவலையில் மின்னல்களைப் போன்ற சொற்கள் தோன்றி மறைந்தன. அடுக்கி வைக்கப்படாத புத்தகங்களைப் போலக் குழம்பிய எண்ணங்களை ஒழுங்குபடுத்த நினைத்தாள். நேரம் நத்தையைப் போல மெதுவாக நகர்ந்தது. அண்ணாந்து பார்த்தாள். நீலப்பட்டு உடுத்தியதைப் போன்ற வானம் அம்மாவை நினைவூட்டியது. பூனைக் குட்டியைப்போல அம்மாவின் முந்தானைக்குள் சுருண்டு கொள்ள நினைத்தாள். பூனைக்குட்டியை மடியில் வைத்துக்கொண்டதைப்போல அம்மாவின் கதகதப்பை உணர்ந்தாள். பசிக்கயிற்றால் சுண்டிவிடப்பட்டவள், பூட்டியிருந்த வீட்டுக் கதவின்மேல் சாய்ந்தபடி அம்மாவின் வருகைக்காகக் காத்திருக்கத் தொடங்கினாள்.

1. விழிச்சுடர் – உருவகம்
   சுடர்விழி – உவமை
2. பசிக்கயிறு – உருவகம்
3. எண்ணவலை – உருவகம்
   வலைபோன்ற எண்ணம் – உவமை
4. மின்னல்கள் போன்ற சொற்கள் – உவமை
   சொல்மின்னல் – உருவகம்
5. அடுக்கி வைக்கப்படாத புத்தகங்களைப் போல – உவமை
6. நேரம் நத்தையைப்போல மெதுவாய் நகர்ந்தது. – உவமை
7. நீலப்பட்டு உடுத்தியதைப் போன்ற வானம் – உவமை
8. பூனைக்குட்டியைப்போல – உவமை
9. பூனைக்குட்டியை மடியில் வைத்துக் கொண்டதைப் போல் – உவமை.

**கீழ்க்காணும் பத்திகளைப் படித்து மூன்றில் ஒரு பங்காகச் சுருக்கி எழுதுக.**

கல்வி என்றால் என்ன? அது புத்தகங்களைப் படிப்பதா? அல்லது அது பலவிதமானதைக் குறித்த அறிவா? அதுவும் இல்லை. எத்தகைய பயிற்சியின்மூலம் மனத்தின் ஆற்றலும் அது வெளிப்படும் தன்மையும் கட்டுப்பாட்டிற்கு உட்படுத்தப்பட்டுப் பயன்தரும் வகையில் அமைகிறதோ, அந்தப் பயிற்சிதான் கல்வியாகும். அக்கல்வி வளர்ச்சிக்கு ஒரே ஒரு வழிதான் உண்டு. அதுதான் மனத்தை ஒருமுகப்படுத்தும் பயிற்சி. கல்வியின் நோக்கம் செய்திகளைப் பற்றிய அறிவைச் சேமிப்பதன்று. கல்வியின் நோக்கமே மனத்தை ஒருமுகப்படுத்துவதுதான். மனவொருமைப்பாடே கல்வியின் அடிப்படை.



www.tnpscjob.com

எல்லோரும் தங்கள் அறிவு வளர்ச்சிக்கு அம்முறையைத்தான் பின்பற்றியாக வேண்டும். மனத்தை ஒருமுகப்படுத்தும் அளவுக்கு அறிவும் வளரும். இயற்கையால் மூடப்பட்டிருக்கும் அறிவுச்சுடரைத் திறப்பதற்கு இதுவொன்றே சிறந்த வழியாகும். மனிதன் தன் சக்தியை நூற்றுக்குத் தொண் ணூறு விழுக்காடு வீண் செய்து விடுகிறான். இதனால்தான், அவன் அடிக்கடி தவறுகள் செய்கிறான். பண்புடைய மனத்தைப் பெற்றவன் ஒரு தவற்றையும் செய்யமாட்டான்.

மனிதனுக்கும் விலங்குக்கும் உள்ள முக்கிய வேறுபாடு மனத்தை ஒருமுகப்படுத்துவதில்தான் இருக்கிறது. எத்துறையிலும் வெற்றி பெறுவது இதைப் பொறுத்துத்தான் அமைகிறது. இசை, ஓவியம், சிற்பம் முதலிய எல்லாக் கலைகளிலும் சிறப்பாகத் தேர்ச்சி பெறச் செய்வது மன ஒருமைப்பாடுதான். மேலும், உலகத்தின் புதிர்களை மூடி வைத்திருக்கும் கதவுகளைத் திறக்கக்கூடிய வலிமையை நாம் பெறவேண்டும். இவ்வலிமையை நமக்கு அளிக்கக்கூடியது மன ஒருமைப்பாடுதான். அதுவே கல்விக்கு அடிப்படையாகும். (கல்வி – சுவாமி விவேகானந்தர்)

**செம்மை வரைவு**

**மன ஒருமைப்பாடு**

பயிற்சியின் மூலம் மன உறுதியின் வேதமும் அதன் வெளிப்படும் தன்மையும் கட்டுப்பாட்டிற்கு உட்பட்டுப் பயன்தரும் வகையில் அமைந்தால் அதுதான் கல்வியாகும். கல்வி வளர்ச்சிக்கு வழி மனத்தை ஒருமுகப்படுத்துதல் ஆகும். கல்வியின் நோக்கம் அறிவைச் சேமித்தல் அன்று, மனத்தை ஒருமுகப்படுத்துதலே. பண்புடைய மனம் பெற்றவன் ஒரு தவறும் செய்யமாட்டான். மனிதனுக்கும் விலங்குகளுக்கும் உள்ள வேறுபாடு மன ஒருமைப்படுத்தல்தான். எல்லாக் கலைகளிலும் தேர்ச்சி பெற மன ஒருமைப்பாடே முக்கியம் – அடிப்படை.

கொடுக்கப்பட்ட பகுதியில் உள்ள சொற்கள் : 135

சுருக்கப்பட்ட பகுதியில் உள்ள சொற்கள் : 45

**மொழியோடு விளையாடு**

**எண்ணங்களை எழுத்தாக்குக.**



ஒரு வானத்தில் பல விண்மீன்கள்.
ஒரு மரத்தில் பல பறவைகள்.
ஒரு படத்தில் பல காட்சிகள்



www.tnpscjob.com

காலை எழுந்ததும் கணிப்பொறிக் கல்வி
மாலை முழுதும் விளையாட்டு
வானத்தை வசப்படுத்தும் விண்ணியல்
பட்டங்கள் ஆழ்வதும் சட்டங்கள் செய்வதும்
பாரில் பெண்கள் செய்யும்போக்கு
பள்ளித்தல மனைத்தும் கோயில்
செய்யலாம் வாருங்கள்
இணைந்த கைகளில் இருக்கும்
இறுக்கம் நெருக்கமாகட்டும்
கைத்தொழில்களைக் கற்றுக்கொள்வோம்
வரும் வெற்றிகள் பெற்றுக்கொள்வோம்.
அறிவியலில் உயர்வோம்
அகிலத்தை உயர்த்துவோம்.

**மறைந்திருக்கும் சொற்களைக் கண்டுபிடிக்க.**

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| கோ | ஸா | ல் | சு | யா | ம் | மா | ண் | பு | பொ |
| த் | ர | வ | வ | ஜ | ற | யா | ஜ | வி | த் |
| தா | த | னு | டி | வி | ன் | தி | வே | க் | த |
| ரி | ம | ப | ட் | டி | ம | ண் | ட | ப | ம் |
| ர் | ம் | க | ந | ற் | றி | ணை | ல் | போ | ட |
| னா | ண | ண | ம் | பா | ர் | ப் | ர | த | கூ |
| ட | க | க் | க | ல | யா | ப | ம் | னா | க் |
| லா | க் | கா | த | பா | தி | ள் | ண | ர் | ளை |
| ல் | ல | ய | த் | ர | ர | ளி | ம | கு | ள் |
| க | இ | ன் | பொ | தி | ப்ா | ம் | ச | ர | பி |

**விடை :**

கோத்தாரி
கணக்காயன்
மதரஸா
திண்ணைப்பள்ளி
பௌத்தம்
திண்ணை

கல்லாடனார்
பாலபாரதி
பாரதியார்
சமணம்
பார்
மன்றம்

இலக்கணம்
சுவடி
போதனார்
புவி
பிள்ளைக்கூடம்
விஜயா

பனுவல்
பொத்தகம்
நற்றிணை
பட்டிமண்டபம்
பள்ளி



www.tnpscjob.com

## சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்க.

(எ.கா) கால்நடை

- கால்நடைகளை மேய்ச்சல் நிலத்திற்கு ஓட்டிக் கொண்டுபோனார்கள்.

- சிறிய தொலைவைக் கடக்கக் கால் நடையாகச் செல்வது உடலுக்கு நலம் பயக்கும்.

| | | |
|---|---|---|
| 1. பிண்ணாக்கு – | 2. எட்டுவரை | 3. அறிவில்லாதவன் |
| பிள் நாக்கு | எள்துவரை | அறிவில் ஆதவன் |
| 4. தங்கை – | 5. வைகை – | 6. நஞ்சிருக்கும் – |
| தம் கை – | வை கை | நஞ்சு இருக்கும் |

1. **பிண்ணாக்கு**

அ) மாடுகள் பிண்ணாக்குக் கலந்த தண்ணீரை விரும்பிக் குடிக்கும்.

ஆ) பாம்புகள் பிள் நாக்கு (பிளவுபட்ட நாக்கு) உடையவை.

2. **எட்டுவரை**

அ) இனியன் எட்டுவரை எண்ணினான்.

ஆ) எள் துவரை போன்ற பயிர்கள் தமிழ்நாட்டில் அதிகம் விளைகின்றன.

3. **அறிவில்லாதவன்**

அ) எனது நண்பன் உடல் நலம் பேணுவதில் அறிவில்லாதவனாக இருக்கிறான்.

ஆ) எனது நண்பன் அறிவில் ஆதவனாக (சூரியன்) இருக்கிறான்.

4. **தங்கை**

அ) எனது தங்கை தமிழ்ப் பாடல்களை இசையோடு பாடுவாள்.

ஆ) எங்கள் ஊரில் நெல்லை இயந்திரத்தில் அரைக்காமல் தம் கையால் குத்தி அரிசியாக்கி உண்கிறார்கள்.

5. **வைகை**

அ) பரிபாடலில் வைகை ஆற்றைப் பற்றிய பாடல்கள் மிகுந்துள்ளன.

ஆ) என் தலையில் கை வை என்று என் தம்பி கூறினான்.

6. **நஞ்சிருக்கும்**

அ) எனது நண்பன் நஞ்சிருக்கும் (நைந்து இருக்கும் – நன்கு கனிந்திருக்கும்) பழங்களை விரும்பி உண்பான்.

ஆ) பாம்புகளின் தலையில் நஞ்சு இருக்கும்.



www.tnpscjob.com

## கூடுதல் வினாக்கள்

### ஒரு மதிப்பெண் வினாக்கள்

1. கல்வி கற்பதற்காகப் பிரிந்து செல்லும் பிரிவின் பெயர் யாது?
   ஓதற்பிரிவு
2. கல்வியின் பொருட்டு பிறக்கும் மெய்ப்பாடு எது?
   பெருமிதம்
3. எண்வகை மெய்ப்பாடுகள் பற்றிக் கூறும் நூல் எது?
   தொல்காப்பியம்
4. 'உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்,
   பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே' – என்று பாடியவர் யார்?
   ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன்
5. "உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்
   பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே" என்று கல்வியின் சிறப்பைக் கூ
   நூல் எது?
   புறநானூறு.
6. "துணையாய் வருவது தூயநற் கல்வி" என்று கூறும் நூல் எது?
   திருமந்திரம்
7. "கல்வி அழகே அழகு" என்று கூறும் நூல் எது?
   நாலடியார்
8. "இளமையில் கல்" என்று கூறியவர் யார்?
   ஔவையார்
9. தமிழ் இதழ்களில் தமிழ் ஆண்டு, திங்கள், நாள் ஆகியவற்றை முதன்முதல
   குறித்தவர் யார்?
   பாரதியார்
10. மலைக்குகையில் தங்கி கல்வியையும், சமயத்தையும் போதித்தவர்கள் யா
    சமணசமயத்தைச் சேர்ந்த திகம்பரத்துறவிகள்.
11. 'பள்ளி' என்ற சொல்லின் பொருள் யாது?
    'படுக்கை'
12. தமிழகத்தின் புகழ்பெற்ற சமணக் குன்று எது?
    கழுகுமலை
13. கல்வி கற்பிக்கப்படும் இடங்களைப் 'பள்ளி' என்று கூறும் நூல் எது?
    பெரிய திருமொழி
14. கல்வி கற்பிக்கப்படும் இடங்களை 'ஓதும் பள்ளி' என்று கூறும் நூல் எது?
    திவாகர நிகண்டு



www.tnpscjob.com

15. கல்வி கற்பிக்கப்படும் இடங்களைக் 'கல்லூரி' என்று குறிக்கும் நூல் எது?
சீவக சிந்தாமணி
16. விளாப்பாக்கத்தில் சமணப்பள்ளியை நிறுவிய சமணப்பெண் ஆசிரியர் யார்?
பட்டினிக்குரத்தி
17. 'ஒட்டிய சமயத்து உறுபொருள்வாதிகள் பட்டிமண்டபத்துப் பாங்கறிந்து ஏறுமின்' என்று கூறும் நூல் எது?
மணிமேகலை
18. காஞ்சிபுரத்திற்கு வந்து, அங்குள்ள பௌத்தப் பல்கலைக்கழகத்தில் சிறப்புரை ஆற்றிய சீனப்பயணி யார்?
யுவான் சுவாங்
19. திருவாவடுதுறை ஆதீன மடத்தின் தலைமைப்புலவராக விளங்கியவர் யார்?
மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை.
20. உ.வே.சா. பாடம் பயின்ற முறை எது?
உயர்நிலைக் கல்விமுறை.
21. உ.வே.சா. யாரிடம் கல்வி பயின்றார்?
மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை
22. முதன்முதலாக அச்சுக்கூடம் எங்கு ஏற்படுத்தப்பட்டது?
தரங்கம்பாடி
23. தரங்கம் பாடியில் அச்சுக்கூடம் நிறுவியவர்கள் யார்?
டச்சுக்காரர்கள்
24. இந்தியாவில் முதன்முதலில் அச்சேறிய மொழி எது?
தமிழ்
25. 'இந்தியக் கல்வி வளர்ச்சியின் மகாசாசனம்' என்று போற்றப்படுவது எது?
சார்லஸ் உட் அறிக்கை
26. 14 வயதிற்குட்ட அனைவருக்கும் கட்டாய இலவசக் கல்வி வழங்க வேண்டும் என்று வலியுறுத்திய அரசியலமைப்பு சட்டப்பிரிவு எது?
பிரிவு – 45
27. பாரதி பெண்களுக்காகக் குறள் வெண்பா எழுதிய இதழ் எது?
சக்கரவர்த்தினி
28. சென்னைப் பல்கலைக்கழகம் எந்த ஆண்டு தொடங்கப்பட்டது?
1857
29. பிள்ளைக்கூடம் – என்னும் கவிதையை எழுதியவர் யார்?
இரா.மீனாட்சி.



www.tnpscjob.com

30. பிள்ளைக்கூடம் என்னும் கவிதை எந்நூலில் உள்ளது?
கொடிவிளக்கு

31. எட்டுத்தொகை நூல்களுள் முதலாவதாக வைத்துப் பாடப்பட்ட நூல் எது?
நற்றிணை

32. நற்றிணையைத் தொகுப்பித்தவன் யார்?
பன்னாடு தந்த பாண்டியன் மாறன் வழுதி

33. நற்றிணைக்குக் கடவுள் வாழ்த்துப் பாடியவர் யார்?
பெருந்தேவனார்

34. நற்றிணையில் 110 ஆம் பாடலை மட்டும் பாடியவர் யார் ?
போதனார்

35. பாரதியார் தமிழாசிரியராகப் பணியாற்றிய பள்ளி எது?
மதுரை சேதுபதி உயர்நிலைப்பள்ளி

36. பாரதியார் உதவி ஆசிரியராகப் பணியாற்றிய இதழ் எது?
சுதேசமித்திரன்

37. தமிழ் இதழியல் துறையில் முதன் முதலாகக் கருத்துப்படங்களை அறிமுகப்படுத்தியவர் யார்?
பாரதியார்

**குறுவினா – கூடுதல் வினாக்கள்**

**1. பாரதி இந்தியா இதழை ஏன் சிவப்பு வண்ணத் தாளில் வெளியிட்டார்?**

சிவப்பு வண்ணம் புரட்சியையும் விடுதலையையும் குறிப்பது என்பதா அடிமைத்தளையில் இருந்து இந்தியாவை விடுவிக்க வேண்டும் என்ற எண்ணத்தி பாரதி இந்தியா இதழை சிவப்பு வண்ணத்தில் வெளியிட்டார்.

**2. பாரதி "சக்கரவர்த்தினி" இதழில் எழுதிய குறள் வெண்பா எது?**

"பெண்மை அறிவுயரப் பீடோங்கும் பெண்மைதான்
ஒண்மை யுறஓங்கும் உலகு"

– என்ற குறள் வெண்பாவை பெண்களுக்காகத் தமது "சக்கரவர்த்தினி" இதழி எழுதினார்.

**சிறுவினா – கூடுதல் வினாக்கள்**

**1. நற்றிணை – நூற்குறிப்பு வரைக.**

- நற்றிணை எட்டுத்தொகை நூல்களுள் முதலாவதாக வைத்து பாடப்படுவதாகும்.
- 'நல்லதிணை' என்ற அடைமொழியால் போற்றப்படும் சிறப்பினை உடைய
- நானூறு பாடல்களைக் கொண்டது.



www.tnpscjob.com

- 9 அடிகளைச் சிற்றெல்லையாகவும் 12 அடிகளைப் பேரெல்லையாகவும் கொண்டது.
- நற்றிணையைத் தொகுப்பித்தவன் பன்னாடு தந்த பாண்டியன் மாறன் வழுதி.
- இதன் கடவுள் வாழ்த்துப் பாடியவர் பாரதம் பாடிய பெருந்தேவனார்.

**2. மாணவர் பாடங்கேட்கும் (கற்கும்) முறையைத் தொல்காப்பியரின் சிறப்புப் பாயிர உரைவிளக்கப்பாடல் மூலம் விளக்குக.**

**மாணவர் பாடம் கற்கும் முறை**

- சிறப்புடைய மாணவர் எனப்படுவோர் உலக வழக்கு, நூல் வழக்கு இலக்கணங்களை ஆசிரியர்களிடம் குற்றமின்றி அறிவர்.
- பாடங்களைப் போற்றிக் கற்பர்.
- ஆசிரியர்களிடம் கற்ற பாடங்களை மீண்டும் நினைத்துப் பயிற்சி பெறுவர்.
- ஆசிரியரை அணுகிப் பாடக்கருத்துகளைக் கேட்டுத் தெளிவு அடைவர்.
- ஆசிரியர்களைப் போன்ற உயர்சிந்தனை உடையவர்களுடன் கலந்துரையாடிப் பயிற்சி பெறுவர்.
- தங்களது ஐயங்களை ஆசிரியர்களிடம் வினவித் தெளிவுறுவர்.
- அவ்வாறு தெளிவுற்ற கருத்துகளைப் பிறர்க்கு உணர்த்தித் தெளிவடையச் செய்வர்.
- ஆசிரியர் கூறும் கருத்துகளைள ஒருமுறைக்கு இருமுறை கேட்கும் மாணவர்கள் நூலைப் பிழையின்றிக் கற்கும் திறன் பெறுவர்.
- மூன்றுமுறை கேட்போர் பாடக்கருத்துகளைப் பிறர்க்கு முறையாக எடுத்துரைக்கும் ஆற்றல் பெறுவர்.
- இத்தன்மையில் பாடம் கேட்டலைக் கடமையாகக் கொண்ட மாணவர்கள் அறியாமையிலிருந்து விலகிச் சிறந்து விளங்குவர்.

**3. பாலைத் திணையை விளக்குக.**

**முதற்பொருள்**

| | | |
|---|---|---|
| நிலம் | : | சுரமும் சுரம் சார்ந்த நிலமும் |
| **பொழுது** | : | |
| சிறுபொழுது | : | நண்பகல் |
| பெரும்பொழுது | : | வேனில், பின்பனி |
| **கருப்பொருள்** | : | |
| தெய்வம் | : | கொற்றவை |
| மக்கள் | : | காளை, மீளி, எயினர், எயிற்றியர், மறவர், மறத்தியர். |
| பறவை(புள்) | : | புறா, பருந்து, கழுகு |



www.tnpscjob.com

| | | |
|---|---|---|
| விலங்கு | : | செந்நாய் |
| ஊர் | : | குறும்பு |
| நீர் | : | நீரில்லாக்குழி, கிணறு |
| பூ | : | குராஅம்பூ, மராம்பூ |
| மரம் | : | பாலை, உழிஞை, ஓமை |
| உணவு | : | வழியிற் பறித்த பொருள் (வழிப்பறி செய்த பொருள்) |
| பறை | : | துடிப்பறை |
| யாழ் | : | பாலையாழ் |
| பண் | : | பஞ்சுரப்பண் |
| தொழில் | : | போர்செய்தல், சூறையாடல் |
| **உரிப்பொருள்** | : | பிரிதலும் பிரிதல் நிமித்தமும் |

**சான்று:**

பிரசம் கலந்த வெண்சுவைத் தீம்பால். . . . எனத்தொடங்கும் போதனார் பாடிய நற்றிணைப் பாடல்.

**சான்று விளக்கம்:**

தலைவனோடு உடன்போகிய விளையாட்டுப் பருவம் மாறாத மகள் இல்லறம் ஆற்றும் பாங்கை நற்றாயிடம் செவிலித்தாய் வியந்து கூறுகிறாள்.

**4. மகள் நிலை உரைத்தல் அல்லது மனைமருட்சித் துறையை விளக்குக.**

**துறை விளக்கம்:**

தலைவனோடு உடன்போகிய விளையாட்டுப் பருவம் மாறாத மகள் இல்லறம் ஆற்றும் பாங்கை நற்றாயிடம் செவிலித்தாய் எண்ணிக் கூறுவது மகள்நிலை உரைத்தல் அல்லது மனைமருட்சித் துறை ஆகும்.

**சான்று**

பிரசம் கலந்த வெண்சுவைத் தீம்பால் ......எனத் தொடங்கும் நற்றிணைப் பாடல்.

**விளக்கம்**

தேன் கலந்த பாலை உண்ண மறுத்து ஓடிய விளையாட்டுப் பெண் பருவமடைந்து, தானே தன் வாழ்க்கைத் துணையைத் தேடியடைந்து, இல்லறம் நடத்தும்போது, ஒரு பொழுது மறுத்து ஒரு பொழுது உண்ணும் உறுதிப்பாடு பெற்றவளாய் விளங்குகிறாள். இத்தகைய அறிவும் ஒழுக்கமும் எங்கே உணர்ந்



www.tnpscjob.com

கொண்டாளோ? என்று கணவன் வீட்டில் வசிக்கும் தலைவியைக் காணச் சென்றுவந்த செவிலித்தாய் நற்றாயிடம் வியந்து கூறுகிறாள்.

**பொருத்தம்:**

விளையாட்டுப் பருவம் மாறாத பெண்ணான நம் மகள் இல்லறம் ஆற்றும் நல்ல அறிவும் ஒழுக்கமும் எங்கிருந்து உணர்ந்து கொண்டாளோ? என்று நற்றாயிடம் செவிலித்தாய் வியந்து கூறுவதால் இது இத்துறைக்குப் பொருந்தி வருகிறது.



www.tnpscjob.com

# இயல் - 5

| | | |
|---|---|---|
| உரைநடை | : | ஆனந்தரங்கர் நாட்குறிப்பு |
| செய்யுள் | : | சீறாப்புராணம் |
| | | அகநானூறு |
| துணைப்பாடம் | : | பிம்பம் |
| இலக்கணம் | : | பா இயற்றப் பழகலாம் |
| வாழ்வியல் | : | திருக்குறள் |



www.tnpscjob.com

| | | |
|---|---|---|
| தேமாங்காய் | புளிமா | தேமா |
| பச்/சை/மா | மலை/போல் | மே/னி |
| நேர் நேர் நேர் | நிரை நேர் | நேர் நேர் |
| | | |
| கருவிளம் | புளிமா | தேமா |
| பவ/ளவாய்க் | கம/லச் | செங்/கண் |
| நிரை நிரை | நிரை நேர் | நேர் நேர் |
| | | |
| கூவிளம் | புளிமா | தேமா |
| அச்/சுதா | அம/ரர் | ஏ/றே |
| நேர் நிரை | நிரை நேர் | நேர் நேர் |
| | | |
| தேமாங்காய் | புளிமா | தேமா |
| ஆ/யர்/தம் | கொழுந்/தே | என்/னும் |
| நேர் நேர் நேர் | நிரை நேர் | நேர் நேர் |
| | | |
| கூவிளம் | புளிமா | தேமா |
| இச்/சுவை | தவி/ர | யான்/போய் |
| நேர் நிரை | நிரை நேர் | நேர் நேர் |
| | | |
| கூவிளம் | தேமா | தேமா |
| இந்/திர | லோ/கம் | ஆ/ளும் |
| நேர் நிரை | நேர் நேர் | நேர் நேர் |
| | | |
| கூவிளம் | புளிமா | தேமா |
| அச்/சுவை | பெறி/னும் | வேண்/டேன் |
| நேர் நிரை | நிரை நேர் | நேர் நேர் |
| | | |
| கருவிளம் | புளிமா | தேமா |
| அரங்/கமா | நக/ரு | ளா/னே |
| நிரை நிரை | நிரை நேர் | நேர் நேர் |



www.tnpscjob.com

| | | |
|---|---|---|
| கூவிளம் | தேமா | தேமா |
| சீ/ரிய | நெற்/றி | எங்/கே |
| நேர் நிரை | நேர் நேர் | நேர் நேர் |

| | | |
|---|---|---|
| கருவிளம் | புளிமா | தேமா |
| சிவந்/தநல் | இதழ்/கள் | எங்/கே |
| நிரை நிரை | நிரை நேர் | நேர் நேர் |

| | | |
|---|---|---|
| கூவிளம் | புளிமா | தேமா |
| கூ/ரிய | விழி/கள் | எங்/கே |
| நேர் நிரை | நிரை நேர் | நேர் நேர் |

| | | |
|---|---|---|
| கருவிளம் | தேமா | தேமா |
| குறு/நகை | போ/ன | தெங்/கே |
| நிரை நிரை | நேர் நேர் | நேர் நேர் |

| | | |
|---|---|---|
| கூவிளம் | தேமா | தேமா |
| நே/ரிய | பார்/வை | எங்/கே |
| நேர் நிரை | நேர் நேர் | நேர் நேர் |

| | | |
|---|---|---|
| கருவிளம் | புளிமா | தேமா |
| நிமிர்ந்/தநன் | னடை/தான் | எங்/கே |
| நிரை நிரை | நிரை நேர் | நேர் நேர் |

| | | |
|---|---|---|
| கருவிளம் | புளிமா | தேமா |
| நில/மெலாம் | வணங்/கும் | தோற்/றம் |
| நிரை நிரை | நிரை நேர் | நேர் நேர் |

| | | |
|---|---|---|
| கருவிளம் | புளிமா | தேமா |
| நெருப்/பினில் | வீழ்ந்/த | திங்/கே |
| நிரை நிரை | நிரை நேர் | நேர் நேர் |

மேற்கண்ட ஆசிரிய விருத்தங்களை அசையாகவும் அசைக்குரிய வாய்பாடாகவும் வாய்பாட்டிற்குரிய தளையாகவும் எழுதுக.



www.tnpscjob.com

## இலக்கணத் தேர்ச்சி கொள்

1. **ஆசிரியப்பா எத்தனை வகைப்படும்? அவை யாவை?**

- ஆசிரியப்பா நான்கு வகைப்படும்

அவை,

- நேரிசை ஆசிரியப்பா
- இணைக்குறள் ஆசிரியப்பா
- நிலைமண்டில ஆசிரியப்பா
- அடிமறிமண்டில ஆசிரியப்பா

2. **ஆசிரியப்பாவிற்குரிய சீரும் தளையும் யாவை?**

- ஆசிரியப்பாவிற்குரிய சீர் – இயற்சீர். (ஆசிரிய உரிச்சீர்)
- ஆசிரியப்பாவிற்குரிய தளை – நேரொன்றாசிரியத்தளை,
  நிறையொன்றாசியத்தளை

3. **அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தங்களின் வகைகளையும் அவற்றை இயற்றுவதற்கான விதிகளையும் கூறுக.**

**அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்த வகைகள்**

சீர் அமைப்பை வைத்து அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தங்கள் பல்வேறு வகையாக எழுதப்படுகின்றன.

- ஓரடியுள் அரை அடிக்கு ஒரு விளச்சீரும் இருமாச்சீர் வருவனவும்
- ஓரடியுள் அரை அடிக்கு இரு மாச்சீரும் ஒரு காய்ச்சீர் வருவனவும்
- ஓரடியுள் நான்கு காய்ச்சீரும் இரு மாச்சீர் வருவனவும் உண்டு.

**இயற்றும் விதிகள்**

- கழிநெடிலடிகள் (ஆறுசீர்கள்) நான்கு கொண்டதாக அமைந்து, நான்கடியும் அளவொத்து வரவேண்டும்.
- முதற்சீரிலும், நான்காம் சீரிலும் மோனை அமைத்தும், முதற்சீரிலும், ஐந்தாம் சீரிலும் மோனை அமைத்தும், அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம் எழுதலாம்.



www.tnpscjob.com

4. பொருத்துக.

அ) நேரிசை ஆசிரியப்பா - i) முதலடியும் இறுதியடியும் அளவடிகளாய் வரும்.

ஆ) இணைக்குறள் ஆசிரியப்பா - ii) அடிகளை மாற்றினாலும் ஓசையும் பொருளும் மாறாது வரும்

இ) நிலைமண்டில ஆசிரியப்பா - iii) இறுதி அடியின் முந்தைய அடி சிந்தடியாய் வரும்.

ஈ) அடிமறிமண்டில ஆசிரியப்பா - iv) எல்லா அடிகளும் அளவடி பெற்று வரும்

விடை :

அ) நேரிசை ஆசிரியப்பா -i) இறுதி அடியின் முந்தைய அடி சிந்தடியாய் வரும்.

ஆ) இணைக்குறள் ஆசிரியப்பா - ii) முதலடியும் இறுதியடியும் அளவடிகளாய் வரும்.

இ) நிலைமண்டில ஆசிரியப்பா - iii) எல்லா அடிகளும் அளவடி பெற்று வரும்

ஈ) அடிமறிமண்டில ஆசிரியப்பா - iv) அடிகளை மாற்றினாலும் ஓசையும் பொருளும் மாறாது வரும்.

5. **பின்வரும் அறுசீர் விருத்தப் பாடல்களில் உள்ள விடுபட்ட சீர்களை ஏற்ற வகையில் அமைத்துப் பயிற்சி பெறுக.**

**பயிற்சி – 1.**

ஒரே அடியில் 6 சீர்; 1, 4 சீர்களில் மோனை வரவேண்டும். 1,2,4,5 ஆகியன தேமா அல்லது புளிமாவாக வரவேண்டும். 3,6 சீர்கள் ஏதேனும் ஒரு காய்ச்சீராக வரவேண்டும். வேறு தளைகள் பார்க்கத் தேவையில்லை. இவ்வகையில் பின்வரும் பயிற்சியை அமைக்க.

**மாச்சீர் + மாச்சீர் + காய்ச்சீர் – வாய்ப்பாடு**

மண்ணுக் கழகு மரமாகும்
மரத்திற் கழகு கிளையாகும்
கண்ணுக் கழகு **இமையாகும்**
கவிதைக் கழகு **கருத்தாகும்**
விண்ணுக் கழகு **நிலவாகும்**
வீதிக் கழகு **சுத்தமாகும்**
எண்ணுக் கழகு **எழுத்தாகும்**
எழுத்துக் கழகு **தெளிவாகும்**



www.tnpscjob.com

### பயிற்சி – 2

மண்ணுக்கு அழகு என்னும் இரு சீர்களின் பின் ஆகும் / தெளிவுடைமை/ தெளிவாகும்/ கிழியாமை/ பயன்படுதல்/ நற்கருத்து ......... எனப் பல வகைகளில் சீர்களை அமைத்துக் கொள்ளலாம்.

நாட்டுக் கழகு **பலமாகும்**
  **நட்புக்** கழகு **வளமாகும்**
வீட்டுக் கழகு **வீதியாகும்**
  **வீதிக்** கழகு **விரிவாகும்**
காட்டுக் கழகு **மரமாகும்**
  **கனிவுக்** கழகு **பணிவாகும்**
ஏட்டுக் கழகு **பாட்டாகும்**
  **எழுத்திற்** கழகு **தெளிவாகும்.**

### பயிற்சி – 3

ஒவ்வோரடியும், முதலிரு சீர்கள் ஈரசையாகவும் இறுதிச்சீர் நேரீற்று மூவசைச் சீராகவும் அமைத்துப் பழகுக.

காற்றைத் தந்த வான்வாழ்க!
  கனிவைத் தந்த மனம் வாழ்க !
சேற்றில் மலர்ந்த மலர் வாழ்க !
  சேர்ந்து வாழும் இனம் வாழ்க !
ஊற்றாய்ப் பெருகும் நீர் வாழ்க !
  ஊருக் குதவும் உளம் வாழ்க !
வேற்றுமை மறந்து பார் வாழ்க !
  வேதனை தீர்ந்து ஊர் வாழ்க !



www.tnpscjob.com

பலவுள் தெரிக.

1. பொருந்தாததைத் தேர்க.

அ) ஆனந்தரங்கர் எழுதிய நாட்குறிப்புகள் பன்னிரண்டு தொகுதிகளாக வெளிவந்துள்ளன.

ஆ) ஒவ்வொருநாள் நிகழ்வுக்கும் ஆண்டு, திங்கள், நாள், கிழமை, நேரம், நிகழ்விடம் ஆகியவற்றைக் குறிப்பிடாமல் செய்திகளை எழுதியுள்ளார்.

இ) ஆனந்தரங்கரின் நாட்குறிப்பு 18 ஆம் நூற்றாண்டின் தமிழ்ச் சமூகத்தைப் படம் பிடித்துக்காட்டுவதாக அமைந்துள்ளது.

ஈ) ஐரோப்பாவிலிருந்து இந்தியாவை அடையக் கப்பல்களுக்கு எட்டுத்திங்கள் தேவைப்பட்டன.

i) அ, ஆ ii) ஆ, இ iii) அ, இ iv) ஆ, ஈ

**விடை :** iv) ஆ, ஈ

2. ஆனந்தரங்கருக்குத் தொடர்பில்லாத குறிப்பு எது?

அ) மொழி பெயர்ப்பாளர்

ஆ) இந்தியாவின் பெப்பிசு

இ) தலைமைத் துவிபாஷி

ஈ) உலக நாட்குறிப்பு இலக்கியத்தின் தந்தை

**விடை :** ஈ) உலக நாட்குறிப்பு இலக்கியத்தின் தந்தை

3. உறுபகை, இடன் ஆகிய சொற்களின் இலக்கணக் குறிப்பு

அ) உரிச்சொல்தொடர், ஈற்றுப்போலி

ஆ) வினைத்தொகை, இடவாகு பெயர்

இ) வினையெச்சம், வினைத்தொகை

ஈ) பெயரெச்சம், பண்புத்தொகை

**விடை :** அ) உரிச்சொல்தொடர், ஈற்றுப்போலி

4. சரியானதைத் தேர்ந்தெடுக்க.

அ) வரை – மலை ஆ) வதுவை – திருமணம்

இ) வாரணம் – யானை ஈ) புடவி – கடல்

i) அ, ஆ, இ – சரி; ஈ–தவறு ii) ஆ, இ, ஈ – சரி; அ– தவறு

iii) அ, இ, ஈ – சரி; ஆ–தவறு iv) அ, ஆ, ஈ – சரி; இ–தவறு

**விடை :** i) அ, ஆ, இ – சரி; ஈ – தவறு

5. நேரொன்றாசிரியத்தளை எனப்படுவது

அ) காய் முன் நேர் ஆ) காய் முன் நிரை

இ) கனி முன் நிரை ஈ) மா முன் நேர்

**விடை :** ஈ) மா முன் நேர்



www.tnpscjob.com

குறுவினா

**1. மதீனா நகரம் ஒரு மாளிகை நகரம் என்னும் கூற்றினை உறுதிப்படுத்துக.**

**மாளிகை நகரம் மதீனா:**

- மேருமலையினைப் போன்று மதீனா நகரின் மேன்மாடங்கள் உயர்ந்திருந்தன.
- அங்காடிகள் நிறைந்த தெருக்களில் எழுந்த ஒலி, பெருங்கடலொலி போன்று இருந்தது.
- மதீனா நகரின் வீதிகள் பிரபஞ்சத்தைப் போன்று பரந்திருந்திருந்தன.
- அந்நகரில் சிறிதும் இடைவெளியின்றி மாளிகைகள் நெருக்கமாக அமைந்திருந்தன.
- ஆகவே, மதீனா நகரம் ஒரு மாளிகை நகரம் என்று அழைக்கப்படுகிறது.

**2. ஆனந்தரங்கரின் வருணனைத்திறனுக்கு ஓர் எடுத்துக்காட்டுத் தருக.**

- 08.06.1746 ஆம் நாள் லெல்பூர்தொனேலின் ஒன்பது கப்பல்கள் புதுவைக்கு வந்தன.
- இதுபற்றி ஆனந்தரங்கர், கப்பல்கள் வருகின்ற செய்தியைக் கேட்டதும் நஷ்டப்பட்ட திரவியம் மீண்டும் கிடைத்தாற்போலவும்,
- மரணமுற்ற உறவினர்கள் உயிர்பெற்று எழுந்து வந்தது போலவும்,
- நீண்டநாள் தவமிருந்து புத்திரப் பாக்கியம் கிட்டினாற்போலவும்,
- தேவாமிர்தத்தைச் சுவைத்தது போலவும் மக்கள் சந்தோஷித்தார்கள்.
- அதைக் காகிதத்தில் எழுத முடியாது என தனது நாட்குறிப்பேட்டில் ஆனந்தரங்கர் கப்பல் வருகையை வருணனை செய்துள்ளார்.

**3. நெருங்கின, இரங்கி – உறுப்பிலக்கணம் தருக.**

அ) நெருங்கின – நெருங்கு + (இ) ன் + அ

நெருங்கு – பகுதி ; (இ)ன்–இறந்த கால இடைநிலை; அ–பெயரெச்ச விகுதி

ஆ) இரங்கி – இரங்கு + இ

இரங்கு – பகுதி; இ– வினையெச்ச விகுதி

4. "ஊனமில் ஊக்கமும் ஒளிரக் காய்த்தநல்
தீன்எனுஞ் செல்வமே பழுத்த சேணகர்"

**– இப்பாடலடிகளில் ஒளிரக் காய்த்தது எது? பழுத்தது எது?**

**ஒளிரக் காய்த்தது:**

திண்ணிய வலிமை நல்கும் வெற்றி, அவ்வெற்றியைத் தருகின்ற குறைவற்ற ஊக்கம் முதலியன காய்த்திருந்தன.

**பழுத்தது:**

"தீன்" எனும் செல்வம் பழுத்திருந்தது.



www.tnpscjob.com

5. ஈரசைச் சீர்களுக்கு வழங்கப்படும் வேறு பெயர்கள் யாவை?

- ஆசிரிய உரிச்சீர், இயற்சீர்

**சிறுவினா**

1. "கலைவலார் மறையவர் கருத்தில் எண்ணியது" – யாது?

- பழமையான மதீனா நகரம், கலைஞர்களும் மறையவர்களும் நினைக்கின்ற பொருள் வளத்தைக் கொண்டது.
- அங்கு எந்தப் பொருளும் இல்லையென்று சொல்வதற்கு இல்லை.
- அப்படிக் கேட்போர்க்கும் அப்பொருளை எல்லாம் வாரி வழங்கும் வள்ளன்மை கொண்டவர்களும் உண்டு.
- அவ்வள்ளல்களைவிடக் குறையாத பெரும் புகழைப் பெற்றது மதீனா நகரம்.
- இவையே கலைஞர்களும் மறையவர்களும் கருத்தில் எண்ணியதாகும்.

2. "மறுவிலாத அரசென இருந்த மாநகர்" – உவமையைப் பொருளுடன் விளக்குக.

உவமை : குறைவில்லாத மானுட அறத்தை உடைய பெரும்புகழ் பெற்ற சிறந்த அரசு.

உவமேயம் : பொலிவுடன் இருந்த மதீனா நகரம்

உவமஉருபு : என

**விளக்கம்:**

பகை, வறுமை, நோய் முதலியவை மதீனா நகரிலிருந்து ஓடிவிட்டன. குறைவில்லாத மானுட அறத்தை உடைய செங்கோல் ஆட்சி நடத்திப் பெரும்புகழ் பெற்ற சிறந்த அரசைப்போல பொலிந்தது மதீனா.

3. ஆனந்தரங்கர் ஒரு வரலாற்று ஆசிரியர் என்பதைப் பாடப்பகுதிவழி எடுத்துக்காட்டுக.

- ஆனந்தரங்கருடைய நாட்குறிப்புகள் 25 ஆண்டுகாலத் தென்னிந்திய வரலாற்றை வெளிப்படுத்துவன.
- பிரெஞ்சுக் கப்பல் தளபதி லெபூர்தொனே ஆங்கிலேயரின் கட்டுப்பாட்டில் இருந்த சென்னையை 1746 இல் கைப்பற்றியதையும் அதனால் சினமுற்ற ஆற்காடு நவாபு அன்வர்தீன்கானின் மூத்த மகன் மகபூஸ்கான் பிரெஞ்சு அரசை எதிர்த்துப் போரிட்டார்.
- இப்போரினை நேரில் கண்டு உரைப்பது போல் நாட்குறிப்பில் கூறியுள்ளார்.
- தேவனாம்பட்டிணத்தைக் கைப்பற்றுவதற்காக ஆங்கிலேயருடன் பிரெஞ்சு அரசு நடத்திய படையெடுப்பு,



www.tnpscjob.com

- புகழ்பெற்ற ஆம்பூர் போர் பற்றிய செய்திகள்,
- தஞ்சை கோட்டை மீது நடத்திய முற்றுகை,
- இராபர்ட் கிளைவின் படையெடுப்பு, ஆங்கிலேயர் புதுச்சேரியை முற்றுகை இட்டது முதலியவற்றையெல்லாம் வரலாற்று ஆசிரியர் போன்று நாட்குறிப்பில் விளக்கிக் கூறியுள்ளார்.

**4. மேகத்திடம் கூறுவதுபோலத் தோழி தலைவனுக்கு உணர்த்திய இறைச்சிப் பொருள் யாது?**

- தலைவி தினைப்புனம் காக்கும் இடத்துக்குத் தலைவன் வரலாம் என்பது குறிப்பு. இது இறைச்சிப் பொருள்.

**5. ஆசிரியப்பாவின் பொது இலக்கணத்துள் எவையேனும் நான்கினைக் கூறுக.**

**ஆசிரியப்பாவின் பொது இலக்கணம்:**

- ஆகவலோசை கொண்டது.
- எல்லா அடிகளும் நான்கு சீர்களைப் (அளவடி) பெற்று வரும்.
- இயற்சீர் மிகுந்தும் பிறசீர் கலந்தும் வரும்.
- ஆசிரியத்தளை மிகுந்தும் பிறதளை கலந்தும் வரும்.
- நிரை நடுவாகிய வஞ்சி உரிச்சீர் ( கூவிளங்கனி, கருவிளங்கனி) வராமல் அமையும்.
- இறுதி அடியின் இறுதி எழுத்து 'ஏ' என்னும் எழுத்தால் முடிவது சிறப்பு.
- மூன்றடிச் சிற்றெல்லையாக அமையும். பேரெல்லை பாடுவோன் எண்ணத்திற்கேற்ப அமையும்.

**நெடுவினா**

**1. தாம் வாழ்ந்த காலகட்டத்தின் நாகரிகப் புதையலாக நாட்குறிப்பைப் பயன்படுத்தியவர் ஆனந்தரங்கர் என்பதை நிறுவுக.**

**முன்னுரை:**

புதுச்சேரி வரலாற்றினைப் பதிவு செய்தவரின் முதன்மையானவரும், பன்மொழிப் புலமையும் பல்துறை ஆளுமையும் கொண்ட ஆனந்தரங்கர் திருவேங்கடன் என்பாரின் மகனாவார். இவர் 1709 ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் 30 ஆம் நாள் சென்னையிலுள்ள பெரம்பூரில் பிறந்தார்.



www.tnpscjob.com

**நாட்குறிப்பு:**

உழைப்பும் உண்மையும் உறுதியும் மிக்க ஆனந்தரங்கர் பிரெஞ்சு ஆளுநர் துய்ப்ளே காலத்தில் தலைமைத் துவிபாஷியாகப் பணியாற்றினார். ஆனந்தரங்கர் தம்முடைய நாட்குறிப்பில் ஒவ்வொரு நாள் நிகழ்வுக்கும் ஆண்டு, நாள், கிழமை, அந்த நாளின் நேரம், நிகழ்விடம் ஆகியவற்றைக் குறிப்பிட்டே செய்திகளை எழுதியுள்ளார். ஆனந்தரங்கர் எழுதிய நாட்குறிப்புகள் 12 தொகுதிகளாகத் தமிழில் வெளிவந்துள்ளன. இவருடைய நாட்குறிப்புகள் 25 ஆண்டுகாலத் தென்னிந்திய வரலாற்றை வெளிப்படுத்துவன.

**நாட்குறிப்பு வெளிப்படுத்தும் சமுதாயச் செய்திகள்:**

இவரின் நாட்குறிப்பு 18 ஆம் நூற்றாண்டின் தமிழ்ச் சமூகத்தைப் படம் பிடித்துக் காட்டுவதாக அமைந்துள்ளது. பண்பாடு, சமயம், சாதி, நீதி, வணிகம், நம்பிக்கைகள் முதலான பல்வேறு கூறுகள் அடங்கிய நிகழ்வுகளை ஆனந்தரங்கர் பதிவு செய்துள்ளார். பலரும் தண்டம் கட்டியதாக ஆனந்தரங்கர் நாட்குறிப்பில் தெரிவித்துள்ளார்.

**தண்டனைகள்:**

பல்வேறு காரணங்களுக்காக மரணதண்டனை வழங்கல், காதறுத்தல், சாட்டையடி, கிடங்கில் போடுதல் முதலிய தண்டனைகள் அக்காலத்தில் வழங்கப்பட்டுள்ளன. தொடர்ந்து வீடுகளில் திருடிவரும் கும்பல் ஒன்று பிடிபட்டபோது, அவர்களுள் தலைமைத் திருடனை கடைத்தெருவில் தூக்கில் தொங்கவிட்டனர். ஏனைய இருவருக்கும் இரண்டு காதுகளை அறுத்து, ஐம்பது கசையடி தரப்பட்டது.

**ஈரமும், இரக்கமும்:**

1745 ஆம் ஆண்டு21 ஆம் நாள் வியாழக்கிழமை மாலைப்பொழுதில் வீசிய பெருங்காற்று புதுச்சேரியை சூறையாடியது. இப்பேரிடர் புதுச்சேரியில் நிகழ்ந்தபோது மக்கள்அனைவரும் உணவும் நீரும் இன்றி வாடியுள்ளனர். அப்போது ஒழுகரையிலே கனகராயர், பெருஞ்சோறு அளித்துத் தமிழரின் இரக்கத்தையும் ஈரத்தையும் வெளிப்படுத்தியதை ஆனந்தரங்கர் பெருமிதத்துடன் பதிவு செய்துள்ளார்.

**அரசியல் செய்திகள்:**

தென்னிந்தியாவில் நிகழ்ந்த பல்வேறு அரசியல் நிகழ்வுகளை ஆனந்தரங்கர் பதிவு செய்துள்ளார். தேவனாம்பட்டணத்தைக் கைப்பற்றுவதற்காக ஆங்கிலேயருடன் பிரெஞ்சு அரசு நடத்திய படையெடுப்பு, புகழ் பெற்ற ஆம்பூர் போர் பற்றிய செய்திகள், தஞ்சை கோட்டை மீது நடத்திய முற்றுகை, இராபர்ட் கிளைவின் படையெடுப்பு, ஆங்கிலேயர் புதுச்சேரியை முற்றுகையிட்டது என வரலாற்றாசிரியர் போல நாட்குறிப்பில் விளக்கிக் கூறியுள்ளார்.



www.tnpscjob.com

**முடிவுரை:**

இவ்வாறு தாம் வாழ்ந்த காலகட்டத்தின் நாகரிகப் புதையலாக நாட்குறிப்பைப் பயன்படுத்திய ஆனந்தரங்கர் 12.01.1761ல் மறைந்தார். அந்தக் காலத்தில் நடந்த அனைத்துச் செய்திகளையும் ஒன்றுதவறாமல் நல்ல பாஷையில் எழுதி வைத்திருக்கிறார் ஆனந்தரங்கர் என்று மகாகவி பாரதி கூறுவது முற்றிலும் உண்மையானது.

**2. மதீனா நகரம் ஒரு வளமான நகரம் என உமறுப்புலவர் வருணிக்கும் செய்திகளைத் தொகுத்து எழுதுக.**

**வளமான மதீனா நகரம்**

**மாளிகை நகரம்:**

மேருமலையினைப் போன்று மதீனா நகரின் மேன்மாடங்கள் உயர்ந்தும், அங்காடிகள் நிறைந்த தெருக்களில் பெருங்கடலொலி போன்ற ஒலி எழுந்தது. பிரபஞ்சத்தைப் போன்று பரந்திருந்த வீதிகளும், இடைவெளியின்றி மாளிகைகள் நெருக்கமாக அமைந்திருந்தது.

**கொடை நகரம்:**

கலைஞர்களும் மறையவர்களும் நினைக்கின்ற பொருள் வளத்தையும் உடையது மதீனா நகரம். எந்தப் பொருளும் இல்லையென்று சொல்லாத அளவிலே, கேட்போருக்கு வாரி வழங்கும் வள்ளன்மை கொண்டவர்கள் உண்டு. அவ்வள்ளல்களைவிட குறையாத பெரும்புகழ் கொண்ட நகரம் மதீனா.

**பொன்னகரம்:**

கட்டப்பட்ட தோரணங்களும், கொடிகளும் காடுபோல நெருங்கியிருந்தன. மலைபோன்ற யானைகள் அவ்விடத்தில் நிறைந்திருந்தன. ஒழுங்குடன் காணப்பட்ட வழிகளைப் பெற்ற மதீனா நகரம் முழுமைபெற்ற பூமியைப்போல பொன்னெனப் பொலிந்தது.

**மனைநகரம்:**

மதீனா நகரத்தில் வெண்சுண்ணச் சாந்தினைக் கொண்ட மாளிகைகள் ஒளிர்ந்தன. வீதிகளில் புதிய பூக்கள் சிந்திக்கிடந்தன. அனைவரையும் அழைத்துக் கொடுக்கும் விருந்தானது இனிமையுடன் இருந்தது. திருமண வீட்டைப்போன்று அந்நகர் பொலிவுடன் காட்சியளித்தது.

**மாநகரம்:**

பகை, வறுமை, நோய் முதலியவை மதீனா நகரிலிருந்து ஓடிவிட்டன. மேலும் குறைவில்லாத மானுட அறத்தை உடைய செங்கோல் ஆட்சி நடத்திப் பெரும்புகழ் பெற்ற சிறந்த அரசைப்போலப் பொலிவுடன் இருந்தது மதீனா மாநகரம்.



www.tnpscjob.com

**ஒண்ணகரம்:**

அலைகடலானது முத்தையும் பல்வேறு அணிகளையும் சிதறுவதுபோல மதீனா நகரில் மக்கள் பல்வேறு மொழிகளைப் பேசுகின்றனர். தேன் அருந்தியவர்கள் மயங்குவதுபோல பலவாறான பொருள் வளத்தால் ஒளி பெற்றுத் திகழ்கிறது மதீனா நகரம்.

**செம்மை நகரம்:**

மதீனா நகரில் தானம், ஒழுக்கம், தவம், ஈகை, மானம் முதலியன பூத்திருந்தன. திண்ணிய வலிமை நல்கும் வெற்றி, அவ்வெற்றியைத் தருகின்ற குறைவற்ற ஊக்கம் முதலியன காய்த்திருந்தன. தீன் எனும் செல்வம் பழுத்திருந்த செம்மை பொருந்திய நகராக மதீனா இருந்தது. இவ்வாறு அனைத்து வகையிலும் மதீனா நகரம் வளமான நகராக இருந்ததாக உமறுப்புலவர் வருணனை செய்கின்றார்.

**3. பிம்பம் கதையின் வாயிலாகப் பிரபஞ்சன் தெளிவுபடுத்தும் மனித முகங்களைப் பற்றி விவரிக்க.**

**முன்னுரை:**

நம் ஒவ்வொருவரிடமும் தனித்தன்மைகள் விருப்பங்கள் உள்ளன. ஆயினும் பிறரோடு உறவு கொள்கையில் அவர்களுக்கேற்றவாறு நம்மை மறைத்து, மாற்றிக் கொள்கிறோம்; வளைந்து கொடுக்கிறோம். ஆனால் நம் மனசாட்சி நம்முடைய இயல்பை நினைவூட்டிக்கொண்டே இருக்கும். உண்மை முகத்தை இழந்து அடையாளமற்ற தன்மையில் மாற்றி மாற்றி நாம் காட்டுகிற பிம்பம் பற்றி நம் மனசாட்சியைக் கேள்வி கேட்பதோடு நம் அசலையும் நினைவூட்டுகிறது இச்சிறுகதை.

**மனசாட்சி:**

என்னுடன் வளர்ந்து நானாகவே ஆகிவிட்ட அதுக்கு என்மேல் இருக்கும் சுவாதீனமும் ஒரு காரணம். கதவைத் திறந்தேன். இது உள்ளே வந்தது. உட்காரச் சொன்னேன். அது உட்காரவில்லை. வந்தது வீட்டைச் சுற்றி நோட்டம் விட்டது. இடதுகைத் தாழ்வாரச் சுவரும் நேர்ச் சுவரும் சந்திக்கும் இடத்தில் அதன் பார்வை வந்து நிலைகுத்தியதை நானும் உணர்ந்து அந்த இடத்தைப் பார்த்தேன். நான் மென்று துப்பிய எழும்புத் துண்டுகளை சாரை சாரையாக எறும்புகள் தம் உணவை அதில் கண்டு, தம் சக்திக்குட்பட்ட விகிதங்களில் எடுத்துக்கொண்டு போவதையும் ஈக்கள் கும்பலாய்ச் சுள்ளென்று பறந்து மொய்ப்பதையும் நான் பார்த்தேன். குறுநகையோடு அது என்னைப் பார்த்தது, எனக்கு வெட்கமாகப் போச்சு.

**எத்தனை முகங்கள்:**

அது மௌனமாக அறைக்குள் சென்று எதையோ வாரிக்கொண்டு வந்து என் முன் போட்டது. படபடவென்று சரியும் ஒலி என் புலனைத் தாக்க என்முன் குவிந்த பொருள்களைப் பார்த்தேன்.



www.tnpscjob.com

'இதெல்லாம் என்ன' – அது

'இவை என் முகங்கள்?' – நான்

'இத்தனை முகங்கள் உனக்கெதுக்கு?'

'இவை என் பார்வைகள், தேவைகள், சிரமமில்லாமலும், சிரமத்தோடும் சமயா சந்தர்பங்களில் நான் சேர்த்து அணிந்து கொள்ளும் முகங்கள் இவை'. 'நீ என்னையும் உன்னையும் ஏமாற்றுகிறாய் என்று வருத்தத்தோடு அது சொன்னது. நீயும் நானும் மாறி மாறி ஏமாற்றிக் கொள்ளுதலே நம் விஸ்தரிப்புகள், நம் ஆக்கங்கள் நம் விகசிப்புகள்'. நான் குனிந்து பார்த்தேன். என் காலடியில் பலவிதமான முகங்கள் பல வர்ணங்களில் பல அளவுகளில் பல கோணங்களில் சிதறிக் கிடந்தன. சிலது ரொம்பப் பழசு. சிலது ரொம்பப் புதுசு. சிலது பழசாகி இருந்து புதுசானவை. சிலது புதுசாகி இருந்து பழசானவை.

**பொய்முகம்:**

அம்மாவிடமும் முகம் மாற்றுவேன். மனைவியிடமும் முகத்தை மாற்றுவேன். முகம் மாற்றிக்கொள்ளும் சித்தி எனக்கு லபித்திருந்தது. நான் காலடியில் குவிந்திருந்த பல முகங்களில் ஏழெட்டைக் காலால் தள்ளி 'இவை என் சிநேகிதர்களுக்காக' என்றேன். சிலவற்றைத் தள்ளி, 'இவை என் தெருவுக்காக ஊருக்காக' என்றேன். அது நின்றபடியே நின்றிருந்தது. பார்த்தபடியே கண்டிருந்தது. "நீ இப்போது போட்டிருப்பது கூட ..........' 'பொய்தான். போலிதான்' நான் என் முகத்தைக் கழட்டி கீழே போட்டேன். 'இது' அது என் முகத்தைக் காட்டியது. 'இதுவும்' – நான். நிமிஷங்கள் கொஞ்சம் கரைய 'போய்வருகிறேன்' என்றது. 'சரி' ......... கதவைத் திறந்து விடை கொடுத்தேன். வெளியே சென்று, சற்று நின்று சொன்னது. 'கடைசியாக ஒன்று. உன்னுடைய முகம்தான் எது? ..........' 'எனக்கு முகமே கிடையாது......' என்று சொல்லி விட்டு, கதவைத் தாழிட்டேன்.

**முடிவுரை:**

மனித முகம் அகங்காட்டுகின்ற கண்ணாடி, இடம், காலம், சூழ்நிலை, பாத்திரம் ஆகியவற்றிற்கேற்ப முகங்கள் மனிதனுக்கு மாறிக்கொண்டே இருக்கின்றன. தனக்கென்று ஒரு தனித்துவமான தனியான முகம் கிடையாது என பிரபஞ்சன் பிம்பம் வாயிலாகக் கூறுகிறார்.

'இந்த உலகமே நாடக மேடை'; அதில் அனைவரும் வெறும் நடிகர்களே. ஒவ்வொருவருக்கும் அறிமுகமும் முடிவும் உண்டு. ஒருவருக்கே பல வேடங்களும் உண்டு. பல முகங்களும் உண்டு.



www.tnpscjob.com

**இலக்கணக்குறிப்பு**

| | |
|---|---|
| மலிந்த, மண்டிய, பூத்த, பொலிந்த | – பெயரெச்சங்கள் |
| இடன் | – ஈற்றுப்போலி |
| தரும் | – செய்யும் என்னும் வாய்ப்பாட்டுப் பெயரெச்சம் |
| பெரும்புகழ், தெண்டிரை | – பண்புத்தொகை |
| உறுபகை, மாநகர் | – உரிச்சொல்தொடர் |
| ஐந்தும் | – முற்றும்மை |
| பொன்நகர் | – இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை. |
| தானமும் ஒழுக்கமும், தவமும் ஈகையும் | – எண்ணும்மை |
| அருஞ்சமம் | – பண்புத்தொகை |
| வளைஇ, அசைஇ | – சொல்லிசையளபெடை |
| எறிவாள் | – வினைத்தொகை |
| அறன்,திறன் | – ஈற்றுப்போலி |
| பிழையா | – ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் |

**பகுபத உறுப்பிலக்கணம்**

1. மலிந்த – மலி + த் (ந்) + த் + அ

   மலி – பகுதி; த் – சந்தி; 'ந்' ஆனது விகாரம்; த் – இறந்தகால இடைநிலை; அ – பெயரெச்ச விகுதி.

2. நெருங்கின – நெருங்கு + இன் + அ

   நெருங்கு – பகுதி; இன் – இறந்தகால இடைநிலை ; அ – பெயரெச்ச விகுதி

**புணர்ச்சி விதி**

1. அரும்பொருள் = அருமை + பொருள்

   ஈறுபோதல் = அரு + பொருள்

   இனமிகல் = அரும்பொருள்

2. மனையென = மனை+என

   இஈஐ வழி யவ்வும் = மனை+ய்+என

   உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே– மனையென



www.tnpscjob.com

## மொழியை ஆள்வோம்

**சான்றோர் சித்திரம்**

### இரசிகமணி டி.கே.சிதம்பரநாதர் (1882–1954)



தமிழில் எல்லாம் உண்டு; தமிழின் கவிச்சுவைக்கு ஈடுமில்லை இணையுமில்லை; தமிழால் அறிவியல் மட்டுமன்று; அனைத்து இயல்களையும் கற்கமுடியும் எனச் சான்றுகளுடன் எடுத்துச் சொன்ன பெருந்தகை இரசிகமணி டி.கே.சிதம்பரநாதர். இவர், தமது இலக்கிய இரசிகத் தன்மையால் தமிழுக்கும் தமிழருக்கும் புத்துணர்வு ஊட்டியவர். டி.கே.சி.யின் வீட்டுக் கூடத்தில் வட்ட வடிவமான தொட்டிக்கட்டில், ஞாயிறுதோறும் மாலை ஐந்துமணிக்குக் கூடிய கூட்டம், இலக்கியத்தைப் பற்றிப்பேசியது. அவ்வமைப்பு 'வட்டத் தொட்டி' என்றே பெயர்பெற்றது. டி.கே.சி. இலக்கியங்களின் நயங்களைச் சொல்லச் சொல்லக் கூட்டத்திலுள்ள அனைவரும் தங்களை மறந்து இலக்கியத்தில் திளைப்பர். தமிழின் இனிமை என்பது மட்டும் அவர்கள் உள்ளங்களில் நிறைந்திருக்கும். வழக்கறிஞராகத் தொழில் புரிவதைவிடத் தமிழின்பத்தில் திளைப்பதையே டி.கே.சி விரும்பினார். தமிழ்க்கலைகள், தமிழ்இசை, தமிழ் இலக்கியம் ஆகியவற்றின் சுவையையும் மேன்மையையும் தனித்தன்மையையும் எடுத்துச் சொன்னார். கடிதங்களிலும் அவற்றையே வியந்து எழுதினார். அவர்தம் கடிதங்கள் இலக்கியத் தரம் கொண்டு புதிய இலக்கிய வகையாகவே கருதப்பட்டன. இதயஒலி, கம்பர் யார்? முதலான நூல்களும் முத்தொள்ளாயிரம், கம்பராமாயணம் ஆகியவற்றுக்கு எழுதிய உரையும் அவர்தம் இலக்கிய நுகர்வுக்கடலின் சில அலைகள் எனலாம். சென்னை மாநில மேலவையின் உறுப்பினராகவும் அறநிலையத் துறையின் ஆணையராகவும் திகழ்ந்த டி.கே.சி ஏற்றிய இலக்கிய ஒளி தமிழ் அழகியலை வெளிச்சப்படுத்தியது.

**வினாக்களுக்கு விடையளிக்க.**

1. அன்று, அல்ல என்பவற்றுக்கான பொருள் வேறுபாடு அறிந்து தொடர் அமைக்க.
   இது பொது வழி அன்று.
   இவை பழங்கள் அல்ல.
2. சொல்லச் சொல்ல, திளைப்பர்– இலக்கணக் குறிப்புத் தருக.
   சொல்லச் சொல்ல – அடுக்குத் தொடர்
   திளைப்பர் – பலர்பால் வினைமுற்று



www.tnpscjob.com

3. ரசிகர்– தமிழ்ச்சொல் எழுதுக. மாநில மேலவை – ஆங்கிலக் கலைச்சொல் தருக.
ரசிகர் – சுவைஞர்
மாநில மேலவை – Legislative Council

4. வழக்கறிஞராகத் தொழில் புரிவதைவிடத் தமிழின்பத்தில் திளைப்பதையே டி.கே.சி விரும்பினார் – விடைக்கேற்ற வினா அமைக்க.
உண்மையில் டி.கே.சி. எதனை விரும்பினார்?

5. மேலவை, புத்துணர்வு – இச்சொற்களின் புணர்ச்சி வகையைக் கண்டறிக.
மேலவை – மேல் + அவை
உடல் மேல் உயிர்வந்தொன்றுவது இயல்பே.
புத்துணர்வு – புதுமை + உணர்வு
ஈறுபோதல் – புது + உணர்வு
தன்னொற்றிரட்டல் – புத்து + உணர்வு
உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும் – புத்+த்+உணர்வு
உடல்மேல் உயிர்வந்தொன்றுவது இயல்பே – புத்துணர்வு

**தமிழாக்கம் தருக.**

The folk songs of Tamilnadu have in them a remarkable charm just as we find in the folk songs of any other country. But, what is special in these Tamil songs is, they not only possess a native charm and the aroma of the soil but have preserved in them a certain literary and artistic quality. This is so because the people who speak the language of these folk songs, the Tamils, have had a great historical past and a wonderful literary tradition. Folk songs are so old and yet so full of life that they are always new and progressively modern. These songs were born serveral centuries ago; they are being born every generation; they will be born and reborn over and over again!

எல்லா நாடுகளிலும் உள்ள நாட்டுப்புறப் பாடல்களைப்போல் தமிழ்நாட்டிலும் நாட்டுப்புறப் பாடல்கள் குறிப்பிடும்படியான அழகுணர்ச்சிகளையும் கவித் தன்மைகளையும் கொண்டுள்ளது. ஆனால், அதில் மிகவும் தனிச்சிறப்பானது மண் வாசனையோடு இலக்கிய சுவை நயமும் அதனோடு செறிந்து காணப்படுவது. இதற்குக் காரணம் தமிழ்மொழி பேசும் மக்களின் நீண்ட நெடிய வரலாறும், மிகச் சிறப்பான இலக்கிய மரபுமேயாகும். நாட்டுப்புறப் பாடல்கள் மிகவும் பழைமையானது ஆயினும் வாழ்வில் இரண்டறக் கலந்து நவீன காலத்திற்கு ஏற்றாற்போல் தன்னைப் புதுப்பித்துக் கொள்கிறது. நாட்டுப்புறப் பாடல்களின் தோற்றம் பல நூற்றாண்டுகள் பழைமையானது. ஒவ்வொரு தலைமுறையிலும்



www.tnpscjob.com

தோன்றிக் கொண்டே இருப்பது. வரும் காலங்களிலும் மீண்டும் மீண்டும் தோன்றக் கூடிய தன்மை வாய்ந்தது. இதுவே தமிழ் நாட்டுப்புறப் பாடலின் தனிச்சிறப்பாகும்.

**கீழ்க்காணும் பாடலின் முதலடியைக் கவனித்து, பிற அடிகளில் உள்ள சீர்களை ஒழுங்கு செய்க.**

கோடையிலே இளைப்பாற்றிக் கொள்ளும்வகை கிடைத்த
குளிர்தருவே தருநிழலே நிழல்கனிந்த கனியே
ஓடையிலேஊறுகின்றதீஞ்சுவைத்தண்ணீரே
உகந்ததண்ணீர் இடைமலர்ந்தசு கந்தமணமலரே
மேடையிலேவீசு கின்றமெல்லியபூங்காற்றே
மென்காற்றில்விளைசு கமேசு கத்திலுறும்பயனே
ஆடையிலேஎனைமணந்தமணவாளாபொதுவில்
ஆடுகின்றஅரசேஎன் அலங்கலணிந்தருளே !

விடை :

கோடையிலே இளைப்பாற்றிக் கொள்ளும்வகை கிடைத்த
குளிர்தருவே தருநிழலே நிழல்கனிந்த கனியே
ஓடையிலே ஊறுகின்ற தீஞ்சுவைத்தண் ணீரே
உகந்ததண்ணீர் இடைமலர்ந் தசுகந்தமண மலரே
மேடையிலே வீசுகின்ற மெல்லியபூங் காற்றே
மென்காற்றில் விளைசுகமே சுகத்திலுறும் பயனே
ஆடையிலே எனைமணந்த மணவாளா பொதுவில்
ஆடுகின்ற அரசேஎன் அலங்கலணிந் தருளே !

## மொழியோடு விளையாடு

கருத்துப்படத்தைப் புரிந்து கொண்டு பத்தியாக எழுதுக.






www.tnpscjob.com

பொருள் இலக்கணம் இரண்டு வகைப்படும்.

அவை: 1. அகப்பொருள், 2. புறப்பொருள்

அகப்பொருள் மூன்று வகையாகப் பிரிக்கப்படும்.

1. முதற்பொருள், 2. கருப்பொருள்
3. உரிப்பொருள்

நிலமும் பொழுதும் முதற்பொருளாகும்.

பொழுதுகள் சிறுபொழுது, பெரும்பொழுது என இருவகைப்படும்.

**எண்ணங்களை எழுத்தாக்குக :**



உயரமான பொருள்களிலெல்லாம் உயரமானது மலை. சுவையான தேன் சுவைகளில் சுவையானது மலைத்தேன். அந்த மலைத் தேனைக் கொண்டு வருவது எளிமையான காரியமன்று. ஆபத்தான செயல். உயிரையும் ஒருபொட்டாக மதிக்காமல் மலை உச்சிக்குச் சென்று தேனெடுப்பது மாவீரர்களுக்கானது. அந்த மாவீரத்தை மதிப்போம். கள்ளத்தனம் எதுவும் கலவாது இயற்கையோடு இணைந்து வாழும் மலையக மக்களை மதிப்போம் !! அவர்களை மகிழ்ச்சியாக வாழ வைப்போம்

காட்டுக்குள் தேனீக்கள்
கூட்டுக்குள் வைத்ததை – தமிழ்
ஏட்டுக்குள் கொண்டுவந்த
இந்தக் காட்சி இன்பம் தருவது.



www.tnpscjob.com

புதிர்களுக்கான விடைகளைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

(கம்பு, மை, வளை, மதி, இதழ், ஆழி)

1. எலியும், நுழையும் ; எழிலரசி கையும் நுழையும் (வளை)
2. அடிக்கவும் செய்யலாம் ; கோடைக்குக் கூழாகவும் குடிக்கலாம் (கம்பு)
3. கண்ணிலும் எழுதலாம் ; வெண்தாளிலும் எழுதலாம் (மை)
4. அறிவின் பெயரும் அதுதான் ; அம்புலியின் பெயரும் அதுவேதான் (மதி)
5. பூவின் உறுப்பும் நானே ; புன்னகையின் பிறப்பிடமும் நானே (இதழ்)
6. வண்டியையும் இயக்கும் ;பெரும் கப்பலையும் தாங்கும் (ஆழி)

## நிற்க அதற்குத் தக

| நாகரிகம் | கடைப்பிடிப்போம். |
|---|---|
| கலைவாணன் தொலைக்காட்சி பார்த்துக் கொண்டிருக்கிறான். கடைக்குச் சென்ற அவன் தாத்தா பை நிறையப் பொருள்களைத் தூக்கிக் கொண்டு வருகிறார். சுமை தாங்காது உதவிக்கு அழைக்கிறார். தொலைக் காட்சியில் வைத்தகண் வாங்காமல் நிகழ்ச்சி ஒன்றினைப் பார்த்துக் கொண்டிருக்கும் அவன் என்ன செய்ய வேண்டும்? | தொலைக்காட்சி நிகழ்ச்சியைப் பார்ப்பதை விட்டு விட்டு தாத்தாவின் சுமையைத் தாங்க வேண்டும். |
| உங்களது வீட்டிற்கு விருந்தினர் ஒருவர் வந்திருக்கிறார். முன்னறிவிப்பின்றி வந்திருக்கும் அவர் மிகவும் களைப்புடன் காணப்படுகிறார். நீங்கள் அவரை எவ்விதம் வரவேற்பீர்கள் ? | விருந்தினரை அழைத்து இருக்கையில் அமர வைப்பேன். தண்ணீர் அல்லது மோர் கொடுத்து அன்புடன் உரையாடுவேன் |



www.tnpscjob.com

**ஒரு மதிப்பெண் வினாக்கள் :**

1. முகலாய மன்னர்களில் யாருடைய காலம் முதல் நாட்குறிப்பு எழுதும் வழக்கம் இருந்தது?
பாபர்
2. யாருடைய ஆட்சிக்காலத்தில் நாட்குறிப்பு எழுதுவது தடை செய்யப்பட்டிருந்தது?
ஔரங்கசீப்
3. யாருடைய காலத்தில் ஆனந்தரங்கர் தலைமைத் துவிபாஷியாக பணியாற்றினார்?
பிரெஞ்சு ஆளுநர் துய்ப்ளே
4. 'உலக நாட்குறிப்பு இலக்கியத்தின் தந்தை' என அழைக்கப்படுபவர் யார்?
சாமுவேல் பெப்பிசு
5. 'இந்தியாவின் பெப்பிசு' என்று அழைக்கப்படுபவர் யார்?
ஆனந்தரங்கர்
6. புதுச்சேரியில் இருந்து மணிலாவுக்குச் சென்ற கப்பலில் பணியாற்றிய தமிழ் மாலுமி யார்?
அழகப்பன்
7. ஐரோப்பாவிலிருந்து இந்தியாவை அடையக் கப்பல்களுக்கு எத்தனை திங்கள் தேவைப்பட்டன?
ஆறு திங்கள்
8. பேரிடரின் போது பெருஞ்சோறு அளித்தவர் யார்?
கனகராயர்
9. ஆனந்தரங்கர் சித்திரகுப்தனைப் போல் ஒன்று தவறாமல் நாட்குறிப்பில் எழுதி வைத்திருக்கிறார் என்று கூறியவர் யார்?
மகாகவி பாரதியார்
10. 'சீறா' என்பது எச்சொல்லின் திரிபு?
சீறத் என்னும் அரபுச்சொல்
11. 'சீறா' என்பதன் பொருள் யாது?
வாழ்க்கை
12. 'புராணம்' என்பதன் பொருள் யாது?
வரலாறு
13. உமறுப்புலவர் சீறாப்புராணத்தை யார் வேண்டுகோளுக்கிணங்க இயற்றினார்?
வள்ளல் சீதக்காதி



www.tnpscjob.com

14. சீறாப்புராணம் எத்தனை காண்டங்களை உடையது?
மூன்று காண்டங்கள்

15. சீறாப்புராணம் எத்தனை படலங்களை உடையது?
92 படலங்கள்

16. சின்னச்சீறா பாடியவர் யார்?
பனு அகமது மரைக்காயர்

17. உமறுப்புலவர் வகித்த பதவி எது?
எட்டயபுரத்தின் அரசவைப் புலவர்

18. கடிகை முத்துப் புலவரின் மாணவர் யார்?
உமறுப்புலவர்

19. உமறுப்புலவர் பாடிய மற்றொரு நூல் எது?
முதுமொழி மாலை

20. அகநானூறு எத்தனை பகுதிகளை உடையது?
மூன்று

21. அகநானூற்றின் வேறு பெயர் யாது?
நெடுந்தொகை

22. அடிகளை மாற்றினாலும் ஓசையும் பொருளும் மாறாது வருவது எவ்வகை ஆசிரியப்பா?
அடிமறி மண்டில ஆசிரியப்பா

23. தலைவனுக்குக் குறியிடம் சொல்பவள் யார்?
தோழி

24. பிரபஞ்சனின் இயற்பெயர் யாது?
வைத்தியலிங்கம்

25. 1995 இல் சாகித்திய அகாதெமி விருது பெற்ற பிரபஞ்சனின் புதினம் எது?
வானம் வசப்படும்.

26. பிம்பம் என்ற சிறுகதையை எழுதியவர் யார்?
பிரபஞ்சன்

27. "இந்த உலகமே நாடகமேடை ; அதில் நாம் வெறும் நடிகர்களே" என்று கூறியவர் யார்?
ஷேக்ஸ்பியர்.

28. யாப்பு என்னும் கடலைக் கடக்க உதவும் நூல் எது?
யாப்பருங்கலக்காரிகை

29. பா எத்தனை வகைப்படும்?
நான்கு



www.tnpscjob.com

30. வெண்பாவுக்குரிய ஓசை வடிவம் எது?
செப்பலோசை
31. ஆசிரியப்பாவுக்குரிய ஓசை வடிவம் எது?
அகவலோசை
32. கலிப்பாவிற்குரிய ஓசை எது?
துள்ளலோசை
33. வஞ்சிப்பா பெற்று வரும் ஓசை எது?
தூங்கலோசை
34. அடிகள் எதன் அடிப்படையில் வரையறை செய்யப்படுகின்றன?
சீர்
35. இரண்டு சீர்களைப் பெற்றுவருவது எது?
குறளடி
36. மூன்று சீர்களைக் கொண்டது எது?
சிந்தடி
37. நான்கு சீர்களைக் கொண்டது எது?
அளவடி (நேரடி)
38. ஐந்து சீர்களுடன் வருவது எது?
நெடிலடி
39. ஆறு அல்லது அதற்கு மேற்பட்ட சீர்களைப் பெற்று வருவது எது?
கழிநெடிலடி
40. பா இயற்றுவதற்குரிய எளிய வடிவமான பா எது?
ஆசிரியப்பா
41. அகவற்பா என்று அழைக்கப்படுவது எது?
ஆசிரியப்பா
42. ஆசிரியப்பா எத்தனை அசைகளைப் பெற்று வரும்?
இரண்டு
43. சங்ககாலத் தமிழில் எப்பாக்களால் ஆன பாடல்கள் மிகுதியாக உள்ளன?
ஆசிரியப்பா
44. ஆசிரியப்பாவிற்கு உரிய சீர் எது?
இயற்சீர்
45. ஆசிரிய உரிச்சீர் என்றழைக்கப்படுவது எது?
இயற்சீர்
46. ஆசிரிய உரிச்சீர் எத்தனை வகைப்படும்?
நான்கு



www.tnpscjob.com

47. மாமுன் நேர் ஒன்றி வருவது எத்தளை?
நேரொன்றாசிரியத்தளை
48. விளம்முன் நிரை ஒன்றி வருவது எத்தளை?
நிரையொன்றாசிரியத்தளை
49. ஆசிரியப்பாவுக்குரிய தளை எது?
ஆசிரியத்தளை
50. ஆசிரியப்பாவின் வகைகள் எத்தனை?
நான்கு
51. இறுதி அடியின் முந்தைய அடி சிந்தடியாய் வரும் பா எது?
நேரிசை ஆசிரியப்பா

**குறுவினா – கூடுதல் வினாக்கள்**

**1. *சீறாப்புராணம்* என்ற தொடரின் பொருள் யாது?**

- *சீறா* + புராணம் – *சீறாப்புராணம்*
- '*சீறத்*' என்னும் அரபு மொழிச்சொல் '*சீறா*' எனத் திரிந்தது.
- *சீறத்* – வாழ்க்கை ; புராணம் – வரலாறு
- நபிகள் நாயகத்தின் வாழ்க்கை வரலாற்றைக் கூறுவதே சீறாப்புராணம்.

**2. *சீறாப்புராணம்* எத்தனை காண்டங்களை உடையது? அவை யாவை?**

- சீறாப்புராணம் மூன்று காண்டங்களை உடையது. அவை :
- விலாதத்துக் காண்டம்
- நுபுவ்வத்துக் காண்டம்
- ஹிஜ்ரத்துக் காண்டம்

**3. *சீறாப்புராணம்* எழுதுவதற்குத் துணை புரிந்த வள்ளல்கள் யாவர்?**

- வள்ளல் சீதக்காதி
- அப்துல் காசிம் மரைக்காயர்

**4. *சின்னச்சீறா* – விளக்குக.**

- சீறாப்புராணத்தை முடிப்பதற்கு முன்பே உமறுப்புலவர் இயற்கை எய்திய காரணத்தால் பனு அகமது மரைக்காயர் இதைப்பாடி முடித்தார்.
- இவர் பாடிய பகுதி 'சின்னச்சீறா' என்று அழைக்கப்படுகிறது.

**5. உமறுப்புலவர் இயற்றிய நூல்கள் யாவை?**

- சீறாப்புராணம்
- முதுமொழிமாலை
- *சீதக்காதி* நொண்டி நாடகம்



www.tnpscjob.com

6. **அகநானூறு எத்தனை பிரிவுகளை உடையது? அவை யாவை?**

- அகநானூறு மூன்று பிரிவுகளை உடையது. அவை :
- களிற்றியானை நிரை
- மணிமிடைப்பவளம்
- நித்திலக்கோவை

**7. 'பா' என்பதனைக் குறிக்கும் வேறுபெயர்கள் எவை?**

- செய்யுள்
- தூக்கு
- கவி
- கவிதை
- பாட்டு

**8. செய்யுள் உறுப்புகள் எவை?**

எழுத்து

அசை

சீர்

தளை

அடி

தொடை

பா

பாவினம்

**9. அசை என்பது யாது?அது எத்தனை வகைப்படும்?**

- எழுத்து ஒன்றோ பலவோ சேர்ந்து அசைத்து இசைத்துச் சீர்க்கு உறுப்பா வருவது அசையாகும்.
- அசை நேரசை,நிரையசை என இருவகைப்படும்.

**10. நேரசை என்பது யாது?**

- குறில் தனித்து வருதல் – க
- குறில் ஒற்றுடன் வருதல் – கண்
- நெடில் தனித்து வருதல் – பா
- நெடில் ஒற்றுடன் வருதல் –பார்

**11. நிரையசை என்பது யாது?**

- இருகுறில் இணைந்து வருதல் –அணி
- இருகுறில் இணைந்து ஒற்றுடன் வருதல் – அணில்



www.tnpscjob.com

குறில்நெடில் இணைந்து வருதல்–கலா

குறில் நெடில் இணைந்து ஒற்றுடன் வருதல் – கலாம்

12. நேரிசை ஆசிரிப்பா என்றால் என்ன?

"கடை அயற்பாதம்"

இறுதி அடிக்கு முந்தைய அடி மூன்று சீர்களைப் பெற்றும், மற்ற அடிகள் நான்கு சீர்களைப் பெற்றும் வருவது நேரிசை ஆசிரியப்பா ஆகும்.

13. இணைக்குறள் ஆசிரியப்பா என்றால் என்ன?

முதலடியும் இறுதியடியும் நான்கு சீர்களைப் பெற்று இடையடிகள் இணை இணையாய் இருசீர்களாகவும் (குறளடி)மூன்று சீர்களாகவும் (சிந்தடி) வருவது இணைக்குறள் ஆசிரியப்பாவாகும்.

14. நிலைமண்டில ஆசிரியப்பா என்பது யாது? அது எவ்வாறு முடியும்?

- எல்லா அடிகளும் நான்கு சீர்களைப் பெற்று வருவது நிலைமண்டில ஆசிரியப்பா ஆகும்.
- 'ஏ' என்ற எழுத்தாலும் 'என்' என்ற அசைச்சொல்லாலும் முடியும்.

15. அடிமறிமண்டில ஆசிரியப்பா என்றால் என்ன?

பாடலில் உள்ள அடிகளை மாற்றி மாற்றி அமைத்தாலும் ஓசையும் பொருளும் மாறாது அமைவது அடிமறிமண்டில ஆசிரியப்பாவாகும்.

16. ஆசிரியப்பாவின் இனங்களைக் கூறுக.

- ஆசிரியத் தாழிசை
- ஆசிரியத்துறை
- ஆசிரிய விருத்தம்

சிறுவினா – கூடுதல் வினாக்கள்

1. சீறாப்புராணம் – குறிப்பு வரைக.

- 'சீறா' என்பது 'சீறத்' என்னும் அரபுச் சொல்லின் திரிபாகும்.
- சீறத் – வாழ்க்கை; புராணம் – வரலாறு
- நபிகள் நாயகத்தின் வாழ்க்கை வரலாற்றைக் கூறும் நூல் சீறாப்புராணம்.
- இந்நூல் விலாதத்துக் காண்டம், நுபுவ்வத்துக் காண்டம், ஹிஜிறத்துக் காண்டம் என்னும் மூன்று காண்டங்களையும், 92 படலங்களையும், 5027 விருத்தப் பாடல்களையும் கொண்டது.
- நூலை முடிப்பதற்கு முன்பே உமறுப்புலவர் இயற்கை எய்திய காரணத்தால் பனு அகமது மரைக்காயர் இதைப்பாடி முடித்தார். இவர் பாடிய பகுதி 'சின்னச்சீறா' என்று அழைக்கப்படுகிறது.



www.tnpscjob.com

- இசுலாமியத் தமிழ் இலக்கியத்தில் முதன்மையானதாக விளங்குவது சீறாப்புராணமாகும்.

2. அகநானூற்றுப் பாடல்களின் திணை அமைப்பு முறையை விளக்குக.

| திணை | பாடல்வரிசை | எண்ணிக்கை |
|---|---|---|
| பாலை | 1,3,5,7, ..... | 200 |
| குறிஞ்சி | 2,8,12,18, ..... | 80 |
| முல்லை | 4,14,24,34, ..... | 40 |
| மருதம் | 6,16,26,36, ..... | 40 |
| நெய்தல் | 10,20,30,40, ..... | 40 |

3. ஐவகைத் திணைகளையும் அவற்றிற்குரிய நிலங்களையும் எழுதுக.

| திணை | நிலம் |
|---|---|
| குறிஞ்சி | மலையும் மலை சார்ந்த நிலமும் |
| முல்லை | காடும் காடு சார்ந்த நிலமும் |
| மருதம் | வயலும் வயல் சார்ந்த நிலமும் |
| நெய்தல் | கடலும் கடல் சார்ந்த நிலமும் |
| பாலை | சுரமும் சுரம் சார்ந்த நிலமும் |

4. ஐந்திணைகளுக்குரிய பொழுதுகள் எவை?

| திணை | பெரும் பொழுது | சிறுபொழுது |
|---|---|---|
| குறிஞ்சி | கூதிர், முன்பனி | யாமம் |
| முல்லை | கார் | மாலை |
| மருதம் | ஆறு பெரும்பொழுதுகளும் | காலை |
| நெய்தல் | ஆறு பெரும்பொழுதுகளும் | எற்பாடு |
| பாலை | இளவேனில், முதுவேனில் | நண்பகல் |

5. ஆறு பெரும்பொழுதுகள் எவை?

- கார்
- கூதிர்
- முன்பனி
- பின்பனி
- இளவேனில்
- முதுவேனில்



www.tnpscjob.com

6. ஐந்திணைகளுக்குரிய உரிப்பொருள்களைக் கூறு.

| திணை | உரிப்பொருள் |
|---|---|
| குறிஞ்சி | புணர்தலும் புணர்தல் நிமித்தமும் |
| முல்லை | இருத்தலும் இருத்தல் நிமித்தமும் |
| மருதம் | ஊடலும் ஊடல் நிமித்தமும் |
| நெய்தல் | இரங்கலும் இரங்கல் நிமித்தமும் |
| பாலை | பிரிதலும் பிரிதல் நிமித்தமும் |

7. ஐவகை நிலங்களுக்குரிய தெய்வங்கள் யாவை?

| நிலம் | தெய்வம் |
|---|---|
| குறிஞ்சி | சேயோன்(முருகன்) |
| முல்லை | மாயோன் (திருமால்) |
| மருதம் | வேந்தன்(இந்திரன்) |
| நெய்தல் | வருணன் |
| பாலை | கொற்றவை (துர்க்கை) |

8. ஐவகைப் பறைகள் யாவை?

| | |
|---|---|
| குறிஞ்சி | தொண்டகப்பறை |
| முல்லை | ஏறு கோட்பறை |
| மருதம் | நெல்லரிகிணை, மணமுழவு |
| நெய்தல் | மீன் கோட்பறை, நாவாய்ப்பம்பை |
| பாலை | துடிப்பறை |

9. ஐந்திணைகளுக்குரிய யாழ்கள் யாவை?

| | |
|---|---|
| குறிஞ்சி | குறிஞ்சி யாழ் |
| முல்லை | முல்லை யாழ் |
| மருதம் | மருதயாழ் |
| நெய்தல் | விளரியாழ் |
| பாலை | பாலையாழ் |



www.tnpscjob.com

10. ஐவகை நிலங்களின் பண்களைக் கூறுக.

| | |
|---|---|
| குறிஞ்சி | குறிஞ்சிப்பண் |
| முல்லை | சாதாரிப்பண் |
| மருதம் | மருதப்பண் |
| நெய்தல் | செவ்வழிப்பண் |
| பாலை | பஞ்சுரப்பன் |

**11. தலைவனுக்குக் குறியிடம் சொல்லும் தோழி மேகத்திடம் சொல்வதுபோல கூறுவன யாவை?**

- பெருங்கடலில் நீரை முகந்து கொண்டு செல்லும் மேகக்கூட்டமே! வானம் இருளும் படி உலாவுகிறாய்.
- போர் முரசம் போல் முழங்குகிறாய்.
- முறைமைதெரிந்து அறநெறி பிழையாமல் திறமையுடன் ஆளும் அரசனின் போர்க்களத்தில் திறமைமிக்க போர்வீரன் சுழற்றும் வாள்போல மின்னுகிறாய்.
- முழக்கமும் மின்னலுமாக நாள்தோறும் சும்மா ஆரவாரம் செய்கிறாயா அல்லது மழை பொழிவாயா?
- மலர்ந்த வேங்கை மலர் அணிந்திருக்கும் தோழியரோடு, தழலை, தட்டை கருவிகளில் ஒலியெழுப்பிப் பறவைகளை ஓட்டிக்கொண்டு, தழையாடை அணிந்து குறமகள் தினைப்புனம் காக்கும் பகுதியிலும் நீ மழை பொழிவாயா?

– இவ்வாறு தலைவி தினைப்புனம் காக்கும் இடத்துக்குத் தலைவன் வரலாம் என்னும் குறிப்பமைந்த இறைச்சிப் பொருளைத் தோழி தலைவனுக்கு உணர்த்துகிறாள்.

**நெடுவினா – கூடுதல் வினாக்கள்.**

**1. பிம்பம் என்னும் கதையை உரையாடல் வடிவில் எழுதுக.**

(கதையாசிரியருக்கும், அவரது மனசாட்சியான பிம்பத்திற்கும், இடையே நடந்த உரையாடல்)

ஆசிரியர் : இந்த நேரத்தில் கதவைத்தட்டுவது யார்? அதுதான் இந்த நேரத்தில் வரும். அதற்கு நேரம் காலம் கிடையாது. கதவைத்திறந்தேன்.

பிம்பம் : உள்ளே வந்தது.

ஆசிரியர் : உட்கார்.

பிம்பம் : உட்காராமல் வீட்டை நோட்டமிட்டு, இந்த அறையின் உள்ளே நான் நுழைகிறேன்.

ஆசிரியர் : அனுமதி தேவையில்லை என்று நினைத்தது போலும்.

பிம்பம் : (உள்ளிருந்து எடுத்த வந்த ஒன்றைக் காட்டி) இது என்ன?



www.tnpscjob.com

ஆசிரியர் : இது என் அப்பாவின் சட்டை. முக்கால் கைச்சட்டை. தொளதொள என்று இருக்கும். பல இடங்களில் துணி நைந்து கிழிஞ்சு போச்சு. பல இடங்களில் ஒட்டு. துவைக்காததால் எழும் துர்வாசம் இதனுடன் ஐக்கியம்.

பிம்பம் : இதை இன்னும் எதற்கு வைத்திருக்கிறாய்?

ஆசிரியர் : உபயோகப்படுத்தத்தான்.

பிம்பம் : இன்னுமா உபயோகப்படுத்துகிறாய்?

ஆசிரியர் : ஆம் பல சமயங்களில் ......... சந்தர்ப்பங்களில்.......

பிம்பம் : உன் சட்டை இருக்குமே?

ஆசிரியர் : இருக்கும். இதையும் அவ்வப்போது உபயோகப்படுத்திக் கொள்கிறேன். என் சட்டை என்னை முழுதும் போர்த்தாதபோது அப்பாவின் சட்டையை அணிந்து கொள்வேன். குளிரைப் போக்கும். பல சமயங்களில் என்னைப் பாதுகாக்கிறது. இது என் கவசம், அம்பு, அட்சயபாத்திரம்.

பிம்பம் : சரி. இது என்ன?

ஆசிரியர் : இது ஒரு கவுன். ஏழெட்டு வயசுப் பெண் குழந்தை கவுன்.

பிம்பம் : இந்தக் கவுன் உனக்கெதுக்கு?

ஆசிரியர் : சமயா சந்தர்ப்பங்களில் போட்டுப் பார்த்துக்கொள்ளத்தான்.

பிம்பம் : இதைக்கூடவா போடுகிறாய்?

ஆசிரியர் : சமயா சமயங்கள்.

பிம்பம் : இதைப் போட்டுக்கொண்டு எப்படி ஓர் ஆண்மகனாய் வெளியே வருகிறாய்.

ஆசிரியர் : அம்மாவுக்குப் பெண் குழந்தைகள் ஜனிக்காததால் இந்த கவுனை எனக்காக வாங்கினாள். என் கவுன் மூட்டுக்குள் என் புலன்கள் நுழைக்கும் – ஆமை நான்.

பிம்பம் : ஆகவே நீ தப்பிக்கிறாய்.

ஆசிரியர் : ஆம். எல்லாமே எதனிடமிருந்தோ தப்புதல்தான்.

பிம்பம் : இதெல்லாம் என்ன?

ஆசிரியர் : இவை என் முகங்கள்

பிம்பம் : இத்தனை முகங்கள் உனக்கெதுக்கு?

ஆசிரியர் : சமயா சந்தர்பங்களில் நான் அணிந்து கொள்ளும் முகங்கள் இவை.



www.tnpscjob.com

பிம்பம் : நீ என்னையும் உன்னையும் ஏமாற்றுகிறாய்?

ஆசிரியர் : ஆம். நானும் நீயும் மாறி மாறி ஏமாற்றுவதே நம் விஸ்தரிப்பு ஆக்கங்கள், விகசிப்புகள்.

பிம்பம் : இவற்றில் இடமும் காலமும் மாறி சூழ்நிலை தவறி, பாத்திரம் முகத்தை மாட்டிக்கொள்ள மாட்டாயா?

ஆசிரியர் : மாறாது. மாட்டேன் என்முன் முகம் காட்டும் முகங்கள் என் கண்

பிம்பம் : அம்மாவிடம் கூடவா.. . ..

ஆசிரியர் : அவளிடம் என்னிடம் காட்ட ஒரு முகம் இருந்ததுபோல என்னி ஒன்று இருந்தது.

பிம்பம் : மனைவியிடம் கூடவா?

ஆசிரியர் : இந்த இடத்துக்குப் பல முகங்கள் தேவை. இவை போலிகள் எ எங்கள் இருவருக்கும் தெரியும்.

பிம்பம் : நீ இப்போது போட்டிருப்பது கூட.

ஆசிரியர் : பொய்தான். போலிதான்.

பிம்பம் : போய்வருகிறேன்.

ஆசிரியர் : சரி

பிம்பம் : கடைசியாக ஒன்று. உன்னுடைய முகம்தான் எது. ....?

ஆசிரியர் : எனக்கு முகமே கிடையாது.

**2. இரவில் சிறைப்புறமாகத் தோழி சொல்லிய துறையை விளக்குக.**

**துறை விளக்கம்**

தலைவியின் இல்லத்துக்கு அருகில் இரவில் சிறைப்புறமாக வந்து நி தலைவனுக்குக் கேட்கும்வண்ணம் தோழி மேகத்திடம் சொல்வதுபே சொல்லியது.

**சான்று:**

'பெருங்கடல் முகந்த இருங்கிளைக் கொண்மூ' ......

– எனத் தொடங்கும் அகநானூற்றுப்பாடல்.

**விளக்கம் :**

பெருங்கடலில் நீரை முகந்துகொண்டு, வானம் இருளும்படி உல போர்முரசம் போல் முழங்கி, போர்வீரனின் வாள் போல் மின்னும் மேகமே! நீ செ ஆரவாரம் செய்கிறாயா? அல்லது மழை பொழிவாயா? தோழியர் ஆயத்தோ



www.tnpscjob.com

தலைவி தினைப்புனம் காக்கும் பகுதியிலும் நீ மழை பொழிவாயா? என்று தோழி மேகத்திடம் சொல்வதுபோல தலைவனுக்குத் தலைவி தினைப்புனம் காப்பதைக் குறிப்பால் உணர்த்துகிறாள்.

**பொருத்தம்:**

தலைவி தினைப்புனம் காக்கும் பகுதியில் மழை பொழிவாயா? என்று தோழி மேகத்திடம் சொல்வதன் மூலம், தலைவி தினைப்புனம் காக்கும் இடத்துக்குத் தலைவன் வரலாம் என்ற குறிப்பை உணர்த்தியதால் இது இத்துறைக்குப் பொருந்தி வருகிறது.



www.tnpscjob.com

## திருக்குறள்

### கற்பவை கற்றபின்

1. படத்துக்குப் பொருத்தமான திருக்குறளைக் கண்டுபிடிக்க.



அ) வில்லேர் உழவர் பகைகொளினும் கொள்ளற்க
சொல்லேர் உழவர் பகை.

ஆ) இரவென்னும் ஏமாப்பில் தோணி கரவென்னும்
பார்தாக்கப் பக்கு விடும்.

இ) உள்ளியது எய்தல் எளிதுமன் மற்றும்தான்
உள்ளியது உள்ளப் பெறின்.

**விடை :** அ) வில்லேர் உழவர் பகைகொளினும் கொள்ளற்க
சொல்லேர் உழவர் பகை.

2. **கவிதைக்குப் பொருந்தும் திருக்குறளைக் கண்டறிக.**

கொடி தவித்ததைப் பாரி
அறிந்துகொண்டான்
மயில் தவித்ததைப் பேகன்
உணர்ந்துகொண்டான்
பிள்ளையின் பரிதவிப்பைத்
தாய் அறிவாள்
பளிங்கு முகத்தைப் படித்துக்கொள்
அப்படிப் படித்தவர்களைப்
பிடித்துக்கொள்.

அ) இகழ்ச்சியில் கெட்டாரை உள்ளுக தாம்தம்
மகிழ்ச்சியின் மைந்துறும் போழ்து.



www.tnpscjob.com

ஆ) குறிப்பில் குறிப்புணர் வாரை உறுப்பினுள்
யாது கொடுத்தும் கொளல்.

இ) இளைதாக முள்மரம் கொல்க களையுநர்
கைகொல்லும் காழ்த்த விடத்து.

**விடை :** ஆ) குறிப்பில் குறிப்புணர் வாரை உறுப்பினுள்
யாது கொடுத்தும் கொளல்.

3. மகிழ்ச்சியின் மைந்துறும் போழ்து ........... நினை.

அ) முகக்குறிப்பை அறிந்தவரை

ஆ) எண்ணியதை எண்ணியவரை

இ) மறதியால் கெட்டவர்களை

ஈ) சொல்லேர் உழவரை

**விடை :** இ) மறதியால் கெட்டவர்களை

4. பொருள் கூறுக.

அ) ஏமம் – பாதுகாப்பு

ஆ) மருந்துழைச் செல்வான் – மருந்தாளுநர்

5. இலக்கணக் குறிப்புத் தருக.

அ) கெடுக – வியங்கோள் வினைமுற்று

ஆ) குறிப்புணர்வார் – வினையாலணையும் பெயர்

**குறுவினா**

**1. மருத்துவத்தின் பிரிவுகளாகக் குறள் கூறுவன யாவை?**

- நோயாளி
- மருத்துவர்
- மருந்து
- மருந்தாளுநர்

– என்று மருத்துவம் நான்கு வகையில் அடங்கும்.

**2. படைக்குப் பாதுகாப்பாக இருப்பவை எவை?**

- வீரம்
- மானம்
- முன்னோர் வழியில் நடத்தல்
- நம்பிக்கைக்கு உரியவர் ஆதல்.

– ஆகிய நான்கே படைக்குப் பாதுகாப்பு.



www.tnpscjob.com

3. பகைவர் வலிமையற்று இருக்கும்போதே வென்றுவிடவேண்டும் என்னும் குறட்பாவைக் கூறுக.

இளைதாக முள்மரம் கொல்க களையுநர்
கைகொல்லும் காழ்த்த இடத்து.

4. எப்போது மருந்து தேவையில்லை என்று திருவள்ளுவர் கூறுகிறார்?

உண்டதும், செரித்ததும் அறிந்து உண்டால் மருந்து என ஒன்று வேண்டியதில்லை என்கிறார் வள்ளுவர்.

**சிறுவினா**

**1. உருவக அணிக்குத் திருக்குறள் ஒன்றை எடுத்துக்காட்டாகத் தந்து விளக்குக.**

இரவென்னும் ஏமாப்பில் தோணி கரவென்னும்
பார்தாக்கப் பக்கு விடும்.

–இக்குறட்பாவில் உருவக அணி பயின்று வந்துள்ளது.

**அணி விளக்கம்:**

உவமைக்கும் உவமேயத்திற்கும் வேறுபாடு தோன்றாமல் இரண்டும் ஒன்று என்ற உணர்வு தோன்ற இரண்டையும் ஒற்றுமைப்படுத்துவது உருவக அணி ஆகும்.

**விளக்கம்:**

பிறரை எதிர்பார்த்து இரந்து வாழ்கின்ற வாழ்க்கையே பாதுகாப்பற்ற படகு என்றும், கொடுக்காமல் மறைக்கின்ற மனமே பாறை என்றும் உருவகப் படுத்தப்பட்டுள்ளதால் இது உருவக அணியாகும்.

2. இளைதாக முள்மரம் கொல்க களையுநர்
கைகொல்லும் காழ்த்த இடத்து.

**– இக்குறட்பாவில் பயின்றுவரும் அணியை விளக்குக.**

"இளைதாக முள்மரம் கொல்க களையுநர்
கைகொல்லும் காழ்த்த இடத்து".

இச்செய்யுளின்கண் அமைந்துள்ள அணி பிறிது மொழிதல் அணியாகும்.

**அணி விளக்கம்:**

கவிஞன் ஒரு செய்யுளில் உவமையை மட்டும் கூறி, உவமேயத்தைப் பெற வைப்பது பிறிது மொழிதல் அணியாகும்.

**விளக்கம்:**

முள்மரம் சிறியதாக இருக்கும் போதே களைந்து விட வேண்டும். முதிர்ந்து விட்டால் வெட்டுபவரின் கையை வருத்தும். இந்த உவமையிலிருந்து, பகையை



www.tnpscjob.com

ஆரம்பத்திலேயே இல்லாமல் செய்துவிட வேண்டும். முற்றவிட்டால் தீமை உண்டாகும் என்னும் உவமேயம் பெறப்படுகிறது. அதனால் இது பிறிது மொழிதல் அணியாகும்.

**3. மருந்து, மருத்துவர், மருத்துவம் ஆகியன பற்றித் திருக்குறள் கூறுவன யாவை?**

**மருந்து**

- உண்டதும், செரித்தலும் அறிந்து உண்டால் மருந்து என ஒன்று வேண்டியதில்லை.

**மருத்துவர்**

- நோயையும், அதன் காரணத்தையும், அதை நீக்கும் வழியையும் ஆராய்ந்து மருத்துவர் செயல்பட வேண்டும்.
- நோயாளியின் வயதையும், நோயின் அளவையும், மருத்துவத்தின் காலத்தையும் ஆராய்ந்து மருத்துவர் செயல்பட வேண்டும்.

**மருத்துவம்**

- நோயாளி, மருத்துவர், மருந்து, மருந்தாளுநர் – என்று மருத்துவம் நான்கு வகையில் அடங்கும்.

**நெடுவினா**

**1. வாழ்வின் உயர்வுக்கு உறுதுணையாக நீங்கள் கருதும் குறட்பாக்கள் சிலவற்றை விளக்கிக் கட்டுரையாக்குக.**

**முன்னுரை:**

உலகப் பொதுமறை என போற்றப்படும் திருக்குறள் நாடு, மொழி, இனம், மதம், காலம் ஆகியவற்றைக் கடந்து நிற்கிறது. இத்தகு சிறப்புமிக்க திருக்குறளில் வாழ்வின் உயர்வுக்கு உறுதுணையாக நான் கருதும் சில அமுதக் குறட்பாக்களின் கருத்துகளை பின்வருமாறு காண்போம்.

**எண்ணியதை எண்ணல்**

எண்ணியதை எளிதில் அடையவேண்டுமானால் நாம் செய்ய வேண்டிய செயலைப் பற்றி எப்போதும் எண்ணிக் கொண்டிருக்க வேண்டும்.

"உள்ளியது எய்தல் எளிதுமன் மற்றுந்தான்
உள்ளியது உள்ளப் பெறின்."

**குறிப்புணர்வார்**

முகக்குறிப்பில் அகக்குறிப்பினை அறிபவரை என்ன பொறுப்பைக் கொடுத்தாவது துணையாக்கிக் கொள்வது நம் வாழ்க்கைக்குப் பக்கபலமாக இருக்கும்.



www.tnpscjob.com

"குறிப்பில் குறிப்புணர் வாரை உறுப்பினுள்
யாது கொடுத்தும் கொளல்."

**வலிமையறிதல் :**

செயலின் வலிமையையும், தன் வலிமையையும், பகைவன் வலிமையும், துணையாளர் வலிமையும் சீர்தூக்கிச் செயல்பட்டால் வெற்றி உறுதி.

"வினைவலியும் தன்வலியும் மாற்றான் வலியும்
துணைவலியும் தூக்கிச் செயல்."

**அளவறிந்து வாழ்க :**

தன்னிடம் உள்ள பொருளின் அளவை அறிந்து வாழாதவனின் வாழ்க்கை உள்ளதுபோலத் தோன்றிக் கெடும். எனவே நாம் நமது பொருளின் அளவறிந்து வாழ வேண்டும்.

"அளவறிந்து வாழாதான் வாழ்க்கை உளபோல
இல்லாகித் தோன்றாக் கெடும்."

**உலகத்தையே பெறலாம் :**

உரிய காலத்தில், பொருத்தமான இடத்தில், ஒரு செயலைச் செய்தால் உலகத்தையே பெறக் கருதினாலும் கிடைத்துவிடும்.

"ஞாலம் கருதினும் கைகூடும் காலம்
கருதி இடத்தால் செயின்."

**மருந்து :**

உண்டதும், செரித்தலும் அறிந்து உண்டால் மருந்து என ஒன்று வேண்டியதில்லை. நம் வாழ்வு வசந்தமாகும்.

"மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது
அற்றது போற்றி உணின்."

**அவா அறுத்தல் :**

பேராசை என்னும் பெருந்துன்பம் தொலைந்து போனால் இன்பம் இடைவிடாமல் வரும்.

"இன்பம் இடையறாது ஈண்டும் அவாவென்னும்
துன்பத்துள் துன்பம் கெடின்."

**முடிவுரை :**

அறங்கூறும் நூல்களுள் தலையாய நூல் திருக்குறள். குறைந்த சொற்களில் சிறந்த கருத்துகளைச் சுருங்கச் சொல்லி விளங்க வைக்கிறது. வாழ்வியல் கருத்துகளைக் கூறும் சிறப்பிற்குரிய திருக்குறள் வாழ்வின் உயர்வுக்கு உறுதுணையாகும். கற்றபடி வாழ்வில் நிற்போம்.



www.tnpscjob.com

## கூடுதல் வினாக்கள்

**குறுவினா**

**1. நாம் மகிழ்ச்சியில் கடமையை மறக்கும்போது வள்ளுவர் யாரை நினைக்கச் சொல்கிறார்?**

நாம் மகிழ்ச்சியில் கடமையை மறக்கும்போது மறதியால் கெட்டவர்களை நினைத்துப்பார்க்க வேண்டும் என்று சொல்கிறார் வள்ளுவர்.

**2. எண்ணியதை எளிதில் அடைய வழி யாது?**

எப்போதும் எண்ணியதையே எண்ணிக்கொண்டிருந்தால், எண்ணியதை எளிதில் அடையலாம்.

**3. யாருடைய பகையைப் பெறக்கூடாது?**

வில் வீரரின் பகையைப் பெற்றாலும், சொல்வன்மை உடைய அறிஞரின் பகையைப் பெறக்கூடாது.

**சிறுவினா – கூடுதல் வினாக்கள்**

**1. '. மருத்துவர் எவற்றை ஆராய்ந்து செயல்பட வேண்டும்?**

- நோயையும், அதன் காரணத்தையும், அதை நீக்கும் வழியையும் ஆராய்ந்து மருத்துவர் செயல்பட வேண்டும்.
- நோயாளியின் வயதையும், நோயின் அளவையும், மருத்துவத்தின் காலத்தையும் ஆராய்ந்து மருத்துவர் செயல்பட வேண்டும்.

**2. இரவச்சம் பற்றி வள்ளுவர் கூறியவற்றை எழுதுக.**

- பிறரிடம் கையேந்தி உயிர்வாழும் நிலை இருக்கும் எனில், அப்படிப்பட்ட உலகத்தை உருவாக்கியவன் அலைந்து கெடட்டும்.
- பிறரை எதிர்பார்த்து இரந்து வாழ்தல் என்னும் பாதுகாப்பற்ற படகு, கொடாமை என்னும் பாறை மோதினால் உடைந்து விடும்.

**3. சொற்பொருள் பின்வரும் நிலையணியை விளக்குக.**

**அணி விளக்கம்:**

செய்யுளில் வந்த சொல்லே மீண்டும் மீண்டும் வந்து தந்த பொருளையே மீண்டும் தருவது சொற்பொருள் பின்வரும் நிலையணியாகும்.



www.tnpscjob.com

**சான்று**

நோய் நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்

வாய்நாடி வாய்ப்பச் செயல்.

**சான்று விளக்கம்**

நோயையும், அதன் காரணத்தையும், அதை நீக்கும் வழியையும் ஆராய்ந்து மருத்துவர் செயல்பட வேண்டும்.

**பொருத்தம்:**

இக்குறட்பாவில் 'நாடி' என்னும் சொல்லும் 'ஆராய்ந்து' என்னும் அதன் பொருளும் மீண்டும் மீண்டும் வந்துள்ளதால் சொற்பொருள் பின்வரும் நிலையணியாகும்.



www.tnpscjob.com

# இயல் - 6

| | | |
|---|---|---|
| உரைநடை | : | காலத்தை வென்ற கலை |
| செய்யுள் | : | ஆத்மாநாம் கவிதைகள் |
| | | குற்றாலக் குறவஞ்சி |
| | | திருச்சாழல் |
| துணைப்பாடம் | : | இசைத்தமிழர் இருவர் |
| இலக்கணம் | : | கலைச்சொல்லாக்கம் |



www.tnpscjob.com

**1. கலைச்சொல்லாக்கம் – பொருள் தருக.**

கலைச்சொல்லாக்கம் என்பது பொருள் தெரிந்த பிறமொழிச் சொற்களுக்குத் தாய்மொழியில் முன்பே உள்ள சொற்களை அடையாளம் காட்டியும் தேவையானவிடத்துப் புதிதாகச் சொற்களை உருவாக்கியும் தருவதாகும்.

**2. கலைச்சொல்லாக்கப் பணிகள் தொடங்குவதற்குரிய விதிமுறைகள் யாவை?**

**விதிமுறைகள் :**

- ஆக்கப்பெறும் சொல் தமிழ்ச்சொல்லாக இருத்தல் வேண்டும்.
- பொருள் பொருத்தமுடையதாக, அதே நேரத்தில் செயலைக் குறிப்பதாக அமைதல் வேண்டும்.
- வடிவில் சிறியதாக, எளிமையாக இருத்தல் வேண்டும்.
- ஓசை நயமுடையதாக இருத்தல் வேண்டும்.
- தமிழிலக்கண மரபுக்கு உட்பட்டதாய் இருத்தல் வேண்டும். நல்லவை அல்லாதவற்றைக் குறிக்கக் கூடாது.

**3. பின்வரும் ஆங்கிலச் சொற்களுக்கு இணையான தமிழ்க் கலைச்சொற்களை எழுதுக.**

| | | |
|---|---|---|
| Personality | – | ஆளுமை |
| Emotion | – | உணர்ச்சி |
| Plastic | – | நெகிழி |
| Escalator | – | மின் நகர்வுப் படிக்கட்டு |
| Apartment | – | அடுக்ககம் |
| Straw | – | உறிஞ்சு குழல் |
| Mass Drill | – | கூட்டுப் பயிற்சி |
| Horticulture | – | தோட்டக்கலை |
| Average | – | சராசரி |

**4. Ship என்னும் ஆங்கிலச் சொல்லின் பழந்தமிழ் இலக்கியப் பெயரைக் கூறுக.**

நாவாய்



www.tnpscjob.com

**5. உலக அளவில் கணிதச் சூத்திரங்களையும், வேதியியல் குறியீடுகளையும் தமிழில் எவ்வாறு பயன்படுத்த வேண்டும் என்று வா.செ. குழந்தைசாமி கூறுகிறார்?**

உலக அளவில் கணிதச் சூத்திரங்களையும் வேதியியல் குறியீடுகளையும் தமிழில் பயன்படுத்தும்போது அப்படியே பயன்படுத்த வேண்டும் என்று வ.செ. குழந்தைசாமி கூறுகிறார்.



www.tnpscjob.com

1. கூற்று 1

தஞ்சைப் பெரியகோவிலிலுள்ள ஓவியங்களை எஸ்.கே.கோவிந்தசாமி கண்டறிந்தார்.

கூற்று 2

அங்குள்ள சோழர்காலத்து ஓவியங்கள் ஃபிரெஸ்கோ வகையைச் சார்ந்தவை.

அ) கூற்று 1 சரி கூற்று 2 தவறு ஆ) கூற்று இரண்டும் தவறு

இ) கூற்று 1 தவறு கூற்று 2 சரி ஈ) கூற்று இரண்டும் சரி

விடை : ஈ) கூற்று இரண்டும் சரி

2. 'ழ' என்னும் பெயரில் கவிஞர் ஆத்மாநாமால் வெளியிடப்பட்டது : 'கவிதைக் கிரீடம்' என்று போற்றப்படுவது.

அ) சிற்றிதழ், குற்றாலக் குறவஞ்சி ஆ) கவிதை நூல், திருச்சாழல்

இ) நாளிதழ், நன்னகர் வெண்பா ஈ) கட்டுரை நூல், குற்றாலக் கோவை

விடை : அ) சிற்றிதழ், குற்றாலக் குறவஞ்சி

3. கீழுள்ளவற்றைப் பொருத்தி விடை தேர்க.

| | | |
|---|---|---|
| அ) விரியன் | – | 1) தண்டை |
| ஆ) திருகுமுருகு | – | 2) காலாழி |
| இ) நாங்கூழ்ப்புழு | – | 3) சிலம்பு |
| ஈ) குண்டலப்பூச்சி | – | 4) பாடகம் |

i) 3 4 2 1 ii) 3 1 4 2 iii) 4 3 2 1 iv) 4 1 3 2

விடை : ii) 3 1 4 2

4. பெண்கள் விளையாடும் விளையாட்டு வகைகளுள் ஒன்று

அ) சாழல் ஆ) சிற்றில் இ) சிறுதேர் ஈ) சிறுபறை

விடை : அ) சாழல்

5. ஈறுபோதல், முன்னின்ற மெய்திரிதல், தனிக்குறில்முன் ஒற்று உயிர்வரின் இரட்டும், உடல்மேல் உயிர்வந்து ஒன்றுதல் ஆகிய வரிசையில் புணர்ந்த சொல்

அ) மூதூர் ஆ) வெற்றிடம் இ) நல்லாடை ஈ) பைந்தளிர்

விடை : இ) நல்லாடை



www.tnpscjob.com

**குறுவினா :**

**1. இந்தியக் கட்டடக் கலையின் மூன்று வகைகள் யாவை?**

நாகரம், வேசரம், திராவிடம்

**2. ஒலோகமாதேவீச்சுரம் கோவில் கல்வெட்டில் காணலாகும் பெண் அதிகாரிகளின் பெயர்களிலிருந்து நீங்கள் அறிவது யாது?**

ஒலோகமாதேவீச்சுரம் கோவில் கல்வெட்டில் 'எருதந் குஞ்சர மல்லி ', 'சோமயன் அமிர்தவல்லி' என்ற அதிகாரிச்சிகள் பற்றிய குறிப்பு இருக்கிறது.

இதன் மூலம் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே பெண்கள் அதிகாரிகளாக பணிபுரிந்துள்ளனர் என்பது ஆச்சரியமாக உள்ளது.

அக்காலத்தில் பெண்கள் கல்வியறிவில்லை. சமூகப் பெருவெளிகளில் தலைமைப் பொறுப்பை ஏற்று சீரும் சிறப்புமாக செயல்பட்டுள்ளனர் என்பது பெருமை கொள்ளத்தக்கதாகும்.

**3. அயர்ந்து, எழுந்த – பகுபத உறுப்பிலக்கணம் தருக.**

- அயர்ந்து – அயர் + த்(ந்) + த் + உ
  அயர் – பகுதி; த் – சந்தி, ந் விகாரம்; த் – இறந்தகால இடைநிலை
  உ – வினையெச்ச விகுதி
- எழுந்த – எழு + த்(ந்) + த் + அ
  எழு – பகுதி; த் – சந்தி, ந் விகாரம்;த் – இறந்தகால இடைநிலை
  அ – பெயரெச்ச விகுதி

**4. தொடர் அமைத்து எழுதுக.**

**அன்றொருநாள் :**

அன்றொருநாள் வானில் முழுநிலவு ஒளிர, மேகங்கள் தவழ்ந்து சென்றன.

**நிழலிலிருந்து :**

மைதானத்தில் விளையாடிய மாணவர்களை நிழலிலிருந்து ஏனையோர் உற்சாகப்படுத்தினர்.

**சிறுவினா**

**1. ஃபிரெஸ்கோ ஓவியங்கள்; கற்றளிக் கோவில்கள் குறித்து நீவிர் அறிவன யாவை?**

**ஃபிரெஸ்கோ ஓவியங்கள் :**

- ஃபிரெஸ்கோ என்ற இத்தாலியச் சொல்லுக்கு 'புதுமை' என்று பொருள்.
- சுண்ணாம்புக் காரைப்பூச்சுமீது அதன் ஈரம் காயும்முன் வரையப்படும் பழமையான ஓவியக் கலைநுட்பம் இது.
- இவ்வகை ஓவியங்களை அஜந்தா, எல்லோரா, சித்தன்னவாசல் போன்ற இடங்களிலும் காணலாம்.



www.tnpscjob.com

**கற்றளிக் கோயில்கள் :**

- செங்கற்களை ஒன்றன்மேல் ஒன்றாக அடுக்கிக் கட்டுவது போல கருங்கற்களை அடுக்கிக் கட்டுவதற்குக் கற்றளி என்று பெயர்.
- ஏழாம் நூற்றாண்டில் இரண்டாம் நரசிம்மவர்மன் என்னும் பல்லவ மன்னன் உருவாக்கிய வடிவம் இது.
- மகாபலிபுரம் கடற்கரைக் கோவில், காஞ்சிபுரம் கைலாசநாதர் கோவில், பனமலைக் கோவில் ஆகியவற்றை உதாரணமாகச் சொல்லலாம்.
- அந்த வகையில் முழுமையாகக் கற்களைக் கொண்டே கட்டப்பட்ட மிகப்பெரிய கோவில் தஞ்சை பெரிய கோவில்.

**2. கலைச்சொல்லாக்கத்திற்கும் அகராதிக்கும் உள்ள வேறுபாடு யாது?**

**கலைச் சொல்லாக்கம் :**

கலைச் சொல்லாக்கம் என்பது பொருள் தெரிந்த பிறமொழிச் சொற்களுக்கு தாய்மொழியில் முன்பே உள்ள சொற்களை அடையாளம் காட்டியும் தேவையானவிடத்துப் புதிதாகச் சொற்களை உருவாக்கியும் தருவதாகும்.

**அகராதி :**

பொருள் தெரியாத சொற்களுக்குப் பொருள் கூறுவதே அகராதியின் நோக்கம்.

**3. சிங்கி பெற்ற பரிசுப் பொருட்களாகக் குற்றாலக் குறவஞ்சி கூறுவன யாவை?**

**சிங்கி பெற்ற பரிசுப் பொருட்கள் :**

சிலம்பு, தண்டை, பாடகம், அணிமணிக்கெச்சம், காலாழி பீலி.

**4. உணவும் உறக்கமும் அணில் கனவாம்; உங்கள் கனவை உங்கள் சொற்களில் விளக்குக.**

காலை எழுந்ததும் படித்தல்
பகல் முழுவதும் பள்ளியில்;
மாலையெல்லாம் தோழனோடு மனம் பிடித்த விளையாட்டு
இரவு பெற்றோருடன் அன்புபேசி
புதிய புத்தகம் கற்றல்
ஒருநாள் உயர் பதவிக்கு வந்து
ஏழைப் பெற்றோரை மாளிகையில்
அமர்த்தி அழகு பார்த்தல்
நேர்மையும், இரக்கமும்
இரு கண்களாகக் கொண்டு
இதயம் நிறைந்த இந்திய
தேசத்தை உயர்த்துதல் !
நடக்குமா என் கனவு ?



www.tnpscjob.com

5. **தமிழகப் பெண்கள் பாடிக்கொண்டே விளையாடும்போது வெளிப்படுத்தும் மேன்மையான கருத்துகளாகத் திருச்சாழல் உணர்த்துவன யாவை?**

- சாழல் என்பது பெண்கள் விளையாடும் ஒரு வகையான விளையாட்டு.
- ஒருத்தி வினா கேட்க, மற்றொருத்தி விடை கூறுவதாக அமைந்திருக்கும்.
- இறைவன் செயல்களையும் அவற்றால் விளங்கும் உண்மைகளையும் விளக்குவது திருச்சாழல் வடிவமாகும்.
- சுடுகாட்டைக் கோயிலாகவும் புலித்தோலை ஆடையாகவும் கொண்ட உங்கள் தலைவனுக்கு தாய் தந்தையும் இல்லை, இத்தன்மையனோ உங்கள் கடவுள்? என ஒரு பெண் கேட்க,
- எங்கள் கடவுளுக்குத் தாய் தந்தை இல்லாவிடினும் அவன் சினந்தால் உலகம் அனைத்தும் கற்பொடியாகிவிடும் என இன்னொருத்தி பதில் தருகிறாள்.
- அக்காலத்தில் பாற்கடலைக் கடைந்தபோது உண்டாகிய நஞ்சை சிவன் உண்டான். அதற்கு காரணம் யாதோ?
- அந்த நஞ்சை இறைவன் உண்டிருக்காவிட்டால் பிரமன், விஷ்ணு, உள்ளிட்ட தேவர்கள் அன்றே அழிந்து ஒழிந்திருப்பார்கள்.
- தான் முடிவு இல்லாதவனாக இருந்தும் அவனை அடைந்த என்னை ஆனந்த வெள்ளத்தில் அழுந்தச் செய்தானே, இது என்ன புதுமை?
- உன்னை ஆனந்த வெள்ளத்தில் அழுந்தச் செய்த திருவடிகள் தேவர்களுக்கும் மேன்மையான பொருளாகும்.
- இவ்வாறு இறைவனைக் குறித்து ஒரு பெண் கேள்வி கேட்பது போலவும், இன்னொருத்தி இறைவனது செயலை நியாயப்படுத்துவது போலவும் பாடிக்கொண்டே விளையாடும்போது இறைவனைப் பற்றிய மேன்மையான கருத்துகளை திருச்சாழல் வெளிப்படுத்துகிறது.

**நெடுவினா :**

**1. 'கல்லும் கதை சொல்லும்' – என்னும் தொடர் தஞ்சைப் பெரியகோவிலுக்குப் பொருந்துவதை விளக்கி எழுதுக.**

**முன்னுரை :**

மனிதனின் படைப்புத் திறனால் உருவான கலை மனத்தில் அழகுணர்வை ஏற்படுத்தி மகிழ்வையும் தருகிறது. கலை ஒரு சமூகத்தின் நாகரிகம் மற்றும் பண்பாட்டு மேன்மையைப் பிரதிபலிக்கின்றது. ஆயிரம் ஆண்டுகள் கடந்தும் கம்பீரமாகக் காட்சியளிக்கும் தஞ்சைப் பெரிய கோவிலின் கட்டடக் கலைநுட்பம் நம்மை வியப்படையச் செய்கிறது. அத்தகு தஞ்சை பெரிய கோயிலின் கற்கள் சொல்லுகின்ற கதை என்னவென்று பின்வருமாறு பார்ப்போம்.



www.tnpscjob.com

#### கட்டிய ஆண்டும், அரசனும்

11–ஆம் நூற்றாண்டில் ஆட்சிபுரிந்த முதலாம் இராசராச சோழன் தஞ்சைப் பெரிய கோவிலை 1003 ஆம் ஆண்டு தொடங்கி 1010 ஆண்டு வரை கட்டினான். 2010 இல் இக்கோவிலின் 1000வது ஆண்டு நிறைவடைந்தது. 1886 ஆம் ஆண்டு ஜெர்மனி அறிஞர் ஷீல்ஸ் ஆறு ஆண்டுகள் தீவிரமாக கல்வெட்டுகளைப் படியெடுத்து வாசித்து இக்கோவிலை இராசராச சோழன் கட்டினான் என்று உறுதிசெய்தார்.

#### கேரளாந்தகன் கோபுரம்

பெரிய கோவிலின் கோபுரங்களில் உயரமானது கேரளாந்தகன் கோபுரம். இராசராசன் 988 ஆம் ஆண்டு சேர நாட்டை வெற்றிகொண்டதைப் போற்றும் வகையில் இக்கோபுரத்திற்குக் 'கேரளாந்தகன் வாயில் கோபுரம்' எனப் பெயரிடப்பட்டுள்ளது. அடுத்துள்ளது இராசராசன் திருவாயில். இரண்டு நுழைவாயில் கோபுரங்கள் என்பது பிற்காலச் சோழர்களின் தனிச்சிறப்பாகும்.

#### பெரியகோவில்

தஞ்சைப் பெரியகோவில் நம் நாட்டிலுள்ள கற்றளிக் கோவில்களிலேயே பெரியதும் உயரமானதும் ஆகும். இராசராச சோழனால் ஏறத்தாழ ஆறு ஆண்டுகள் முயன்று இது கட்டிமுடிக்கப்பட்டது. 'தட்சிணமேரு' என்று இராசராசனால் பெருமையுடன் அழைக்கப்பட்ட இக்கோவில் விமானம் 216 அடி உயரம் உடையது. கருவறை விமானம் 13 தளங்களையுடையது. அந்த வகையில் முழுமையாகக் கற்களைக் கொண்டே கட்டப்பட்ட மிகப் பெரிய கோவில் இதுதான்.

#### கல் சொல்லும் கதை :

பெரிய கோவில் வழிபாட்டுத் தலம் மட்டுமன்று. அங்கே இசை, நடனம், நாடகம் போன்ற அருங்கலைகள் வளர்க்கப்பட்டன. அது, மக்கள் ஒன்றுகூடும் இடமாகவும் இருந்தது. எனவே, மக்களுக்குத் தெரிவிக்க வேண்டிய செய்திகள் அனைத்துமே அங்கே கல்வெட்டுகளாகப் பொறிக்கப்பட்டன.

அது மட்டுமல்லாமல் பஞ்ச காலத்தில் மக்களுக்கு உதவுவதற்கான தானியக் கிடங்குகளும் கோவிலுக்குள் அமைக்கப்பட்டிருந்தன. கருவூலமாகவும், மருத்துவமனையாகவும், போர்க்காலங்களில் படைவீரர்கள் தங்கக்கூடிய இடமாகவும் பயன்பட்டது.

#### ஓவியமே காவியமே :

தஞ்சைப் பெரிய கோவில் கருவறையின் இரு தளங்களில் உள்ள சுற்றுக்கூடம், சாந்தார நாழிகை பகுதிச் சுவர்களில் ஓவியங்கள் காணப்பட்டதை முதன் முதலில் அண்ணாமலைப் பல்கலைக்கழக விரிவுரையாளர் எஸ்.கே. கோவிந்தசாமி கண்டறிந்தார்.



www.tnpscjob.com

**சிகரம்**

தஞ்சைக் கோவில் எண்பட்டை வடிவில் கட்டப்பட்ட திராவிடக் கலைப்பாணியாகும். சிகரத்திலுள்ள பிரமந்திரக் கல் ஒற்றைக் கல் அன்று. பதின்மூன்று தளங்களை உடைய கருவறை விமானத்தின் மேல் எண்பட்டை அமைப்பில் ஆரஞ்சுப்பழச்சுளை போன்று எட்டுக் கற்கள் நெருக்கமாக வைத்து ஒட்டப்பட்டன.

**கல்வெட்டில் எடுப்பித்தவர்கள் :**

"நாம் கொடுத்தனவும், நம் அக்கன் கொடுத்தனவும், நம் பெண்டுகள் கொடுத்தனவும், கொடுப்பார் கொடுத்தனவும் இந்த கல்லிலே வெட்டி அருள்க....." என்று கோவில் கட்ட உதவியவர்கள் சிறப்பிக்கப்பட்டுள்ளனர். தான் மட்டுமே பங்களிக்காமல் மற்றவர்களின் உதவியையும் பெற்றதோடு அதனைக் கல்வெட்டாகவும் ஆவணப்படுத்தியிருக்கும் இராசராசனின் பாங்கு போற்றத்தக்கது.

**முடிவுரை :**

கற்களே கிடைக்காத காவிரிச் சமவெளிப் பகுதியில் இவ்வளவு உயரத்தில் ஒரு கற்கோவில், தஞ்சையின் பெருமை மட்டுமல்ல ; தமிழர்களின் பெருமை. இத்தகு புகழ்வாய்ந்த தொல்லியல் கோவில்களுக்குச் செல்லும் போது நம்முடைய பாரம்பரியத்தையும் அதன் முக்கியத்துவத்தையும் உணர்ந்து பாதுகாக்க வேண்டும். சேதம் விளைவிக்கக் கூடாது.

**2. சிம்பொனித் தமிழரும் ஆஸ்கர் தமிழரும் இசைத்தமிழுக்கு ஆற்றிய பணிகளை நும் பாடப்பகுதி கொண்டு தொகுத்தெழுதுக.**

**பண்ணைப்புரத்து இராசையா :**

- அன்னக்கிளி படத்தில் அறிமுகமான இளையராஜாவின் இசையோட்டம் தமிழர் வாழ்ந்த திசைகளில் எல்லாம் தென்றலாய் நுழைந்து புதிய வாசல்களைத் திறந்தது. அவரிடமிருந்து புதுப்புது மெட்டுகள் சிறகு விரித்தன.
- இவரின் பாடலைக் கேட்டால், பாடலின் ஒவ்வொரு சரணத்திற்கு இடையிலும் அவர் சுழற்றும் இசைச் சிலம்பம் நம்மைப் புதிய திசைகளில் பறக்க வைக்கும்.
- திரையிசையில் கர்நாடக இசை என்னும் பழந்தமிழிசையின் உன்னதத்தை உணர வைத்தவர். 1970 களின் தொடக்கத்தில் பிறமொழிப் பாடல்களைச் சுமந்து திரிந்த தமிழ்ச் செவிகள் விடுதலை பெற்று, தமிழ்ப்பாடல்களை நோக்கித் திரும்பியதற்கு இளையராஜாவே காரணமெனலாம்.
- இளையராஜா தமிழ்ச் செய்யுளின் யாப்போசைக் கட்டமைப்புக்குள் இருக்கின்ற இசை ஒழுங்கைப் புரிந்து கொண்டு திரைப்பாடல்களைச் செவியுணர் கனிகளாகவும் பண்பாட்டு வெளிப்பாடாகவும் மாற்றிய பெருமைக்குரியவர்.



www.tnpscjob.com

## இசைத் தொகுப்புகள்

- மகிழ்ச்சி, ஏக்கம், நம்பிக்கை, உற்சாகம்,வலி போன்ற மனித உணர்வுகளுக்கும் இசை வடிவம் கொடுக்க முடியும் என்பதை 'இந்தியா 24 மணிநேரம்' என்னும் ஆவணக் குறும்படத்தின் பின்னணி இசையில் வெளிப்படுத்தினார்.
- மாணிக்கவாசகர் எழுதிய திருவாசகப் பாடல்களுக்கு ஆரட்டோரியோ என்னும் இசை வடிவில் இசையமைத்துள்ளார்.
- ஆதிசங்கரர் எழுதிய மீனாட்சி ஸ்தோத்திரம் என்ற பக்திப் பாடலுக்கும் இசையமைத்துள்ளார். பஞ்சமுகி என்ற கர்நாடகச் செவ்வியல் இராகம் அவர் உருவாக்கியதாகும்.
- மூன்றே மூன்று சுரங்களைக் கொண்டு ஒரு தெலுங்குப் பாடலுக்கு இசையமைத்தும் இருக்கிறார்.
- மகாத்மா காந்தி எழுதிய ஒரே பாடலான ''நம்ரதா கே சாகர்'' என்னும் பாடலுக்கு இசையமைத்து, இந்துஸ்தானி இசைப் பாடகர் அஜொய் சக்கரபர்த்தியைப் பாடவைத்து இசைக்கோவையை வெளியிட்டிருக்கிறார்.
- ஆசியாவிலேயே முதன்முதலில் சிம்பொனி என்னும் மேற்கத்திய செவ்வியல் வடிவ இசைக் கோவையை உருவாக்கியவர் இவரே.

## ஆஸ்கர் தமிழர்

- ஏ.ஆர்.ரஹ்மான், 1992–ஆம் ஆண்டு ரோஜா என்னும் திரைப்படத்திற்கு இசையமைப்பாளராகத் தமது திரையிசைப் பயணத்தைத் தொடங்கியவர். தம் முதல் படத்திற்கே தேசிய விருது பெற்ற முதல் இந்திய இசையமைப்பாளர் என்ற சிறப்பினைப் பெற்றார்.
- துள்ளல் ஓசை கொண்டாட்ட மனநிலையின் வெளிப்பாடு. துள்ளல் ஓசைச் சாயலினை நுட்பமாக உணர்ந்த ஏ.ஆர்.ரஹ்மான் தம் இசைக் கட்டத்துக்குள் நின்று இளைஞர்களை ஆடவும் பாடவும் வைத்தார்.
- நாட்டுப்புற இசை, கர்நாடக இசை, இந்துஸ்தானி இசை, இவற்றுடன் மேற்கத்திய உலகலாவிய இசை முறைகளையும் கலந்து, புதிய கணினித் தொழில்நுட்ப உதவியுடன் உலகத்தரத்தில் இசையமைப்பதுடன் பல இளம் பாடகர்களையும் அறிமுகம் செய்தார்.
- மேலைநாட்டுத் திரைப்படங்களுக்கும், நாடகங்களுக்கும் இசையமைத்து உலக இசையமைப்பாளர்கள் வரிசையிலும் தம்மை நிலைநாட்டிக் கொண்டார்.



www.tnpscjob.com

- உலகை வெற்றி கொள்ளப் புறப்பட்ட தொழில்நுட்பக் கல்வி பயின்று உலகெங்கும் பரவிய தமிழ் இளைஞர்களை இணைத்தது அவர்தம் இசை.
- இரஹ்மானிடம் எல்லோரும் இரசித்துக் கேட்பது அவரது 'தாளம் உருவாக்கும் முறை.' வெவ்வேறு கலாச்சார மக்களையும் தம் இசையால் ஒருங்கிணைத்ததுடன் திரையிசையில் சூஃபி இசையை அறிமுகப்படுத்திய சிறப்பும் இவருக்குண்டு.
- "ஸ்லம்டாக் மில்லியனர்" என்ற திரைப்படத்தின் இசைக்காக, 'கோல்டன் குளோப்' விருது பெற்றதன் மூலம் உலகளாவிய புகழ் பெற்றார். இவ்விருது பெற்ற முதல் இந்தியர் இவரே.

**இலக்கணக்குறிப்பு :**

| | | |
|---|---|---|
| மாண்ட தவளை | – | பெயரெச்சம் |
| சுடுகாடு | – | வினைத்தொகை |
| கொல்புலி | – | வினைத்தொகை |
| குரைகடல் | – | வினைத்தொகை |
| நல்லாடை | – | பண்புத்தொகை |

**உறுப்பிலக்கணம்**

1. பெற்ற = பெறு (பெற்று) + அ
   பெறு – பகுதி; பெற்று – ஒற்று இரட்டித்து இறந்தகாலம் காட்டியது;
   அ – பெயரெச்ச விகுதி
2. உண்டான் – உண் + ட் + ஆன்
   உண் – பகுதி; ட் – இறந்தகால இடைநிலை ;
   ஆன் – ஆண்பால் வினைமுற்று விகுதி.

**புணர்ச்சி விதி**

1. பயமில்லை = பயம் + இல்லை
   உடல்மேல் உயிர்வந்தொன்றுவது இயல்பே = பயமில்லை.
2. கற்பொடி = கல் + பொடி
   ல ள வேற்றுமையில் வலிவரின் றடவும் = கற் + பொடி
   = கற்பொடி



www.tnpscjob.com

3. உலகனைத்தும் – உலகு + அனைத்தும்

( க் + உ )

உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும் = உலக் + அனைத்தும்

உடல்மேல் உயிர்வந்தொன்றுவது இயல்பே = உலகனைத்தும்

4. திருவடி = திரு + அடி

ஏனை உயிர்வழி வவ்வும் = திரு + வ் + அடி

உடல்மேல் உயிர்வந்தொன்றுவது இயல்பே = திருவடி



www.tnpscjob.com

## மொழியை ஆள்வோம்

### சான்றோர் சித்திரம்



நாடகத்தமிழை வளர்த்த நல்லறிஞராய்த் திகழ்ந்த சங்கரதாசு சுவாமிகள், நாடகங்களை உருவாக்கிய ஆசிரியர்களுக்கெல்லாம் முன்னோடியாகவும் முதல்வராகவும் விளங்கினார். பெரும்புலவர்கள், சுவாமிகளின் பாடல் திறத்தையும் உரையாடல் தரத்தையும் உணர்ந்து நெஞ்சாரப் பாராட்டியுள்ளனர். இளமையில் புலவரேறு பழநி தண்டபாணி சுவாமிகளைத் தேடிச் சென்று, தமிழறிவைப் பெற்ற இவர் தம்முடைய 16 ஆவது வயதிலேயே கவியாற்றல் பெற்று, வெண்பா, கலித்துறை இசைப்பாடல்களை இயற்றத் தொடங்கிவிட்டார். இரணியன்,இராவணன், எமதருமன் ஆகிய வேடங்களில் நடித்துப் புகழடைந்தபோது அவருடைய வயது 24. வண்ணம், சந்தம் பாடுவதில் வல்லவராயிருந்த சுவாமிகளின் 'சந்தக்குழிப்புகளின்' சொற்சிலம்பங்களைக் கண்டு அக்காலத்தில் மக்கள் வியப்புற்றனர்.

சங்கரதாஸ் சுவாமிகள் 'சமரச சன்மார்க்க சபை' என்னும் நாடகக் குழுவை உருவாக்கினார். இந்தக் குழுவில் பயிற்சி பெற்ற எஸ்.ஜி.கிட்டப்பா நாடகக் கலைத்துறையில் பெரும்புகழ் ஈட்டினார். மேடை நாடகம் தரம் குன்றிய நிலையில், மதுரை வந்த சுவாமிகள் 1918இல், 'தத்துவ மீனலோசனி வித்துவ பால சபை' என்னும் நாடக அமைப்பை உருவாக்கி ஆசிரியர் பொறுப்பேற்றார். இங்கு உருவானவர்களே டி.கே.எஸ் சகோதரர்கள். நாடகத்தின் மூலம் மக்களுக்கு அறவொழுக்கத்தையும் தமிழின் பெருமையையும் பண்பாட்டையும் தம் சுவைமிகுந்த பாடல், உரையாடல் வழியே உணர்த்திய சங்கரதாசு சுவாமிகளை நாடகத்துறைக் கலைஞர்கள், 'தமிழ் நாடகத் தலைமை ஆசிரியர்' என்று உளமகிழ்ந்து போற்றுகின்றனர்.

**வினாக்கள் :**

1. தமிழ்ச்சொல்லாக்குக – சன்மார்க்கம், வித்துவ பால சபை

   சன்மார்க்கம் – நன்னெறி

   வித்துவ பால சபை – கலை இளைஞர் மன்றம்

2. நாடகத் தமிழை வளர்த்த நல்லறிஞராய்த் திகழ்ந்தவர் சங்கரதாசு சுவாமிகள் – அடிக்கோடிட்ட வினையாலணையும் பெயரை வினைமுற்றாக்கித் தொடரை எழுதுக.

   நாடகத் தமிழை வளர்த்த நல்லறிஞராய் சங்கரதாசு சுவாமிகள் திகழ்ந்தார்.



www.tnpscjob.com

3. ஈட்டினார் – பகுபத உறுப்பிலக்கணம் தருக.

ஈட்டு + இன் + ஆர்

ஈட்டு – பகுதி; இன் – இறந்த கால இடைநிலை ;

ஆர் – பலர்பால் வினைமுற்று விகுதி

4. தன்னன்ன தானேன தன்னானே – இந்தச் சந்தத்தில் பொருள் பொதிந்த இரண்டு அடிகள் கொண்ட பாடல் எழுதுக.

(எ.கா) இந்திய நாட்டினில் வாழ்வதையே

இன்பமாய்க் கருதிடல் வேண்டுமப்பா .....

இன்பமாய் என்றுமே வாழ்வதையே

இதயத்தில் இருத்திடல் வேண்டுமப்பா

5. தமிழ் நாடகத் தலைமையாசிரியர் – சிறப்புப் பெயருக்கான காரணத்தை அளிக்க.

நாடகத்தின் மூலம் மக்களுக்கு அறவொழுக்கத்தையும், தமிழ்ப் பெருமையையும், பண்பாட்டையும், தம் சுவைமிகுந்த பாடல், உரையாடல் வழியே உணர்த்திய சங்கரதாசு சுவாமிகளை நாடகத்துறைக் கலைஞர்கள் 'தமிழ் நாடகத் தலைமையாசிரியர்' என்று உளமகிழ்ந்து போற்றுகின்றனர்.

**தமிழாக்கம் தருக.**

The oldest documented forms of art are visual arts, which include creation of images or objects in fields including today painting, sculpture, printmaking, photography, and other visual media. Music, theatre, film, dance and other performing arts, as well as literature and other media such as interactive media are included in a broader definition of art or the arts. Until the 17th century, art referred to any skill or mastery and was not differentiated from crafts or sciences. Art has had a great number of different functions throughout its history, making its purpose difficult to abstract or quantify to any single concept. This does not imply that the purpose of Art is "vague", but that it has had many unique, different reasons for being created.

பண்டைய காலங்களில் கலையைப் பல்வேறு விதங்களில் காட்சிப்படுத்தினர். அதை தற்காலத்தில் இருப்பது போல ஓவியங்களாகவும், சிலைகளாகவும், அச்சு வடிவிலும் மற்றும் நிழல் படங்களாகவும், இசை, நாடகம், திரைப்படம், நடனம், இலக்கியம் மற்றும் ஊடகங்களும் கலைகளில் அடங்கும். 17–ஆம் நூற்றாண்டு



www.tnpscjob.com

வரை கலை என்பது எந்தவொரு திறமையோ அல்லது நுட்பமோ அறிவியல் மற்றும் கைவினையில் இருந்து வேறுபடாமல் இருப்பது ஆகும். கலைக்கு வரலாற்றிடையே பல பரிமாணங்கள் உள்ளன. அதை எதுவென்று குறுகிய அளவில் இறுதியிட்டுக் காட்ட இயலாது. கலை என்பது ஏதோ ஒரு அர்த்தமற்ற பொருளாகக் கொள்ள முடியாது. அதற்கான தனித்தன்மையும் அது உருவானதற்கான காரணமும் இருக்கும்.

**தொடர் மாற்றம்**

1. மூன்று நாள்கள் கல்லூரிக்கு விடுமுறை, மாணவர்கள் தஞ்சாவூர் பிரகதீஸ்வரர் கோவிலுக்குச் சென்றனர். சிற்பங்களைக் கண்டு மகிழ்ந்தனர். (கலவைத் தொடராக மாற்றுக)

   மூன்று நாள்கள் கல்லூரிக்கு விடுமுறையாதலால் மாணவர்கள் தஞ்சாவூர் பிரகதீஸ்வரர் கோவிலுக்குச் சென்று சிற்பங்களைக் கண்டு மகிழ்ந்தனர்.

2. தஞ்சைக் கோவில் எண்பட்டை வடிவில் கட்டப்பட்ட திராவிடக் கலைப் பாணியாகும் (வினாத் தொடராக்குக)

   தஞ்சைக் கோவில் எண்பட்டை வடிவில் கட்டப்பட்ட திராவிடக் கலைப்பாணியாலானதா?

3. என்னே! மதுரை மீனாட்சிஅம்மன் கோவில் சிற்பக்கலை (செய்தித் தொடராக்குக)

   மதுரை மீனாட்சி அம்மன் கோவில் சிற்பக்கலை அழகானது.

4. நான் வாரத்தின் இறுதிநாள்களில் நூலகத்திற்குச் செல்வேன் (பொருள்மாறா எதிர்மறைத் தொடராக மாற்றுக)

   நான் வாரத்தின் இறுதி நாள்களில் நூலகத்திற்குச் செல்லாமல் இரேன்.

**மெய்ப்புத்திருத்துநர் பணிவேண்டி நாளிதழ் முதன்மையாசிரியருக்குக் கீழ்க்காணும் விவரங்களுடன் தன்விவரக்குறிப்பு ஒன்று எழுதுக.**

(பெயர், வயது, பாலினம், பிறந்தநாள், பெற்றோர், முகவரி, அலைபேசி எண், மின்னஞ்சல் முகவரி, அறிந்த மொழிகள், எடை, உயரம், குருதிவகை, கல்வித்தகுதி)

அனுப்புநர் :

அறிவழகன்
2/232, திரு. வி.க. நகர்,
மகாலிங்கபுரம் அஞ்சல்,
பொள்ளாச்சி.



www.tnpscjob.com

பெறுநர் :

முதன்மையாசிரியர் அவர்கள்,
மாலை முரசு நாளிதழ்
7, வின்சென்ட் வீதி,
கோவை – 641 001.

மதிப்பிற்குரிய ஐயா,

பொருள் : மெய்ப்புத் திருத்துநர் பணிவேண்டி விண்ணப்பித்தல் – தொடர்பு

வணக்கம்.

தங்கள் நாளிதழில் பணிபுரிய மெய்ப்புத்திருத்துநர் தேவை என்பதை அறிந்தேன். அப்பணிக்கு என்னை விண்ணப்பித்துக் கொள்ள விரும்புகிறேன். இத்துடன் என் 'தன் விவரக் குறிப்பு' ஒன்றினை இணைத்து அனுப்பியுள்ளேன். என்னைத் தாங்கள் தேர்வு செய்தால் தங்கள் அலுவலகத்தின் சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு நடப்பேன் என்று உறுதி கூறுகிறேன்.

இப்படிக்கு
தங்கள் உண்மையுள்ள
கு. அறிவழகன்

4.6.2019
பொள்ளாச்சி.

## தன் விவரக் குறிப்பு

| | | |
|---|---|---|
| பெயர் | : | கு. அறிவழகன் |
| வயது | : | 25 |
| பாலினம் | : | ஆண் |
| பிறந்த தேதி | : | 26.6.1993 |
| பெற்றோர் | : | ரா. குமாரசாமி – கு. லட்சுமி |
| முகவரி | : | 2/232, திரு. வி. க. நகர், மகாலிங்கபுரம் அஞ்சல் பொள்ளாச்சி – 642 002. |
| அலைபேசி எண் | : | 94422 73840 |
| அறிந்த மொழிகள் | : | தமிழ், ஆங்கிலம் |



www.tnpscjob.com

| | | |
|---|---|---|
| எடை | : | 68 கிலோ |
| உயரம் | : | 165 செ.மீ. |
| குருதி வகை | : | B+ |
| கல்வித் தகுதி | : | எம்.ஏ. (தமிழ்), பி.எட்., |

**மொழியோடு விளையாடு**

**எண்ணங்களை எழுத்தாக்குக.**



உணவு தேவைப்படாத நிலையிலும் சின்னத் தூண்டில் புழுவிற்கு ஆசைப்பட்டு தன் பெரிய உயிரையே மாய்த்துக் கொள்கிறதே மீன். அதன் அழிவிற்குக் காரணம் ஆசை.

ஆசைப்படப்பட துன்பங்கள் பெருகும்
ஆசையை விடவிட இன்பங்கள் கிடைக்கும்
இக்கருத்தைச் சொல்லாமல்
சொல்கிறதோ மீன்



www.tnpscjob.com

தேர்க்கவி (இரத பந்தம்)    தேர்க்கவி – எழுதிப்பழகுக

சித்திரகவி வகைகளுள் ஒன்று தேர்க்கவி. தேர் வடிவத்தினுள் சொற்களை அமைத்துப் பாடுவது.







கல் செல் நீ நிமிர்ந்துநட
கற்பந்து நீயே தகர் தடை
தீ மிதி நிமிர்ந்து நில்.

நில் செல்
வாசம் வெளிச்சம்
விளைக விளைச்சல்

**விடுபட்ட இடத்தில் அடுத்து வரவேண்டிய சொற்களைக் கண்டறிந்து எழுதுக.**

1. தனிமொழி – அறிவு ; **தொடர்மொழி** – வண்ண மயில் : பொதுமொழி: **வைகை**
2. கார்காலம் – **ஆவணி,** புரட்டாசி :குளிர்காலம்–ஐப்பசி,கார்த்திகை: **முன்பனி** மார்கழி,தை
3. எழுத்து, சொல் , **பொருள்,** யாப்பு, **அணி**
4. எழுத்து, **அசை,** சீர், தளை, **அடி,** தொடை
5. சேரன்–வில்,சோழன் – **புலி,** **பாண்டியன்** – மீன்



www.tnpscjob.com

## கூடுதல் வினாக்கள்

### ஒரு மதிப்பெண் வினாக்கள் :

1. தஞ்சைக் கோவில் கட்டி முடிப்பதற்கான ஆண்டுகள் எத்தனை?
ஆறு ஆண்டுகள்
2. 'தட்சிண மேரு' என்றழைக்கப்பட்ட சிறப்புடைய கோவில் எது?
தஞ்சைப்பெரிய கோவில்
3. தஞ்சைக் கோவிலின் கருவறை விமானம் எத்தனை தளங்களையுடையது?
13 தளங்கள்
4. கற்றளிக் கோவிலை முதலில் உருவாக்கியவன் யார்?
இரண்டாம் நரசிம்மவர்ம பல்லவன்
5. செங்கற்களாலான எழுபத்தெட்டு கோவில்களைக் கட்டியவன் யார்?
சோழன் செங்கணான்
6. குடைவரைக் கோவில்களை அமைத்தவன் யார்?
முதலாம் மகேந்திரவர்மன்
7. 'விசித்திர சித்தன்' என்றழைக்கப்பட்டவன் யார்?
முதலாம் மகேந்திரவர்மன்
8. முதலாம் மகேந்திரவர்ம பல்லவன் குடைவரைக் கோவில்களை அமைத்ததைப் பற்றிக் கூறும் கல்வெட்டு எது?
மண்டகப்பட்டுக் கல்வெட்டு
9. காஞ்சிபுரம் கைலாசநாதர் கோவில் யாரால் கட்டப்பட்டது?
இராசசிம்மன்
10. சோழர்கால ஓவியங்கள் மீது நாயக்கர் ஆட்சியில் ஓவியங்கள் வரைந்திருந்ததை வெளியுலகுக்குத் தெரியப்படுத்தியவர் யார்?
எஸ்.கே. கோவிந்தசாமி
11. 'ஒலோகமாதேவீச்சுரம்' கோவில் கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ள பெண் அதிகாரி யார்?
எருதந் குஞ்ரமல்லி
12. முதலாம் இராசராசன் காலத்தில் இருந்த அதிகாரிச்சி யார்?
சோமயன் அமிர்தவல்லி
13. இராசராசனால் அக்கன் என்று அழைக்கப்பட்டவர் யார்?
குந்தவை தேவி
14. இராசராசனின் தமக்கை யார்?
குந்தவை தேவி



www.tnpscjob.com

15. மதுசூதனன் என்னும் இயற்பெயர் கொண்டவர் யார்?
ஆத்மாநாம்
16. 'ழ' என்னும் சிற்றிதழை நடத்தியவர் யார்?
ஆத்மாநாம்
17. ஆத்மாநாமின் முக்கியமான கவிதைத் தொகுப்பு எது?
காகிதத்தில் ஒரு கோடு
18. குற்றாலக் குறவஞ்சி யாரால் பாடப்பட்டது?
திரிகூடராசப்பக் கவிராயர்
19. குற்றாலக் குறவஞ்சி யாருடைய விருப்பத்திற்கிணங்கப் பாடி அரங்கேற்றப்பட்டது?
மதுரை விசயரங்க சொக்கலிங்கனார்
20. திரிகூட ராசப்பக் கவிராயரின் 'கவிதைக் கிரீடம்' என்று போற்றப்படும் நூல் எது?
குற்றாலக் குறவஞ்சி
21. சிங்கி சேலத்து நாட்டில் குறிசொல்லிப் பெற்ற பரிசுப் பொருள் எது?
சிலம்பு
22. சிங்கிக்கு 'சிலம்பு' பரிசளித்த நாடு எது?
சேலத்து நாடு
23. கோலத்து நாட்டில் சிங்கி பெற்ற பரிசு எது?
தண்டை
24. சிங்கிக்குத் தண்டையைப் பரிசளித்த நாடு எது?
கோலத்து நாடு
25. பாண்டியனார் மகள், சிங்கிக்குக் கொடுத்த பரிசுப் பொருள் எது?
பாடகம்
26. ஆண்டவர் குற்றாலநாதர் சந்நிதிப் பெண்கள் சிங்கிக்குக் கொடுத்த பரிசு எது?
மணிக்கெச்சம்
27. சிங்கி கண்டிய தேசத்தில் பெற்ற பரிசு எது?
காலாழி பீலி
28. 'மாண்ட தவளை' என்று சிங்கன் எதனைக் கூறினான்?
மணிக்கெச்சம்
29. சிங்கன் 'திருகு முருகு' என்று கூறியது எதனை?
முறுக்கிட்ட தண்டை
30. வினா – விடை முறையில் அமைந்திருக்கும் விளையாட்டு எது?
சாழல்



www.tnpscjob.com

31. சாழல் வடிவத்தைத் திருமங்கையாழ்வார் எந்நூலில் பயன்படுத்தியுள்ளார்?
பெரியதிருமொழி
32. சைவத் திருமுறைகள் எத்தனை?
பன்னிரண்டு
33. பன்னிரு திருமுறைகளில் எட்டாம் திருமுறையாக உள்ளது எது?
திருவாசகம்
34. திருவாசகத்தில் உள்ள பதிகங்கள் எத்தனை?
51 திருப்பதிகங்கள்
35. திருவாசகத்திலுள்ள மொத்தப் பாடல்கள் எத்தனை?
658 பாடல்கள்
36. மாணிக்கவாசகர் திருச்சாழல் பாடிய நூல் எது?
திருவாசகம்
37. திருவாசகம் முழுமையையும் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தவர் யார்?
ஜி.யு. போப்
38. மாணிக்கவாசகர் பிறந்த ஊர் எது?
திருவாதவூர்
39. மாணிக்கவாசகர் யாரிடம் தலைமை அமைச்சராகப் பணியாற்றினார்?
அரிமர்த்தன பாண்டியன்
40. கடலில் எழுந்த ஆலாலம் (நஞ்சு) உண்டவன் யார்?
சிவன்
41. சிம்பொனித் தமிழர் என்றழைக்கப்படுபவர் யார்?
இளையராஜா
42. ஆஸ்கர் தமிழர் என்றழைக்கப்படுபவர் யார்?
ஏ.ஆர். ரஹ்மான்
43. இளையராஜாவின் இயற்பெயர் யாது?
இராசையா
44. 'அன்னக்கிளி உன்னைத் தேடுதே' என்னும் பாடலில் இடம்பெற்ற இசை எது?
ஆனந்த பைரவி
45. தேவாரத்தில் உள்ள பண்கள் எத்தனை?
23
46. இரண்டு ஆஸ்கர் விருது பெற்ற ஒரே தமிழர் யார்?
ஏ.ஆர். ரஹ்மான்
47. ஏ.ஆர். ரஹ்மான் இசையமைத்த முதல் திரைப்படம் எது?
ரோஜா (1992)



www.tnpscjob.com

48. ஏ.ஆர். ரஹ்மான் பயன்படுத்திய ஓசை எது?
துள்ளல் ஓசை

49. பிங்கல நிகண்டில் எத்தனை பண்கள் காணப்படுகின்றன?
103

50. 'Cellphone' – என்னும் ஆங்கிலச் சொல்லுக்கு இணையா
தமிழ்ச்சொற்களைக் கூறு.
கைப்பேசி, செல்லிடப்பேசி, அலைபேசி

51. 'Website' – இதற்கிணையான தமிழ்க்கலைச் சொல் எது?
இணையம்

52. 'blog' – இதற்கிணையான தமிழ்க்கலைச்சொல் எது?
வலைப்பூ

53. 'Carrom' என்ற ஆங்கிலச் சொல்லுக்கு இணையான தமிழ்ச்சொல் எது?
நாலாங்குழி ஆட்டம்

54. 'தென் ஆப்பிரிக்காவின் பெண்கள் விடுதலை' என்னும் தலைப்பில் கட்டு
எழுதியவர் யார்?
பாரதியார்

55. பாரதி தமிழ் சொல் உருவாக்க முயன்ற ஆங்கிலச் சொல் எது?
Member

56. 'Pilot' – என்பதற்கு இணையான பழந்தமிழ் இலக்கியச் சொல்லைக் கூறு.
வலவன்

57. 'Touch Screen' – என்ற ஆங்கிலச் சொல்லுக்கு இணையான் தமிழ்க்கலை
சொல் எது?
தொடுதிரை

58. 'Smart Phone' – இதற்கிணையான தமிழ்க்கலைச் சொல் எது?
திறன்பேசி

59. கலைச்சொற்கள் பெரும்பாலும் எப்பெயர்களாக இருக்கும்?
காரணப் பெயர்கள்

60. உனக்குத் தெரிந்த தகவல் தொழில்நுட்பக் கலைச்சொற்களைக் கூறு.
Website, blog



www.tnpscjob.com

குறுவினா – கூடுதல் வினா

**1. சோழர் காலத்திலிருந்த பெண் அதிகாரிச்சியின் பெயர்களைக் கூறுக.**

- எருதந் குஞ்சரமல்லி
- சோமயன் அமிர்தவல்லி

**2. குடைவரைக் கோவில் என்றால் என்ன?**

செங்கல், சுண்ணம், மரம், உலோகம் முதலியவை இல்லாமல் மலைகளைக் குடைந்து அமைக்கப்பட்ட கோயில் குடைவரைக் கோயில் ஆகும்.

**சான்று :**

காஞ்சிபுரம் கைலாசநாதர் கோவில்

**3. திரிகூடராசப்பக் கவிராயர் இயற்றிய நூல்கள் எவை?**

- குற்றாலக் குறவஞ்சி
- குற்றால மாலை
- குற்றாலச் சிலேடை
- குற்றாலப் பிள்ளைத்தமிழ்
- குற்றால யமக அந்தாதி

**4. சிங்கிக்கு பரிசளித்த நாடுகள் எவை?**

- சேலத்து நாடு
- கோலத்து நாடு
- பாண்டிய நாடு
- கண்டிய நாடு

**5. சாழல் – விளக்குக.**

- சாழல் என்பது பெண்கள் விளையாடும் ஒரு வகையான விளையாட்டு.
- இதில் ஒரு பெண் வினா கேட்க, மற்றொரு பெண் விடை கூறுவதாக அமைந்திருக்கும்.
- மாணிக்கவாசகர் பாடிய திருவாசகத்தில் திருச்சாழல் இடம்பெறுகிறது. இது தில்லைக் கோவிலில் பாடப்பட்டது.
- திருமங்கையாழ்வார் தனது பெரியதிருமொழியில் சாழல் வடிவத்தைப் பயன்படுத்தியுள்ளார்.



www.tnpscjob.com

6. **சைவசமயக் குரவர் நால்வர் யார்?**

- திருஞான சம்பந்தர்
- திருநாவுக்கரசர் (அப்பர்)
- சுந்தரர்
- மாணிக்கவாசகர்

**சிறுவினா – கூடுதல் வினா**

**1. திரிகூடராசப்பக் கவிராயர் – குறிப்பு வரைக.**

- திரிகூட ராசப்பக் கவிராயர் திருநெல்வேலியில் பிறந்தவர்.
- குற்றாலநாதர் கோவிலில் பணிபுரியும் காலத்தில் சைவசமயக் கல்வியிலும் இலக்கிய இலக்கணங்களிலும் தேர்ச்சி பெற்றார்.
- மதுரை முத்துவிசயரங்க சொக்கலிங்கனார் விருப்பத்திற்கு இணங்க 'குற்றாலக் குறவஞ்சி' என்னும் நூலைப் பாடி அரங்கேற்றினார்.
- இந்நூல், திரிகூடராசப்பக்கவிராயரின் 'கவிதைக் கிரீடம்' என்று போற்றப்பட்டது.
- ''திருக்குற்றாலநாதர் கோவில் வித்துவான்'' என்று சிறப்புப் பட்டம் பெற்றவர்.
- குற்றாலத்தின்மீது தலபுராணம், மாலை, சிலேடை, பிள்ளைத்தமிழ், யமக அந்தாதி முதலிய நூல்களையும் இயற்றியிருக்கின்றார்.

**2. திருவாசகம் – குறிப்பு வரைக.**

**திருவாசகம் :**

- திருவாசகம் என்பது சிவபெருமான் மீது பாடப்பட்ட பாடல்களின் தொகுப்பு ஆகும்.
- இதனை இயற்றியவர் மாணிக்கவாசகர்.
- சைவ சமயத்தின் பன்னிரு திருமுறைகளில் எட்டாம் திருமுறையாக உள்ளது.
- திருவாசகத்தில் 51 திருப்பதிகங்கள் உள்ளன.
- இவற்றுள் மொத்தம் 658 பாடல்கள் அடங்கியுள்ளன.
- இந்நூலில் 38 சிவத்தலங்கள் பாடப்பெற்றுள்ளன.
- திருவாசகப் பாடல்கள் பக்திச் சுவையும் மனத்தை உருக்கும் தன்மையும் கொண்டவை.
- 'திருவாசகத்துக்கு உருகார் ஒரு வாசகத்துக்கும் உருகார்' என்பது முதுமொழி.
- ஜி.யு.போப் திருவாசகம் முழுவதையும் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளார்.



www.tnpscjob.com

## நெடுவினா – கூடுதல் வினா

### 1. சிங்கன் – சிங்கி உரையாடலை விரித்துரைக்க.

சிங்கன் : அடியேசிங்கி! இத்தனை நாளாக என்னிடம் சொல்லாமலேயே எங்கே போனாயடி!

சிங்கி : அடே சிங்கா? கொத்து மலர் சூடும் காரிகையர்களுக்குக் குறி சொல்லப் போனேனடா!

சிங்கன் : அடியே சிங்கி! இதனை எண்ணிப் பார்த்தால் வியப்பாயிருக்கிறது. உன்னிடம் சொல்லவும் பயமாக இருக்கிறதடி.

சிங்கி : அடே சிங்கா! நீ யாருக்கும் அஞ்ச வேண்டாம். நீ நினைத்ததை அஞ்சாமல் சொல்லு. அதற்கு நான் வருந்தமாட்டேன்.

சிங்கன் : அடியே சிங்கி! உன் காலுக்கு மேலே பெரிய விரியன் பாம்புபோல ஒன்று கடித்துக் கிடப்பதென்ன!

சிங்கி : அடே சிங்கா !அது சேலத்தைச் சார்ந்த நாட்டில் நான் சொன்ன குறிக்குப் பெற்ற பரிசாகிய சிலம்பதடா சிங்கா.

சிங்கன் : அடியே சிங்கி! உனக்குச் சேலத்து நாடார் தந்த பரிசாகிய சிலம்புக்கு மேல் ஏதோவொன்று திருகலும் முறுகலுமாகக் கிடக்கிறது என்ன?

சிங்கி : அடே சிங்கா! அது கலிங்க நாட்டார் நான் சொன்ன குறிக்குத் தந்த பரிசாம் குறுக்குத் தண்டையடா! நன்றாய்ப் பார்.

சிங்கன் : அடியே சிங்கி! நீளமாகவும் கூனலாகவும் நாக்குப் பூச்சியினைப்போல் நெளிந்து வளைந்து உள்ளது எது கூறு.

சிங்கி : அடே சிங்கா ! பாண்டிய மன்னன் மகளுக்கு நான் சொன்ன குறிக்கு அவன் அணிவித்த பாடகம் அது.

சிங்கன் : அடியே சிங்கி! செத்த தவளைபோல் உன் காலில் கட்டியுள்ளாயே அதன் பெயரென்ன?

சிங்கி : அடே சிங்கா! உலகத் தலைவராய் குற்றாலநாதர் திரு முன்னர் நடனம் ஆடும் மங்கையர்கள் நான் சொன்ன குறிக்குத் தந்ததிப் பரிசாம் சதங்கை மணியடா.

சிங்கன் : அடியே சிங்கி! உன்கால் சுண்டுவிரலில் குண்டல வடிவப் பூச்சிப்போல வளைந்து கிடப்பதென்ன?

சிங்கி : அடே சிங்கா! இலங்கையில் நான் குறி சொல்லிப் பெற்ற பரிசாகிய கால் மோதிரமும் பீலியுமடா. நீ நகைகளையே பார்த்ததில்லையேடா என்னவோ கேட்கின்றாய்.



www.tnpscjob.com

# இயல் - 7

| | | |
|---|---|---|
| உரைநடை | : | காற்றில் கலந்த பேரோசை |
| செய்யுள் | : | புரட்சிக் கவி |
| | | பதிற்றுப்பத்து |
| துணைப்பாடம் | : | சிந்தனைப் பட்டிமன்றம் |
| இலக்கணம் | : | ஆக்கப்பெயர்கள் |



www.tnpscjob.com

## இலக்கணத் தேர்ச்சி கொள்

### பயிற்சி – 1

**கீழ்க்காணும் பத்தியில் உள்ள ஆக்கப் பெயர்களை எடுத்தெழுதுக.**

எங்கள் பள்ளியில் நடைபெற்ற புத்தகத் திருவிழாவிற்குக் காவல்துறை ஆணையாளர் சிறப்பு அழைப்பாளராகக் கலந்துகொண்டு உரையாற்றினார். அவர், "மாணவர்களாகிய நீங்கள் படிப்பகங்களைப் பயன்படுத்தி விண்ணியல், மண்ணியல் போன்ற துறைகளில் சிறந்து விளங்கவேண்டும். நல்ல நண்பர்களைக் கூட்டாளி ஆக்கிக்கொண்டு உதவியாள் இல்லாமலே ஒரு நிறுவனத்தின் மேலாளராகவோ முதலாளியாகவோ ஆகலாம்" என்று கூறி மாணவர்களை ஊக்கப்படுத்தினார்.

**ஆக்கப்பெயர்கள் :** ஆணையாளர், அழைப்பாளர், படிப்பகம், கூட்டாளி, உதவியாள், மேலாளர், முதலாளி

### பயிற்சி – 2

**அடைப்புக்குள் உள்ள ஆக்கப்பெயர் விகுதிகளைக் கொண்டு விடுகதைகளுக்குரிய ஆக்கப்பெயர்களைக் கண்டறிக.**

1. வேவு பார்த்திடுவான்; ஓசையின்றிச் சென்றிடுவான் (ஆளி) – **உளவாளி**
2. அறிவைத் தேடிப் போகுமிடம் ; உலகம் அறிய உதவுமிடம் (அகம்) – **நூலகம்**
3. வந்தால் மகிழ்ச்சி இது ; உழைத்தால் கிடைக்கும் இது (மானம்)– **வருமானம்**
4. வேட(ஷ)ம் போட்டவன் வேடதாரி ; பட்டம் வாங்கினவன்?(தாரி)– **பட்டதாரி**
5. அளந்து அளந்து கொட்டிடுவான் ; அகம் மகிழத் தந்திடுவான் (ஆள்)– **பணியாள்**

## நம்மை அளப்போம்

**பலவுள் தெரிக**

1. 'ஜனப்பிரளயம்' என்னும் வடமொழிச் சொல்லுக்குரிய தமிழ்ச்சொல் எது?

அ) மக்கள் அலை　　ஆ) உயிர் அலை

இ) மக்கள் வெள்ளம்　　ஈ) மக்கள் அவை

**விடை :** இ) மக்கள் வெள்ளம்

2. கூற்று: எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றான பதிற்றுப்பத்து, புறம் சார்ந்த நூல்.

காரணம் : சேரமன்னர் பதின்மரின் சிறப்புகளைக் கூறுகிறது இந்நூல்.

அ) கூற்று சரி ; காரணம் தவறு　　ஆ)இரண்டும் சரி

இ) இரண்டிற்கும் தொடர்பில்லை　　ஈ) கூற்று தவறு ; காரணம் சரி

**விடை :** ஆ) இரண்டும் சரி



www.tnpscjob.com

3. அழகும்அறிவும் இளமையும் வாய்த்தவன் – யார், யாரிடம் கூறியது?

அ) அமைச்சர் கவிஞரிடம் ஆ) மன்னர் அமைச்சரிடம்

இ) அமைச்சர் மன்னரிடம் ஈ) மன்னர் அமுதவல்லியிடம்

**விடை :** இ) அமைச்சர் மன்னரிடம்

4. அடையாறுப் பாலத்தின் சுவற்றில் எழுதாதீர்கள் – இவ்வரியில் உள்ள சொற்பிழைகளின் திருத்தம்

அ) அடையாற்றுப் பாலத்தின் சுவற்றில்

ஆ) அடையாறுப் பாலத்தின் சுவரில்

இ) அடையாறுப் பாலத்தின் சுவற்றில்

ஈ) அடையாற்றுப் பாலத்தின் சுவரில்

**விடை :** ஈ) அடையாற்றுப் பாலத்தின் சுவரில்

5. ஆக்கப் பெயர் விகுதி பெறாத சொல்லைத் தேர்க.

அ) காவலாளி ஆ) மேலாளர்

இ) உதவியாள் ஈ) ஆசிரியர்

**விடை :** ஈ) ஆசிரியர்

**குறுவினா :**

**1. 'நாழிக்குள் திணிக்கும் மருந்துபோல்' என்னும் உவமையை ஜீவானந்தம் பேச்சுடன் ஒப்பிடுக.**

- வாண வேடிக்கைக்காரன் 'நாழிக்குள் திணிக்கும் மருந்து போல்' ஜீவானந்தம் பேசும் பொழுது இரண்டு கைப்பிடி விசயம்தான் எடுத்துக்கொள்வார்.
- மேடைமீது ஏறி பேச்சு என்னும் நெருப்பு அதற்கு வைத்ததும், அதிலிருந்து கருத்து வர்ணஜாலங்கள் தோன்றும்.
- பச்சையும் சிவப்பும் மஞ்சளும் உதிரும், குடை குடையாய் இறங்கி வரும், மாலை மாலையாய் இறங்கி வரும்.

**2. உழைப்பாளர்களின் தோள் வலிமையால் விளைந்தன யாவை?**

- உழைப்பாளர்களின் தோள் வலிமையால் அழகான நகரங்கள் உண்டாயின.
- சிற்றூர்கள் நாட்டில் உருவாக்கப்பட்டன.
- சிறப்பாக மண்ணெடுத்துக் கட்டப்பட்ட வயல்கள் உருவாகின.
- ஆற்று நீரைக் கொண்டுவர நல்ல வாய்க்கால்கள் வெட்டப்பட்டன.
- நெற்பயிர் விளைவதற்கு ஏற்றாற்போல் நிலத்தை மீண்டும் மீண்டும் உழுது பக்குவப்படுத்தப்பட்டது.



www.tnpscjob.com

- இவை அனைத்தும் உழைப்பாளர்களின் தோள் வலிமையால் விளைந்தனவாகும்.

**3. அலைகடல், புதுக்கியவர் – இலக்கணக் குறிப்பு தருக.**

அலைகடல் – வினைத்தொகை

புதுக்கியவர் – வினையாலணையும் பெயர்.

**4. செந்துறைப் பாடாண்பாட்டு – துறை விளக்கம் எழுதுக.**

செந்துறையாவது உலகினுள் இயற்கை வகையான் இயன்ற மக்களைப் பாடுதல். இது செந்துறைப் பாடாண் பாட்டு எனப்படும்.

**சிறுவினா**

**1. ஜீவாவின் பேச்சுநடை குறித்துச் சுந்தரராமசாமி கூறுவன யாவை?**

- பேச்சுக்கலை, அவர் பெற்ற வரம் என்றுதான் சொல்ல வேண்டும்.
- அதோடு அவர் பேசுகையில் வெளிப்படும் உத்திகளும், பேச்சை அமைக்கும் அழகும் வெகு நூதனமாகவும் நளினமாகவும் இருக்கும்.
- அவருடைய பாணி இரவல்பாணி அல்ல; கற்று அறிந்ததும் அல்ல.
- நம் நாட்டு மக்களின் தரத்தையும், அனுபவ அறிவையும், பழக்க வழக்கங்களையும் நம்பிக்கைகளையும் நன்றாகத் தெரிந்து பேசியவர். பேசும் விஷயத்தைக் கலைநோக்கோடு அணுகிக் கற்பனையும் கலந்து நாளடைவில் வெற்றிகரமாக அமைத்துக் கொண்டவர்.
- பேச்சு பயனைத் தரவேண்டுமென்றால், அது எவ்வாறு அமைய வேண்டும் என்பதும் அவருக்குத் தெரியும்.

**2. உயர்தமிழை உயிரென்று போற்றுமின்கள் – இடம் சுட்டிப் பொருள் விளக்கம் தருக.**

**இடம் :**

பாரதிதாசன் எழுதிய 'புரட்சிக்கவி' காவியத்தில் கொலைக்களத்திற்கு அழைத்துவரப்பட்ட உதாரன், தன் கடைசிப் பேச்சான வீரஉரையிலே பொதுமக்களை நோக்கி "உயர்தமிழை உயிரென்று போற்றுமின்கள்" என்று கூறிகின்றான்.

**பொருள் :**

தாய்மொழிக்குப் பழிவந்தால் ஏற்றுக்கொள்ளக்கூடாது. குற்றம் இல்லாத உயர்தமிழை உயிரென்று போற்ற வேண்டும் என்று உதாரன் பொதுமக்களிடம் வேண்டுகின்றான்.



www.tnpscjob.com

**விளக்கம்:**

மன்னன் மகள் அமுதவல்லி தனக்குக் கவிதை சொல்லித் தந்த தமிழ்க்கவிஞன் உதாரனைக் காதலித்ததால் இருவருக்கும் மரணதண்டனை விதிக்கப்பட்டு கொலைக்களத்திற்கு அழைத்துச் சென்றனர். அமுதமெனப் போற்றப்பட்ட தமிழ் இறப்பதற்குக் காரணமாயிற்று என்று சமுதாயம் எண்ணிவிடுமோ? என்று கருதிய உதாரன், அங்கிருந்த பொதுமக்களிடம் தாய்மொழிக்குப் பழி வந்தால் சகிக்கக் முடியாது. குற்றம் இல்லாத உயர்தமிழை உயிரென்று போற்ற வேண்டும் என்று வேண்டுகின்றான்.

**3. பெருங்காடு, உழுதுழுது– பிரித்துப் புணர்ச்சி விதி எழுதுக.**

1) பெருங்காடு = பெருமை + காடு
ஈறுபோதல் = பெரு + காடு
இனமிகல் = பெருங்காடு

2) உழுதுழுது = உழுது + உழுது
உயிரிவரின் உக்குறள் மெய்விட்டோடும் = உழுத் + உழுது
உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே = உழுதுழுது

**4. சேரநாடு செல்வவளம் மிக்கது என்ற கூற்றிற்குரிய காரணங்களைக் குறிப்பிடுக.**

- இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் தன் நாட்டில் வாழும் அனைத்து உயிர்களுக்கும் இடையறாது கொடுக்கும் பண்புடையவன்.
- சான்றோர்களுக்கு அரிய பொருள்கள் நல்குகிறவன்.
- எப்பொழுதும் விழாக்கள் நிகழ்வதால் சேரநாடு செல்வமுடையது என்பது தெரியவருகிறது.
- அரசனானவன் தன் நாட்டையும் மக்களையும் கண்ணெனக் காத்தான்.
- அதனால் சேரநாட்டு மக்கள் வேற்று நாட்டுக்குச் செல்ல விரும்புவதில்லை. சேரலாதன் புதுவருவாய்ப் பெருக்கமும் ஈத்துவக்கும் இன்பமும் உடையவன்.
- இத்தகைய காரணத்தால் சேரநாடு செல்வவளம் மிக்கதே என்பது உறுதியாகிறது.

**5. ஆக்கப்பெயர் விகுதிகள் தற்கால வாழ்வியலில் மிகுந்துள்ளன – ஏன்?**

- பெயர்ச்சொற்களை ஆக்கப் பயன்படும் விகுதிகளை ஆக்கப்பெயர் விகுதிகள் என்பர்.
- ஆக்கப்பெயர்களில் விகுதிகளே தனிச்சிறப்பு உடையன.
- தமிழ்ச் சொற்களோடு இவ்வகையான விகுதிகள் சேரும்போது எண்ணற்ற புதுச்சொற்கள் உருவாகித் தமிழின் சொற்களஞ்சியம் விரிவடைகிறது.



www.tnpscjob.com

- தமிழ்மொழியில் ஆக்கப்பெயர்கள் பேச்சு வழக்கிலேயே மிகுதியாக உள்ளன.
- அறிவியல், திறமைசாலி, கோழைத்தனம், சமத்துவம், பெண்ணியம், பேச்சாளன், ஏற்றுமதி முதலான சொற்களில் இயல், சாலி, தனம், துவம், இயம், ஆளன், மதி ஆகிய விகுதிகள் சேர்ந்து ஆக்கப் பெயராக்கப்பட்டுள்ளன.
- இவ்வகையான சொற்கள் நம் மொழிக்குப் புதியபுதிய சொற்களை உருவாக்குவதோடு நில்லாமல், மொழி காலந்தோறும் வளர்வதற்குத் துணைபுரியும்.

**நெடுவினா**

**1. சுந்தர ராமசாமியின் "காற்றில் கலந்த பேரோசை'' என்னும் தலைப்பு ஜீவாவின் வாழ்க்கைக்கு எங்ஙனம் பொருந்தும் என்பதை விளக்குக.**

ஜீவா என்றழைக்கப்படும் ப.ஜீவானந்தம் தொடக்கத்தில் காந்தியவாதியாகவும், பிறகு சுயமரியாதை இயக்கப் போராளியாகவும் பொதுவுடைமை இயக்கத் தலைவராகவும் செயல்பட்டார். சிறந்த தமிழ்ப் பற்றாளர். எளிமையின் அடையாளமாகத் திகழ்ந்தவர். சிறந்த மேடைப்பேச்சாளர்.

**மேடையில் வாழ்ந்த மனிதர்**

ஜீவா என்ற தொண்டன் தமது இறுதி மூச்சு நிற்பது வரையிலும் கர்ஜித்துக் கொண்டுதான் இருந்திருப்பார் என்பதில் வெகுஜன மக்களுக்கு எத்தனை நம்பிக்கை! எனவேதான் 'மூச்சு நின்றுவிட்டது' என்று சொன்னபோது பேச்சு நின்றபோதா?எனத் திருப்பிக் கேட்கிறார்கள். ஜீவா தமது அரிய சேவையால் சர்வசாதாரண உள்ளங்களில்கூட எழுப்பியிருக்கும் சித்திரம்தான் எத்தனை ஜீவகளையுடன் காட்சி தருகிறது.

**நெஞ்சோடு வளர்ந்த கனவு:**

ஜீவா தனக்கென ஒரு தத்துவத்தை சிருஷ்டித்துக் கொண்டவர் அல்லர். அவர் தான் நம்பிய தத்துவத்தை, அச்சில் உயிரிழந்து கிடக்கும் அதன் சித்தாந்தக் கருத்துகளைத் தமது அரிய பேச்சுத் திறமையால், கலை நோக்கால், கற்பனையால், உயிர் பெறச் செய்து மனிதன்முன் படைத்தவர். மின்சக்திக்கு ஒளியுருவம் கொடுத்தவர் அவர்.

**பேச்சு நடை:**

பேச்சுக்கலை, அவர் பெற்ற வரம் என்றுதான் சொல்லவேண்டும். அதோடு அவர் பேசுகையில் வெளிப்படும் உத்திகளும்,பேச்சை அமைக்கும் உத்திகளும், பேச்சை அமைக்கும் அழகும் வெகு நூதனமாகவும் நளினமாகவும் இருக்கும்.

அவருடைய பாணி இரவல் பாணி அல்ல; கற்று அறிந்ததும் அல்ல.



www.tnpscjob.com

நம் நாட்டு மக்களின் தரத்தையும் அனுபவ அறிவையும் பழக்க வழக்கங்களையும் நம்பிக்கைகளையும் நன்றாகத் தெரிந்து கொண்ட ஒரு மனிதன், விஷயத்தைக் கலைநோக்கோடு அணுகிக் கற்பனையும் கலந்து நாளடைவில் வெற்றிகரமாக அமைத்துக் கொண்ட பேச்சுப்பாணி அது.

**பசுமையான எண்ணங்கள்**

பேச்சுக்கலை அவருடைய காலடியில் விழுந்து கிடந்தது. நான் ஒரு பள்ளி மாணவன், படித்துக்கொண்டிருக்கிறேன்.படித்துக் கொண்டே இருப்பேன் என்ற எண்ணம் எப்போதும் அவர் மனதில் பசுமையாக இருந்தது. சொரிமுத்துவுக்கும் தலைவர் ஜீவாவுக்குமுள்ள இடைவெளி கொஞ்சம் தூரமல்ல. அதையொருகணம் எண்ணிப்பார்த்தால், அவருடைய சாதனை தெரியவரும். என் வாழ்வு என் கைகளில் என்று நம்பியவர் அவர். அவருடைய வாழ்க்கையை ஆராய்ந்து பார்க்கிறபோது அவருடைய நம்பிக்கை பலித்திருக்கிறது என்று சொல்லலாம்.

**காற்றில் கலந்த பேரோசை**

கடவுளின் முன்னேற்பாடுகளை முடிந்த மட்டும் அவர் தகர்த்து எறிந்து விட்டார். நீரில் விழுந்த கிளை மலைக்குச் சென்று விட்டது. எனினும் மரணம் இன்னும் கடவுளுக்குத்தான் சொந்தம். ஜீவா என்னும் சமூக சிந்தனை கொண்ட பேச்சாளரின் பேச்சு 'காற்றில் கலந்த பேரோசையாக'க் கலந்து விட்டது.

**2. பாரதிதாசன் ஒரு 'புரட்சிக்கவி' என்பதை உதாரன் பாத்திரம் வாயிலாக மெய்ப்பிக்க.**

புரட்சிக்கவி காவியத்தில் இடம் பெற்ற உதாரன் என்னும் கதாபாத்திரம் பாரதிதாசனின் மனசாட்சியாகப் பார்க்கப்படுகிறது.

**உழைப்பாளர்களே உயர்வானவர்கள்**

ஓடி வருகின்ற ஆற்றுநீரைத் தடுத்துக் குளம் குட்டை ஏரிக்ளை அமைத்ததும், அவற்றில் இருந்து நீர் கொண்டு செல்ல வாய்க்கால் வெட்டியதும், தரிசு நிலத்தை வரப்பெடுத்து உழுது அந்நீரைக் கொண்டு விளைவித்ததும், மக்கள் கூடி வாழச் சிற்றூர்களை உண்டாக்கியதும் தொழிலாளர்கள்.

கல்லையும் , மலையையும் பிளந்து, உலோகங்களைக்கண்டு கருவிகள் செய்ததும், தங்கத்தைக் கண்டெடுத்ததும், கடலுக்குள் மூழ்கி மூச்சடக்கி முத்தை எடுத்ததும் உழைப்பாளர்கள் என மன்னராட்சியிலும் உழைப்பாளர்களே உயர்வானவர்கள் என உதாரன் மூலம் கூறியதால் பாரதிதாசன் புரட்சிக்கவியே.

**பொதுவுடைமை நாடு**

அரசனின் தேவைக்குத்தான் நாடு என்றால் அந்நாடு அழிவதே நல்லது என்று உதாரன் கூறுவதிலிருந்து ஒருவனுக்காக நாடு இருக்கக்கூடாது அனைவருக்கும் பொதுவுடைமையாக நாடு இருக்கவேண்டும் என பாவேந்தர் கூறுவது மக்களாட்சிக்கான புரட்சிமிகு சிந்தனைகள்.



www.tnpscjob.com

**மொழிப்பற்று**

உதாரன் தன்னுடைய இறப்பிற்கு தமிழ்தான் காரணம் என்று பிறர்கூற அதனால் தமிழ்மொழிக்கு இழுக்கு உண்டாகிவிடக்கூடாது எனவும், தமிழை உயிரெனப் பாதுகாக்க வேண்டும் எனவும் கூறியதால் மொழிப்பற்றில் புரட்சியான சிந்தனை கொண்டவராக பாரதிதாசன் திகழ்கிறார்.

**குடியாட்சி உரிமை**

அரசன் மகள் அமுதவல்லி தனக்கு அரசுரிமை கிடைக்கப் பெறும் காலத்தில் குடிமக்கள் அனைவரும் ஆளுகின்ற உரிமையைப் பொதுவாக நினைத்திருந்தாள் என உதாரன் கூறுவதிலிருந்து பாரதிதாசனின் குடியாட்சி உரிமைகள் புரட்சிமிகு வடிவிலே வெளிப்படுகிறது.

**அன்பே துணை:**

அன்புக்கு அழிவில்லை, அன்பு மேன்மையானது என மானுடத்திற்கு உயர்வான கருத்துகளை உதாரன் வாயிலாக வெளிப்படுத்தியிருப்பது பாரதிதாசனின் தனிச்சிறப்பு.

**பாரதிதாசன் புரட்சிக்கவியே !**

சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் ஆகியன மக்களாட்சியின் அடிப்படைக் கூறுகள். மக்களாட்சிச் சிந்தனைகளைப் பரப்பியதில் இலக்கியத்திற்கும் பெரும் பங்கு உண்டு. மொழி, இனம், குடியாட்சி உரிமைகள் ஆகியவை பற்றி உதாரன் வாயிலாக உரக்க வெளிப்படுத்தியமையால் பாரதிதாசன் 'புரட்சிக்கவி' என்பது முற்றிலும் மெய்யாகும்.

**3. சிந்தனைப் பட்டிமன்றத்தின் நிகழ்வுகளைச் சுவை குன்றாமல் தொகுத்து எழுதுக.**

**இளைஞர்களின் முன்னேற்றத்திற்குப் பெரிதும் உதவுவது வீடே:**

- இளைஞர்களின் முன்னேற்றப் பாதையில் முதல் படிக்கல்லாகவும் அவர்கள் கொடு முடியைத் தொடுவதற்கு அடித்தளமாகவும் விளங்குவது இல்லம்தான். அன்பையும் அறிவையும் உணரத்தொடங்கும் உரைகல்லாக வீடு விளங்குகிறது. பிறக்கின்ற ஒவ்வொரு குழந்தைக்கும் தாயின் முகம்தான் முதல் பாடப்புத்தகம்.
- குழந்தைகளுக்கு உலகத்தைத் தாய்தான் முதன்முதலில் அறிமுகப்படுத்தி, வாழ்வின் ஒவ்வொரு நிலையையும் உணரவைக்கிறாள்.
- கற்றல் என்பதே வீட்டிலிருந்தான் தொடங்குகிறது, தந்தையோ அதைத் தொடர்கிறார். அடித்தளம் பலமாக இருந்தால்தான் கட்டடம் வலிமையாக அமையும். வீடு என்ற அடித்தளத்தின் மீதுதான் நமது வெற்றி கட்டி எழுப்பப்படுகிறது.



www.tnpscjob.com

எத்தனை உயரம் இமயமலை – அதில்
இன்னொரு சிகரம் உனது தலை !
எத்தனை ஞானியர் பிறந்த தரை– நீ
இவர்களை விஞ்சிட என்ன தடை?

என்று முழங்கிய தாராபாரதியின் வழியில் நாம் முன்னேற வீடே காரணமாகிறது.

- வீடென்பது நமது பண்பாட்டையும் மரபையும் காத்து நிற்கும் கருவூலம். எந்தவொரு தேடலும் இல்லத்திலிருந்துதான் தொடங்குகிறது. அன்பின் தலைவாசலாக, அறிவின் நாற்றங்காலாக வீடுதான் விளங்குகிறது.
- பெற்றோர் பாடிய தாலாட்டும், தாத்தா பாட்டி சொன்ன கதைகளும் நமக்கான கைவிளக்குகள்.
- உணவு எப்படி உற்பத்தியாகிறது என்று விளைநிலத்திற்கு அழைத்துச் சென்று காட்டிய பெற்றோர்களே நம் முதல் பேராசிரியர்கள். பனை ஓலையில் காற்றாடி செய்து பழக்கியும் நுங்குவண்டி விளையாடக் கற்றுக் கொடுத்தும் படைப்பாற்றலை வளர்த்தனர்.
- குழந்தைப் பருவத்தைச் சரியாகக் கடந்து வருவதற்குக் கற்றுக்கொண்டால், இளமைப்பருவம் வளமடையும். எனவே இல்லம் என்கிற வீடுதான் இளைஞர்களின் முன்னேற்றத்திற்குக் கலங்கரை விளக்கமாக நின்று வழிகாட்டுகிறது.

**இளைஞர்களின் முன்னேற்றத்திற்குப் பெரிதும் உதவுவது நாடே**

- வீடு ஒரு சிறிய கூடு, அதற்குள்தான் எத்தனை முரண்பாடு. குடும்பத்திற்குள் இருந்த குதூகலமான உரையாடல் தற்போது தொலைந்து விட்டது.
- வீடு என்னும் சிறிய வட்டத்தைத்தாண்டி நாட்டை நாடியபின்தான் நல்வாழ்வு துளிர்க்கத் தொடங்கியது.
- நாட்டின் கல்விச்சாலைகள்தான் புத்தகங்களின் மூலம் உலகத்தைத் திறந்து காட்டுகின்றது. வேறுபாடுகளைக் கடந்து புதிய நண்பர்களையும் உறவினர்களையும் அடையாளம் காட்டுகிறது.
- அறிவியல் தொழில்நுட்பக் கல்வி யுகத்தை அறிமுகப்படுத்தி எல்லோரையும் இணைக்கின்ற பொதுவாகும்.
- ஆண்களுக்கு மட்டும்தான் வீடு, அறிவின் உறைவிடம், 'அடுப்பூதும் பெண்களுக்கு படிப்பெதற்கு?' 'பெண்புத்தி பின்புத்தி' என்று சொல்லிப் பெண்களைச் சிறைவைத்தது.
- பள்ளிக்கு வந்தபின்தான் 'பெண்மை வெல்க என்று கூத்திடுவோம்' என்று பாரதி முழங்கியதையும்



www.tnpscjob.com

"பெண்ணடிமை தீருமட்டும் பேசும் திருநாட்டில்

மண்ணடிமை தீர்ந்து வருதல் முயற்கொம்பே"

– என்று புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் முழங்கியதையும் அறிய முடிந்தது.

- இன்று விஞ்ஞானிகளாக, கல்வியாளர்களாக, கவிஞர்களாக இளம் பெண்கள் கம்பீரமாக நடைபோடுவதற்கு நாடல்லவா கற்றுக் கொடுத்தது. ஊராட்சி மன்றங்களையும் சட்ட மன்றங்களையும் பார்த்தபின்தான் பெண்களுக்கான உரிமைகளைப் பெண்களே உணர்ந்தனர்.
- எனவே, நாடுதான் நம்பிக்கையோடு இளைஞர்களை வழிநடத்துகிறது. எதிர்காலத்தை வளமாக்கத் துணைபுரிகிறது.

**இலக்கணக்குறிப்பு**

| | | |
|---|---|---|
| ஓதுக | – | வியங்கோள் வினைமுற்று |
| பேசிடுக | – | வியங்கோள் வினைமுற்று |
| ஆழ்க | – | வியங்கோள் வினைமுற்று |
| வாழிய | – | வியங்கோள் வினைமுற்று |
| அலைகடல் | – | வினைத்தொகை |
| தமிழ்க்கவிஞர் | – | இருபெயரொட்டுப் பண்புத்தொகை |
| பேரன்பு | – | பண்புத்தொகை |
| நெடுங்குன்று | – | பண்புத்தொகை |
| ஒழிதல் | – | தொழிற்பெயர் |
| உழுதுழுது | – | அடுக்குத்தொடர் |
| துய்த்தல் | – | தொழிற்பெயர் |
| ஓரீஇய | – | சொல்லிசை அளபெடை |
| புகழ்பண்பு | – | வினைத்தொகை |
| நன்னாடு | – | பண்புத்தொகை |
| மருண்டனென் | – | தன்மை ஒருமை வினைமுற்று |
| ஓடியா | – | ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம். |

**பகுபத உறுப்பிலக்கணம்**

1. நின்றார் = நில்(ன்) + ற் + ஆர்
   நில் = பகுதி ; 'ல்' 'ன்' ஆனது விகாரம்; ற் – இறந்தகால இடைநிலை;
   ஆர் – பலர்பால் வினைமுற்று விகுதி.
2. செய்வான் = செய் + வ் + ஆன்
   செய் = பகுதி; வ் – எதிர்கால இடைநிலை;
   ஆன் – ஆண்பால் வினைமுற்று விகுதி



www.tnpscjob.com

3. அழைத்தான் – அழை + த் + த் + ஆன்
அழை – பகுதி; த்–சந்தி ; த்–இறந்தகால இடைநிலை;
ஆன் – ஆண்பால் வினைமுற்று விகுதி

4. வேண்டுகின்றேன் – வேண்டு + கின்று + ஏன்
வேண்டு – பகுதி; கின்று–நிகழ்கால இடைநிலை
ஏன் – தன்மை ஒருமை வினைமுற்று விகுதி

5. ஆழ்க = ஆழ் + க
ஆழ் – பகுதி; க–வியங்கோள் வினைமுற்று விகுதி.

6. பறித்தார் = பறி + த் + த் + ஆர்
பறி = பகுதி; த் – சந்தி; த் – இறந்தகால இடைநிலை;
ஆர் – பலர்பால் வினைமுற்று விகுதி.

7. மருண்டனென் = மருள்(ண்) + ட் + அன் + என்
மருள் = பகுதி; 'ள்' 'ண்' ஆனது விகாரம்; ட்–இறந்தகால இடைநிலை;
அன்–சாரியை; என்– தன்மை ஒருமை வினைமுற்று விகுதி

8. துய்த்தல் = துய் + த் + தல்
துய்–பகுதி; த்–சந்தி; தல்–தொழிற்பெயர் விகுதி

## புணர்ச்சி விதி

1. நீரோடை = நீர் + ஓடை
உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே = நீரோடை

2. சிற்றூர் = சிறுமை + ஊர்
ஈறுபோதல் = சிறு + ஊர்
தன்னொற்றிரட்டல் = சிற்று + ஊர்
உயிர்வரின் உக்குறள்மெய்விட்டோடும் – சிற்ற்+ஊர்
உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே = சிற்றூர்

3. கற்பிளந்து = கல் + பிளந்து
லள வேற்றுமையில் வலிவரின் றடவும் = கற்பிளந்து

4. மணிக்குலம் = மணி + குலம்
இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் கசதப மிகும் = மணிக்குலம்

5. அமுதென்று = அமுது + என்று
உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும் = அமுத் + என்று
உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே = அமுதென்று



www.tnpscjob.com

6. புவியாட்சி = புவி + ஆட்சி
இஈஐ வழி யவ்வும் = புவி + ய் + ஆட்சி
உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே – புவியாட்சி

7. மண்ணுடை = மண் + உடை
தனிக்குறில்முன் ஒற்று உயிர்வரின் இரட்டும் = மண்ண் + உடை
உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே = மண்ணுடை

8. புறந்தருதல் = புறம் + தருதல்
மவ்வீறு ஒற்றழிந்து உயிரீறு ஒப்பவும்
வன்மைக்கு இனமாத் திரிபவும் ஆகும் – புறந்தருதல்

## மொழியை ஆள்வோம்

### சான்றோர் சித்திரம்



தமிழ் மொழியில் மறந்ததும் மறைந்ததுமான சிறந்த செய்திகள், அளவுகடந்து உள்ளன. அவற்றை வெளிக் கொணர்ந்து, வீரிய உணர்வுடன் வெளியிட்டவர் அறிஞர் மயிலை சீனி. வேங்கடசாமி ஆவார். அவர் எழுதிய கட்டுரைகள் அனைத்தும் புதிய புதிய செய்திகளைப் புலப்படுத்திய விந்தைப் படைப்புகள். இராமேசுவரத் தீவு, உறையூர் அழிந்த வரலாறு, மறைந்து போன மருங்காப்பட்டினம் போன்ற தனித்தன்மை கொண்ட அவர்தம் கட்டுரைகள் வரலாற்றில் புதிய வெளிச்சம் பாய்ச்சின. கொங்கு நாட்டு வரலாறு, துளுவ நாட்டு வரலாறு,சேரன் செங்குட்டுவன், மகேந்திரவர்மன், நரசிம்மவர்மன், மூன்றாம் நந்திவர்மன் முதலிய நூல்கள் அவர் நமக்கு வழங்கியுள்ள வரலாற்றுச் செல்வங்கள். அவருடைய ‘களப்பிரர் காலத் தமிழகம்’ என்னும் ஆய்வு நூல், இருண்ட காலம் என்று ஆய்வாளர்களால் வருணிக்கப்பட்ட களப்பிரர் காலத்திற்கு ஒளியூட்டி, வரலாற்றுத் தடத்தைச் செப்பனிட்டது.

நகராட்சிப் பள்ளி ஆசிரியராக நெடுங்காலம் பணியாற்றிய அவர் தன்னுணர்வால், உறுதியான உழைப்பால், தமிழ்ப்பற்றால் பல்கலைக்கழகப் பேராசிரியர்களும் மதித்துப் போற்றும் பணிகளைச் செய்தார். ஆங்கிலம், மலையாளம், கன்னடம் ஆகிய மொழிகளைக் கற்றுத் தேர்ந்தவர். சிறந்த வரலாற்றாசிரியர், நடுநிலை பிறழாத ஆய்வாளர், மொழியியல் அறிஞர், இலக்கியத் திறனாய்வாளர் என்றெல்லாம் போற்றப்பட்ட பன்முகச் சிறப்பு கொண்டவர். அவருக்கு மதுரைப் பல்கலைக்கழகம் 1980 ஆம் ஆண்டு, ‘தமிழ்ப்பேரவைச் செம்மல்’ என்னும் பட்டமளித்துப் பாராட்டியது. கிறித்துவமும் தமிழும், சமணமும் தமிழும், பௌத்தமும் தமிழும், மறைந்து போன தமிழ்நூல்கள் போன்ற பல



www.tnpscjob.com

நூல்களால் தமிழ் ஆய்வு வரலாற்றில் மயிலை சீனி. வேங்கடசாமி அழியாச் சிறப்பிடம் பெற்றுள்ளார்.

**வினாக்கள் :**

1. மறந்ததும் மறைந்ததும் – இதுபோன்ற இரண்டு தொடர்களை உருவாக்குக.

   (எ.கா) படித்ததும் படைத்ததும்

   விதித்ததும் விலக்கியதும்

   கரந்ததும் கரைந்ததும்

2. <u>அழிந்த</u> வரலாறு, <u>புதிய</u> வெளிச்சம் – அடிக்கோடிட்ட சொற்களின் எச்ச வகைகளை எழுதுக.

   **அழிந்த** வரலாறு – பெயரெச்சம்

   **புதிய** வெளிச்சம் – குறிப்புபெயரெச்சம்

3. அழியாச் சிறப்பிடம் – இலக்கணக்குறிப்புத் தருக.

   அழியா – ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்.

4. முதலிய, முதலான– பொருளறிந்து சொற்றொடர் அமைக்க.

   மா, பலா, வாழை முதலிய மூன்று கனிகளும் முக்கனிகளாகும்.

   மா முதலான முக்கனிகள் ஊட்டச்சத்து மிகுந்தவை.

5. பத்தியில் உள்ள உயர்வு சிறப்பு உம்மையைக் கண்டு எழுதுக.

   பேராசிரியர்க**ளும்** மதித்துப் போற்றும் பணிகளைச் செய்தார்.

**தமிழாக்கம் தருக.**

Balu : Hi, Good evening.

Velu : Hi Balu, Good evening.

Balu : Yesterday you were watching the Republic day function the whole day.

Velu : Yes, I was touched by one award ceremony.

Balu : Which award?

Velu : Param vir Chakra award, highest award for army personnel.

Balu : Why were you touched?

Velu : Most of the awards were received by the wives of soldiers Posthumously.

Balu : Why? What do you mean by posthumous?

Velu : it means after death. Many soldiers had laid down their lives protecting the border of our Mother land. They have sacrificed their lives to save our Country. So that we can be free and safe.



www.tnpscjob.com

பாலு : மாலை வணக்கம் வேலு.

வேலு : மாலை வணக்கம் பாலு.

பாலு : நேற்று முழுவதும் குடியரசு தினவிழா நிகழ்ச்சிகளை முழுவதுமாகப் பார்த்துக் கொண்டிருந்தாய் அல்லவா?

வேலு : ஆமாம். விருது வழங்கும் விழா என்னை மிகவும் கவர்ந்திருந்தது.

பாலு : என்ன விருது?

வேலு : பரம்வீர் சக்கரா விருது. இராணுவத்தினருக்கு வழங்கப்படும் மிகமிக உயரிய விருது.

பாலு : உன்னை மிகவும் கவர்ந்தது எது?

வேலு : பெரும்பாலான விருதுகள் இறந்துபோன வீரர்களின் மனைவிகளால் பெற்றுக்கொள்ளப்பட்டது.

பாலு : ஏன்? இறப்பிற்குப் பிறகா? நீ என்ன சொல்கிறாய்?

வேலு : அதாவது வீரர்களின் மரணத்திற்குப் பிறகு. அநேக வீரர்கள் தாய்நாட்டின் எல்லைகளைப் பாதுகாக்கும்பொழுது. தங்களின் உயிரைத் தாய் நாட்டிற்காக தியாகம் செய்துவிடுகிறார்கள். அதனால்தான் நாம் சுதந்திரமாகவும் பாதுகாப்பாகவும் இருக்க முடிகிறது.

**மரபுச்சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக.**

**சான்று :**

**1. எதிர்நீச்சல்**

வாழ்க்கையில் எத்தனை தோல்விகள் வந்தாலும் அவற்றைக் கடந்து எதிர்நீச்சல் போட்டு வெற்றிபெற வேண்டும்.

**சொந்தக்காலில் நிற்றல்**

அடுத்தவர் உதவுவார் என்று எதிர்பார்த்துக் காத்திராமல் சொந்தக்காலில் நிற்றல் ஒருவனுக்கு என்றும் உயர்வு தரும்.

**தாளம் போடுதல்**

மற்றவர்கள் கூறுகின்ற வாதங்களைப் புரிந்து கொள்ளாமல் தாளம்போடுதல் ஆபத்தில் நம்மைத் தள்ளிவிடும்.

**மதில்மேல் பூனை**

மேற்படிப்பிற்காக என்ன பாடத்தை எடுப்பது என்று தெரியாமல் மதில்மேல் பூனையாக விழித்தான்.



www.tnpscjob.com

**நிறைகுடம்**

சான்றோர்கள் தன்னை வியந்து என்றும் பேசமாட்டார்கள். நிறைகுடம் நீர் தளும்பாது அல்லவா?

**கைதூக்கிவிடுதல்**

ஆதரவற்றை மக்களை அரவணைத்து அன்புகாட்டி அவர்களைக் கைதூக்கி விடுதல் வேண்டும்.

**கண்ணாயிருத்தல்**

கல்வியில் கண்ணாயிருத்தல் ஒன்றே வாழ்வின் உயர்விற்கு அடிப்படையாகும்.

**அவசரக்குடுக்கை**

நிதானமுடன் முடிவெடுக்கத் தெரிந்திடாமல் அவரக்குடுக்கையாகச் செயல்பட்டால் அது நமக்கு ஆபத்தைக் கொண்டுவரும்.

**முதலைக்கண்ணீர்**

ஏழைகள் துன்பத்தைக் கண்டு வருந்துவதாக பணக்காரர்கள் முதலைக் கண்ணீர் வடிக்கிறார்கள்.

**கானல்நீர்**

ஆனந்தமாய் வாழும் அழகிய வாழ்க்கை ஏழை மக்களுக்கு கானல்நீராகவே காட்சியளிக்கிறது. மனித வாழ்க்கை கானல் நீர் போன்றது.

### வரைபடம் கொண்டு விவரிக்க

நீங்கள் பேருந்து நிறுத்தத்தில் நின்று கொண்டிருக்கிறீர்கள். வழி தெரியாத ஒருவர், உங்களிடம் வந்து நகலகத்திற்கு வழி கேட்கிறார். கீழ்க்காணும் வரைபடத்தைக் கொண்டு, அப்புதியவருக்கு வழி காட்டுங்கள் ...........







www.tnpscjob.com

நீங்கள் நகலகம் செல்ல வேண்டும் என்றால் இடதுபுறமுள்ள பவணந்தி தெருவில் செல்லுங்கள். தெருவின் முடிவில் மேலைத் தேர்தெரு வரும். அங்கு இடதுபுறம் திரும்பி நேரே சென்றால் சிறிது தொலைவில் இடதுபுறம் அறம் வளர்த்த மாடத் தெரு பிரிவு வரும். அறம் வளர்த்த மாடத் தெருவில் நீங்கள் நேராகச் சென்றால் கீழைத் தேர்த்தெரு வரும். அறம் வளர்த்த மாடத் தெருவும், கீழைத் தேர்த்தெருவும் சந்திக்கும் இடத்தில் இடதுபுறம் உள்ளது நகலகம்.

## மொழியோடு விளையாடு

### சொல்லெடுத்துத் தொடர் அமைக்க.

கீழுள்ள கட்டத்தினுள் நுழைந்து சொற்களை எடுத்தும் தேவையான சொற்களைச் சேர்த்தும் தொடரமைக்க. (அடைபட்ட பகுதியில் உள்ள சொற்களைத் தவிர்க்கவும்)

(எ.கா) மாணவர்கள் வகுப்பறையினுள் நுண்கலைகளையும் கற்க வேண்டும்.




- மாணவர்கள் வாசிப்புத் திறனை வளர்த்துக் கொள்ள வேண்டும்.
- மாணவர்கள் வகுப்பறைக்குத் தாமதமாக வருதல் கூடாது.
- தவறினால் மன்னிப்புக் கேட்கத் தயங்கக் கூடாது.
- மாணவர்கள் வகுப்புகளை புறக்கணிப்பு செய்தல் கூடாது. செய்தால் வெளியேற்றம் செய்யப்படுவர்.
- மாணவர்கள் நல்ல சிந்தனைகளை வளர்த்துக்கொள்ள வேண்டும்.
- பள்ளிக்கூடத்தில் மாணவர்கள் வழிபாடு செய்தல் வேண்டும்.



www.tnpscjob.com

- மாணவர்கள் பட்டினியில் இருத்தல் கூடாது என்பதற்காக மதிய உணவுத் திட்டத்தைக் கொண்டு வந்தார்.
- மாணவர்கள் உடலை உறுதியாக வைத்துக்கொள்ள வேண்டும்.
- மாணவர்கள் வேல்லயின்மையை ஒழிக்க வேலைவாய்ப்புத் தரும் கல்வியைப் பயில வேண்டும்.
- மாணவர்கள் நல்ல சிந்தனைகளை கரும்பலகையில் எழுதி வைக்க வேண்டும்.
- விளையாட்டுத் திறனை வளர்க்கவேண்டும்.

**படித்துப் பார்த்துப் படைக்க.**

**புனித பூமி**

1. பத்தாவது தடவையாக
விழுந்தவனுக்கு
முத்தமிட்டுச் சொன்னது பூமி
ஒன்பது முறை
எழுந்தவனல்லவா நீ!

–ஈரோடு தமிழன்பன்

**தீபாவளி**

2. எப்போதும் மத்தாப்பு
கொளுத்தி
விளையாடுகிறது
மலையருவி

–கழனியூரன்

**வரி**

3. வரிகள்
அதிகம் இருக்காது
திருக்குறளில்

**கவிதைக்குப் பொருத்தமான தலைப்புகள் :**

1. புனித பூமி
2. தீபாவளி
3. வரி

### நிற்க அதற்குத் தக

உம்முடைய பொறுப்பை உணர்ந்து கட்டங்களை நிறைவு செய்க.

| அடையாளம் | பெருமிதம் |
|---|---|
| இந்தியன் | ஒருமைப்பாட்டுணர்வுடன் சமூகக் கூட்டமைப்பில் இணைந்து வாழ்கிறேன். |
| தமிழன் | தமிழின் பெயரால் தலை நிமிர்கிறேன். |
| மாணவன் | நாட்டுப் பற்றுடன் நான் இணைகிறேன். |
| மகன்/ மகள் | பெற்றோருடன் இணைந்து சுமை தாங்குதல். |
| சகோதரன் / சகோதரி | உடன்பிறப்புகளின் உயர்வுக்கு உள்ளாதல். |
| தோழன் / தோழி | உயிர் காப்பான் தோழன். |



www.tnpscjob.com

## கூடுதல் வினாக்கள்

### ஒரு மதிப்பெண் வினாக்கள்

1. பசுவய்யா என்ற புனைபெயரில் கவிதைகள் எழுதியவர் யார்?
சுந்தரராமசாமி
2. ஜீவாவின் இயற்பெயர் என்ன?
சொரிமுத்து
3. 'என் வாழ்வு என் கைகளில்' என்று நம்பியவர் யார்?
ஜீவா
4. 'காற்றில் கலந்த பேரோசை' என்னும் கட்டுரையை எழுதியவர் யார்?
சுந்தரராமசாமி
5. 'புரட்சிக்கவி' எந்த வடமொழிக் காவியத்தைத் தழுவி எழுதப்பட்டது?
பில்கணீயம்
6. பாரதிதாசன் நடத்திய இலக்கிய இதழ் எது?
குயில்
7. பாரதிதாசனின் சாகித்திய அகாதெமி விருது பெற்ற நாடகநூல் எது?
பிசிராந்தையார்
8. 'வாழ்வினில் செம்மையைச்செய்பவள் நீயே' என்னும் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலை எழுதியவர் யார்?
பாரதிதாசன்
9. பாரதிதாசனின் 'வாழ்வினில் செம்மையைச் செய்பவள் நீயே' என்னும் பாடலை தமிழ்த்தாய் வாழ்த்தாக ஏற்றுக்கொண்டுள்ள அரசு எது?
புதுவை அரசு
10. பாரதிதாசன் பல்கலைக்கழகம் எங்குள்ளது?
திருச்சி
11. புரட்சிக்கவியின் முதன்மைப் பாத்திரம் எது?
உதாரன்
12. அரசன் மகள் அமுதவல்லிக்கு கவிபாடக் கற்றுத் தந்தவன் யார்?
உதாரன்
13. 'உயிர் எமக்கு வெல்லமல்ல' – என்று கூறியது யார்?
அமுதவல்லி
14. "ஒரு மனிதன் தேவைக்கு இந்தத் தேசம் உண்டென்றால் அத்தேசம் ஒழிதல் நன்றாம்" என்று பாடியவர் யார்?
பாரதிதாசன்



www.tnpscjob.com

15. 'பசியும் நோயும் பகையும் இல்லாதிருப்பதே சிறந்த நாடு' என்று கூறியவர் யார்?
திருவள்ளுவர்.

16. உதியன் சேரலாதனுக்கும் வேண்மாளுக்கும் மகனாகப் பிறந்தவர் யார்?
இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன்

17. இமயத்தில் வில்லினைப் பொறித்தவன் யார்?
இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன்

18. கடம்பர்களை வென்று, தன் வீரர்களுக்குக் கவசமாக விளங்கியவன் யார்?
இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன்

19. பதிற்றுப்பத்தின் இரண்டாம் பத்து பாடியவர் யார்?
குமட்டூர்க் கண்ணனார்.

20. இரண்டாம்பத்தின் பாட்டுடைத்தலைவன் யார்?
இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன்

21. 'நிரைய வெள்ளம்' – என்பதன் பொருள் யாது?
நரகத்து வீரர்கள்

22. கைக்கிளைக்குப் புறனாக அமையும் திணை யாது?
பாடாண் திணை.

23. பாடப்படும் ஆண்மகனின் ஒழுகலாறுகளைக் கூறும் திணை எது?
பாடாண் திணை

24. வண்ணம் என்பது யாது?
சந்த வேறுபாடு

25. ஒழுகு வண்ணம் என்பது யாது?
ஒழுகிய ஓசையாற் செல்வது

26. எட்டுத்தொகையில் அமைந்த புறத்திணை நூல்கள் எவை?
பதிற்றுப்பத்து, புறநானூறு

27. சேர மன்னர்கள் பத்துப்பேரின் சிறப்புகளைக் கூறும் நூல் எது?
பதிற்றுப்பத்து

28. பாடாண்திணை அமைந்த முழுமையான நூல் எது?
பதிற்றுப்பத்து.

29. சேரர்களின் சின்னம் எது?
வில், அம்பு

30. பாடலின் முடிவில் துறை, வண்ணம், தூக்கு, பாடலின் பெயர் இடம் பெறும் நூல் எது?
பதிற்றுப்பத்து



www.tnpscjob.com

31. பதிற்றுப்பத்தில் கிடைக்காத பத்துகள் எவை?
முதல் பத்தும், இறுதிப் பத்தும்
32. ''பட்டி மண்டபத்துப் பாங்கறிந்து ஏறுமின்'' என்று குறிப்பிடும் நூல் எது?
மணிமேகலை
33. ''வீட்டுக்கு உயிர்வேலி !
வீதிக்கு விளக்குத்தூண் !
நாட்டுக்குக் கோட்டை மதில் !
நடமாடும் கொடிமரம் நீ ! '' - என்று பாடியவர் யார்?
தாராபாரதி
34. எத்தனை உயரம் இமயமலை, அதில்
இன்னொரு சிகரம் உனது தலை
எத்தனை ஞானியர் பிறந்த தரை – நீ
இவர்களை விஞ்சிட என்ன தடை? – என்று முழங்கியவர் யார்?
கவிஞாயிறு தாராபாரதி
35. ''எத்தனை கோடி இன்பம் வைத்தாய்
எங்கள் இறைவா'' என்று பாடியவர் யார்?
மகாகவி பாரதியார்
36. ''தோள்கள் உனது தொழிற்சாலை – நீ
தொடுமிட மெல்லாம் மலர்ச் சோலை
தோல்விகள் ஏதும் உனக்கில்லை – இனி
தொடுவானம் தான் உன் எல்லை''
என்று பாடியவர் யார்?
தாராபாரதி
37. நல்லதோர் வீணை செய்தே அதை
நலங்கெடப் புழுதியில் எறிவதுண்டோ !
சொல்லடி சிவசக்தி – என்று பாடியவர் யார்?
பாரதியார்
38. 'நல்லதொரு குடும்பம் பல்கலைக் கழகம்' என்றவர் யார்?
பாவேந்தர் பாரதிதாசன்
39. ''யாதும் ஊரே யாவரும் கேளிர்'' என்றவர் யார்?
கணியன் பூங்குன்றனார்.
40. ''செந்தமிழ் நாடெனும் போதினிலே – இன்பத்
தேன்வந்து பாயுது காதினிலே'' – என்று பாடியவர் யார்?
பாரதியார்



www.tnpscjob.com

41. வீட்டிற்கோர் புத்தகசாலை வேண்டும் என்று கூறியவர் யார்?

அறிஞர் அண்ணா

42. புதியதாக ஆக்கப்படும் சொல்லுக்குப் பெயர் என்ன?

ஆக்கப் பெயர்

43. 'ஆள்' என்னும் விகுதி குறிப்பது?

கடைநிலைப் பணிபுரிவோர்

44. 'ஆளர்' என்னும் விகுதி குறிப்பது யாரை?

உயர்நிலைப் பணிபுரிவோர்

45. 'ஆளி' என்னும் விகுதி குறிப்பது யாரை?

இருபாற்பொதுப்பெயர்கள்

46. புரட்சிக்கவிஞர், பாவேந்தர் என்றெல்லாம் அழைக்கப்படுபவர் யார்?

பாரதிதாசன்

**குறுவினா – கூடுதல் வினாக்கள்**

**1. ஜீவா தன் நெஞ்சோடு வளர்த்த கனவைப் பற்றி எழுதுக.**

மனித வெள்ளத்தை அவர்களில் ஒருவனாய் முன்னின்று தலைமை தாங்கி இட்டுச்சென்று, அதிஉன்னதமான ஓர் எதிர்காலத்துக்கு அழைத்துச்செல்ல வேண்டும் என்பதே ஜீவா தன் நெஞ்சோடு வளர்த்த கனவாகும்.

**2. ஜீவாவின் மனத்தில் பசுமையாக இருந்த எண்ணம் எது?**

நான் ஒரு பள்ளி மாணவன், படித்துக் கொண்டிருக்கிறேன், படித்துக் கொண்டே இருப்பேன் என்ற எண்ணம் ஜீவாவின் மனதில் பசுமையாக இருந்தது.

**3. பாவேந்தர் எழுதிய நூல்கள் யாவை?**

அழகின் சிரிப்பு

குடும்ப விளக்கு

பாண்டியன் பரிசு

இருண்ட வீடு

சேரதாண்டவம்

பிசிராந்தையார்

**4. 'நிரைய வெள்ளம்' - பெயர்க்காரணம் கூறு.**

சேரலாதனின் படைவீரர் பகைவர்முன் நிரையபாலரைப் போல (நரகத்த வீரர்கள்) படைவெள்ளமாக நின்றதால் 'நிரைய வெள்ளம்' என்று பாடலுக்குத் தலைப்பு இடப்பட்டுள்ளது.



www.tnpscjob.com

**5. பாடாண் திணை என்றால் என்ன?**

- பாடாண் திணையானது ஒரு மன்னனின் புகழ், வலிமை, வள்ளன்மை, அருள் முதலானவற்றை ஆய்ந்து கூறுவதாகும்.
- பாடப்படும் ஆண்மகனின் ஒழுகலாறுகளைக் கூறுவது பாடாண் திணையின் நோக்கமாகும்.

**6. தூக்கு, செந்தூக்கு – விளக்குக.**

**தூக்கு :** தூக்கு என்பது செய்யுள் அடிகளை வரையறை செய்வதாகும்.

**செந்தூக்கு :** செந்தூக்கு என்பது வஞ்சிப்பாவின் இறுதியடி போன்றோ, ஆசிரியவடிவின் இறுதி போன்றோ அமையும்.

**7. ஆக்கப் பெயர்கள் என்றால் என்ன? சான்று தருக.**

பெயர் அல்லது வினைச் சொற்களுடன் விகுதிகளைச் சேர்த்து ஆக்கப்படும் பெயர்ச்சொற்கள் ஆக்கப் பெயர்கள் எனப்படும்.

**சான்று**

| | |
|---|---|
| முதலாளி<br>பூக்காரன் | பெயர் |
| முயற்சி<br>அலுவலம் | வினை |

**8. ஆக்கப்பெயர் விகுதிகள் சிலவற்றைக் கூறுக.**

காரன்

காரர்

காரி

ஆள்

ஆளர்

ஆளி

தாரர்

மானம்

**9. 'காரன்' விகுதி சேர்க்கப்பட்ட ஆக்கப்பெயர்கள் சிலவற்றைக் கூறுக.**

வண்டி+ காரன் = வண்டிக்காரன்

சினிமா + காரன் = சினிமாக்காரன்

மாடு + காரன் = மாட்டுக்காரன்

வீடு+ காரன் = வீட்டுக் காரன்

ஆட்டோ+காரன் = ஆட்டோக்காரன்.



www.tnpscjob.com

**சிறுவினா – கூடுதல் வினாக்கள்**

**1. பதிற்றுப்பத்து – குறிப்பு வரைக.**

**பதிற்றுப்பத்து**

- எட்டுத்தொகையில் அமைந்த புறத்திணை நூல்களுள் ஒன்று.
- சேர மன்னர்கள் பத்துப்பேரின் சிறப்புகளைக் கூறும் நூல்.
- பாடாண் திணை அமைந்த முழுமையான நூல்.
- நூறு பாடல்களில் முதல் பத்தும் இறுதிப் பத்தும் கிடைக்கவில்லை.
- பாடலின் முடிவில் துறை, வண்ணம், தூக்கு, பாடலின் பெயர் இடம் பெற்றிருக்கின்றன.
- பாடலில் வரும் சிறந்த சொற்றொடர் பாடலுக்குத் தலைப்பாகத் தரப்பட்டிருக்கிறது.
- குமட்டூர்க் கண்ணனார் இரண்டாம்பத்தில் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனைப்பாடி உம்பற்காட்டில் 500 ஊர்களையும் தென்னாட்டு வருவாயுள் பாதியும் பரிசாகப் பெற்றார்.

**2. பாடாண்திணை – விளக்குக.**

**திணை விளக்கம்**

- பாடப்படும் ஆண்மகனின் ஒழுகலாறுகளைக் கூறுவது பாடாண்திணையின் நோக்கமாகும். ஒரு மன்னனின் புகழ், வலிமை, வள்ளன்மை, அருள் முதலானவற்றை ஆய்ந்து கூறுவது பாடாண் திணையாகும்.

**சான்று.**

"பதிபிழைப்பு அறியாது துய்த்தல் எய்தி

.............

நெடியோன் அன்ன நல்லிசை

ஒடியா மைந்தநின் பண்புல நயந்தே"

– பதிற்றுப்பத்து.

**விளக்கம்**

சேரநாடு செல்வவளம் மிக்கது.பெரிய நிலவுலகில் வாழும் அனைத்து உயிர்களுக்கும் இடையறாது கொடுக்கும் பண்புடையவன் இமயவரம்பன். தன் நாட்டையும் மக்களையும் கண்ணெனக் காத்தான். ஆகவே, அவன் நாட்டு மக்கள் வேற்று நாட்டுக்குச் செல்ல விரும்புவதில்லை. புதுவருவாய்ப் பெருக்கமும் ஈத்துவக்கும் இன்பமும் உடையவன் சேரலாதன்.



www.tnpscjob.com

பொருத்தம்:

இமயவரம்பனின் நாடுகாத்தற் சிறப்பையும், கொடைச்சிறப்பையும் புகழ்ந்து கூறுவதால் இப்பாடல் பாடாண்திணையைச் சார்ந்ததாகும்.



www.tnpscjob.com

# இயல் - 8

| | | |
|---|---|---|
| உரைநடை | : | தாகூரின் கடிதங்கள் |
| செய்யுள் | : | ஒவ்வொரு புல்லையும் |
| | | தொலைந்து போனவர்கள் |
| | | மனோன்மணீயம் |
| துணைப்பாடம் | : | செவ்வி |
| இலக்கணம் | : | மெய்ப்புத் திருத்தக் குறியீடுகள் |



www.tnpscjob.com

## இலக்கணத் தேர்ச்சிகொள்

1. திருத்தக் குறியீடுகளின் வகைகளைக் கூறுக.

பிழைகள் உள்ள அச்சுப்படியைத் திருத்துவதற்குக் கையாளப்படும் திருத்தக் குறியீடுகளை ஐந்து வகைகளாகப் பிரிக்கலாம்.

அவை:

- பொதுவானவை
- திருத்தக்குறியீடுகள் தொடர்பானவை
- இடைவெளி தரவேண்டியவை
- இணைக்க வேண்டியவை
- எழுத்து வடிவம்

2. அச்சுப்படி திருத்துபவரின் பணிகள் யாவை?

- மூலப்படியில் உள்ளபடியே செய்திகள் அச்சாகி உள்ளனவா? என்று ஒவ்வொரு வரியையும் படித்துக் கவனித்தல் வேண்டும்.
- செய்தியின் உள்ளடக்கம், புள்ளிவிவரங்கள், எண்கள், அட்டவணைகள் முதலியன விடுபட்டுள்ளனவா என்பதை மூலப்படியோடு ஒப்பிட்டுக் கவனித்தல் வேண்டும்.
- அச்சுப்படி திருத்துவோர் செய்தியின் உருவையோ, உள்ளடக்கத்தையோ மாற்றுதல் கூடாது.
- பிழை ஏற்பட்ட சொல்லின் மீது எழுதுதல் கூடாது.
- ஒரு வரியில் ஒன்றுக்கும் மேற்பட்ட பிழைகள் இருந்தால் பிழைகளைக் குறிக்கும் கோடுகளைத் தெளிவாகக் காட்டடல் வேண்டும்.
- ஒரு சொல்லில் பல பிழைகள் இருந்தால் அச்சொல்லையே நீக்கிவிட்டுச் சரியான சொல்லைத் தெளிவாகப் பக்க ஓரத்தில் தருதல் வேண்டும்.
- அச்சுப்படியில் இருக்கும் வண்ணத்திற்கு மாறான வண்ணமுடைய மையால் திருத்துதல் வேண்டும்.



www.tnpscjob.com

## பலவுள் தெரிக

1. பூஜை, விஷயம், உபயோகம் – என்பவை முறையே ………… என்று தமிழில் வழங்கப்படும்.

அ) வழிபாடு, செய்தி, பயன்பாடு ஆ) பயன்பாடு, வழிபாடு, செய்தி

இ) வழிபாடு, பயன்பாடு, செய்தி ஈ) செய்தி, வழிபாடு, பயன்பாடு

**விடை :** அ) வழிபாடு, செய்தி, பயன்பாடு

2. கூவும் குயிலும் கரையும் காகமும் – தொடரில் இடம்பெற்ற மரபு

அ) பெயர்மரபு ஆ) வினைமரபு இ) ஒலிமரபு ஈ) இவை மூன்றும்

**விடை :** இ) ஒலிமரபு

3. யாரே உனைப்போல் அனுதினம் உழைப்போர்? இது எவர் மொழி?

அ) வாய்க்கால் ஆ ) நாங்கூழ் இ) நடராசன் ஈ) புல்

**விடை :** இ) நடராசன்

4. தமிழின் முதல் பாவடிவ நாடகநூல்

அ) இரகசியவழி ஆ) மனோன்மணீயம்

இ) நூல்தொகை விளக்கம் ஈ) திருவிதாங்கூர் அரசர் வரலாறு

**விடை :** ஆ)மனோன்மணீயம்

5. சொற்களை ஒழுங்குபடுத்திச் சொற்றொடராக்குக.

அ) நான் எழுதுவதோடு இன்று இலக்கிய மேடைகளிலும் இதழ்களில் பேசுகிறேன்.

ஆ) இன்று நான் இதழ்களில் எழுதுவதோடு இலக்கிய மேடைகளிலும் பேசுகிறேன்.

இ) இலக்கிய மேடைகளிலும் இன்று எழுதுவதோடு நான் இதழ்களில் பேசுகிறேன்.

ஈ) இதழ்களில் பேசுகிறேன் நான் இன்று இலக்கிய மேடைகளிலும் எழுதுவதோடு

**விடை :** ஆ) இன்று நான் இதழ்களில் எழுதுவதோடு இலக்கிய மேடைகளிலும் பேசுகிறேன்.

## குறுவினா

**1. ஒழுக்கமும் பொறையும் உனைப்போல் யார்க்குள – இவ்வடி எதனைக் குறிப்பிடுகிறது?**

இவ்வடி நாங்கூழ்ப்புழுவின் ஒழுக்கத்தையும், பொறுமையையும், இடையறாத உழைப்பையும் பற்றி நடராசன் மனோன்மணீயம் என்னும் நூலில் கூறுகிறான்.



www.tnpscjob.com

நாங்கூழ்ப்புழுவானது சத்தற்ற நிலத்து மண்ணையும் நன்கு கிளறி, வாயினில் உண்டு, மெழுகைக்காட்டிலும் இளகியதாய் மாற்றி உழவருக்கு உதவி செய்கிறது. இவ்வுதவியைச் சிறிதும் எண்ணாமல் புழுக்களும், பூச்சிகளும் அதற்குத் துன்பம் விளைவிக்கின்றன. ஆனால் அதைப் பொறுத்துக்கொண்டு உதவி வாழ்கிறது.

**2. நாட்டுப்புறத்திலும் பட்டணத்திலும் சிறந்து விளங்குவதாகத் தாகூர் எவற்றைக் கூறுகிறார்?**

நாட்டுப்புறங்களில் இருக்கும் போது, எல்லாவற்றையும் விழுங்கவல்ல இந்த மாபெரும் இயற்கையே சிறந்து விளங்குகிறது.

பட்டணத்திலோ, மனித சமுதாயம்தான் மிகவும் முக்கியமானதாகத் தலைதூக்கி நிற்கிறது. அங்கே மனிதனுடைய கொடூரமான தன்மை வெளிப்படுகிறது. தன் சுகத்திற்குமுன் மற்ற உயிர்களின் சுகதுக்கங்களைப் பற்றி மனிதன் எண்ணுவதுகூட இல்லை.

**3. "நீளும் கைகளில் தோழமை தொடரும்**
**நீளாத கைகளில் நெஞ்சம் படரும்" – தொடை நயங்களை எடுத்தெழுதுக.**

**எதுகை**

இரண்டாம் எழுத்து ஒன்றுபோல் வருவது எதுகை.

**சான்று :** நீளும்–நீளாத;தொடரும் –படரும்

**மோனை**

முதல் எழுத்து ஒன்றுபோல் வருவது மோனை.

**சான்று :** நீளும்–நீளாத;தொடரும்–தோழமை.

**இயைபு**

இறுதி எழுத்து ஒன்றுபோல் வருவது இயைபு.

**சான்று :** தொடரும் – படரும்

**முரண் :**

எதிர்சொல் பயின்று வருவது முரண்.

**சான்று:** நீளும் x நீளாத .

**4. "கற்றேன் என்பாய் காற்றாயா?" என்று அப்துல்ரகுமான் யாரிடம் எதற்குக் கேட்கிறார்?**

"கற்றேன் என்பாய் கற்றாயா?" என்று அப்துல்ரகுமான் மாயையில் வாழும் மக்களிடம் கேட்கிறார்.



www.tnpscjob.com

5. பாரம்பரியத்தில் வேரூன்றிய நவீன மனிதர் என்றும் கிழக்கையும் மேற்கையும் இணைத்த தீர்க்கதரிசி என்றும் அழைக்கப்பட்ட தாகூர் தமது 16ஆம் வயதிலேயே கவிதைகள் எழுதத் தொடங்கினார் – நிறுத்தக்குறியிடுக.

'பாரம்பரியத்தில் வேரூன்றிய நவீன மனிதர்' என்றும் 'கிழக்கையும் மேற்கையும் இணைத்த தீர்க்கதரிசி' என்றும் அழைக்கப்பட்ட தாகூர் தமது 16 ஆம் வயதிலேயே கவிதைகள் எழுதத் தொடங்கினார்.

**சிறுவினா**

**1. இன்குலாப், "உலகுக்கு வேண்டும் நானும் ஓர் துளியாய்" எனக் கூறுவதன் நயத்தை விளக்குக.**

ஒவ்வொரு புல்லையும் பெயர் சொல்லி அழைப்பேன் என்று கூறுகின்ற இன்குலாப், பறவைகளோடு நாடுகளின் எல்லை கடப்பேன் என்றும், பெயர் தெரியாத கல்லையும் மண்ணையும் தனக்குத் தெரிந்த சொல்லால் அழைப்பேன் என்றும், உதவும் கரங்களில் தோழமை தொடரும் எனவும், உதவ முடியாத மனிதர்களிடமும் நேசத்துடன் நெஞ்சம் படரும் என்றும், உலகம் ஓர் கடலாய் தனக்கு வேண்டும் என்றும், அவ்வுலகில் தானும் ஓர் துளியாய் இருக்க வேண்டும் என்றும் கூறுகிறார்.

உலகத்தைக் கடலாகவும் அத்தகு கடலில் இருக்கின்ற துளியாகத் தன்னையும் இணைத்துக் கொள்கின்ற இன்குலாபின் நயம் பாராட்டத்தக்கது.

**2. அப்துல் ரகுமானின் கவிதையிலிருந்து வினா–விடை வடிவத்திற்கு ஏற்ற அடிகளைத் தருக.**

கற்றேன் என்பாய் கற்றாயா? – வெறும்
காகிதம் தின்பது கல்வியில்லை
பெற்றேன் என்பாய் எதைப்பெற்றாய்?–வெறும்
பிள்ளைகள் பெறுவது பெறுவதல்ல.

'நான்' என்பாய் அது நீயில்லை–வெறும்
நாடக வசனம் பேசுகிறாய்
ஏன்? என்பாய் இது கேள்வியில்லை – அந்த
ஏன் என்னும் ஒளியில் உன்னைத்தேடு.

**3. வாய்க்காலின் சிறப்புகளாகக் குறிப்பிடப்படுவன யாவை?**

**வாய்க்காலின் சிறப்புகள்**

- தமக்கு உணவு நல்கும் வயலுக்கு உபயோகப்படும் எனப் பலரும் கருதும் இச்சிறு வாய்க்கால் செய்யும் தொழில் அற்புதமானது!.



www.tnpscjob.com

அலைகடலை மலையாகவும், மலையை அலைகடலாகவும் புரட்டிக்குகளைக்

- இச்சிறு கூழாங்கற்களை நெறுநெறுவென்று உராய்ந்து,நுண் துக தெள்ளி பொடியாக்கி, தன் வலிமைக்கு அடங்கிய மண், கல், புல், புழு இன்னதென்றில்லாமல் யாவற்றையும் ஈர்த்துத் தன்னுள் அகப்படுத்தி கடலுக்குள் காலத்தச்சன் கட்டிடும் மலைக்குத் தேவைப்படும் என உருட்டிக் கொண்டு செல்கின்றது.
- ஐயா கதிரவனின் ஆணைப்படி மழையாகப் பொழிந்து பெருமலைச் சிகரம் முதலாகச் சில குன்றுகள் வரை, அருவியாக இறங்கியும், குகை முகங்களில் இறங்கியும், பூமியின் வெடிப்புகளில் நுழைந்தும், பொங்கி எழும் சுனையாகக் குதித்து எழுந்து ஓடியும், ஊறிடும் சிறிய ஊற்றாய்ப் பரந்தும், ஆறாக நடந்தும், மடுவாகக் கிடந்தும், மதகிடைப் போரிட்டும், வாய்க்கால் வழி ஓடியும், பற்பல பாடுபட்டு இங்கு நான் ஈட்டியது மிகவும் அற்பமேயானாலும் ஆதரவாக ஏற்றுக் கொள்ள வேண்டும்;இன்னமும் கொண்டு வருகிறேன். என விடை பெற்று, மீண்டும் மேகமாய் மாறி, இங்கு வந்து வாய்க்காலில் ஓடி, இரவுபகல் பாராமல் நிரந்தரமாக உழைக்கிறது.

**4. தாமஸிகம் என்றால் என்ன?**

- பூஜைக்குத் தேவையான மலர்களைத் தவிர வேறு எந்தப் பூக்களுடனும் நமக்கு அவசியம் எதுவும் இல்லை.
- நாகரிக வழக்கத்தில் காலத்துக்கேற்றபடி சீக்கிரமே வாடிடும் மலர்களுடன் தொடர்புஉண்டு.
- தோட்டக்காரனுடைய கைகளில் அவற்றைப் பராமரிக்கும் பொறுப்பு இருக்கும். மலர்ச்செப்பினுள் வழக்கம்போல் போவதும் வருவதும்தான் அவற்றின் வேலை.
- இதைதான் தாமஸிகம் அதாவது மெடீரியலிஸம் என்கிறோம்.

**5. இயற்கையுடன் உரையாடல் ஒன்றைக் கற்பனையாகப் பத்துவரிகளில் எழுதுக.**

(சோலை மலைக் காட்டிற்குச் சென்ற அமுதனுக்கும் அங்கிருந்த அரசமரத்திற்கும் இடையே நடந்த உரையாடல்)

அரசமரம் : என்ன அமுதா, வெயிலில் அலைந்துவிட்டு வருகிறாயா?

அமுதன் : ஆமாம். உன்னிடம் வந்து சற்று ஓய்வெடுத்துக் கொள்ளலாம் என்று வந்தேன்.

அரசமரம் : நலமாய் இருக்கிறாயா அமுதா? உனக்கென்ன நீ மனிதன். உன் தேவைக்கு அனைத்தையும் பயன்படுத்திக் கொள்வாய். நாங்கள் அப்படியா?



www.tnpscjob.com

அமுதன் : மரங்களில் நீ உயரமானவன் என்பதால் உன்னை அரசு என்கிறோம். உனக்கென்ன கவலை?

அரசமரம் : சொல்கிறேன் கேள். என் சகோதர மரங்களான சந்தனம், தேக்கு, மா, வேம்பு போன்ற மரங்களை உங்கள் மனித இனம் வெட்டித் தீர்த்துவிட்டது. எங்கள் உறவினர்களெல்லாம் நெருக்கமாய் காடுகளாய் இருந்தோம். அத்தகு காட்டை அழித்து வீடுகளையும், தொழிற்சாலைகளையும் உருவாக்கிக் கொண்டீர்கள் !

அமுதன் : அறிவியல் முன்னேற்றத்தால் எங்களின் வளர்ச்சியை மட்டும் பார்த்துக்கொண்டோம்.

அரசமரம் : உங்களை மட்டும் பார்க்கிறீர்கள். எங்களையே வீடுகளாய் நினைத்த பறவைகளும் விலங்குகளும் இருக்க இருப்பிடம் இல்லாமல் சிதறிப் போயின. காட்டெருமையும், சிறுத்தையும், யானையும் ஊருக்குள் வந்துவிட்டதாக சுட்டுத் தள்ளுகிறீர்கள். மண் அரிப்பு ஏற்பட்டு, மழை இல்லாமல் தண்ணீர் பஞ்சம் தலைவிரித்தாட வழிவகை செய்தீர்கள். பூமியே வெப்பமயமாகிவிட்டது.

அமுதன் : எங்கள் மனித இனம் இவ்வளவு அழிவுக்குக் காரணமாகிவிட்டதா? இதிலிருந்து மீளவழி சொல்வாயா?

அரசமரம் : காடுகள் உயிர்க்கோளத்தின் ஜீவன் என்று ஒவ்வொரு மனிதனும் உணரவேண்டும். வீடு, பள்ளி, பொது இடங்கள் சாலை ஓரங்கள், காடுகள் அழிக்கப்பட்ட இடங்கள் என்று அனைத்து இடங்களிலும் மரங்களை வளர்க்கவேண்டும். மனிதனின் தேவைக்காக இயற்கையை அழிப்பதை முற்றிலும் தவிர்க்கவேண்டும், தடை செய்யப்பட வேண்டும்.

அமுதன் : உயிர்க்கோளமே உய்வதற்கு வழி சொன்ன அரசமரமே ! நீ சொன்ன வழிமுறையை அரச கட்டளையாக ஏற்று. இன்று முதல் செயல்படத் தொடங்குகிறோம்.போய் வருகிறேன்.

**நெடுவினா**

**1. நடராசன் தனிமொழிகளிலிருந்து நீங்கள் அறியும் கருத்துகளை எழுதுக.**

**முன்னுரை:**

மனோன்மணீயம் தமிழன்னை பெற்ற நல் அணிகலனாகும். நாடகத் துறைக்குத் தமிழில் நூல்கள் இல்லையே என்ற குறையைத் தீர்க்க வந்த நூல் இது.

சுந்தர முனிவர் தனது அறையிலிருந்து ஆசிரமம் வரை யாரும் அறியாவண்ணம் சுரங்கம் அமைக்கும் பணியை நடராசனுக்கு வழங்கியிருந்தார். ஓரளவு பணி மட்டும் இருந்தது. அதுவும் இன்றிரவு முடிந்துவிடும் என்று எண்ணிக்கொண்டு காலை வேளையில் ஊரின் புறமாக நடராஜன் தனித்திருந்தான்.



www.tnpscjob.com

அப்போது தனக்குத்தானே பேசிக்கொள்கின்ற தனிமொழிகளின் கருத்துகளைக் காண்போம்.

**குறிக்கோள்:**

எந்த முயற்சியில் ஈடுபடுவர்களுக்கும் விரைவாக இயக்குவதற்கு இன்பம் தரும் ஒரு குறிக்கோள் வேண்டும்; உயிருக்கு அது தூண்டுகோல் போலாகும். இந்த உலகத்தில் எந்தப் பொருள்தான் குறிக்கோள் இல்லாமல் இருக்கிறது? இச்சிறு புல்கூட எப்போதும் தன் குறிக்கோளைச் சார்ந்திருப்பதைப் பார். அதனுடைய சிறிய பூங்கொத்துமலர் ஒன்றை உயர்த்தி இனிய தேன் துளியைத் தாங்கி, ஈக்களை நலமுற அழைத்து, நல்லுணவு தந்து, மகரந்தத் தூள்களை அன்புடன் தூவி, இதோ! சில காயை உண்டாக்கியுள்ளது. அக்காயில், உடையில் சிக்கும் சிறு முள்ளும் உள்ளது.

**அன்பினால் தழைப்பீர்!**

நமெல்லோரும் ஒன்றாக இருந்தால் தழைப்பதற்கு இடமில்லை. எனவே சிறுவர்களே! பிழைப்பை நாடி நீங்கள் செல்லுங்கள் என சிறுவரை அனுப்பும் இப்புல்லின் பரிவும், பொறுமையும், அறிவும் காண்போர் எதனையும் சிறிதாக எண்ணமாட்டார். அங்கங்கே தோன்றுகின்ற பேரழகும், ஆற்றல் சான்ற அன்பும், போற்றப்படும் குறிக்கோளுக்கு ஏற்றதோர் முயற்சியும், பார்த்துப்பார்த்துத் தம் கண் நீர் துளிர்ப்ப, ஆர்த்தெழும் அன்பினால் அனைத்தையும் கலந்து, தம் எலும்புருக நின்று நல் இன்பத்தில் திளைப்பர்.

**வாய்க்காலின் அரும்பணி:**

தமக்கு உணவு நல்கும் வயலுக்கு உபயோகப்படும் எனப் பலரும் கருதும் இச்சிறு வாய்க்கால் செய்யும் தொழில் எவ்வளவு அற்புதமானது. அலைகடலை மலையாகவும், மலையை அலைகடலாகவும் புரட்டிட அல்லவா இச்சிறு கூழாங்கற்களை நெறுநெறுவென்று உராய்ந்து, நுண் துகளாக்கி, தெள்ளிய பொடியாக்கி, தன் வலிமைக்கு அடங்கிய மண், கல், புல், புழு என இன்னதென்றில்லாமல் யாவற்றையும் ஈர்த்து தன்னுள் அகப்படுத்துகிறது. கடலுக்குள் காலத்தச்சன் கட்டிடும் மலைக்குத் தேவைப்படும் என உருட்டிச் செல்கின்றது. தண்ணீரே உன் நிலைமை என்ன? உன்னைப்போல அனுதினமும் உழைப்பவர் யார்? நீக்கமில்லாத அன்பும், ஊக்கமும், உறுதியும் உனைப்போலப் பெற்றால் பிறகு பெறவேண்டிய பேறு என்ன உள்ளது?

**நாங்கூழப் புழு:**

உன் உழைப்பு இடையிலாத உழைப்பு. உழைப்பில் சிறந்த உழைப்பு உழுதொழில் உழைப்பு. அப்படிப்பட்ட உழவர்க்கெல்லாம் அரசன் நீ ! எந்த மண்ணானாலும் நல்ல மண் ஆக்கிவிடுவாய். புகழ் வேண்டாதவர்களைப்போல ஒரு உருண்டையால் உன் குழிவாயை மூடிவிடுவாய். நீ இவ்வாறு உழைக்காவிட்டால் இப்பயிர் எப்படி விளையும் ! உனக்குத் துன்பம் விளைவிக்கும் எறும்பும் கோடி



www.tnpscjob.com

கோடியான புழுக்களும் பூச்சிகளும் பிழைக்கும் வழியும் இல்லை. உனக்குள்ள ஒழுக்கமும் பொறுமையும் வேறு யாருக்கு உண்டு?

**முடிவுரை:**

எல்லா இடத்திலும் இவ்வாறு இணையிலா இன்பமும் குறைவிலா அன்பும் தங்கி இருப்பதை அறியாதவர்களுடைய வாழ்நாட்களால் என்ன பயன்? எனக் கேட்கிறான் நடராசன். இவ்வாறு சிறுபுல்லுக்கும், புழுவிற்கும், வாய்க்காலுக்கும் பெரும் உழைப்பும் முயற்சியும், குறிக்கோளும், ஒழுக்கமும், பொறுமையும் உண்டு என்பது நடராசன் தனிமொழி வாயிலாக அறியலாகும் கருத்துக்களாகும்.

**2) சிதறிய கடிதங்கள் உணர்த்தும் கருத்துகளைச் சிதறாது விளக்குக.**

**முன்னுரை**

செய்தியை உரியவருக்குத் தெரிவிப்பதற்காக எழுதி அனுப்பப்படுவது கடிதமாகும். கவித்துவ இயல்பு கொண்ட தாகூரின் கடிதங்கள் கற்பனை, நகைச்சுவை, ஆழ்ந்த சிந்தனை ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளன.

**ஆற்றில் மிதந்த பறவை**

பத்மா ஆறு கரை தளும்ப நிரம்பி எதிர்க் கரையே தென்படாத அளவிற்கு ஓடுகிறது. திடீரென்று இரவில் பத்மா ஒருபுறமாகப் புரண்டதால் மரத்தின் கீழிருந்த மண் சரிந்ததால் கூட்டிலிருந்த பறவை கீழே விழுந்து ஆற்றில் மிதந்து வருகிறது.

**நாட்டுப்புறமும் பட்டணமும்**

நாட்டுப்புறங்களில் இருக்கும்போது எல்லாவற்றையும் விழுங்கவல்ல இந்த மாபெரும் இயற்கையே சிறந்து விளங்குகிறது. பட்டணத்திலோ, மனித சமுதாயம்தான் மிகவும் முக்கியமானதாகத் தலைதூக்கி நிற்கிறது. அங்கே மனிதனுடைய கொடூரமான தன்மை வெளிப்படுகிறது. தன் சுகதுக்கத்திற்கு முன் மற்ற உயிர்களின் சுகதுக்கங்களைப் பற்றி மனிதன் எண்ணுவதுகூட இல்லை.

**ஐரோப்பாவும், பாரத நாடும்**

ஐரோப்பாவிலும் மனிதனுக்குத்தான் முக்கியமான இடம். அவனுடைய வழியோ மிகச் சிக்கலானது. அவர்கள் மற்ற பிராணிகளைச் சாதாரணமான உயிர்களென்றே நினைத்துவிடுகிறார்கள். பாரத நாட்டினர், மனிதன் விலங்காக மாறுவதையோ, விலங்கு மனிதனாக மாறுவதையோ பற்றி எதுவும தவறுதலாக எண்ணுவது இல்லை. அதனால்தான் நமது சாத்திரங்கள் எல்லா உயிர்களிடத்தும் கருணை காட்டுவதை, நடக்கமுடியாத ஓர் அதிசயம் என்று விட்டுவிடவில்லை.

**மலரிடம் அலட்சிய மனப்பான்மை**

நமது நாட்டில் உள்ள பூக்கள் அனைத்தையும் மனிதன் மனத்தினுள் ஏற்றுக்கொள்ளவில்லை. மலரிடம் இவ்வளவு அலட்சிய மனப்பான்மை வேறு எந்த நாட்டிலும் காணப்படுவதில்லை. சில மலர்கள் தங்கள் இன்மணத்தின் வலிமையால்



www.tnpscjob.com

புகழ்பெற்றுவிட்டன. அலட்சியமாக அவற்றைப் பாராமல் சென்றாலும்கூட அவை தாமாக முன்வந்து மணத்தினால் தம்மை அறிமுகப்படுத்திக் கொள்கின்றன. நமது இலக்கியங்களில் தவறாமல் அழைப்பைப் பெறுகின்றன. பெயர் தெரியாத மலர்களைத் தெரிந்து கொள்ளும் முயற்சியையும் நாம் எடுக்கவில்லை.

**சிற்றாறுகள்**

ஆறுகள் விஷயத்தில் நமது உள்ளத்தில் இந்த அலட்சியம் இல்லை. அன்றாடம் நமக்கு உபயோகப்படுகின்ற காரணத்தால் மிகவும் சிறிய ஆறுகூட நமது மனத்தில் பிடித்தமாக இடம் பெற்றுள்ளது. புறாக்கண்ணி (கபோதாஷி), மயில் விழியாள் (மயூராஷி) விருப்புடையள் (இச்சாமதி) என்றெல்லாம் அழைக்கிறோம்.

**தாமஸிகம்**

பூஜைக்குத் தேவையான மலர்களைத் தவிர வேறு எந்தப் பூக்களுடனும் நமக்கு அவசியம் எதுவும் இல்லை. நாகரிக வழக்கத்தில் காலத்துக்கேற்றபடி சீக்கிரமே வாடிடும் மலர்களுடன் தொடர்பு உண்டு. தோட்டக்காரனுடைய கைகளில் அவற்றைப் பராமரிக்கும் பொறுப்பு இருக்கும். மலர்ச்செப்பினுள் வழக்கம்போல் போவதும் வருவதும்தான் அவற்றின் வேலை. இதைத்தான் தாமஸிகம் அதாவது மெடீரியலிஸம் என்கின்றோம்.

**தோல்வியின் மூல காரணம்**

காகம், குயில், மைனா, பௌ–கதா–கவோ போன்று, எத்தனையோ நேர்த்தியான புட்கள் உள்ளன. அவைகளின் பெயர் சாதாரண ஜனங்களுக்குத் தெரிந்திருக்காது. இயற்கையிடம் இந்த அலட்சிய மனப்பான்மைதான் நம்முடைய தோல்விகளுக்கு எல்லாம் மூலகாரணம். பரீட்சையில் தேற வேண்டியே சரித்திரப் பாடத்தைப் படிக்கின்றோம். நமது தேசப்பற்று தேசத்து மக்களிடம் கொண்டுள்ள பற்றுதலின் காரணமாக உண்டானதல்ல. புத்தக மூட்டையால் உருவானது.

**முடிவுரை:**

இயற்கையை அலட்சியப் படுத்தக் கூடாது. இயற்கையோடு இணைந்து வாழ்க்கையைக் கற்றுக் கொள்ள வேண்டும். இயற்கையை நேசித்து வாழ்வில் உயர்வோம்.

**3. நர்த்தகி நடராஜின் நேர்காணல்வழி அறிந்தவற்றைத் தொகுத்து அளிக்க.**

**முன்னுரை:**

முத்தமிழ் வளர்த்த மதுரையில் பிறந்து தம் நாட்டியத் திறமையினால் உலகம் முழுவதும் எண்ணற்ற ரசிகர்களைப் பெற்றவர். தன்னம்பிக்கை, உழைப்பு, விடாமுயற்சிகொண்டு நாட்டியக்கலையில் தமக்கெனத் தனியிடம் பெற்றவர்.



www.tnpscjob.com

திருநங்கைகளுக்கு மட்டுமே இருக்கும் தடைக்கற்களையும்கூட படிக்கட்டுகளாக மாற்றலாம் என்று உலகுக்குக் காட்டியவர் நர்த்தகி நடராஜ்.

**நர்த்தகியும் சக்தியும்**

நர்த்தகி நடராஜ் மதுரையிலுள்ள அனுப்பானடியைச் சேர்ந்தவர். அவரது தோழி சக்தி. இருவருக்குமிடையில் ஐந்து வயதில் தொடங்கிய நட்பு இன்றுவரையிலும் தொடர்கிறது. சக்தி இல்லையேல் தான் இந்த அளவுக்கு வளர்ந்திருக்க முடியாது என்பார்.

**நர்த்தகியும் கிட்டப்பாவும்**

இளமையில் வைஜெயந்தி மாலாவின் நடனத்தால் ஈர்க்கப்பட்டு, அவருடைய குருவான தஞ்சைக் கிட்டாப்பாவிடம் பரதம் கற்க ஆர்வத்துடன் சென்ற நடராஜுக்கு கிட்டப்பா இசைவளிக்கவில்லை. ஓராண்டு விடாமுயற்சிக்குப்பின் கிட்டப்பா தம் மகளாகவே ஏற்று, தம் இல்லத்திலேயே தங்கவைத்துப் பரதம் கற்றுக் கொடுத்து, 'நர்த்தகி' என்று பெயர் சூட்டினார்.

**பரதமும் பெண்மையும்**

பரதமும் பெண்மையும் ஒன்றோடு ஒன்று பிணைந்தது. பெண்மையை வெளிப்படுத்துவதற்கான ஊடகமாகப் பரதம் இருந்தது.பரதத்தில் ஊறித் திளைத்தபோது பெண்மை புதிதாகப் பிறந்தது. பரதத்தில் பெண்மையை வெளிப்படுத்தும் நொடி, வார்த்தைகளில் சொல்ல முடியாத உணர்வு. எல்லாக் கட்டுகளையும் உடைந்தெறிந்த நிம்மதியுடன் உலகத்தையே மறந்து பறந்து கொண்டிருப்பேன். எந்த மனத்தடையுமின்றி என்னை உணர்த்துவதற்கு நடனம் உதவி செய்தது என்கிறார். நர்த்தகி

**விழிப்புணர்வு நடனம்**

இன்று மட்டுமல்ல எல்லாக் காலகட்டத்திலும் திருநங்கையர் இருந்திருக்கின்றனர். தொல்காப்பியத்திலும் அதற்கான சான்று இருக்கிறது. சிலப்பதிகாரத்தில் 11 வகையான ஆடற்கலைகள் பற்றிய குறிப்புகள் உள்ளன. அதிலும் வேளிர் ஆடல் முக்கியமானது. சங்க இலக்கியம் தொடங்கி நவீன கவிதை வரையிலும் நடனத்தில் முயன்று விழிப்புணர்வை ஏற்படுத்துகிறேன்.

**வெகுஜன மக்களும் பரதமும்**

பரதம் வெகுஜன மக்களின் கலைதான். அட்லாண்டா முதல் ஆண்டிபட்டி வரையிலும் ஒரேமாதிரிதான் பரதம் நிகழ்த்துகிறேன்.மக்களும் அதைச் சரியாக உள்வாங்கிக் கொள்கின்றனர்.



www.tnpscjob.com

**ஜப்பானில் பரதம்**

ஜப்பானிலுள்ள ஒசாகா நகரத்தில் திருவாசம், தேவாரப் பண்ணிசைப் பாடல்களைப் பரதமாக நிகழ்த்தினேன். பரதம், தேவாரம், திருவாசகம் எதுவும் தெரியாத ஜப்பானியர்கள் அபிநயத்தில் கண்கலங்கி கரகோஷம் எழுப்பினர்.

**நார்வேயில் திருக்குறள் நடனம்**

ஐரோப்பியப் பண்பாட்டில், ஊறித் திளைத்திருக்கும் நார்வேயில் திருக்குறளை மையமாக வைத்து மாணவிகளுக்குப் பயிற்சி கொடுத்ததில் இருந்து திருக்குறளை ஆர்வத்துடன் படித்து, அது பற்றிய அனைத்துத் தகவல்களையும் விரல் நுனிக்குக் கொண்டு வந்தனர்.

**தமிழ் இலக்கியம்**

தமிழ் இலக்கியத்தில் சங்கப் பாடல்கள், திவ்விய பிரபந்தம், திருப்புகழ் மற்றும் தேவாரத்தை நடனம் மூலம் பரப்புவதோடு ஆய்வு செய்தும் வருகிறார் நர்த்தகி.

**துயரம் தீர்க்கும் நடனம்**

அகிலனின் தாமரை நெஞ்சம் கதைநாயகி துக்கம் பொங்கி வரும்போதெல்லாம் ஒரு செம்புத்தண்ணீர் குடிப்பதைப்போல் என் துயரம் தீர ஒரு நாட்டியம் ஆடிவிடுவேன் என்கிறார் நர்த்தகி.

**நெகிழும் தருணம்**

வெள்ளியம்பலம் அறக்கட்டளை நடனக் கலைக்கூடம் வாயிலாக உருவான நூற்றுக்கணக்கான மாணவிகள் தன்னை 'அம்மா' என்று அழைக்கின்ற தருணம் நெகிழவும் மகிழவும் வைக்கும் தருணமாக உணர்வதாக நர்த்தகி கூறுகிறார்.

**விருதுகள்**

இந்திய அரசின் பத்மஸ்ரீ விருது. தமிழக அரசின் கலைமாமணி விருது, இந்திய அரசின் சங்கீத நாடக அகாதெமி விருது, இந்திய அரசுத் தொலைக்காட்சியின் ஏ கிரேடு கலைஞர், இந்திய வெளியுறவுத் துறை அமைச்சகத்தின் சிறந்த கலைஞர், பெரியார் பல்கலைக்கழகத்தின் மதிப்புறு முனைவர் பட்டம் போன்ற பல்வேறு விருதுகளை பெற்றுள்ளார் நர்த்தகி நடராஜ்.

**முடிவுரை**

இன்று நர்த்தகி, தன்னுடைய நடனத் திறமையால் அமெரிக்கா, லண்டன், கனடா உள்ளிட்ட உலக நாடுகள் முழுவதும் பயணித்துத் தம் பரதத்தால் பல்லாயிரம் மேடைகளை அலங்கரித்து வருகிறார். இவர்தான் திருநங்கை என்ற சொல்லை அறிமுகப்படுத்தியவர்.



www.tnpscjob.com

**இலக்கணக் குறிப்பு**

| | | |
|---|---|---|
| கற்றேன் | – | தன்மை ஒருமை வினைமுற்று |
| உடை அணிந்தேன் | – | இரண்டாம் வேற்றுமைத்தொகை |
| உரைத்தாய் | – | முன்னிலை ஒருமை வினைமுற்று |
| கடிநகர் | – | உரிச்சொற்றொடர் |
| சாலத்தகும் | – | உரிச்சொற்றொடர் |
| உருட்டி | – | வினையெச்சம் |
| பின்னிய | – | பெயரெச்சம் |
| முளைத்த | – | பெயரெச்சம் |
| இளமுகம் | – | பண்புத்தொகை |
| நல்லூண் | – | பண்புத்தொகை |
| சிறுபுல் | – | பண்புத்தொகை |
| பேரழகு | – | பண்புத்தொகை |
| முந்நீர் | – | பண்புத்தொகை |
| நன்மண் | – | பண்புத்தொகை |
| பூக்குலை | – | இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை |
| ஆசிலா | – | ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் |
| ஓவா | – | ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் |
| ஏகுமின் | – | ஏவல் பன்மை வினைமுற்று |
| பார்த்துப்பார்த்து | – | அடுக்குத்தொடர் |
| நில்நில் | – | அடுக்குத்தொடர் |
| உழுதுழுது | – | அடுக்குத்தொடர் |
| வாய்க்கால் | – | இலக்கணப்போலி (முன்பின் தொக்கியது) |
| செய்தொழில் | – | வினைத்தொகை |
| அலைகடல், வீழருவி | – | வினைத்தொகைகள் |
| மலையலை | – | உவமைத்தொகை |
| குகைமுகம் | – | உவமைத்தொகை |
| நெறுநெறு | – | இரட்டைக்கிளவி |
| புல்புழு | – | உம்மைத்தொகை |
| இராப்பகல் | – | உம்மைத்தொகை |
| காலத்தச்சன் | – | உருவகம் |
| ஏகுதி | – | ஏவல் ஒருமை வின்னைமுற்று |
| புழுக்களும் பூச்சியும் | – | எண்ணும்மை |
| தாங்குதல் | – | தொழிற்பெயர் |



www.tnpscjob.com

## பகுபத உறுப்பிலக்கணம்

1. வென்றேன் – வெல் (ன்) + ற் + ஏன்
வெல் – பகுதி; ('ல்' 'ன்' எனத் திரிந்தது விகாரம்);
ற் – இறந்தகால இடைநிலை; ஏன் – தன்மை ஒருமை வினைமுற்று விகுதி

2. நிற்கின்றாய் – நில்(ற்) + கின்று + ஆய்
நில் – பகுதி; ('ல்' 'ற்' ஆனது விகாரம்) ; கின்று – நிகழ்கால இடைநிலை ;
ஆய் – முன்னிலை ஒருமை வினைமுற்று விகுதி.

3. பெற்றேன் – பெறு (பெற்று) + ஏன்
பெறு – பகுதி; (பெற்று என ஒற்று இரட்டித்து இறந்தகாலம் காட்டியது)
ஏன் – தன்மை ஒருமை வினைமுற்று விகுதி.

4. அணிந்தேன் – அணி + த் (ந்) + த் + ஏன்
அணி – பகுதி; த் – சந்தி; 'த்' 'ந்' எனத் திரிந்தது விகாரம்;
த் – இறந்தகால இடைநிலை ; ஏன் – தன்மை ஒருமை வினைமுற்று விகுதி.

5. முளைத்த –முளை + த் + த் + அ
முளை–பகுதி; த்–சந்தி; த்–இறந்தகால இடைநிலை;
அ–பெயரெச்ச விகுதி

6. ஏகுமின்–ஏகு+மின்
ஏகு–பகுதி; மின்–ஏவல் வினைமுற்று விகுதி

7. விடுத்தனை–விடு+த்+த்+அன்+ஐ
விடு–பகுதி; த்–சந்தி; த்–இறந்தகால இடைநிலை; அன்–சாரியை;
ஐ –முன்னிலை ஒருமை வினைமுற்று விகுதி.

8. சென்ற–செல்(ன்)+ற்+அ
செல்–பகுதி; ('ல்' 'ன்' ஆனது விகாரம்); ற்–இறந்தகால இடைநிலை;
அ–பெயரெச்ச விகுதி.

## புணர்ச்சி விதி

1. காலத்தச்சன் – காலம் + தச்சன்
மவ்வீறு ஒற்றழிந்து உயிரீறு ஒப்பவும் – கால + தச்சன்
வன்மைக்கு இனமாத் திரிபவும் ஆகும் – காலத்தச்சன்

2. உழுதுழுது – உழுது + உழுது
உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும் – உழுத்+உழுது
உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே – உழுதுழுது



www.tnpscjob.com

3. பேரழகு– பெருமை + அழகு
ஈறுபோதல் – பெரு + அழகு
ஆதிநீடல் – பேரு + அழகு
இனையவும் – பேர் + அழகு (உகரம் கெட்டது)
உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே – பேரழகு



**சான்றோர் சித்திரம்**

"பொறுமையைப் பூணுங்கள்; பொறுமையின் ஆற்றலை உணருங்கள் ;உணர்ந்து உலகை நோக்குங்கள்; நமது நாட்டை நோக்குங்கள் ;நமது நாடு நாடாயிருக்கிறதா? தாய்முகம் நோக்குங்கள்; அவள் முகத்தில் அழகு காணோம். அவள் இதயம் துடிக்கிறது. சாதி வேற்றுமை, தீண்டாமை, பெண்ணடிமை உட்பகை முதலிய நோய்கள் அவளை அரிக்கின்றன; எரிக்கின்றன; இந்நோய்களால் குறுதியோட்டங்குன்றிச் சவலையுற்றுக் கிடக்கிறாள்.இள ஞாயிற்றொளி நோக்கி நிற்கிறாள். இள ஞாயிறுகளே! உங்கள் தொண்டெனும் ஒளியே அவள் நோய்க்குரிய மருந்து. அவ்வொளி வீசி எழுங்கள் ; எழுங்கள்" என்று இளமைவிருந்து நூலில் தமிழினைச் செழுமையுறச்செய்ய இளைஞர்களை அழைத்தவர் திரு. வி.க.

திரு. வி.க தம் தந்தையிடம் தொடக்கத்தில் கல்வி பயின்றார். வெஸ்லி பள்ளியில் படித்தபோது, நா. கதிரைவேலர் என்பவரிடம் தமிழ்ப்படித்தார். பிறகு மயிலை தணிகாசலம் என்பவரிடம் தமிழோடு சைவ நூல்களையும் பயின்றார். தமிழ்த்தென்றல் என்று அழைக்கப்படும் திரு.வி.க பெண்ணின் பெருமை, முருகன் அல்லது அழகு, மனித வாழ்க்கையும், காந்தியடிகளும், என் கடன் பணி செய்து கிடப்பதே, சைவத்திறவு, இந்தியாவும் விடுதலையும், பொதுமை வேட்டல், திருக்குறள் விரிவுரை முதலிய பல நூல்களை எழுதினார். சிறந்த மேடைப் பேச்சாளராகவும் எழுத்தாளராகவும் விளங்கிய இவர் தேசபக்தன், நவசக்தி இதழ்களுக்கு ஆசிரியராகவும் விளங்கினார். தமிழ் அறிஞர்களுள் அரசியல் இயக்கங்களில் அதிகமான ஈடுபாடு கொண்டவராக இருந்தார். தொழிற்சங்கத்தைத் தோற்றுவித்துத் தொழிலாளர்களின் உரிமைக்கும் முன்னேற்றத்திற்கும் பாடுபட்டார். சென்னை இராயப்பேட்டை வெஸ்லி கல்லூரியில் தலைமைத் தமிழாசிரியராக இருந்தார். இலக்கியப்பயிற்சியும் இசைப்பயிற்சியும் பெற்றவர்.

**கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளி :**

1. பொறுமையைப் பூணுங்கள்; பொறுமையின் ஆற்றலை உணருங்கள்; உணர்ந்து உலகை நோக்குங்கள் – ஒரே தொடராக மாற்றுக.



www.tnpscjob.com

பொறுமையைப் பூண்டு, பொறுமையின் ஆற்றலை உணர்ந்து, உலகை நோக்குங்கள்.

2. எவையேனும் இரண்டு முன்னிலைப் பன்மை வினைமுற்றுச் சொற்களைப் பத்தியிலிருந்து எடுத்து எழுதுக.

பூணுங்கள், நோக்குங்கள்

3. தமிழ்த்தென்றல் என்று திரு.வி.க அழைக்கப்படுகிறார் – இத்தொடரைச் செய்வினைத் தொடராக மாற்றுக.

திரு. வி.க.வைத் தமிழ்த் தென்றல் என அழைத்தனர்.

4. ஞாயிற்றொளி – புணர்ச்சி விதி கூறுக.

ஞாயிற்றொளி – ஞாயிறு + ஒளி

நெடிலோடு உயிர்த்தொடர் குற்றுகரங்களுள் டற ஒற்று இரட்டும்.

ஞாயிற்று + ஒளி

உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும்.

ஞாயிற்ற் + உ + ஒளி = ஞாயிற்ற் + ஒளி

உடல்மேல் உயிர் வந்தொன்றுவது இயல்பே.

ஞாயிற்றொளி

5. எண்ணும்மைத் தொடர்கள் இரண்டனை எடுத்து எழுதுக.

மனித வாழ்க்கையும் காந்தியடிகளும்

இந்தியாவும் விடுதலையும்.

**தமிழாக்கம் தருக.**

An eye for an eye only ends up making the whole world blind.

You must be the change you wish to see in the world.

The weak can never forgive. Forgiveness is the attribute of the strong.

Nobody can hurt me without my permission.

You must not lose faith in humanity. Humanity is an ocean; if a few drops of the ocean are dirty, the ocean does not become dirty.

-Mahathma Gandhi

கண்ணுக்குக் கண் என்ற சொல் இந்த உலகத்தை குருடாக்கிவிடும். இந்த உலகை அணுகும் விதத்தைக் கண்டிப்பாக மாற்ற வேண்டும். கோழைகள் ஒருபோதும் மன்னிக்கமாட்டார்கள். மன்னித்தல் வலிமை மிக்கவர்களின் பண்பாகும். என் அனுமதியில்லாமல் என்னை யாரும் புண்படுத்த முடியாது. நீங்கள் மானுடத்தின் மீது இருக்கும் நம்பிக்கையை ஒரு காலமும் இழந்துவிடக்கூடாது. மானுடம் என்பது சமுத்திரம் போன்றது. சமுத்திரத்தில் சில துளி கழிவு கலந்தால் சமுத்திரம் முழுவதும் கழிவாகிவிடாது.

– மகாத்மா காந்தி



www.tnpscjob.com

**கதையைப் படித்துப் பொருளுணர்ந்து நிகழ்வை உரையாடலாக மாற்றுக. கதையில் காணலாகும் எவையேனும் ஐந்து பிறமொழிச் சொற்களுக்கு உரிய தமிழ்ச்சொற்களை எழுதுக.**

அலுவலகத்துக்குள் நுழைகையில் போன் அடித்தது. எடுத்துப் பேசினாள். மறுமுனையில் "உடனே ஆபிஸ்க்கு லீவ் போட்டுட்டு என் ஆபிஸ்க்கு வா கவி இன்ஷுரன்ஸ் பேப்பர்ல கையெழுத்து போடணும். உன் போட்டோவையும் சஞ்சுவின் போட்டோவையும் எடுத்துட்டு வா" என்று சொல்லி முடித்ததும் போனைத் துண்டித்தான் செந்தில். ஏற்கனவே தன் ஆபிஸில் நடக்க இருக்கும் ஆடிட்டை நினைத்துக் கொண்டிருந்த அவளுக்குச் செந்திலின் போன் பதற்றத்தையும் குழப்பத்தையும் தந்தது. குழப்பத்துடன் போனை வைக்கையில் மறுபடியும் போன் ஒலித்தது. இம்முறை சஞ்சுவின் பள்ளி நம்பர். ஒரு நொடி பதற்றமாகிவிட்டது. எதற்கு அழைக்கிறார்களோ என்று பயந்தபடி போனை எடுத்தேன். போனில் சஞ்சுவின் குரல். "அம்மா நான்தான்" என்றான். "என்னடா, உடம்புக்கு ஏதாவதா?" என்றேன் டென்ஷனை மறைத்தபடி. "அதெல்லாம் ஒண்ணுமில்லைம்மா. மிஸ் கிட்ட ஸ்பெஷல் பர்மிஷன் கேட்டு உனக்கு போன் பண்றேன். காலையிலேயே சொல்ல நினைச்சேன். மறந்திட்டேன். ஸாரிம்மா என்றான். எதுக்குடா சஞ்சு ஸாரி என்றேன். இன்னிக்கு உனக்கு பர்த்டேம்மா. மறந்துட்டியா" என்றான். அட ஆமாம். ஜூலைபத்து. இப்படியா மறப்பேன். செந்தில் கூட நினைவில் வைத்து வாழ்த்தவில்லை. சஞ்சு கொஞ்சும் குரலில் "ம்மா நைட்கூட ஞாபகம் இருந்துச்சு காலைல டக்குனு மறந்துட்டேன். சாரிம்மா ஹாப்பி பர்த்டே டூ யூ" என்றான். ஒரு நொடி எதுவும் பேச முடியாமல் திக்கிவிட்டேன். அவனே தொடர்ந்து "அம்மா உனக்காக ஒரு சூரியகாந்திப்பூ வரைஞ்சி வச்சிருக்கேன். ஈவ்னிங் சீக்கிரமா வா தரேன் ஒகேவா? "என்றான். "தாங்க்ஸ்டா செல்லம். தாங்க்யூ ஸோ மச்" என்றேன். அந்த நாளின் சுமைகள் எல்லாம் கரைந்து மனசு நெகிழ்ந்து உருகியது. ரயில், அலுவலகம், செந்தில் என எல்லாம் மறைந்து போய், நானும் சஞ்சுவும் கைகள் கோர்த்து நடப்பது போல் இருந்தது.

**உரையாடல்**

கவி அலுவலகத்துள் நுழைந்ததும் போன் அடித்தது. எடுத்தாள்.

கவி : ஹலோ ! நான் கவி பேசறேன்.

செந்தில் : ஹலோ ! நான் செந்தில் பேசறேன். இன்சூரன்ஸ் பேப்பர்ல கையெழுத்து போடணும். ஆபீஸ்க்கு லீவு குடுத்துட்டு உன் போட்டோவையும் சஞ்சு போட்டோவையும் எடுத்து வா.



www.tnpscjob.com

கவி : என்னங்க. இன்னைக்கு ஆபீஸ்ல ஆடிட் நடக்குது. எப்படி நான் ..............

(போனை செந்தில் முதலிலேயே வைத்துவிட்டான். மீண்டும் போன் ஒலிக்கிறது).

ஹலோ ! நான் கவி பேசறேன்.

சஞ்சு : ஹலோ ! அம்மா ! நான் சஞ்சு பேசறேன்.

கவி : சஞ்சா? என்னடா இந்த நேரத்தில்? உடம்புக்கு சரியில்லையா?

சஞ்சு : இல்லைம்மா ! நான் நல்லாத்தான் இருக்கேன்.

கவி : ஏண்டா ! பள்ளிக்கூடத்திலிருந்து பேசுனா மிஸ் திட்டமாட்டாங்களா?

சஞ்சு : அம்மா ! நான் மிஸ்கிட்ட ஸ்பெஷல் பர்மிஷன் வாங்கிட்டுத்தாம்மா பேசறேன்.

கவி : ஏன்? என்னாச்சு?

சஞ்சு : சாரிம்மா.

கவி : எதுக்குடா சாரி.

சஞ்சு : அம்மா. இன்னைக்கு என்ன நாள்? உனக்குப் பிறந்த நாள். மறந்துட்டியா? (கவிக்குப் பேச்சு வரவில்லை)

சஞ்சு : அம்மா ! ஹேப்பி பர்த்டேயம்மா ! சாயங்காலம் சீக்கிரம் வா. உனக்குக் குடுக்கிறக்காக சூரியகாந்திப்பூ வரைஞ்சு வச்சிருக்கேன். ஓ.கேவாம்மா.

கவி : (மகிழ்ச்சியுடன்) தாங்ஸ்டா செல்லம். தேங்க்யூ ஸோமச்.

(ரயில், அலுவலகம், கணவன் செந்தில் என எல்லாம் மறந்து சஞ்சுவுடன் கைகோர்த்து நடந்தாள் கவி.)

**பிறமொழிச் சொல்லுக்கான தமிழ்ச் சொற்கள்**

போன் – தொலைபேசி
ஆபீஸ் – அலுவலகம்
இன்சூரன்ஸ் – ஆயுள் காப்பீடு
ஆடிட் – தணிக்கை
ஸ்பெஷல் பர்மிஷன் – சிறப்பு அனுமதி

## உரை எழுதுவோம்

### நன்றியுரை

இந்நாள் எழுந்து நடந்த சரித்திரம் ஒன்று நம் பார்வையை விட்டகன்ற கனகமான நேரம் இது. ஏவுகணையின் தந்தை – மேனாள் இந்தியக் குடியரசுத் தலைவர் திரு. ஏ.பி.ஜே. அப்துல் கலாம் அவர்களின் நினைவு நாள்.

கனவு காணுங்கள் – எண்ணங்களே இலட்சியமாகும் – இலட்சியங்களே செயல்களாகும். கனவு காணச் சொன்னவர் அனைவரையும் மறந்து இன்று கனவாகிப் போன நேரமிது. வருங்கால இந்தியாவின் வைரத்தூண்கள் என்று மாணவர்களை எண்ணிய அந்த மாபெரும் தலைவர் எல்லா இதயங்களையும் வென்று வாழ்கிறார்.



www.tnpscjob.com

இந்நாளில் பொள்ளாச்சி என்.ஜி.எம். கல்லூரி மாணவர்கள் திரட்டிய நிதியை கொண்டு நம் மாணவர்களுக்குத் திருக்குறள் கையடக்கப் பிரதி ஒன்றும், நில வரைபடப் புத்தகம் ஒன்றும் பரிசாகக் கொடுத்துள்ளார்கள். இனிமையிலும் இனிமையானது என்னவென்றால், மற்றவர்களை மகிழ்ச்சிப்படுத்திப் பார்ப்பதுதான். அடுத்தவர் மகிழ்வில் ஆண்டவனைப் பார்க்கும் அருமை மாணவர்கள் இக்கல்லூரி மாணவர்கள்.

திரு. ஏ.பி.ஜே. அப்துல்காலம் அவர்கள் கண்ட கனவு மாணவர்கள், என்.ஜி.எம் கல்லூரி மாணவர்கள்.

மழைக்குப் பயிர்கள் சொல்லும் நன்றி – விளைச்சல்
வேர்களுக்கு மரங்கள் சொல்லும் நன்றி – கனிகள்
செடிகளுக்குப் பூக்கள் சொல்லும் நன்றி – நறுமணம்
என்.ஜி.எம். கல்லூரி மாணவர்களுக்கு நாம் சொல்லும் நன்றி, நன்றி, நன்றி.

## மொழியோடு விளையாடு

### எண்ணங்களை எழுத்தாக்குக.



1. உயர்திணையும் அஃறிணையும் ஒன்றையொன்று விசாரித்துக் கொள்கின்றன.
2. குடிக்கத் தண்ணீர் கேட்டு குழந்தையை மிரட்டுகிறதா குட்டி நாய்?
3. காட்டுக்குள் திரிந்து ஏன் துன்பப்படுகிறாய்?
4. என் வீட்டிற்கு வந்துவிடு. விளையாடி மகிழலாம்.
5. குட்டிக் குழந்தை எட்ட இருக்கும் நாயுடன் இப்படித்தான் பேசுகிறதா?



www.tnpscjob.com

## குறுக்கெழுத்துப் புதிர்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 பொ | ரு | ண் | மொ | ழி | க் | 2 கா | ஞ் | 3 சி | 4 ப |
| 5 த | | ர் | ம் | ன | ச | ஞ் | 6 அ | த் | ஞ் |
| னி | | ஓ | | ள் | | ச | ணி | தி | ச |
| ம | ம் | த | ழை | மி | | ணை | மா | ரா | மு |
| க | ர | வா | 7 பி | ர | ச | ம் | ய் | வ | கி |
| னா | தி | ரு | யா | 8 பி | ல் | ட | 9 வே | ளி | |
| ர் | ந் | 10 தி | 11 கா | க் | த | 12 சீ | | 13 க | |
| 14 கு | ம | 15 வி | ட | 16 ம | ன் | ற | ம் | ர் | ரை |
| யி | ரு | | | 17 எ | ழு | த் | து | ண | 18 வ |
| ல் | 19 தி | ரு | வா | ச | க | ம் | ன | ன் | 20 அ |

**இடமிருந்து வலம்**

1. மக்களுக்கு நலம் செய்யும் வாழ்வியல் நெறிகளைக் கூறும் துறை (9)
7. தேன் – மற்றொரு சொல் (4)
15. புல்லின் இதழ்கள் – நூலாசிரியர் (4)
16. கற்ற வித்தைகளை அரங்கேற்றும் இடம் (4)
17. சி.சு.செல்லப்பா நடத்திய இதழ்(4)
19. ஜி.யு.போப்–ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த பக்தி இலக்கியம் (6)

**வலமிருந்து இடம்**

6. யானை–வேறொரு சொல் (5)
9. வந்தவாசிக்கு அருகில் சமணப்பள்ளி இருந்த ஊர்(3)
12. உமறுப்புலவரை ஆதரித்தவர்(5)
20. கவிஞர் மீரா நடத்திய பதிப்பகம் (4)



www.tnpscjob.com

**மேலிருந்து கீழ்**

2. புதுமைப்பித்தனின் புகழ்பெற்ற சிறுகதை(4)
3. பாரதி நடத்த விரும்பிய கருத்துப்பட இதழ்(6)
4. இளையராஜா உருவாக்கிய இராகம்(5)
5. நற்றிணை 153ஆவது பாடலை இயற்றியவர் (6)
6. அணுவைப்போலச் சிறுத்து நிற்கும் ஆற்றல் (3)
12. இந்தச் சொல்லின் திரிபே சீறா(3)
13. மகாபாரதத்தில் கொடை வீரன் (4)
14. பாரதிதாசன் நடத்திய இதழ் (3)

**கீழிருந்து மேல்**

7. தவறு-வேறொரு சொல் (2)
8. தருமு சிவராம் என்னும் புனைபெயரிலும் எழுதியவர் (4)
9. மூங்கில் – மற்றொரு சொல் (2)
10. மாணிக்கவாசகர் பிறந்த ஊர் (6)
11. ஐங்குறுநூறு பாடும் மலர்களில் ஒன்று(2)
18. மலை என்றும் சொல்லலாம் (2)
19. பத்தாம் திருமுறை (7)



www.tnpscjob.com

## நிற்க அதற்குத் தக

மனித இனம் கூடிவாழும் இயல்புடையது. நாம் அன்றாடம் பலருடன் பழகக்கூடிய இன்றைய சூழலில் ஏற்படக்கூடிய சிறிய சிக்கல்களை எவ்வாறு எதிர்கொள்வீர்கள்?

| சிக்கல் | தீர்வு |
|---|---|
| 1. பக்கத்து வீட்டுக்காரர், மிகச் சத்தமாகப் பாடல் கேட்டுக் கொண்டிருக்கின்றார். | எல்லாக் கதவுகளையும், சன்னல்களையும் அடைத்துவிட்டு படிக்கத் தொடங்குவேன். |
| 2. நீங்கள் மட்டைப்பந்து போட்டியைப் பார்க்க வேண்டும் என்று விரும்பும் நேரத்தில் உங்கள் தங்கை தொலைக்காட்சித் தொடர் ஒன்றைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். | அலைபேசியில் பார்த்துக் கொள்கிறேன் என்று கூறித் தங்கைக்கு விட்டுக் கொடுத்து விடுவேன். |
| 3. உங்கள் அருகில் அமர்ந்திருக்கும் உங்கள் வகுப்புத் தோழர், உங்கள் மேசைமீது உணவினை இறைத்தபடி சாப்பிட்டுக் கொண்டிருக்கிறார். | உணவினை இறைத்து உண்பதால் எல்லார்க்கும் உண்டாகும் சேதம் பற்றி எடுத்துக் கூறுவேன். |
| 4. நீங்கள் அடுத்த நாள் தேர்வுக்காகப் படித்துக் கொண்டிருக்கும்போது, உங்கள் வகுப்புத் தோழர், பாடத்தில் ஏற்பட்ட ஐயத்திற்காக உங்களுக்குத் தொலைபேசியில் அழைப்பு விடுக்கிறார். | வகுப்புத் தோழருடைய ஐயத்தை முதலில் நீக்கிவிட்டுப் பிறகு தேர்விற்குப் படிக்கத் தொடங்குவேன். |



www.tnpscjob.com

## ஒரு மதிப்பெண்

1. 'கிழக்கையும் மேற்கையும் இணைத்த தீர்க்கதரிசி' என்றழைக்கப்பட்டவர் யார்?
தாகூர்
2. தாகூர் எந்த ஆண்டு இலக்கியத்துக்கான நோபல் பரிசு பெற்றார்?
1913
3. தாகூர் எந்நூலுக்காக நோபல் பரிசு பெற்றார்?
கீதாஞ்சலி என்ற கவிதை நூல்
4. ஜாலியன் வாலா பாக் படுகொலை நடந்த ஆண்டு எது?
1919
5. ஆங்கில அரசைக் கண்டித்து தாகூர் துறந்த பட்டம் எது?
'சர்' பட்டம்
6. தாகூர் எப்படுகொலையைக் கண்டித்து 'சர்' பட்டத்தை துறந்தார்?
ஜாலியன் வாலாபாக் படுகொலை
7. தாகூர் நிறுவிய பல்கலைக்கழகம் எது?
விஸ்வபாரதி (1921)
8. 'குருதேவ்' என்ற அனைவராலும் அன்புடன் அழைக்கப்பட்டவர் யார்?
தாகூர்
9. நமது நாட்டுப்பண் யாரால் எழுதப்பட்டது?
தாகூர்
10. சாகித்திய அகாதெமி வெளியிட்டுள்ள தாகூரின் கடிதங்களைத் தமிழில் மொழியாக்கம் செய்தவர் யார்?
த.நா. குமாரசாமி
11. கிழக்கு வங்காளத்தின் பெரிய நதி எது?
பத்மா
12. 'பியால' என்னும் மரம் எங்குள்ளது?
சாந்தி நிகேதன்
13. தாமஸிகம் என்பதை எவ்வாறழைப்பர்?
மெடீரியலிஸம்
14. 'பௌ–கதா–கவோ' என்பது என்ன?
ஒரு புறா இனம்.
15. இன்குலாபின் இயற்பெயர் என்ன?
சாகுல் அமீது



www.tnpscjob.com

16. மரணத்துக்குப் பிறகு இன்குலாபின் உடல் யாருக்கு கொடையளிக்கப்பட்டது?
செங்கை அரசு மருத்துவக் கல்லூரி
17. காப்பிய இலக்கணம் முழுதும் நிரம்பிய நாடக நூல் எது?
மனோன்மணீயம் (1881)
18. மனோன்மணீயம் எந்நூலைத் தழுவி இயற்றப்பட்டது?
இரகசிய வழி
19. 'இரகசிய வழி' என்னும் நூலின் ஆசிரியர் யார்?
லிட்டன் பிரபு( 1866)
20. மனோன்மணியில் எத்தனை அங்கங்களும் களங்களும் உள்ளன?
5 அங்கங்கள் 20 களங்கள்
21. மனோன்மணீயம் நூலின்கண் வரும் துணைக்கதை எது?
சிவகாமி சரிதம்
22. மனோன்மணீயத்தை இயற்றியவர் யார்?
பெ. சுந்தரம்பிள்ளை
23. சென்னைப் பல்கலைக்கழகம் சுந்தரம் பிள்ளைக்கு வழங்கிய பட்டம் எது?
ராவ்பகதூர்
24. சுந்தர முனிவர் யார்?
ஜீவகனின் குலகுரு
25. சுந்தர முனிவர் சுரங்கம் அமைக்கும் பணியை யாருக்குக் கொடுத்திருந்தார்?
நடராசன்
26. "இவ்வயின் யாமெலாம் செவ்விதில் துன்னில் தழைப்பதற்கு இடமில்லை; சிறார் நீர் பிழைப்பதற்கு ஏகுமின்"............. என்று கூறியது எது?
புல்
27. 'விழுப்புகழ் வேண்டலை உன் தொழில் நடத்துதி' என்று நடராசன் யாரிடம் கூறினான்?
நாங்கூழ்ப்புழு
28. நர்த்தகி நடராஜ் பிறந்த ஊர் எது?
மதுரையிலுள்ள அனுப்பானடி
29. நர்த்தகி நடராஜின் உயிர்த்தோழி யார்?
சக்தி
30. நர்த்தகி நடராஜ் யாருடைய நடனத்தால் ஈர்க்கப்பட்டு பரதம் கற்றார்?
வைஜெயந்தி மாலா
31. வைஜெயந்தி மாலாவின் குரு யார்?
தஞ்சை கிட்டப்பா



www.tnpscjob.com

32. நர்த்தகி யாருடைய இல்லத்தில் தங்கிப் பரதம் கற்றார்?
தஞ்சை கிட்டப்பா

33. 'நர்த்தகி' என்னும் பட்டத்தை நடராஜுக்கு வழங்கியவர் யார்?
தஞ்சை கிட்டப்பா

34. 'திருநங்கையர்' எல்லாக் காலகட்டத்திலும் இருந்திருக்கின்றனர் என்பதற்கான சான்று எந்நூலில் உள்ளது?
தொல்காப்பியம்

35. 11 வகையான ஆடற்கலைகள் பற்றிய குறிப்புகள் எந்நூலின்கண் உள்ளன?
சிலப்பதிகாரம்

36. 'வேளிர் ஆடல்' எந்நூலில் உள்ளது?
சிலப்பதிகாரம்

37. நர்த்தகி , திருவாசகம், தேவாரப் பண்ணிசைப் பாடல்களைப் பரதமாக நிகழ்த்தியது எங்கு?
ஜப்பானிலுள்ள ஒசாகா நகரம்

38. 'அடுத்த ஜென்மத்தில் நான் தமிழனாகப் பிறந்து திருக்குறள் படிக்க வேண்டும்' என்று ஆசைப்பட்டவர் யார்?
மகாத்மா காந்தி

39. அகிலனின் 'எக்கதாப்பாத்திரம்' துக்கம் பொங்கும் போதெல்லாம் ஒரு செம்புத் தண்ணீர் குடிப்பாள்?
'தாமரை நெஞ்சம்'– கதை நாயகி

40. நர்த்தகி நடத்தும் கலைக்கூடம் எது?
வெள்ளியம்பலம் அறக்கட்டளை நடனக் கலைக்கூடம்

41. 'திருநங்கை' என்ற சொல்லை அறிமுகப்படுத்தியவர் யார்?
நர்த்தகி நடராஜ்

42. திருநங்கைகளுள் முதன்முதலில் கடவுச்சீட்டு, தேசிய விருது, மதிப்புறு முனைவர் பட்டம் பெற்றவர் யார்?
நர்த்தகி நடராஜ்

43. இந்தியாவின் முதல் திருநங்கை காவல் உதவி ஆய்வாளர் என்ற பெருமைக்குரியவர் யார்?
பிரித்திகா யாஷினி

44. இஸ்லாம்பூரில் லோக் அதாலத் நீதிபதியாக நியமிக்கப்பட்டுள்ள திருநங்கை யார்?
ஜோயிதா மோண்டல்



www.tnpscjob.com

15. 2017 ஆம் ஆண்டு நடந்த மேல்நிலைப் பொதுத் தேர்வில் தேர்ச்சி பெற்று, அரசு சித்த மருத்துவக் கல்லூரியில் பயின்று வரும் திருநங்கை யார்?

தாரிகா பானு

15. அச்சுப்படித் திருத்தக் குறியீடுகளில் Dt என்பது எதைக் குறிக்கிறது?

அச்சடித்திருக்கும் சொல்லையோ எழுத்தையோ நீக்குவது

17. 2019 ஆம் ஆண்டு நடுவண் அரசு நர்த்தகி நடராஜ் அவர்களுக்கு வழங்கிய உயரிய விருது எது?

பத்மஸ்ரீ

**குறுவினா – கூடுதல் வினாக்கள்**

**1. தாகூரின் கடிதங்களில் கூறப்பட்டுள்ள ஆறுகளின் பெயர்களை எழுதுக.**

- புறாக்கண்ணி ( கபோதாக்ஷி)
- மயில் விழியாள் ( மயூராக்ஷி)
- விருப்புடையவள் (இச்சாமதி)

**2. தாகூர் ஆங்கில அரசு தனக்கு வழங்கிய சர்பட்டத்தைத் துறந்ததன் காரணம் யாது?**

- 1919 ஆம் ஆண்டு நடைபெற்ற ஜாலியன் வாலாபாக் படுகொலையால் மனம் வருந்திய தாகூர், ஆங்கிலேய அரசைக் கண்டித்து, அவர்கள் வழங்கிய சர் பட்டத்தைத் துறந்தார்.

**3. விஸ்வபாரதியை தாகூர் நிறுவியதன் நோக்கத்தைக் கூறு.**

- குழந்தைகள் இயற்கையின் மடியில் எளிமையாக வளர்க்கப்படவேண்டும்.
- தங்கள் வேலையைத் தாங்களே கவனித்துக் கொண்டு, மற்றவர்களுக்கும் தொண்டு செய்ய வேண்டும் என்ற எண்ணம் கொண்டு 1921 ல் விஸ்வபாரதி பல்கலைக் கழகத்தைத் தாகூர் நிறுவினார்.

**4. உயிர்க்குத் தூண்டுகோலாக மனோன்மணியம் கூறுவதை எழுதுக.**

- எந்த முயற்சியில் ஈடுபடுபவர்களுக்கும் விரைவாக இயக்குவதற்கு இன்பம் தரும் ஒரு குறிக்கோள் வேண்டும்.
- இக்குறிக்கோள் உயிர்க்குத் தூண்டுகோலாக அமையும் என்று மனோன்மணியம் கூறுகிறது.



www.tnpscjob.com

**சிறுவினா – கூடுதல் வினா**

**1. தமிழ் நாடக இலக்கண நூல்கள் சிலவற்றைக் கூறுக.**

- அகத்தியம்
- குணநூல்
- கூத்தநூல்
- சந்தம்
- சயந்தம்
- செயன்முறை
- செயிற்றியம்
- முறுவல்
- மதிவாணனார் நாடகத் தமிழ் நூல்
- நாடகவியல்



www.tnpscjob.com

www.tnpscjob.com